# உயராய்வு

## 2 & 3


முனைவர் ம. இரா. [illegible],
எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
[illegible]
அரிய கையெழுத்துச் சுவடித்துறை



முனைவர் ம. இரா. சந்திரன்,
எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை


578

உள்ளத்தனையது உயர்வு


தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

1984–85

# உயராய்வு
# UYARAYVU

**2 & 3**

தமிழ் இலக்கியத்துறை

Department of Tamil Literature

சென்னைப் பல்கலைக்கழகம்

University of Madras

1984—85

# உயராய்வு

# *UYARĀYVU*

**2 & 3**

பதிப்பாசிரியர்
டாக்டர் பொன். கோதண்டராமன்

இணைப் பதிப்பாசிரியர்கள்
டாக்டர் வீ. அரசு
டாக்டர் கு. மோகனராசு

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

© University of Madras 1984-85

ISSUED IN JUNE—1988

Editor
**Dr. Pon. Kothandaraman**

Associate Editors
**Dr. V. Arasu**
**Dr. K. Mohan Raj**

NOTICE

Books for review, exchanges and Correspondence may be addressed to:

**Dr. Pon. Kothandaraman**
Editor, Uyarāyvu
Department of Tamil Literature
University of Madras
Marina Campus
Madras-600 005.

Remittance for subscriptions should be sent to:

The Registrar
University of Madras
Madras-600 005.

Price: **Rs. 75-00**

இரத்தினம் அச்சகம்
சென்னை-600 001.

# முகப்புரை

டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் வாயிலாக வெளி வருகின்ற உயராய்வின் இரண்டாவது இதழ் இது. தவிர்க்க இயலாத சூழலில் இந்த இதழ் தாமதமாக வருகிறது என்றாலும் பல்வேறு அறிஞர்களின் அரிய ஆய்வுக் கட்டுரைகளும் கலைக்களஞ்சியத் தமிழியல் கட்டுரைகளின் வகை தொகையும் அச்சில்வாரா அருந்தமிழ் நூல்களும் இந்த இதழுக்குச் சிறப்பு சேர்த்து உயர்வுடையதாக ஆக்கியிருக்கின்றன. முதல் இதழுக்குப் பதிப்பாசிரியராக இருந்த பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் 1983-இல் முதல் இதழின் முகப்புரையில் கூறியுள்ள ஒரு பகுதி மீண்டும் இங்கே குறிப்பிடத்தக்கது.

உயராய்வு என்ற " இக்குழந்தையைச் சுமந்து பெற்ற பெருமை பெரிதும் இளநிலைப் பேராசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் (டாக்டர் பொற்கோ) அவர்களுக்குரியது இவ்வாய்வேட்டின் அமைப்பில் யானும், அவரும் தாயும் மகளும் போல் கலந்துள்ளோம்; என் கருத்துகளும் அவர் கருத்துகளும் இணைந்துள்ளன - உள்ளிட்டிலும் உருவத்திலும். இவ்வாய்வேட்டின் தனிச்சிறப்புகளை நான் சொல்வதிலும் - ஆய்வுலகம் அனைத்துலக ஆய்வுலகம் - சொல்வதே வெல்வது". அவர் கூறியது போலவே இந்த இதழைப் பற்றியும் ஆய்வுலகமே கருத்தறிவிக்க வேண்டும்.

இந்த இதழை உருவாக்கும் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுக் கண்ணும் கருத்துமாக இந்தப் பணியை நிறைவேற்றிய டாக்டர் வீ. அரசு அவர்களுக்கு என் அன்பு நிறைந்த நன்றி. ஆய்வுரை களையும் அடைவுகளையும் அச்சில் வாரா அருந்தமிழ் நூலையும் இந்த இதழுக்கு வழங்கியுதவிய அறிஞர் பெருமக்கள் எல்லோருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, பொற்கோ.

18—4—1988

# பொருளடக்கம்

## பகுதி 1


1. தேம்பவாணிக் கீர்த்தனை—ஓர் அறிமுகம்
டாக்டர் சூ. இன்னாசி ... 1

2. தமிழ் மருத்துவத்தில் தமிழ்
டாக்டர் ஜி. கீதா ... 17

3. Problems encountered in the production of Encyclopaedia of Tamil Literature
**Dr. V. Arasu** ... 25

4. Western influence on Tamil fiction
**Mrs. V. Padma** ... 33

5. இரு பெரும் பேராசிரியர்கள்—
டாக்டர் ரா. பி. சே. டாக்டர் மு.வ.
டாக்டர் ந. சஞ்சீவி ... 57

6. கலைக்களஞ்சியக் கலை
சிறுவை. மோகனசுந்தரன் ... 69

7. National Scripture—Tirukkural
**Dr. V. Sp. Manickam** ... 89

8. A New approach to the History of Tamil Language
**Dr. Pon. Kothandaraman** ... 97

9. Mediteranean Civilization and poetry
**Dr. N. Sanjeevi** ... 113

10. தோழர் சிங்காரவேலர் ஒரு சிறந்த பொதுவுடைமையாளர்
பா. வீரமணி ... 117

11. சிவாகமங்களும் திராவிட நாகரிகமும்
டாக்டர் குல. சபாரத்தினம் ... 125

12. புத்தக மதிப்புரைகள் ... 145


## பகுதி 2


13. கலைக்களஞ்சியத்தில் தமிழியல் கட்டுரைகள்
ஒரு வகை தொகை (பகுதி-3)
டாக்டர் கு. மோகனராசு ... 1–56


## பகுதி 3


14 அச்சில் வாரா அருந்தமிழ் ஆத்திசூடி–பரிமேலழகர் உரை
(பதி.) டாக்டர் ம. இராசேந்திரன் ... 1–72

15. அச்சில் வாரா அருந்தமிழ்: இரு புராணம்
(பதி.) டாக்டர் இ. சுந்தரமூர்த்தி 1–74

16. துறைச் செய்திகள் 1–14

# "தேம்பாவணிக் கீர்த்தனை—ஓர் அறிமுகம்"

டாக்டர். சூ. இன்னாசி
பேராசிரியர்—தலைவர்,
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

கீர்த்தனை, கீர்த்தனம் என்பன ஒரு பொருட் கிளவிகள்; இசைப் பாட்டு, புகழ்ச்சி என்னும் பொருள் தருவன. இறைவனைப் போற்றல் இறையடியாரைப் பாராட்டல், அறநெறி கூறல் ஆகிய அடிப்படைகளில் எழுவன.

கீர்த்தனைகளைப் பாடியோர் தமிழில் இசைத்தொண்டும், இறைத் தொண்டும் இணைத்தாற்றித் தொண்டு புரிந்த தகைமையாளர். அவர் தம் தொகையினை வரையறுக்கவியலாது. ஆயினும் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் தம் இசையாய்வு நூலாகிய கருணமமிர்த சாகரத்தில் தென்னிந்திய இசைக்குத் தொண்டாற்றிய இசைவல்லார் பட்டியல் ஒன்றனைத் தருகிறார். அதனுள் எழுநூற்று மூவர் இடம் பெறுகின்றனர். அவர் பற்றிய சிறு குறிப்புக்களும் தரப்படுகின்றன. அவற்றைக் கொண்டு கீர்த்தனைகளை இயற்றியோராகவும், இசைத்தோராகவும் எண்பத்து நால்வரைக் காண முடிகிறது. அவருள் காபிரியேல் உபதேசியார், கிரோஸ்ஸே (J. Grosset at Satara in Bombay), சட்டம்பிள்ளை, சத்தியநாதன் உபதேசியார், சற்குணம் வில்பிரட், ஜான் பால்மர் (John Palmer), பாக்ஸ் ஸ்ட்ராங்குவேஸ் (Fox Strangways A. M.), சின்ன சாமி முதலியார், பாக்கியநாதன், யேசேப்பு ரயிட்டர், வீரமா முனிவர், வேதநாயக சாஸ்தியார், வேதநாயகம் பிள்ளை போன்ற கிறித்தவர்களும் உள்ளனர். இவருள்ளும் கிரோஸ் ஸே போன்றோர் வெளிநாட்டினர் என்பது கருதத்தக்கது.

'கிறித்தவக் கீர்த்தனைகள்' என்னும் தொகுப்பு நூல் ஒன்றும் பல பதிப்புக்களில் வெளிவந்துள்ளது; அஃது எண்பத்தெழுவர் பாடிய நானூறு கீர்த்தனைகளைக் கொண்டது. தொகுப்பாகவன்றித் தனியொருவர் எழுதிய கீர்த்தனைகளின் தொகுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய தேவதோத்திரப் பாடல்கள் வேதநாயகம் பிள்ளையின் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள், அந்தோனிக் குட்டி அண்ணாவியாரின் கிறிஸ்து சமயக் கீர்த்தனை, தேவநேயப் பாவாணரின் கிறித்தவக் கீர்த்தனம், சந்தியாகப்பர் கீர்த்தனைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவையேயன்றி, சுபவாக்கியம் பிள்ளை இயற்றிய கர்த்தரின் ஜெனனக் கீர்த்தனை, ஜே. ஆர். ஆர்னால்டு வெளியிட்ட கீர்த்தன சங்கிரகம், வேதநாயக சாஸ்திரியாரின் ஞானக்கீர்த் தனங்கள், சந்தியாகுப் பிள்ளையின் யாத்திரைக் கீர்த்தனை, மேரியின் மரியம்மன் பேரில் கீர்த்தனம், ஆசிரமப் பாமாலை, திருவழிபாட்டுப் பாடல்கள், புத்துயிர்ப் பாடல்கள் ஆகிய நூல்களும் அச்சில் வந்துள்ளன வாகத் தெரிகிறது.

இயற்கூறும் இசைக்கூறும் கலந்த கீர்த்தனையின் வளர்ச்சி வடிவமாக நாடகக் கூறும் கலந்த கீர்த்தனைகள் தோன்றலாயின. இவை படிப்பதற் காகவோ, நடிப்பதற்காகவோ அன்றிப் பாடுவதற்கும் கேட்டு மகிழ்வதற்கும் ஏற்ற முறையில் இயற்றப்பட்டன. கதை தழுவிய கீர்த்தனைகளின் தொகுதிகளாய் அமைந்த இவற்றுள், கதைமாந்தர் கூற்றுக்களை விட ஆசிரியர் கூற்றுக்களே மிகுந்து காணப்படுகின்றன.

இவ்வகை நாடகக் கீர்த்தனையின் முன்னோடி சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆவர். அவர் கி. பி. 1771-இல் கம்பனின் இராமகாதையைக் கீர்த்தனைகளின் வடிமாக்கி, ‘இராம நாடகக் கீர்த்தனை’ எனப் பெயரிட்டார். இவரைப் பின்பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையை இயற்றினார். அது பெரியபுராணத்தில் அடங்கிய திருநாளைப்போவார் புராணத்தைத் தழுவியது.

இரண்டு கீர்த்தனைகட்கும் இடையில் அமைப்பில் சில வேறுபாடு களைக் காணலாம். இராம நாடகக் கீர்த்தனையில் ஓரிடத்தில் மட்டும் உரைநடைப்பகுதி அமைய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில், கீர்த்தனை கட்கிடையே பலவிடங்களில் உரை விளக்கங்கள் காணப்படுகின்றன. கீர்த்தனைகளை இசைப்பதோடன்றி உரை விளக்கமும் தந்து கதா காலட்சேபம் செய்யும் முறைக்குத் தோற்றுவாய் தந்தவர் எனக் கருதப் படுபவராதலின், தம் கீர்த்தனை நாடகத்தில் மிகுதியாக உரைநடையைக் கலந்திருத்தல் சாலும். சிலவிடங்களில் விளக்கங்களுக்காகப் பெரியபுராணச் செய்யுட்களே இடம் பெறுகின்றன.

பாடல் அமைப்பில், இராம நாடகக் கீர்த்தனையில் காணப்படாதன வாகிய நொண்டிச் சிந்து, துக்கடா, சவாயி, கட்கா, தண்டகம், அகவல் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. இருசொல் அலங்காரம், ஆனந்தக் களிப்பு, ஏசல் போன்ற பகுதிகள் உள்ளன. ஒருவருக்கொருவர் எதிர்மறுத்து உரையாடுவது போன்ற பகுதிகள் இடம் பெறுகின்றன.

கதையமைப்பில், இரண்டனுக்கும் இடையே வேறுபாடு காணப் படுகிறது. கம்பன் கதை, இராமநாடகக் கீர்த்தனையில் பெரிதும் தழுவப் பட, திருநாளைப்போவார் புராணம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் சில மாற்றங்களைக் கொண்டுள்ளது. சேக்கிழாரது நந்தனார் புலைத் தொழிலை மட்டுமே செய்துவரக் கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார், புலையராயினும் உழவுத் தொழிலும் புரிபவராகக் காட்டப்படுகிறார். உழவராகிய நந்தனாருக்குத் துணையாகக் குளம் வெட்டத் தம் மகன் பிள்ளையாரையே சிவபிரான் அனுப்பி வைப்பதாகச் சுட்டப்படுகிறது. நந்தனாருக்கும் அவரது பண்ணையாராகிய வேதியருக்கும் தில்லை போவது பற்றி விவாதம் நடப்பதாகக் காட்டப்படுகிறது. நந்தனார் மீது கொண்ட இறையருட் செயலின் பயனாகத் தம் வயல் விளைவைக் கண்டதும் வேதியர் நந்தனாரிடம் மன்னிப்புக் கேட்பது போலவும் காட்டப்பட்டு நந்தனார் சிறப்பிக்கப்படுகிறார். இவையனைத்தும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் சீர்திருத்த உணர்வினை வெளிக்காட்டவல்லன.

கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையே யன்றி இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம், ஆகியவற்றையும் ஆக்கியுள்ளதாகத் தெரிகிறது. இவ்விருவர் நாடகக் கீர்த்தனைகளே யன்றி, சேஷகவி எழுதிய 'ஸ்ரீபராங்குச நாடகம் என்னும் ஆழ்வார் நாடகம்', அருணாசலக் கவி எழுதிய 'மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம்', நாராயண கவி எழுதிய 'பாண்டிய கேளீ விலாச நாடகம்', 'புரூரவ நாடகம்' போன்றனவும் கீர்த்தனை நாடக அமைப்புக்கூறு கொண்டனவாகக் குறிப்பர்.

தனிக்கீர்த்தகைளைப் பாடுவதில் கிறித்தவர் கொண்டிருந்த ஈடுபாடு நாடகக் கீர்த்தனை பாடுவதிலும் இருந்துள்ளது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை அச்சு வடிவாக முதலில் வரக் காரணர் ஒரு கிறித்தவரே என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. வீரமா முனிவர் இயற்றிய தேம் பாவணிக் காப்பிய முதற் காண்டத்தைத் தழுவி தேம்பாவணிக் கீர்த்தனை என்னும் நூல் வந்துள்ளது. எனினும் எவ்வாறோ ஆய்வாளர் பார்வைக்குக் கிட்டாமற் போயிற்று. எழுநூற்றுக்கும் மேற்பட்ட இசைத்தொண்டர் பட்டியல் தரும் கிறித்தவ ஆய்வாளர் ஆபிரகாம் பண்டிதராற் கூட அந் நூலாசிரியர் சுட்டப்படாதது வியப்பாக உள்ளது. எனினும் தேம் பாவணி பாடிய வீரமா முனிவர் இசைத்தொண்டர் பட்டியலில் இடம் பெறுகின்றார். அவர் கீர்த்தனங்கள் பாடியுள்ளதாகவும் குறிப்பிடப் படுகிறது. கிறித்தவக் கீர்த்தனைகள் என்னும் நூலிலும், வீரமா முனிவர் பாடியதாக ஒரு கீர்த்தனை இடம் பெறுகிறது. அக்கீர்த்தனை வீரமா முனிவர் பாடியதுதானா என்னும் ஐயம் எழுகிறது. ஏனெனில் வீரமா முனிவர் தம் காப்பியத்திலும் பிற செய்யுட் படைப்புக்களிலும் வடசொற் களை மிகுதியாகப் பயன்படுத்தவில்லை. இக்கீர்த்தனையில் வடசொற் கலப்பு மிகுதியாக உள்ளது. மேலும் இதுவரை கிட்டிய வரலாற்றுச் சான்று எதுவும் அவர் கீர்த்தனம் பாடியதாகக் குறிப்பிடவில்லை. எனவே, தேம்பாவணிக் கீர்த்தனை என்னும் நூல் பற்றிச் செவிவழிச் செய்தியாக அறிந்து, அது வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது என்னும் ஊகம் கொண்டு, எவரோருவர் பாடலையோ வீரமா முனிவர் கீர்த்தனம் என்னும் பெயரில் தவறுபடச் சுட்டியிருத்தல் கூடும்.

'தமிழ் நாடகம்—ஓர் ஆய்வு' என்னும் நூலின் பிற்சேர்க்கை ஒன்றில், ஆய்வுக்குப்பட்ட பிற நூல்கள் என்ற தலைப்பில், ஐம்பத்தேழு நூல்கள் இடம் பெறுகின்றன. நாடகக் கீர்த்தனை நூல்கள் என்னும் பிரிவில் எழு நூல்கள் காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக, 'தேம்பாவணிக் கீர்த்தனை' (2—காண்டம்) அருளப்ப முதலியார், சென்னை 1903' என்னும் நூல் சுட்டப்படுகிறது. எனினும் அந்நூல் பற்றிய குறிப்பெதுவும் ஆய்வு நூலில் காணப்படவில்லை. அரிதின் முயன்று நூல்களைத் தொகுத்துச் சிறப்பாக ஆய்வு நூல் படைத்த ஆய்வாளர் பார்வைக்குத் தேம்பாவணிக் கீர்த்தனையின் இரண்டாம் காண்டமே தெரிந்துள்ளது. ஆனால் தேம்பாவணிக் காப்பியப் பதிப்பின் முதற் காண்டத்தைத் தழுவி

இயற்றப்பட்ட 'தேம்பாவணிக் கீர்த்தனை' என்னும் நாடக நூல் கி. பி. 1866-இல் அச்சில் வெளிவந்துள்ளது. புதுவையைச் சேர்ந்த ஆரோக்கிய நாயகரால் இயற்றப்பட்டு 1857-இல் சென்னையில் பல்லோர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. நூலாசிரியர் மருமகராகிய ஞானாதிக நாயகரவர்களால் சங்கீத வித்வானாகிய சதுரை அப்பாவு நாயகர் முன்னிலையில் இசைதாள வழுவில்லாமல் பார்வையிடப்பட்டு பா. குமாரையரவர்களது கலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூலின் முகப்பில் இருபத்து மூவர் சாத்துகவிகளும், கோமளபுரம் இராசகோபால பிள்ளையவர்களின் சிறப்புப் பாயிரமும் இடம்பெறுகின்றன. சாத்து கவிகள் பாடியுள்ளோருள் இருவர் கிறித்தவ அடிகளார். பதினொருவர் பள்ளி ஆசிரியர். அவருள்ளும் தமிழ்ப் பள்ளியாசிரியர் அறுவர். தமிழ்க் கீர்த்தனைப் பாடகர் ஒருவர். தாசில்தார் ஒருவர். கல்விச் சங்கத்து சகல சாஸ்திரப் பண்டிதர் ஒருவர். நூலைப் பாராட்டியுள்ளோருள் பலர் கிறித்தவரல்லாதார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய திருத்தணிகை விசாகப் பெருமாளையர் 'புலவர் வியந்தேத்த உரைத்த மாகீர்த்தனை' எனத் தம் சாத்துகவியில் புகழ்ந்துரைத்துள்ளார். வீராசாமி செட்டியார் நூலை, 'எவரும் மெச்ச உலக வழக்கியற் சொல்லான் இயற்றிய தேம்பாவணிக் கீர்த்தனம்' என்றும், நூலாசிரியரை 'ஓங்கும் அலகில் புகழ்க் கவிஞன்' என்றும் பாராட்டியுள்ளார். யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை,

"தீந்தமிழ் தேமொழி தெய்வப்புலமை திருவசனம்
வாய்ந்தமதுர கவிவாணி வாக்கென்று மண்டலத்தே
போந்தபுன் னூல்களைப் போற்றினர்யாவும்
புறங்கண்டின்று
சேர்ந்தஇத்தேம்பா வணிநாடகத்தையென் செப்புவரே"

எனத் தேம்பாவணிக் கீர்த்தனைச் சிறப்பினைக் கூறுகிறார்.

இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகியவற்றை நோக்கத் தேம்பாவணிக் கீர்த்தனை அளவில் பெரியது. இராம நாடகக் கீர்த்தனை, 197 கீர்த்தனைகள், 60 திபதைகள் எனப்படும் கண்ணிகள், 1 தோடயம், 6 கொச்சகங்கள், 2 வெண்பாக்கள், 1 கலித்துறை. 268 விருத்தங்கள், 1 உரைநடைப்பகுதி ஆகியவற்றைக்கொண்டது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, 134 கீர்த்தனைகள், 4 கட்கா, 1 பெரிய கட்கா, 13 தண்டகம், 2 நொண்டிச் சிந்து, 12 சிந்து, 13 லாவணி, 17 கண்ணிகள், 1 தோடயம், 2 மங்களம், 3 ஆனந்தக் களிப்பு, 9 இருசொல் அலங்காரம், 2 ஏசல், 1 நாமாவளி, 8 துக்கடா, 2 சவாயி, 1 அகவல், 1 கலித்துறை, 73 விருத்தங்களைக் கொண்டது. தேம்பாவணிக் கீர்த்தனை, 283 கீர்த்தனைகள், 1 கொச்சகம், 1 வெண்பா, 402 விருத்தங்களைக் கொண்டது.

கீர்த்தனை மட்டும் அளவாகக் கொள்ளின், ஏறத்தாழ இராம நாடகக் கீர்த்தனையைப் போல் ஒன்றரை மடங்கும் (197:283), நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் போல் ஐந்து மடங்குகட்கு மேலும் (73:402) தேம்பாவணிக் கீர்த்தனை கொண்டுள்ளது. ஆயின், இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இரண்டனுள்ளும் விருத்தம், கீர்த்தனைப் பாடல்களன்றி, வேறு தலைப்புக்களிட்ட பகுதிப் பாடல்களிலும் கீர்த்தனை அமைப்பே காணப்படுகிறது. ஆதலின் இவ்வகையாகப் பாடல் தொகைகளை ஒப்பிடுவதிலும் மொத்தப் பாடல்களை ஒப்பிட்டுக் காண்டலே தகுந்தது. மொத்தமாகக் கணக்கிட்டால் இராம நாடகக் கீர்த்தனையின் பாடற்பகுதிகள் 536, நந்தனார் சரித்திரக் கீர்த்தனையின் பாடற்பகுதிகள் 289, தேம்பாவணிக் கீர்த்தனையின் பாடற்பகுதிகள் 687 ஆக உள்ளன கீர்த்தனைகளை அமைப்பதில் மற்றவரைப் போன்றே தேம்பாவணிக் கீர்த்தனை ஆசிரியரும் சிறந்து தோன்றுகிறார். தம் கீர்த்தனையில் ஐம்பத்தோர் இராக வகைகளைக் கையாண்டுள்ளார். கல்யாணி 25 இடங்களிலும், மோகனம் 22 இடங்களிலும், சங்கராபரணம், தோடி ஆகியன ஒவ்வொன்றும் 17 இடங்களிலும், மத்தியாவதி 15 இடங்களிலும், கேதார கௌளம், காம்போதி ஆகியவை 13 இடங்களிலும், ஆனந்த பைரவி 12 இடங்களிலும், சுருட்டி 11 இடங்களிலும், பைரவி 10 இடங்களிலும், சௌராஷ்டிரம் 9 இடங்களிலும், புன்னாகவராளி, பந்துவராளி ஒவ்வொன்றும் 8 இடங்களிலும், அசாவேரி, பியாகடை ஒவ்வொன்றும் 7 இடங்களிலும், எதுகுலகாம்போதி, நீலாம்புரி, முகாரி ஒவ்வொன்றும் 6 இடங்களிலும், சாரங்கம், துஜாவந்தி ஒவ்வொன்றும் 5 இடங்களிலும், அடாணா, ஆரபி, கவுளிபந்து, சஹானா, தன்னியாசி ஆகியவை ஒவ்வொன்றும் 4 இடங்களிலும், கண்டா, குறிஞ்சி, நாதநாமக்கிரியை ஆகியன ஒவ்வொன்றும் 3 இடங்களிலும், கமாசு, சாவேரி, தற்பார், நாட்டைக் குறிஞ்சி, பரசு, பிலஹரி, பூபாளம், யமுனா கல்யாணி ஆகியவை ஒவ்வொன்றும் 2 இடங்களிலும், ஆகிரி, எமுனா, கர்நாட சாரங்கம், கன்சட்டு, செஞ்சுருட்டி, சைந்தவி, தேசிகத்தோடி, தேவகாந்தாரி, நவரோசு, நாகவராளி, நாட்டை, பூரி கல்யாணி, மங்கள கௌசிகம் ஆகியவை ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்திலும் கையாளப்பட்டுள்ளன.

இராம நாடகக் கீர்த்தனை கம்பன் காப்பியத்தின் முழுப்பகுதியையும் கீர்த்தனை வடிவில் கூறுகிறது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பெரிய புராணத்தில் இடம்பெறும் அறுபத்து மூவர் வரலாற்றுள் ஒருவர் வரலாறான திருநாளைப்போவார் புராணத்தை எடுத்துரைக்கிறது. தேம்பாவணிக் கீர்த்தனை, தேம்பாவணிக் காப்பியத்தின் மூன்றில் ஒரு பகுதியை மட்டும் கூற முற்படுகிறது. முப்பத்தாறு படலங்களைக் கொண்ட தேம்பாவணி மூன்று காண்டங்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதற் பன்னிரு படலங்கள் முதற் காண்டமாக அமைந்துள்ளன. அம்முதற் காண்டமே தேம்பாவணிக் கீர்த்தனைக்கு அடிப்படையாகிறது. தேவகுமாரனின் திருவவதாரம் அப்பகுதியின் சிறப்புப் பொருளாதலின் ‘ஜெனன காண்டம்’ என்னும் மற்றொரு பெயரும் இக்கீர்த்தனைக்குக் காணப்படுகிறது.

இராம நாடகக் கீர்த்தனையாசிரியர் அதனை நாடகம் என்றே குறித்து அதனைச் செய்ய வழிபடு கடவுளாகிய விநாயகரை வணங்கித் தொடங்குவது போன்றே, தேம்பாவணிக் கீர்த்தனையாசிரியரும், அதனை நாடகமெனக் குறித்துக் காப்புக் கடவுளை வேண்டித் தொடங்குகிறார். அதன்பின் ஏற்புடைத் தெய்வங்களுக்குரிய அனுமார் தோத்திரம், பெருமாள் தோத்திரம் போன்றன இராம நாடகத்தில் இடம்பெறுகின்றன. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில், காப்புக் கடவுளாகிய விநாயகருக்குப் பின் சபாபதி, சிவகாமவல்லி போன்ற பிற தெய்வங்கட்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. தேம்பாவணிக் கீர்த்தனையிலும் காப்புக் கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் தேவமாதா, சூசையப்பர், மிக்கேல், காபிரியேல் போன்றோருக்குத் தோத்திரங்கள் பாடப்படுகின்றன.

இராம நாடகத்தில் இராமகாதையைப் பாடிய முன்னோர்களைக் குறித்து, 'வால்மீகர் சுலோகம் செய்தார்; கம்பர் கவியாச் செய்தார்; நான் நாடகமாச் செய்தேன்' எனக் குறித்து, 'வனவேடன் மராமரா மென்றே முத்திவழி கண்டான்; அதுகொண்டே மொழிகின்றேனே' எனப் பாடுவது போன்றே தேம்பாவணிக் கீர்த்தனையாசிரியரும்,

"ஆதியில்மோய் சேசரிய நிருபஞ் செய்தார்
அவ்வாறப் போஸ்தலரில் நால்வர் செய்தார்
வேதியர்செந் தமிழ்மொழியிற் காண்டஞ் செய்தார்
வீரமாமு னிகவியால் விளக்கிச் சொன்னார்
கோதிலாதம் மறைநா டகமாய்ச் செய்யக்
கூறுவேன்கூ றுவதிற் பயன்யா தென்னில்
வாதையுறுங் கள்ளனொரு வாக்கால் மோக்ஷ
வழிகண்டா னதுகண்டு மொழிகின் றேனே"

எனப் பாடுகிறார். (தே. கீ. பக். 2)

மூன்று கீர்த்தனைகளிலும் அவையடக்கம் கூறப்பெறுகிறது. ஆயின் தேம்பாவணிக் கீர்த்தனையில் மட்டும் குருவணக்கம் காணப்படுகிறது. அதுகொண்டு சென்னைச் சங்கத்துப் புலவர்க்குள்ளே சிறந்தவரும், வேத முணர்ந்தவரும், வன்னியகுலம் சார்ந்தவரும், புதுவையைச் சேர்ந்தவரும், குவலயம் மதிக்கும் நற்குணருமாகிய 'அனந்து' என்பாரே தேம்பாவணிக் கீர்த்தனை பாடிய ஆரோக்கிய நாயகரின் ஆசான் எனத் தெரிய வருகிறது. கதைத் தொடக்கத்தில் மங்களப் பகுதி மூன்று கீர்த்தனைகளிலும் அமைந்துள்ளது. அவ்வாறே நாடக முடிவில் வாழ்த்துச் செய்யுளும் மூன்றிலும் பாடப்பட்டுள்ளது.

ஓர் இனத்தின் பல்வகைப் பிரிவுப் பெயர்களையும் பாவில் அடக்கி யாப்பு நெறி வழுவாமல் பாடுவது பாவலரின் யாப்புத் திறனுக்குச் சான்றெனலாம். அவ்வகைத் திறனை முப்புலவர்களும் கையாண்டுள்ளனர்.

இராமனது முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்த மன்னர்களைக் கூறும் பொழுது இராம நாடகத்தில் இத்திறன் வெளிப்பட, புலையர்கள் பூசை யிட்டு வணங்கும் தெய்வங்களின் பெயர்களைச் சுட்டும்பொழுது நந்தனார் சரித்திரத்தில் வெளிப்படுகிறது. பெருவெள்ளத்திலிருந்து மீள, இறைவன் திருவுளப்படி நோயன் பேழையுள் அடைத்த விலங்கு பறவைகளைச் சுட்டும்பொழுது தேம்பாவணிக் கீர்த்தனையில் இத்திறன் புலப்படுகிறது.

“அன்னஞ்சா தகங்கருடன் கண்டபேரண்டம் நாரை
அன்றில்கிள்ளைபருந்து சக்கர வாகம்
சின்னவுள்ளான்தூ க்கணங் குருவியெண்காற்பறவை
கிச்சிலிவல்செம்போத்து வெண்காகம்
மின்னுங்கேகயம்குயில் கோழிமீன்குத்திமயில்
வெண்ணாரைநிலாமுகிப் புள்கூகம்
துன்னங்கலிங்கம்புறா மாடப்புறாப்பொய் யாப்புள்
சொல்லுநாகணவாய்ப் பட்சிநீர்க் காகம்
பின்னுங்கழுகுகம்பங் கோழிசுரும்புக் கூட்டம்
பெருங்கவுதாரிகாடை கொக்குவிச் சுளியீட்டம்
மன்னும்பட்சிகள்சாதி வகைவகை மீதில் நாட்டம்
வைத்துப்பேழையிலடைத்திட உண்டானது
கோஷ்டம்” (பக். 353)

என்னும் பாடல் பேழையிலடைத்து வைத்த பறவைகளின் பெயர்ப் பட்டியலைக் கொண்டதாகும்.

முதனூலினின்று வழிநூல் சிறுவேறுபாடுகளைக் கொண்டிருப்பது நெறியே. அவ்வகையில் தேம்பாவணியில் சுருங்கக் கூறியுள்ள சில பகுதி களைக் கீர்த்தனை விரித்துக் காட்டியுள்ளது. காப்பியத் தலைவனாம் சூசையின் பிறப்பினை விரித்த அளவிற்கு அன்னைமரியின் பிறப்புத் தேம் பாவணியில் விரித்துரைக்கப்படவில்லை. கீர்த்தனையில் அக்குறை நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. அன்னையின் பெற்றோர் பெயர், இளமை வாழ்வு முதலியன விளக்கமாகக் கூறப்படுகின்றன. அவ்வாறே தாவீது கோலியாத்து ஆகிய இருவருக்குமிடையே நடக்கும் போர் நிகழ்ச்சிகள், விரிவாகத் தேம்பாவணியில் பாடப்படவில்லை. கீர்த்தனையில் விரித் துரைக்கப்படுகின்றன. சவுல் மன்னன் பொறாமை கொண்டு தாவீதைக் கொல்லச் செய்யும் சதி முயற்சி தேம்பாவணியில் இடம் பெறாதிருக்க விவிலியச் செய்தியடிப்படையில் கீர்த்தனையில் இடம்பெறுகிறது. கீர்த் தனையில் காணப்படும் ஆகா என்னும் நகைமொழிமாந்தன் படைப்பு விவிலியத்திலும் இல்லை; தேம்பாவணியிலும் இல்லை. தம் கையிலிருக்கும் கோலில் மலர் தளிர்த்தால் மரியை மணந்து கொள்ளலாம் என்னும் வேட்கை மிகுந்து, மந்திரவாதி துணைகொண்டு முயன்று தோல்வியுறும் படைப்பாக ஆகா படைக்கப்பட்டிருக்கிறான்; நாடகப்போக்கிற்காக நகை விளைவிக்கப் படைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

செய்திகளைச் சொல்லும் முறைவைப்பிலும் முறையான மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. விவிலியக் குறிப்பின்படி கருணையன் என்னும் அருளப்பர் பிறப்பு இயேசுவின் பிறப்புக்கு முன்னையது. ஆயினும் வீரமா முனிவர் தம் தேம்பாவணியில் 26-ஆம் படலத்தில் 'கருணையன் மாட்சிப் படலம்' என்னும் தலைப்பிட்டுக் கூறுகிறார். தற்கால உத்திமுறையில் பின்னோக்கு (Flash back) உத்தியாகக் கொள்ளலாம். எனினும் முதலில் வீரமாமுனிவர் கருணையன் வரலாற்றைக் கூற நினையாதிருந்து பின்னர் எழுத எண்ணி இணைத்திருப்பாகத் தோன்றுகிறது. கீர்த் தனையில் உரிய முறையில் நிரல்படக் கிறித்துப் பிறப்புக்கு முன்னரே கருணையன் வரலாற்றைக் கூறிவிடுகிறார்.

தேம்பாவணியில் காணப்பெறாத பலரின் பெயர்கள் சுட்டப்படு கின்றன. தாவீதனின் தந்தை ஈசாய் (38), மனைவி மிக்கேல் (27), அண்ணன் எலியாப்பு (43), தேவதாயின் தந்தை சுவக்கியன் (112), தாய் அன்னம்மாள் (112) எனக் குறிப்பிடப்படுகின்றனர். இப்பெயர்களைப் பரம் பரைச் செய்திகளின் அடிப்படையில் எழுந்த நூற்குறிப்புக்களைக் கொண்டு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றுகின்ற மரபு கீர்த்தனையில் பின்பற்றப்பட்டிருக்கிறது.

"இடிமுகத்தலர் முல்லை மணம்பெறுவது போலவே
யெதிர்நின்று வென்றாலல்லோ நன்மை" (பக் 109)

என்னும் கீர்த்தனைத் தொடர், தேம்பாவணியில் வரும்,

"கார்முகத் தலரும் முல்லை..." (பாலமாட்சி, 30)

எனத் தொடங்குகின்ற பாடலை அடியொட்டியது. அஃதோடன்றியும் துறவேற்க முற்பட்ட பன்னிரு வயது சூசைக்கும் அவ்வெண்ணத்தை மாற்ற முற்பட்ட வானவருக்கும் நடந்த எதிர்மறுத்த உரையாடற் பகுதிகள், சொல்லிலும் பொருளிலும் தேம்பாவணியை ஒட்டியே அமைந் துள்ளன. அவ்வாறே,

"கண்பட் டுறங்கக் கண்டேனோ? கருணா கரனே
களிக்கடலே!
புண்பட் டுளையும் நெஞ்சிற்கோர் பொருவா
மருந்தே அருளன்பே!
மண்பட் டளையும் கடலன்ன மருளென் நெஞ்சிற்
குயிர்நிலையே!
எண்பட் டுயர்ந்த செல்வரசே! எம்மேல் இரங்கும்
தயையிதுவோ?" (மகவருள் படலம், 138)

என்னும் தேம்பாவணித் தொடர்களின் அடிப்படையில்தான்,

"புண்பட்ட நெஞ்சினர்க்குப் புனித மருந்து நீயே
பொய்யாத மெய்வேதத்துப் பொருள் நீயே
எண்பட்டிடாத செல்வம் எவர்க்கும் அளிப்போய் நீயே
எங்கும் நிறைந்தோன் நீயே இசை நீயே" (பக். 338)

என்னும் தேம்பாவணிக் கீர்த்தனைப் பகுதி அமைந்துள்ளது.

கம்பராமாயணத்தில் நாட்டுவளம் கூறத் தொடங்கும்பொழுது கம்பன்,

"ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் மொழியல்
உற்றேன்" (நாட்டுப் படலம்.)

எனக் கூறுவது போன்று தேம்பாவணிக் கீர்த்தனையாசிரியர்,

"நாவலர்க்குஞ் சொலவரிய நாட்டை மூகை
நவின்றெனினி..."

எனத் தொடங்கி,

"........................................எழிலிணகரின்
வளஞ்சிறிதை யியம்புவேனே" (பக். 21)

என முடிக்கிறார்.

"தேரான் தெளிவும் நன்றாய்த் தெளிந்தான் கணையுறவுந்
தீராவிடும்பை யென்றுந் தருமே" (பக். 93)

என்னும் கீர்த்தனைப் பகுதி,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்னும் திருக்குறளின் அடிப்படையேயாகும்.

"குருபரனணையென வருபவளெவளவள்
குலவியமதிபத முறைபவளெவளவள்
அருணனை யுடையென வணிபவளெவளவள்
அருமறைபுகலுள கனையவளெவளவள்
பொருவறு கடவுள்தன் ஒருமகளெவளவள்
புதுமைகள்பலபல புரிபவளெவளவள்
சிரமிசை யுடுமுடி புனைபவளெவளவள்
திருவடிகளைநிதம் தொழுதுயர் மனமே"
(கீர். பக். 18)

எனப்பாடும் துதிவிருத்தம் யாப்பிலும் சந்தத்திலும்,

"உயர்வறு உயர்நலம் உடையவ னெவனவன்
மயர்வறு மதிநலம் அருளின னெவனவன்
அயர்வறு அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதனன் மனனே"
(திவ்ய பிரபந்தம்.)

என்னும் வைணத் திருவடியாரது பாடலைப் போன்றதே எனலாம்.

கவிதையின் இனிமை சந்தத்தால் சிறப்பது இயல்பு. இதனை உணர்ந்த ஆசிரியர், சிற்சில எழுத்துக்களையே மையமாக வைத்துச் சில விடங்களில் சந்தநயம் காட்டியிருப்பது பாராட்டத் தகுந்தது. சான்றாக,

"அச்சுதன் முச்செக மெச்சிட விச்சையொ
டுச்சிதப் பச்சை மலர்க்கொடி சூசையை" (பக். 178)

என்னும் பகுதி சகரத்தை மையமாகக் கொண்டது. அதுபோன்றே லகரத்தை மையமாகக் கொண்ட சந்தத்திற்கு,

"துலங்கு மார்பினில் இலங்கும் பணிகள்
குலுங்க மாலைகள் மலங்க..." (பக். 290)

என்னும் பகுதியைக் கொள்ளலாம்.

ஆசிரியரின் இலக்கணப் பயிற்சியைக் கீர்த்தனையில் வரும், 'செருக் களவஞ்சி பாட' (54), 'குறையுடலங் கூத்தாட' (50) போன்ற தொடர்கள் புலப்படுத்தும்.

தம் காலச் சமுதாயச் சூழலின் படப்பிடிப்பாகப் பல பகுதிகள் அமைந்து கிடக்கின்றன. இளைஞரும் பெண்களும் எவ்வாறு வீண் பொழுது போக்கினர் என்பதனை,

"மாலைப்பொழுதிற் றென்னஞ் சாலைதனிலேயின்ப
லீலையதிற் களித்துக் கூடவே
வாலைக்குமரர் பெண்கள் சேலைச்சொகுசில்தங்கள்
காலங்கழித்து நடமாடவே" (பக். 138)

எனக்கூறி எள்ளி நகையாடுகிறார். பெண்ணடிமை பற்றிய ஆசிரியரது உள்ளம் அன்னைமரியின் உள்ளப்பாங்காக,

"இளமையிற் பெண்களெண்ணம் முடிகுவது பிரயாசம்
எந்நாளுமனச்சுதந் தரமில்லை லவலேசம்
விளையுந்துன்பத்துக் கெல்லாம் மனந்துஷ்ட சகவாசம்
விலக்கின நானுள்ளாகில் என்னவருமோ மோசம்"

என்னும் பகுதியில் வெளிப்படுகிறது. (பக். 163)

ஆசிரியர் காலத்துப் பொருளாதார நிலை பற்றிய குறிப்புப் புதுமையாகத் தோன்றுகிறது. ஒருவாறு துன்பநிலையினைச் சுட்டிக்காட்டும் பொழுது ஆசிரியர்,

"அரிசி விலையை யடிக்கடி குறைத்திட்ட பாவி
அவதிப்படுவது போல்..." (பக். 53)

என்று உவமை காட்டி விளக்குகிறார். அரிசி விலை குறைவது பாவச் செயல் என்பது அவரது கருத்து. அந்நாளில் உழுதொழில் செய்தோர் பல்லோராகவும் அவர்களைச் சுரண்டுவது போன்று அவர்களது உழைப்பின் பயனாகிய அரிசியைக் குறைத்து வாங்கிப் பெரும்பொருள் ஈட்டியோர் சில்லோராகவும் இருந்திருத்தல் சாலும். எனவே பெரும்பான்மையான ஏழைகட்கு விலைக்குறைவு தீமை பயந்திருக்கிறது. இக்குறிப்பு அக்காலப் பொருளாதார நிலை, பொருட்களின் மதிப்பு, மக்கள் வாழ்வியல் ஆகியவற்றையுணரத் துணை நிற்கிறது.

ஓரிடத்தில் ஆசிரியர்,

"களைகொள்ளும் நாற்புறமும் இருபத்தீரா யிரக்
காதமெனும்நெடுந் தூரத் தையும்
முளையும் பாதாளத்திருந் தாயிரத்துநா னூற்று
முப்பதின்காத முயர்திறத் தையும்" (பக். 104)

என்பது போன்ற குறிப்புக்கள் அவரது புவியியல் நோக்கினையும்,

"அகிலம் படைத்த ஐயா யிரத்துத்தொண்ணூ ற்றொன்ப
தாண்டு நற்சுக்கிரவாரம்
மகவாய்ப் பிறக்கப் பரன்கருவி லுருக் கொண்டது''
என்னும் குறிப்பும், (பக். 221)

"அன்னவிதம் நடத்தியபோ துலகுண்டாகி
ஆயிரத்தோரா றுநூற் றைம்பதாண்டில்..."
(பக். 354)

என்னும் குறிப்பும் அவரது வரலாற்றுணர்வு நோக்கினைக் காட்டவல்லன.

ஆசிரியரது தமிழுணர்வினைப் புலப்படுத்தும் இடங்களும் நூலின்கண் உண்டு. தமிழறியாத மூடர்களைக் கண்டு வெதும்பி அப்படிப்பட்டவர்களிடமும் தமிழ்ப் புலவோர் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதை எண்ணி, அன்னைமரி தனக்குத் திருமணம் எனக் கேள்வியுற்று, அழ, அது கண்டு மற்றவர்கள் வருந்தி அழும் நிலைக்கு உவமையாக,

"பன்னு தமிழறியாத மூடர் மீது
பாவினம் பாடித் திரியும் கவிஞர் போலும்" (பக். 191)

எனக் கூறி ஆசிரியர் வருந்துகிறார்.

பிற சமயப் பொர்றையும், அறிவும் ஆசிரியரிடம் மிகுந்து காணப் படுகிறது. மும்மூலம் என்னும் தொடர்,

"சோதனையாலுண்டாகுமே மும்மலம்—அது
சூழாதடக்கவேணும் ஐம்புலம்" (பக். 283)

எனவும், அவற்றுள் ஒன்றாகிய ஆணவம், ஆணவ மலம் (162) ஆணவப் பற்று (210) தானென்ற ஆணவம் (171) எனவும் குறிக்கப்படுகின்றன. பிறவிடங்களில் வரும் மூன்றாசை (194), மயக்கமாகிய மூன்று பற்று (165) என்பனவும் சமயக் குறிப்புக்களைக் காட்டக் கூடியனவே.

பிற்கால நாடக வளர்ச்சி நாட்டுப்புற மக்களையும் அவர்தம் வாழ்வியற் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டே கிளைத்தது என்பதனைப் பள்ளு, குறவஞ்சி போன்ற பிரபந்தங்களின் தோற்றங்கள் உணர்த்தும். நாடகக் கீர்த்தனைகளும் அவ்வகை அடிப்படை கொண்டனவேயாதலின் நாட்டுப் புறவியற் சாயல்களை மிகுதியாகக் கொண்டுள்ளன. கிராமப்புற மக்களின் நாவில் நடமாடும் உவமைத் தொடர்கள் விரவி வருதல், பழமொழிகள் இடம்பெறல், பேச்சுமொழிச் சொற்கள் கலந்திருத்தல் ஆகியன நாட்டுப்புறவியற் கூறுகளில் அடங்கும். தேம்பாவணிக் கீர்த்தனையில்,

'கொல்லர் தெருவில் ஊசி விற்றாற் போல' (44)
'கீரிமுன் பாம்பாய்' (50)
'கருப்பங்கொல்லையின் மதயானை புகுந்து
முறித்தாற்போலே' (52)
'காட்டழல்போல் கண் சிவந்தான்' (51)
'படுக்கப்பாய் விரித்தாற் போல' (52)
'நெல்லுக்கதிரை வாரித்திரையிலடித்தாலென' (52)
'விளைக்கும் பலனில்லாத விருட்சம்போல்' (114)
'கப்பல்களுக்கு உடுக்கள் வழிகாட்டுமாப்போல்' (125)
'முடவன் கொம்புத்தேனுக்கு முட்டிக் கொண்டது
போல' (161)
'பூவா விருட்சம் காய்ப்பதுண்டோ?' (186)
'சேற்றிலுறு நீர்பிரித்துண்பது போல்' (206)
'புடத்திற் சொன்னம் போல்' (246)
'பாந்தள் விஷம் தீர்ந்தாற் போல' (309)
'குளிர்ந்திருக்கும் நெருப்பை ஈக்கள் வைத்து
மொய்த்திடுமோ?' (39)

'பாலொளியைக் காணாக் குருடரானவர் ரத்னப்
பரிச்சையையறிவாரோ ?' (320)

'எலிக்கிரங்கிய பூனை கதை போல' (409)

போன்ற உவமைத் தொடர்களும்,

'உதிபெருத்துத் தூணாகுமோ ?' (41)

'இழவுக்கு வந்தவர்கள் தாலியறுப்பதுண்டோ ?' (42)

'கொல்லத்தெருவில் ஊசி விலையாமோ ?' (44)

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ ?' (78)

'எலி பதுங்கினால் பூனை விடுமோ ?' (161)

'வெருண்டவன் கண்களுக்கே இருண்டதெல்லாம்
திரண்டு சுருண்ட அலகை' (250)

'ஊரை வாய் மூடலாகாது (251)

'கன்னல் கசக்குமாகில் வாய்க்குற்றமல்லால் வேறோ ?'
(251)

'மலைமீதில் விளைந்தாலும் உரலில் மசிய வேணும்'
(279)

'ஆணிப்பொன் நெருப்பிற் சாமோ ?' (288, 316)

'வெற்றிலைமேல் சுண்ணாம்பு நீட்டார்' (314)

'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' (314)

'வினை பிறருக்குச் செய்ய நினைத்தாலதுவே
தன்னைக் கெடுக்கும்' (441)

போன்ற பழமொழிகளும் கீர்த்தனை யெங்கணும் விரவிக் கிடக்கின்றன.

நாட்டுப்புறக் கதைகளுள், 'வேடனும் புறாவும்' என்னும் கதையும் ஒன்று. 'தன்வினை தன்னைச் சுடும்' என்னும் கருத்தினைக் கொண்டது. தேம்பாவணியில் இடம்பெறும் இக்கதை (மகனேர்ந்த படலம், 23-27) கீர்த்தனையிலும் இடம் பெறுகிறது. (பக். 440, 441).

பாமர மக்கள் நாவில் நடமாடும் பேச்சுமொழிச் சொற்கள் கலந்திருப்பது நாட்டுப்புறவியற் கூறுகளில் ஒன்றெனலாம். கீர்த்தனைகளில் அவ்வகைச் சொற்கள் நிறைய உள்ளன. குசவன் (7), சோடு (20), சோலி (42), பார்ச்சலம் (42), சீச்சி (42), மோரு (42), கெலிக்கும் (42), விருதா (42), தோற்பு (45), கெலிப்பு (45), பதடா (49), வதடா (49), எதடா (49), கெர்ச்சனை (52), கலியாணம் (171), பெண்டுகள் (201), வளர்த்தி (244), கெர்ப்பம் (251), பரியாசம் (251), அசனம் (290), உறன்முறையார் (313, 316, 317), ஜொலித்து (410), போன்ற சொற்கள் மட்டுமல்ல; 'தலை மீது கையை வைத்து' (315) என்பது போன்ற தொடர்களும் தேம்பாவணிக் கீர்த்தனையில் காணப்படுகின்றன.

பிறமொழிச் சொற்கலப்பு அக்காலச் சூழலுக்கேற்ப நாட்டுப்புற இலக்கியங்களில் காணப்படுவது போன்றே இக்கீர்த்தனையிலும் காணப் படுகிறது. கன்னியாஸ்திரி (205), விஸ்தாரம் (205), சாஸ்திரி (205), அஸ்திவாரம் (221), அநர்த்தம் (221), ரட்சிக்க (221), பரிக்கிரகம் (238), தேவஜனம் (238), கடாக்ஷம் (240), விஷயம் (241), பந்துவர்க்கம் (242), ஸ்நானம் (242), புஷ்பம் (251), சர்வேஸ்வரன் (252), ஜீவவிருட்சம் (245), பரிஷ்காரம் (257), சிரேஷ்ட (260), ராக்கினி (268), சமுத்திரம் (268), திவ்ய ஸ்தலம் (303), ஜென்மதோஷம் (302), உற்பாத்திரி (329), புஷ்பிக்க (329), ரட்சகம் (287), விசாரம் (288), ஜெகம் (333), ஜெனனம் (336), கருணாஜலதி (337), ஜெகதீஸ்வரன் (339), ஜலப்பிரளயம் (353), ஜீவபந்து (353), பொக்கிஷம் (377), துஷ்டர் (377), கோஷ்டம் (393), நஷ்டம் (403), நக்ஷத்திரம் (400), சபாஸ் (213), ஜாஸ்தி (284), முதலியவை கீர்த்தனையில் காணப்படுகின்ற பிறமொழிச்சொற்களில் சில.

ஐரோப்பிய மொழிச்சொற்களைத் தமிழ் நெறிக்கு இயையத் திரித்து வழங்குவதில் தற்காலத்தை நோக்கக் கீர்த்தனையில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. உறீப்ரு மொழி தற்காலத் தமிழ் அறிஞர்களால் எபிரேயம் என ஆளப்படுகிறது. ஆனால் கீர்த்தனையில் எபுரேவு (132) எனக் காணப்படுகின்றது. தற்கால வழக்கில் உள்ள ஆதாம், ஜான் போன்றவை ஆதன் (197), சுவானி (242) எனக் காணப்படுகின்றன. சில சொற்கள் ஐரோப்பிய மொழியில் எவ்வாறு பொருள்தரும் என விளக்கமும் ஓரிடத்தில் இடம் பெறுகிறது.

"துன்னரிய கிரேக்கினில் நட்சத்திர மென்றும்
துகளில்லா லத்தீனில் சமுந்திர மென்றும்
உன்னரிய சீரியா பாஷை தன்னில்
உத்தமநா யகியென்று முரைக்கலாமே" (பக். 125)

என மரி என்னும் சொல் விளக்கம் பெறுகிறது.

ஒப்புமையாக்கத்தாலோ அன்றி வேறுநூற் பயிற்சியாலோ மனஸ்கரித்து (235, 361), வசனித்தார் (176, 288) போன்ற தவறான சொல்லாக்கங்களும் சில விடங்களில் ஆளப்பட்டிருக்கின்றன. கோறி (238), போல்ப்பகர்கின்றேன் (420) என்பன போன்ற சொல், சந்திப்பிழைகளும் சிலவிடங்களில் காணப்படுகின்றன.

இற்றைக்கு நூற்றுப்பதினெட்டு ஆண்டுகட்குமுன் வெளிவந்த பதிப் பாயினும் அப்பதிப்பு முறை பாராட்டுதற்குரியது. தற்கால ஆய்வுக் கட்டுரைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற அடிக்குறிப்பு விபரங்கள் இப்பதிப்பில் கையாளப்படுகின்றன. இவ்விபரங்களும் ஆசிரியராலேயே தரப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

அடிக்குறிப்புக்கள் செவ்வனே தரப்பட்டிருக்கின்றன. சான்றாக, கபிரியேல் திருத்தூதர் அன்னை மரியிடம் வந்ததைக் குறித்து,

"கன்னி திருமண முடிந்த ஏழாந்திங்கள்
கருதரும்பங்குனி இருபத்தைந்தாம் தேதி"

எனவரும் அடிகளில், முடிந்த என்னும் சொல்லுக்கருகில் உடுஉக்குறி காணப்படுகிறது. அதன் விளக்கமாக பக்கத்தின் அடிக்குறிப்பில், 'தேம்பாவணி, ஐயம் தோற்று படலம், நகன்காம் பாட்டு' எனக்குறிக்கப் பட்டுள்ளது. இவ்வாறே மூலநூலாகிய தேம்பாவணியிலிருந்து பல சான்றாதாரங்கள் தரப்படுகின்றன. பலவிடங்களில் விவிலியத்திலிருந்தே மேற்கோள் கண்டுகொள்ள அடிக்குறிப்புக்கள் தரப்படுகின்றன. எடுத்துக் காட்டாக 'எரியும் தேவாக்கினி' (178) என்பதற்கருகில் உடுஉக்குறி யிட்டு, 'மோசே 3-ஆம் ஆகமம், 6-ஆம் அதிகாரம், 13-ஆம் வசனம்' என்னும் குறிப்புத் தரப்படுகிறது. இதுபோன்று தானியேல் (172), ஈசையா (177), அரசர் (207) ஆகியோரின் விவிலிய ஆகமப் பகுதி அடிக்குறிப்புக்கள் இன்றியமையா இடங்களெங்கனும் தரப்படுகின்றன.

விவிலியத்திற் காணப்பெறாத வரலாற்றுக் குறிப்புக்கள் இடம்பெறுமாயின், அவற்றின் மூலாதாரங்களாகிய 'சத்திய வேதப்பரிட்சை (120), 'ஞானோபதேசம்' (120, 164), 'பச்சிம காண்டம்' (154, 160, 203), 'மாதா சரித்திரம்' (181) போன்ற பலநூற் குறிப்புக்கள் உடுஉக்குறி விளக்கங்களாக அமைகின்றன. அகுஸ்தீனார் போன்ற இறைவல்லுநர் குறிப்புக்களும் (146) இடம் பெறுகின்றன.

அறியவாராச் சொற்கள் வழங்கப்படுமாயின் அவற்றுக்கான விளக்கங்கள் தரப்படுகின்றன. சான்றாக, ஓரிடத்தில் 'கொப்பேர்' என்னும் சொல் ஆளப்படுகிறது (350). அதற்கு விளக்கமாகக் 'கொப்பேரென்பது எபுரேவுப் பாஷைச் சொல்லாம். அஃதாவது கப்பல் செய்கின்ற மாமென்றுணர்க' என அடிக்குறிப்புத் தரப்படுகிறது. அன்னை மரியைப் பரலோக விண்மீன் (125) எனக் குறிப்பிட்டு அவ்வாறு அழைக்கப்படுவதற்குப் புனித பெர்னதுவின் விளக்கம் தரப்படுகிறது. கோவலர் உறைகின்ற 'எதர்' என்னும் இடத்தை 'எதரென்னும் கோபுரம்' எனச்சுட்டி, அவ்விடத்தின் சிறப்பு விளக்கமாக, 'யாக்கோபு வாழ்ந்திருந்த உப்பரிகை' (340) என அடிக்குறிப்பில் தரப்படுகிறது.

இசையறிவு படைத்தோர் இந்நூலை ஆயப்புகின் கீர்த்தனையின் இசைச் சிறப்புப் புலப்படலாம். சென்ற நூற்றாண்டிறுதியில் இதன் செல்வாக்கு இருந்ததாற்றான், 'தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு' என்னும் நூலின் பட்டியலில் காணப்படும் தேம்பாவணிக் கீர்த்தனை 2-காண்டம், அருளப்ப நாவலரால் வெளியிடப்பட்டிருக்கிறது எனக் கொள்ளலாம். இவ்விரு கீர்த்தனைகளும் மக்கள் பார்வைக்குக் கிட்டுமாயின் இசைத் தமிழுக்குக் கிறித்தவர் ஆற்றியுள்ள பங்கின் கணிப்புச் சற்றுக் கூடுதலாக அமைய வாய்புண்டு.

## துணை நூல்கள்

1. தேம்பாவணிக் கீர்த்தனை, முதற் பதிப்பு, 1866,

2. இராம நாடகக் கீர்த்தனை, 1914.

3. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, 1915.

4. கர்ணாமிர்த சாகரம், 1984.

5 பெருந்தமிழ், சென்னைப் பல்கலைக்கழகம், 1975.

6. தமிழ் நாடகம்—ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், 1979.

7. தேம்பாவணி, வீரமாமுனிவர், 1983.

# தமிழ் மருத்துவத்தில் தமிழ்

டாக்டர் (செல்வி) ஜி. கீதா, பி.ஐ.எம்., (எம்.டி.) சித்தா,
உதவி மருத்துவ அதிகாரி, அறிஞர் அண்ணா மருத்துவமனை,
சென்னை - 600 106.

*சித்த மருத்துவம் என்றழைக்கப்படும் தமிழ் மருத்துவம், கன்னித் தமிழ்மொழி தோன்றிய தமிழ்நாட்டில் தோன்றி, சித்தர்களால் வளர்க்கப் பட்டது. தமிழ் முதலில் தோன்றி, அதன் சீரிளமை குன்றாமல் இருப்ப தால், அது "கன்னித் தமிழ்" என்றழைக்கப்படுகின்றது. தமிழ் எல்லா மொழிக்கும் மூத்தமொழி; பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்க வல்லது. தமிழ்மொழி எவ்வாறு எல்லா மொழிக்கும் மூத்த மொழியோ, அவ்வாறு தமிழோடு ஒன்றி இணைந்து வளர்ந்த தமிழ் மருத்துவமும் மூத்த மருத்துவ நெறியாக விளங்குகின்றது. இன்றும் தன் சிறப்புக் குன்றாமல் வளர்ந்து வருகின்றது. அதனால் அதனை "கன்னித் தமிழ் மருத்துவம்" அல்லது "கன்னிச் சித்த மருத்துவம்" என்று பெருமை யோடு வழங்கலாம். இம் மருத்துவம் மற்ற மருத்துவத்திற்கெல்லாம் வழி காட்டியாகவும் விளங்கி வருகின்றது.*

*சித்த மருத்துவத்தை வளர்த்த சித்தர்கள், தமிழை அகத்தியமுனிவர் வளர்த்தார் என ஒருமனதாகக் கருதுகின்றார்கள். பார்வதி அம்மையிட மிருந்து தமிழ் நந்தி வழி அகத்தியருக்குக் கற்பிக்கப்பட்டது எனத் தேரையர் என்ற சித்தர் தனது "தேரையர் கரிசலில்" கூறுகின்றார்.*

*சித்த மருத்துவமும் பார்வதி வழி நந்திக்குக் கற்பிக்கப்பட்டு, நந்தி வழி அகத்தியருக்குக் கற்பிக்கப்பட்டு, அகத்தியர் வழி மற்ற சித்தர்களுக்கு அருளப்பட்டது என யூகி முனிவர் கூறுகின்றார்* (*சித்த மருத்துவாங்கச் சுருக்கம், பக்கம்* 4). *இறைவன் வழித் தமிழும், தமிழ் மருத்துவமும் அருளப் பெற்றதால், தமிழ் "தெய்வத் தமிழ்" என்றும், தமிழ் மருத்துவம் "தெய்வத்தமிழ் மருத்துவம்" என்றும் அழைக்கப்படுகின்றது. இக் கட்டுரையில் தமிழை வளர்த்தது அகத்திய முனிவர் எனச் சித்தர் பாடல்கள் வழிக் கருத முடிவதும் தமிழைப் பற்றிய சித்தர்களின் புகழ்ச்சி மொழி களும் விளக்கம் பெறுகின்றன.*

## சித்தர்கள் பற்றித் தொல்காப்பியர்

*தொல்காப்பியர் காலத்தில் முனிவர்களுக்கு "அறிவன்" என்ற பெயர் வழங்கியிருக்கின்றது என்பதை "மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்"* (*தொல்காப்பியம், புறம்.* 120) *என்னும் தொல்காப்பியத் தொடர்வழி அறிய முடிகின்றது. பிற்காலத்து முனிவர் கட்குச் "சித்தர்" என்ற பெயர் ஏற்பட்டது என்பது தெளிவாகின்றது. "அறிவன்" என்ற சொல் மூலம் சித்தர்களின் புலமை பற்றியும் சித்த மருத்துவம் பற்றியும் ஓரளவு உய்த்துணர முடிகின்றது.*

## தமிழ் கலைமகளிடமிருந்து தோன்றியது—தேரையர்

*" பிரச வார்த்தவளப் பெரிய தாமரையிற்*
*சரசுவதி தாளைச் சந்ததம் பரவி*
*மகத்துவ மிகுதமிழ் வரப்பிர சாதி*
*அகத்திய முனிவர னடியினைப் பரவி*
*தரும சவுமிய தன்மந்திரி சற்குரு*
*பரன்மகிமை யுட்கொண்டு பேயகத் தேரன்*
*செயுமுறைத் தெரிகிலாத் தேரனு யடியேன்*
*உயுமுறை வைத்திய வுரைத்தமிழ்க் கரிசல் "*
**(தேரையர் கரிசல், பக்கம் 7)**

*மேற்காட்டிய பாடலில் தேரையமுனிவர் வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைவாணியின் தாள்களைப் பணிந்து, சிறப்பு மிக்க தமிழ்மொழி கண்டு, தமிழை வரப்பிரசாதமாகக் கொண்ட மாமுனி அகத்தியருடைய தாள் பணிந்து, இக்கரிசலைக் கூறுகிறேன் என்கிறார். தேரையர் இப்பாடலில், சிறப்பு மிக்கது தமிழ்மொழி எனப் பாராட்டுகிறார். கலைமகள் வழித் தமிழ் அகத்தியருக்கு அருளப்பட்டது என்றும் கூறுகின்றார்.*

## அகத்தியமுனி தமிழைப்பற்றிக் கூறும் சிறப்புகள்

" சோபனமே சோபனமே
சுப சோபனந் தமிழ்ப்பாட
சோதியொளி யாய் நிறைந்த
சுத்தமுள வித்துவிளை—சோபன
அகத்தியறு மித்தலத்திற்
புத்தியுடன் யான்பாடி "
**(வைத்தியத் திருப்புகழ் மருத்துவத் தனிப்பாடல்கள், பக்கம் 80, பாடல் 32)**

*இப்பாடலில் அகத்தியர், தமிழைச் " சுப சோபனத் தமிழ் " எனப் பாராட்டுகின்றார்.*

**" வெல்லுந் தமிழ்க்கு அகத்திய மாமுனி**
**செல்லும் படிக்கில் வயித்தியம்**
**மிகவுமறிந்து இருபொழுதிட "**
**(அகத்தியர் பள்ளு 200, பாடல் 26)**

இப்பாடலில் அகத்திய முனிவர் "வெல்லுந் தமிழ்" எனத் தமிழைப் பாராட்டிக் கூறுகின்றார். எம்மொழியையும் இலக்கண வரம்பில் வெல்லும் திறன் மிக்கது தமிழ் என்பதால் இவ்வாறு கூறுகின்றார் எனலாம்.

"சோத்திய மில்லாமல்முனி ஏத்தமாந் தமிழில்
சொன்ன
துறையை யறிந்து செய்ய நிறைவாகும்"
(அகத்தியர் பள்ளு 200, பாடல் 68)

"சொந்த முனிவர் சொன்ன அந்தமாந்
தமிழ்ப்படிக்குத்
தொல்லுலகிலே கியாழம் வெல்லும் பாருமே.
(அகத்தியர் பள்ளு 200, பாடல் 93)

இப்பாடல்களில் அகத்தியர் தமிழை ஏற்றம் மிகுந்த தமிழ் எனக் கூறி, "சொந்த முனிவர்" எனத் தமிழக்குத்தான் சொந்தமானவர் என உரிமையும் கொள்கிறார்.

## தமிழ் எல்லா மொழிகளுக்கும் அடிப்படை—தேரைய முனிவர்

"ஆச்சப்பா தமிழினுட பெருமைகேளு அப்பனே
யகத்தியன் தான் பன்றுரப்பா
வாச்சப்பா வடுகருக்கும் ஆகும்பாரு வகையான பிரா
மணருக்குமாகும் பாரு
காச்சப்பா கன்னடியர்க்காகும் பாரு கலையான
குச்சிலியர்க் காகும் பாரு
மாச்சப்பா மராஷ்ட கர்க்காகும் பாரு
ஆணும் பாய னைவருக்கும் வேணும் வேணும்
அப்பனே
யனைவருந்தானறிந்து பாரே"
(தேரையர் வைத்தியம் 1500, பாடல் 1461)

தேரையர் இப்பாடலில், திராவிட மொழிகள் அனைத்துக்கும் தமிழ்தான் அடிப்படை என்கிறார். வடமொழிக்கும் தமிழ் அடிப்படை என்கிறார். உலகில் உள்ள மக்கள் அனைவரும் தமிழை அறிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்கின்றார்.

**தமிழின் ஓசைதான் வடமொழி: திருமங்கையாழ்வார்**

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயிறாகி''
(திருமங்கை ஆழ்வார் பாசுரம்)

என்னும் இப்பாடலில், திருமங்கை ஆழ்வார் தமிழின் ஓசைதான் வட மொழியானது என்று கூறுகின்றார். தமிழ்மொழி எல்லா மொழிக்கும் அடிப்படை என்கிறார்.

**தமிழ் தெய்வ மொழி—தேரையர்**

''பச்சைப் புனலால் நீறாகும்
பரனுருரைத்த மறைப்பொருளைப்
படியினந்தி யகத்தியற்குப்
பகர விபுத பண்டிதரும்
பகரவனைத் தவறாத
படியே யுரைத்தான் திராவிடத்தால்
பட்டார கர்க்குங் கிட்டாதார்
பட்டார கர்க்குங் கிட்டாதே''
(தேரையர் கரிசல் பாடல்)

தேரையமுனிவர் இப்பாடலில் சிவன் உரைத்த உண்மைப் பொருளைப் படியினந்தி அகத்தியர்க்குப் பகர - தேவபண்டிதரும், அதனை - அந்த உண்மைப் பொருளைத் திராவிடத்தால் (தமிழ்மொழியால்) தவறாதபடி உரைத்தார். பட்டாரகர்க்கும் (கடவுளுக்கும்) கிட்டாதது: கிட்டார் காக்கும் - நோயைப் போக்கிடும் கிடைத்தற்கரியது.

இப்பாடல் வழியே, தமிழ் சிவன் வழி நந்திக்கு அருளப் பெற்று, நந்தி மூலம் அகத்தியருக்கு அருளப்பெற்றது எனக் காண்கிறோம். இறைவனால் தமிழ் அருளப் பட்டதால், தமிழ் தெய்வமொழி ஆயிற்று.

**உலகினர்க்கெல்லாம் உய்ந்தி செந்தமிழால்–கோரக்கர் சித்தர்**

''திரம் பெருகத் தேவசித்தர் தாளைப் போற்றித்
தீமையறச் செந்தமிழால் உலகினர்க்கே
முரணகல முச்சுடரும் அருள நாட்டி
முத்தாரம் தனிக்களங்கம் தீரச் சொல்வேன்
(கோரக்கர் சித்தர் அருளிய முத்தாரம், பாடல் 31)

கோரக்கர் தனது நூலாகிய முத்தாரத்தில், இயன்ற அளவு தமிழின் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றார். உலகெல்லாம் உய்யச் சாக்காடாகிய தீமை நீங்க உரைக்கத் தொடங்கிய அருள்மிகு கோரக்கர் நாதர் "தீமையறச் செந்தமிழால்" உலகத்தினர்க்கே முரணகல—களங்கம் தீரச் சொல்வேன் என்று கூறும் குறிப்பு உணரத்தக்கது. சாகாக் கலை தென்தமிழ் நாட்டில் தோன்றியதென்பதுவும், அதனை உலகினர்க்கெல்லாம் முரணகல-அதாவது களங்கம் தீர உரைப்பேன் என்பதும், உலகினர்க்கெல்லாம் உய்தி செந்தமிழால் உண்டாகும் என்பதும் கோரக்கர் துணிபுகள்.

## செந்தமிழ் பதங்கடந்த பண்பு—சிவவாக்கியர்

"என்னவென்று சொல்லுவே னிலக்கண மிலாததைப்
பன்னுகின்ற செந்தமிழ் பதங்கடந்த பண்பென
மின்னகத்தில் மின்னொடுங்கி மின்னதான
வாறுபோல்
என்னகத்துள் ஈசனும் யானுமல்ல தில்லையே"
(சிவவாக்கியர் பாடல் 88)

இப்பாடலில் செந்தமிழ் பதங்கடந்த பண்புடையது எனக் கூறிச் சிவவாக்கியர் தமிழைப் பாராட்டுகின்றார்.

## முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகையார்களோடு குலாவி —தாயுமானவர்

"முத்தமிழ் முழக்கமுடன் முத்த நகையார்களொடு
முத்து முத்தாய்க் குலாவி
மோகத் திருந்துமென் யோகத்தில் நிலைநின்று"
(தாயுமானவர் பாடல்)

இப்பாடலில் முல்லையரோடு குலாவுவதற்கு முத்தமிழ் வேண்டும் என எதிர்பார்க்கின்றார் தாயுமானவர்.

## சுடர்க்கடவுள் தந்த தமிழ்—கம்பர்

"உழக்குமறை நாலினும் உயர்ந்துலக மோத
வழக்கினும் மதிக்க வியினும் நாடி
தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்"
(கம்பராமாயணம், அகத்தியர் படலம்)

கம்பர் தம் இராமயாணத்தில், தமிழ் சுடர்க் கடவுள் தந்தது என்கிறார்.

## மெய்யெழுத்து 18—18 சித்தர்கள்

18 சித்தர்கள் தமிழ்நாட்டில் 12 இனமாக வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. 18 சித்தர்களின் மகிமை, 18 நாள் நீண்ட பாரதப்போர், பாரதத்தில் 18 பருவங்கள், பகவத்கீதையில் 18 அத்தியாயங்கள், 18 நாள் போராடி வெற்றியில் முடிந்த பாரதப் போர், 18 அத்தியாயங்கள் அடங்கிய தத்துவ போதனைகளைக் கேட்ட பின் மனக்கலக்கம் நீங்கி, தைரியங்கொண்டு போர் செய்து வெற்றியடைந்த அர்ச்சுனன், 18 படிகள் கொண்ட அழகர் கோயில், ஐயப்பன் கோயில், 18 வகை தானியங்கள் என வரும் கருத்துகளைப் பார்ப்பின் எதனையும் 18 ஆகப் பார்க்கும் "பார்வை" இருந்துள்ளதை அறிய முடிகிறது. இப்பார்வைக்கும், மெய் யெழுத்துகள் 18 என்பதற்கும் தொடர்பு இருக்கலாம்.

## உயிரெழுத்து 12—12 இனச் சித்தர்கள்

12 இனச் சித்தர்கள், 12 மாதங்கள், 12 இயேசுவின் சீடர்கள், 12 கபால நரம்புகள், 12 இராசிகள் குறிப்பிடத்தக்கனவாகும். சீன நாட்டில் 12 நதிகளைச் சிறப்பாகப் போற்றி வணங்குகின்றார்கள். 12 என்ற எண் சிறப் பாகக் கூறுவதற்கும், தமிழில் உள்ள உயிரெழுத்துக்களை 12 என்பதற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கலாம்.

18 சித்தர்கள், 12 இனமாக வாழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதாரம், சித்த மருத்துவ வரலாறு, புலவர் என். கந்தசாமிப்பிள்ளை) மொத்தம் 216 சித்தர்கள் வாழ்ந்தார்கள் எனக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு குறிக்கவில்லை. தமிழின் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் மொத்தம் 216 ஆகும். இதிலிருந்து சித்த மருத்துவம் தமிழோடு இணைந்தது என்று ஓரளவு ஊகித்து அறிய முடிகின்றது. உயிர் எழுத்தும், மெய் யெழுத்தும் சேர்ந்ததுதான் தமிழ் என்பது போல், உயிரும் மெய்யும் சேர்ந்ததுதான் இவ்வுடல் என்றும், சித்தர்கள் மறைமுகமாக நமக்கு அறிவிக்கிறார்கள். இதனால்தான் சித்தர்களைத் தொல்காப்பியர் "அறிவன்" என்று கூறியிருக்கின்றாரோ எனக் கருத இடமுளது.

சித்தர்கள் தமிழில் வல்லவர்களாய் விளங்கினார்கள். தமிழின் இலக் கணங்களை அறிந்திருந்தார்கள். மருத்துவத் தனிப்பாடல்கள், மருத்துவத் தாலாட்டுப் பாடல்கள் எழுதியுள்ளார்கள். இவற்றுள் தேரையர் யமக வெண்பா, தேரையர் கரிசல், தேரையர் மருத்துவப் பாரதம் குறிப்பிடத் தக்கனவாகும். மருத்துவத் தனிப்பாடலில், திருப்புகழ் சந்தத்தில் மருத் துவத்திற்குப் பயன்படும் எண்ணெய் வகைகள் பற்றிப் பாடியுள்ளார். வண்ண (கொச்சகம்)த்தில் இலேகிய வகைகளும், கலிவெண்பாவில் மன்மத சிந்தாமணி என்ற ஆண்மையைப் பெருக்கக்கூடிய ஊட்ட மருந்துகளும், சோபனத்தில் உடலுக்கு ஊட்டம் தரக்கூடிய நெய்வகைகளும், நொண்டிச் சிந்துவில் இளகங்களும், குறவஞ்சியில் நெய்வகைகளும் பாடியுள்ளார். சான்றுகளாக,

"வையக மெங்கனும் வாய்த்தவோர் தேவனே
மனுவை மிகப்படைத்தத் தானடி சிங்கி—அந்த
மானிடவர் பிணி தீர வவுடதம்
வண்ணம் யுடனுரைப் பாயடா சிங்கா"
(வைத்தியத் திருப்புகழ் தனிப்பாடல், பாடல் 32)

என்னும் குறவஞ்சிப் பாடலையும்.

"தெந்தின திந்தின்ன தின்ன
தின்ன தினதின தின தின்ன
சுக்கு திப்பிலி மிளகு—நிறைதான்
சுயமாவராக னெடையிரண்டு ருமி
மல்தகி சிற்றரத்தை—மிகவே
வாகான தாளிசம் நெஞ்சிமுள்ள—(தெந்தின)
(வைத்தியத் திருப்புகழ் தனிப்பாடல், பாடல் 37)

என்னும் நொண்டிச் சிந்துப் பாடலையும் கொள்ளலாம்.

மேற்கூறிய கட்டுரை வழி அகத்திய முனிவர்தான் தமிழின் புகழை வளர்த்ததாகச் சித்தர்கள் ஒருமனதாகக் கூறுகிறார்கள் என அறிய முடிகிறது. சித்தர்கள் தமிழின் பெருமைகளை ஓரளவு பாடியுள்ளனர்; இக்கட்டுரை வழியே தமிழ் மருத்துவமும், தமிழும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன எனவும், சித்தர்கள் தமிழ் இலக்கியங்களில் வல்லவர்களாக விளங்கினார்கள் எனவும் அறிய முடிகிறது. தமிழ் எல்லா மொழிக்கும் மூத்தமொழி என்றும், உலக மக்கள் அனைவருக்கும் தமிழ் வேண்டும் என்றும், சித்தர்கள் கருதுவது இக்கட்டுரை வழியே ஓரளவு சுட்டப்பட்டது.

# PROBLEMS ENCOUNTERED IN THE PRODUCTION OF ENCYCLOPAEDIA OF TAMIL LITERATURE

DR. V. ARASU

In a world where 'the printed word' has become absolutely indispensable, Encyclopaedias have become part of our academic paraphernalia and their absence would certainly constitute a serious handicap to any researcher. More than a mere compilation of datails in alphabetical order, Encyclopaedia is supposed to serve as an authentic source of information and the information that is given should be necessarily updated and exhaustive. In the present context of 'specializations', it is increasingly important that each discipline should have an Encyclopaedia though thls runs counter to the accepted definition of 'Encyclopaedia'. This paper proposes to discuss the problems that arise in the process of producing the 'Encyclopaedia of Tamil Literature'. Under our purview are

1. The nature of basic sources[1] in Tamil
2. Their availability and other related problems and
3. How to approach these problems.

Contrary to the remote antiquity of the Tamil language, there exists a lacuna as far as the reference materials are concerned. It becomes abundantly clear when we compare the profusion of reference materials in English. Such a comparison would lead us to other social, economic, political questions which will not be pertinent to our discussion.

Bibliographies become indispensable in a literary research. And annotated bibliographies would be a more ideal sourse of information. We find hundreds of such bibliographies in English; research on bibliographies and even bibliography of bibliographies have been made available. On the other hand in Tamil, there is a dearth of bibliographies[2]. Since all the literary pieces produced before the tenth century have been compiled and edited,

the absence of bibliographies does not pose any problem. But it is certainly a problem when we intend to work on Tamil literature after the 10th century as we do not find any systematic compilation of details.

1. All the books that have been published in Tamil have not been listed anywhere.
2. There are problems in selecting books on the basis of its merit.
3. And ultimately exhaustive coverage becomes impossible.

Apart from bibliographies, books on literary history are quite essential for a literary research. The forces in the society must be studied to appreciate literature as those forces determine it. Hence in the production of Encyclopaedia, literary history is very much essential to present a literature, with all its dimensions. As for literature, it can be said that there are no detailed books on Tamil literary history.[3] (The absence of books on Tamil social history is one of the contributing factors). The problems encountered because of the absence of books on literary history are:

1. The problem of identifying the social background of a particular work.
2. The problem of identifying the date of a work of art.
3. The impact a literary work made on a society remains unknown.

And now comes the life of the artist which is undoubtedly important in literary research. This point has been lost sight of. Still there are very few writers who have volunteered to produce such biographies of men of letters.[4] We do not know whether any private organization has undertaken this type of work. And problems that we have to face are

1. The relation between artist and the work of art remains unidentified because of lack of evidence.
2. One is prone to misinterpret the writer's philosophical outlook.

3. At times, even wrong information regarding the author can be treated as evidence.

The research journals in a language play an important role in keeping abreast of the recent trends and findings in the cultural developments and linguistics.

The publications on linguistics have considerably increased[5] while sociological analyses of cultural aspects of literature are meagre. Indexes of such journals have also been not maintained properly.[6] And so one should necessarily hesitate when incorporating research findings in the encyclopaedia. This leads to problems such as:

1. The impact of social, economic and political changes on the culture of the Tamil remains unexplained.
2. The possibility of recording the recent trends in research in Tamil is slender.

As 'encyclopaedia' implies exhaustive explication of everything that comes under a subject, information regarding manuscripts should be made available to the reader.

We come to know that there are a few rare Tamil manuscripts being preserved abroad. They can be microfilmed for our use in the Encyclopaedia. The problems in the microreproduction of such important manuscripts can be described as follows:

1. Government Institutions have not made any effort to microfilm these manuscripts. (Some initiative seems to have been taken, of late) In this context, details of the manuscripts cannot be accommodated in the encyclopaedia.
2. A complete inventory of all these manuscripts scattered all over the world has yet to be made.

It should be noted that the Encyclopaedia has to go without any reference to the manuscripts. Even the manuscripts of noted scholars have to be unavoidably overlooked.[7]

Many research projects have been carried out in the Universities both in India and abroad. And it is imperative that an Encyclopaedia should record these facts also. Here again, the problems we have to face are

1. Complete indexes to the research projects are not made available.
2. Some incomplete reports have been published by certain Institutions.[8]
3. Reports on the research projects are not published by the Institutions (Whereas foreign universities allow publication of reports).

There is a wide gap existing between the contemporary writers and the Universities; on the contrary, American Universities take creative writers into their fold. The writers are invited and allowed to teach the students.

This remains as something far from our imagination in the Indian Universities.[9] The committed writers publish in a few little magazine which are not noticed by the universities. And so details relating to these authors can not be obtained.

So much for the non-availability of basic sources and reference materials which impedes our making a complete encyclopaedia.

Indexes are very important for any literary research. Some scholars[10] have arrived at the date of a literary work on the basis of the words used. There are a few indexes in Tamil.[11] In the production of encyclopaedia, these indexes will be helpful in collecting data.

1. Again, complete indexes have not been prepared so far.
2. Efforts to prepare indexes to other disciplines have not been taken as yet.

We should acknowledge the fact that many attempts have been made in Lexicography. Lexicons, dictionaries and bilingual dictionaries are relatively larger in number.[12] But there have

been no discipline-wise dictionaries. Among the dictionaries in Tamil, the 'Tamil Lexicon' published by the University of Madras is found very useful in the preparation of Encyclopaedia. Yet the absence of undermentioned dictionaries[13] poses problems.

1. Dictionary of Tamil Literary Terms
2. Biographical Dictionary of Tamil writers.

In the realm of encyclopaedia, *apitāṉa kōcam*, *apitāṉa cintāmaṇi* and *kalaikaḷañciyam* (10 volumes) are the remarkable attempts made in Tamil.[14] And these serve as a source of information for the Encyclopaedia of Tamil literature. Even in these encyclopaedias, certain entries on Tamil literature are not complete. For instance,

ரா. பி. சே., மு. வ. இருவருக்கும் பொதுவான—போற்றத்தக்க—ஒரு பேரியல்பு உண்டு. அது காலத்துக்கு ஏற்ற கல்விக்கடமை—தமிழ்க் கடமையைச் செய்தமையே. இவ்வுண்மையோடு ஒத்த ஒன்று இரு பேராசிரியர்களும் விடுதலை பெற்ற இந்தியாவில் உரிமை பெற்ற தமிழகம்

*அமைப்பதில் தமிழரசுக் கழகத்தோடு தயக்கமின்றி ஒத்துழைத்தமையே ஆகும். தமிழரசுக் கழகத்தின் 1. தமிழக எல்லைகள் மீட்பு, 2. தமிழகத்தின் தலைநகரம் சென்னையாகவே அமைதல், 3. தமிழைத் தமிழக ஆட்சி மொழியாக்கல் ஆகிய மூன்றிலும் 1945 முதல் 1961 வரை இரு பேராசிரியர்களும் முழுமையாக ஒத்துழைத்தனர். திராவிட இயக்க எதிர்ப்பில் மட்டும் பேராசிரியர் மு. வ. வுக்குச் சற்று தயக்கம் இருந்தது; தமிழரசுக் கழகத்தோடு சற்றுக் கருத்து வேறுபாடு இருந்தது. ரா. பி. சே. யினும் மு. வ. எழுத்துகளிலேயே வடவர் எதிர்ப்புக் கருத்துகள் உள்ளன. இது பற்றி ஒரு நீதி மன்ற வழக்கும் நடந்தது; ஆனால் இக்கருத்து வேறுபாடு காலப்போக்கில் ம. பொ. சி., மு. வ. இருவரிடமும் கரைந்து விட்டது. இது குறித்து ம. பொ. சி. யின் எனது போராட்டம் பக்கங்கள் 553-554 பார்க்கத்தக்கது.*[1]

*ஒரு வகையில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யை இலக்கிய உலகிற்கு உரியவராக உருவாக்கியவை திரு. வி. க. வின் எழுத்தும் பேச்சும் எனில் அடுத்த நிலையில் பேராசிரியர் ரா. பி. சே. யின் இலக்கியக் கட்டுரைகள், எழுத்தும் பேச்சும் எனலாம். அதற்கு ஒப்பாக, திரு. வி. க. வுக்கு அடுத்த நிலையில் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. யின் எழுத்தும் பேச்சும் டாக்டர் மு. வ. வைப் பெரிதும் தமிழர் வாழ்வியல் சிந்தனைகளில் ஊற்றமுறச் செய்தன எனலாம். மு. வ. வின் 'கண்ணகி'யும் 'மாதவி'யும் 'இளங்கோ'வும் தமிழர் வாழ்வியல் ஒட்டிய பல புதினங்களும், கட்டுரைகளும் கடிதங்களும் சிலம்புச்செல்வரின் சிந்தனைச் செல்வாக்குக்குச் சான்றுகள் எனலாம்.*[2]

---

1. ம. பொ. சிவஞானம். எனது போராட்டம், இன்ப நிலையம் சென்னை, முதற்பதிப்பு, 1974.

2. சிலம்புச்செல்வர் பற்றி மு. வ.

திரு. கிராமணியாரின் பேச்சிலும் எழுத்திலும் எவரைப் பற்றிப் பேசினாலும் குணம், குற்றம் இரண்டையும் சீர்தூக்கிப்பார்க்கும் பண்பு இருப்பது தனிப்பெரும் சிறப்பாகும். தம் கட்சியைச் சார்ந்தோருடைய குற்றங்களைக் குணமாகக் காணுவதும் எதிர்க்கட்சியினைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவருடைய குணங்களையும் குற்றமாகக் காணுவதுமாகிய அரசியல் மூடநம்பிக்கை திரு. ம. பொ. சியிடம் இருக்கக் கண்டதில்லை.

பேச்சிலும் எழுத்திலுமே அன்றித் திரு. கிராமணியாரின் எண்ணத்திலேயே ஒரு தனிப்போக்கு உண்டு. எண்ணத்தில் உள்ள புது வகைத் தெளிவும் எழுச்சியுமே அவருடைய 'முரசி'லும் மேடையிலும் ஒலிக்கின்றன. உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்.

பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டுக்கள் கிளம்பும்; அவை பாமரரும் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் வடிவுபெறும்.

பழங்காலப் புலவர் பெருமக்களின் உள்ளக் கருத்துக்கள் ஆராயப்படும். அவை பாட்டாளி மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் எடுத்துரைக்கப்படும். காந்தியம் போற்றப்படும்; கார்ல்மார்க்ஸ் தத்துவமும் ஆராயப்படும்.

ஈண்டு பேரறிஞர் அண்ணாவுக்கும் ரா. பி. சே.வுக்கும் இருந்த இணக்கத்தினும் அண்ணாவுக்கும் மு. வ. வுக்கும் இருந்த இணக்கம் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது பற்றிய பல செய்திகளை எழுதி வைக்காமல் பேராசிரியர் மா. கி. தசரதன் மறைந்தது பேரிழப்பாகும்.

பேராசிரியர்கள் ரா. பி. சே., மு. வ. இருவரிடமும் அவர்கள் காலத்துத் தேசிய இயக்கமும் நீதிக்கட்சி — திராவிட இயக்கங்களும் பெருந்தாக்கம் செலுத்தின எனக் குறித்தல் தவறாகாது.

ஒருமுறை பேராசிரியர் ரா. பி. சே. இராசாசிக்கு (1940 களில் கூட இராசாசி கூட்டங்களில் ' தலைவர் அவர்களே!' என்றழைக்காமல் 'அக்கிராசனாதிபதி அவர்களே!' என்று விளித்துப் பேசியதை நானே கேட்டுள் ளேன்). மறுப்புத் தெரிவிக்கும் வகையில் 'மிகையாகாது' என்ற செந் தமிழ்ச் சொல்லைப் பன்முறை பயன்படுத்தியது நினைவுக்கு வருகிறது. அவ்வாறே இராசாசி ஒருமுறை (திரு மீ. ப. சோமு அவர்கள் சாகித்திய அகாதமி விருது பெற்றதற்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசும்போது) மு. வ. வின் பேச்சைக் கேட்டுவிட்டுப் 'பாதிரியார் பேசுவது போல இருக் கிறது!' என்று குறிப்பிட்டதாக திரு சோமு வாயிலாகவே கேள்விப்பட்டது நினைவுக்கு வருகிறது (டாக்டர் மு. வ. திருப்பத்தூர் கிறித்துவக் குல ஆசிரமத்தில் உருவாகியவர் என்பது நினைவு கொள்ளத்தக்கது).

ரா. பி. சே. யை விட மு. வ. வின் எழுத்துகளில்—சிறப்பாகப் புதினங் களிலும் கட்டுரைகளிலும் கடிதங்களிலும் — சமன்மை, பொதுவுடைமைத் (Socialism/Communism) தாக்கம் இருத்தல் கவனிக்கத்தக்கது. இதுவும் காலத்திற்கேற்ப இரு பேராசிரியர்களின் கருத்துகளும் கனிவு பெற்றன என்பதற்குரிய சான்றாகக் கொள்ளலாம்.

இக்கருத்தோடு இயைபுடைய இன்னொரு கருத்து: ரா. பி. சே., மு. வ. இருவரும் திரு. வி. க. விடம் பெருமதிப்பு கொண்டவர்கள். இதன் விளைவே ரா. பி. சே. தமது தலைசிறந்த 'ஊரும் பேரும்' என்ற தமிழ்வளர்ச்சிக்கழகப் பரிசுபெற்ற ஆய்வு நூலுக்குத் திரு வி. க. விடம் முகவுரை (1946) பெற்றதும் டாக்டர் மு. வ. தம் நூல்களுள் தலைசிறந்த 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற நூலுக்கு மட்டும் திரு. வி. க. விடம் அணிந்துரை (1948) பெற்றதும். (டாக்டர் மு. வ. வின் தமிழிலக்கிய வரலாற்றுக்குப் பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ.

---

கருத்துக்களில் எளிமை காணப்படும்; எளிதில் அளவிடமுடியாத ஆழமும் காணப்படும், கலைவளம் மல்கி இருக்கும். அது வாழ்வின் தேவைகளுக்கு ஏற்றவைகளாகவே மாண்புறும்; பழைய பண்பாடும் மதிக்கப்படும்; சீர் திருத்தப் புதுமையும் சிந்திக்கப்படும். அழிவு செய்யவரும் பெரும் வெள்ளம் போல் அலைகள் புரளும்; ஆக்க வேலைக்கு உரிய வகையில் அணைகளும் அமையும்; ஆத்திரம் விஞ்சும்; அறம் விளங்கும்.

எல்லாம் சேர்ந்த ம.பொ.சி. ஒரு தனிப்போக்கு என்றேசொல்லவேண்டும். (செங்கோல்; மலர்: 35, இதழ்: 30, 23—6—85, ப. 3).

அணிந்துரை தந்தமைக்குச் சாகித்திய அகாதமி காரணம் ஆகலாம். ஏனெனில் அந்நூல் டாக்டர் மு.வ. வின் தனி வெளியீடு இல்லை. எனினும் பேராசிரியர் டாக்டர் தெ.பொ.மீ., டாக்டர் மு.வ. வின் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு அணிந்துரை தந்தது பெருமைக்குப் பெருமை செய்ததாகும்).

இனி, இவ்விடத்தில் தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. தமது 'வாழ்க்கைக் குறிப்பு'களில் ரா. பி. சே., மு. வ. இருவர் பற்றியும் குறித்திருக்கும் பகுதிகள் ஆழ்ந்து கருதத்தக்கன.[3] இருபெரும் பேராசிரியர்களிடம் இலக்கிய ஒற்றுமை வேற்றுமைகளைத் திரு. வி. க. வின் பார்வையும் பதிவும் தெளிவும் படுத்தும்.

## சேதுப் பிள்ளை

*கம்பர் தமிழை வளர்ப்பதற்கென்று தமிழ்நாட்டில் அவ்வப்போது சிலர் பிறப்பதுண்டு. அவருள் சேதுப்பிள்ளை ஒருவர். இவ்வுலகம் கம்பர் கழக மானால் உள்ள நிறைவு கொள்வோருள் சேதுப்பிள்ளை முதல்வராக இருப்பார். எவ்விடத்திலும் எம்மேடையிலும் எப்பேச்சிலும் அவர் கம்பரை மறப்பதில்லை. அவர் நா கம்பரின் உறையுளாகியது.*

*சேதுப்பிள்ளையின் பேச்சிலும் எழுத்திலும் எதுகை மோனைகள் அணி செய்யும். அவ்வணி அவர்க்கு இயற்கையாயிற்று. என் தலைமையில் சேதுப்பிள்ளை பலமுறை சொற்பொழிவாற்றியுள்ளார். அப்பொழிவு பொழிலாகும்; பொழில் மென்காற்றை வீசும். சேதுப்பிள்ளை இளமையில் என்னுடன் நெருங்கியதில்லை. காரணம் அந்நாளில் யான் புகுந்த அரசியல் உலகம் அவர்க்குப் பிடியாமை என்று சொல்லப்பட்டது.*

*மேற்கண்ட திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பகுதியிலும் ரா. பி. சே. பற்றித் திரு. வி. க. வின் இரத்தினச் சுருக்கமான சொல்லோவியம் ஒன்று உள்ளது. அதுவருமாறு :*

*தமிழ் கொழிக்கும் பொருநைக் கரையில் பிறந்து, தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து, தமிழார்ந்த மனமொழி மெய்களைப்பெற்றுத் தமிழ் வண்ணமாய்த் தமிழ் பொழியும் ஒரு பெருங் கொண்டலிடை உதித்த மின்னொளி இந்நூல்.*

## வரதராசனார்

*வாலாஜா, இராணிப்பேட்டை, வேலூர், வெட்டு வானம் முதலிய இடங்கட்கு யான் அடிக்கடி செல்வேன். கூட்டங்களில் யான் மு. வரதராஜனாரைப் பார்ப்பேன். அவர் என்னைக் கண்டதும் ஒதுங்கி ஒதுங்கி நிற்பார். பின்னே நாங்கள் நெருங்கிப் பழகினோம்.*

---

3. திரு. வி. கல்யாணசுந்தரனார், திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-1, மூன்றாம் பதிப்பு—1982, பக். 164—65; 660—62.

வரதராஜனார் முக அமைப்பு என் மூளைக்கு வேலை அளித்தது. அதைச் சிந்திக்கச் சிந்திக்க என் மூளை அவர் மூளையை நண்ணியது. நுண்ணறிவுக்கேற்ற முகம் வடிந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன்.

முதல் முதல் வரதராஜனார் பேச்சை யான் வெட்டுவானத்தில் கேட்டேன்; அப்பேச்சு அவர் முக அமைப்பைப் பற்றி யான் கொண்ட முடிவை உறுதிப்படுத்தியது. அவரது எழுத்தும் பேச்சைப் போலவே இருத்தல் கண்டேன்.

வரதராஜனார் பேச்சிலும் எழுத்திலும் பர்னார்ட்ஷாவின் கருத்துக்கள் ஆங்காங்கே பொதுளும். அவர் பர்னார்ட்ஷா நூல்களைப் படித்துப்படித்து ஒரு தமிழ் 'பர்னார்ட்ஷா' ஆனார் என்று கூறுதல் மிகையாகாது. பர்னார்ட்ஷாவைப் பார்க்கிலும் வரதராஜனார் ஒரு துறையில் சிறந்து விளங்குகிறார் என்பது எனது ஊகம். பர்னார்ட்ஷா பலப்பல நூல்களை எழுதி எழுதி முதுமை எய்தியவர். இம்முதுமையில் அவர்க்கு வழங்கும் இக்கால அரக்கப் போர்க்காட்சி 'வாழ்க்கைக்குக் கிறிஸ்து வேண்டும்; பைபிள் வேண்டும்' என்னும் எண்ணத்தை அவரிடம் அரும்பச்செய்து வருகிறது. வரதராஜனார்க்கோ அக்கருத்து இளமையிலேயே முகிழ்த்தது. 'வாழ்க்கைக்குச் சமயம் தேவை; கடவுள் தேவை' என்று இளமை வரதராஜனார் பேசினார்; எழுதினார். கீழ்நாட்டு இளமை மேல்நாட்டு முதுமையை விஞ்சி நிற்கிறது.

கூட்டம் கூடுதற்கு முன்னர்க் காலையிலும், கூட்டம் முடிந்த பின்னர் மாலையிலும் வரதராஜனாரும் யானும் ஆற்றங்கரைக்குச் செல்வோம்; தோட்டங்கட்குப்போவோம்; இயற்கையை எண்ணுவோம்; பேசுவோம்; உண்போம். அவர் திருப்பத்தூரில் வந்திருந்தபோது இயற்கையோடியைந்த வாழ்வு அவரிடம் தானே தவழ்ந்தது. நண்பரது சென்னை வாழ்க்கை இயற்கையிலே செயற்கையைச் சேர்த்தது. அடிக்கடி நண்பரைச் சென்னையில் காண்பதில் எனக்கு இன்பம் உண்டாகிறது; அதே நேரத்தில் செயற்கையின் சேர்க்கை நினைவு தோன்றும்போது துன்பம் உண்டாகிறது. அன்பரும் சிற்சில போது வருந்துவது எனக்குத் தெரியும்.

வரதராஜனார் தமிழறிஞரா? சீர்திருத்தக்காரரா? அவர் தமிழறிஞர் என்பது வெள்ளிடைமலை. சீர்திருத்தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு. அவரது சீர்திருத்தப் பேச்சுகளை யான் பல முறை செவிமடுத்துள்ளேன். அவர் வாழ்க்கைச் சீர்திருத்தக்காரர்—சமூகச் சீர்திருத்தக்காரர் என்பதில் ஐயமில்லை. அவரை எனது சீர்திருத்த உலகில் என் உள்ளம் சேர்த்தே இருக்கிறது.

வரதராஜனார் என் வீட்டுக்கு வருவார்; எனக்கினிய கனிகளைக் கொணர்வார். அவர் என்னிடம் பேசிக்கொண்டே எனது அன்றாட வாழ்க்கையை ஆய்ந்துள்ளார். அஃது எனது மணிவிழாவை முன்னிட்டு 'வள்ளுவர் குறட்பா' வெளியிட்ட மலரில் வரதராஜனார் வரைந்துள்ள ஒரு கட்டுரையால் தெரிகிறது.

*அறிஞர் இப்பொழுது பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருக்கிறார். அவர் பத்திரிகையுலகிலும் ஓர் ஆசிரியராதல் வேண்டும் என்பது எனது வேணவா. 'ஆண்டவன் அருள் செய்வானாக' வரதராஜனாரிடம் தமிழ் பயிலும் மாணாக்கர் சிலர் என்னிடம் வருவர். அவருள் குறிக்கத்தக்கவர் வேங்கடசாமி, இரகுநாயகன், குருசாமி முதலியோர் (மற்றவர்கள் பெயர் தெரியவில்லை) இவர்கள் தொண்டால் வருங்காலத் தமிழ்நாடு நன்கு அமையும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டாகியிருக்கிறது[4].*

இந்தக் கட்டுரையில் இந்த இடத்தில் திரு. வி. க. போற்றும் திரு. வி. க. வாக இன்று நம்மிடையில் உள்ள சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்கள் தமது தன் வரலாறாகிய 'எனது போராட்டம்' என்ற நூலின் முதற்பதிப்பில் (1974) பக்கங்கள் 545–546-இல் உள்ள ஒரு குறிப்பை—இக் கட்டுரையாளனைப் புல்லரிக்கச் செய்யும் ஒரு குறிப்பை—நினைவூட்டிக் கொள்ளல் பொருத்தம்.

## சிலப்பதிகார மாநாடு

*1951 மார்ச் 24ஆம் நாளில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலிலே திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாகச் சிலப்பதிகார மாநாடு நடந்தது. மாநாட்டுப் பந்தலுக்குக் 'கண்ணகிப் பந்தல்' என்று பெயர் வைக்கப்பட்டது. தமிழ் மொழியின் வரலாற்றிலேயே சிலப்பதிகாரத்தின் பெயரால் கூட்டப்பட்ட முதல் மாநாடு இதுதான். காங்கிரஸ் பாரம்பர்யத்தைச் சார்ந்த தமிழரசுக் கழகத்தார் நடத்திய முதல் இலக்கிய மாநாடும் இதுதான். பண்டிதர்களின் பெட்டிகளிலே மறைந்து கிடந்த சிலப்பதிகாரக் காப்பியத்தை இந்த நாளிலேதான் சாதாரணப் பொதுமக்கள் மத்தியிலே கொண்டு வந்த பெருமையை நான் அடைந்தேன். காங்கிரஸ்காரரும் என் அரிய நண்பருமான வடபாதி மங்கலம் திரு வி. எஸ். தியாகராஜ முதலியார் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து இம் மாநாட்டைத் தமிழுக்குப் புகழ் தேடித்தரும் வகையில் சிறப்பாக நடத்தி வைத்தார்.*

---

4.□ மேற்கண்ட மேற்கோள் பகுதிகளில் இக்கால எழுத்துச் சீர்திருத்தம் மட்டுமே இக்கட்டுரையாளனால் செய்யப்பட்டுள்ளது. கிரந்த எழுத்துகளிலும் மாற்றம் செய்யப்படவில்லை.

□ குருசாமி என்று குறிக்கப்படும் மாணவரே பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி.

□ மு. வ. மாணவர்களை நினைக்கும்போது திரு. வி. க. வுக்குப் புதிய தமிழகம் நினைவுக்கு வரல் கருதற்குரியது:

□ திரு. வி. க. தம் வாழ்க்கைக் குறிப்புகளில் சேதுபிள்ளையைக் 'கல்வி' என்ற தலைப்பில் குறித்தலும், மு. வ. வைச் 'சீர்திருத்தம்' என்ற தலைப்பில் குறித்தலும் கருதத்தக்கது.

தேசிய இயக்கங்களும் இலக்கியப் பண்பாட்டு இலக்கியங்களும் இந்நாள் வரை பெரிதும் தொழில் முதலாளிகள் பண்ணை முதலாளிகள், துணையோடேயே நடத்தப்படல் கருதத்தக்கது. இது பற்றி ம. பொ. சி. அவர்கள் 'எனது போராட்டம்' என்ற நூலில் பக்கம் 554இல் தமது உள்ளார்ந்த சமன்மைக் கொள்கை வெளிப்படும் வகையில் வரைந்துள்ள அரிய பெரிய குறிப்பு வருமாறு :

> தேர்தல் நெருங்கி வந்ததன் காரணமாகக் காங்கிரசில் இருந்த நிலப் பிரபுக்களும், தொழில் அதிபர்களும் சுயநலம் காரணமாகத் திராவிட எதிர்ப்பு இயக்கத்தை ஊக்குவிப்பதில் அக்கறை காட்டலாயினர். ஆனால் தமிழரசு இயக்கக் கொள்கைகளில் பற்றில்லாதவர்களைக் கொண்டு எதிர்ப்பியக்கம் தொடர்வதை நான் விரும்பவில்லை.

(வடபாதி மங்கலம் பின்னால் (ள்) பேரறிஞர் அண்ணா முதல்வரானபோது நடத்திய உலகத்தமிழ் மாநாட்டின் பொருளாளராகவும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

> சென்னைப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். அவரது தொடக்கவுரை சிலப்பதிகாரத்தை ஒட்டியதாக மட்டுமல்லாமல், நான் நடத்திவரும் புதிய தமிழகம் படைக்கும் இயக்கத்திற்கே ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமைந்தது.

> அப்போது காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராக இருந்த திரு ந. சஞ்சீவியவர்கள் சிலப்பதிகார மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக வில், புலி, மீன் சின்னங்கள் பொறித்த தமிழரசுக் கொடியை உயர்த்தி வைத்துப் பேசினார். ஒரு இளம் புலவரைக்கொண்டு தமிழ் இலக்கிய இயக்கத்தை தொடங்கி வைக்க வேண்டுமென்ற கருத்துடனேயே நான் என்பால் பேரன்பு கொண்ட ந சஞ்சீவியவர்களைக் கொண்டு தமிழரசுக் கொடியை உயர்த்தி வைக்கச்செய்தேன். அந்தக்கொடி இன்றளவும் இலக்கியவானில் பறந்து கொண்டிருப்பதனை என் அகக்கண்களால் காண்கிறேன்.

> சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர் மு. வரதராசனார் இம்மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

ரா.பி.சே., மு.வ. இருவரையும் நினைவுகூறும் இக்கட்டுரைக்கு மேற்குறித்த மேற்கோள் எவ்வளவு பொருத்தம் என்பது தானே விளங்கும். ஆயினும் ஈண்டு அடிக்குறிப்புப்போல் குறிக்கத் தக்கன சில:

> 1. ம.பொ.சியின் எனது போராட்டம் நூலில் பக்கம் 411இல்:
> தமிழரசு இயக்கத்துக்குச் சரியான பின்பலமாக அமைந்த மற்றொரு மாநாட்டையும் நன்றியுணர்வோடு இங்கு நான் குறிப்பிட வேண்டும். அது, சென்னை, மாகாணத் தமிழாசிரியர் மாநாடாகும்.

1947 மார்ச் 1, 2 தேதிகளில் சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் அந்த மாநாடு நடைபெற்றது. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை மாநாட்டின் தலைவராக இருந்தார். வரவேற்புக் குழுத் தலைவர் மு. வரதராசனாரும், செயலாளர் பேராசிரியர் அன்பு கணபதியும் என்னையும் அண்ணாவையும் அந்த மாநாட்டில் பேச வைக்க வேண்டுமென்று விரும்பினர். மாநாட்டின் 2வது நாள் நடவடிக்கைகளின் இறுதி நிகழ்ச்சியாக எங்கள் பேச்சு அமைக்கப்பட்டது (தமிழ்ப்புலவர்கள் கண்ட கனவு அரசியல் நனவாக இருபத்திரண்டாண்டுகள் (22) பிடித்தன.

2. ம.பொ.சி.யின் 'எனது போராட்டம்' என்ற நூலின் இரண்டாம் பகுதி (பக்.359) 'தமிழ் முரசு' தோற்றம் என்ற தலைப்போடு ஆரம்பமாகிறது. அப்பகுதி வருமாறு:

தமிழகக் காங்கிரசுக்குள் நடைபெற்ற கோஷ்டி பூசலில் பங்கு கொண்டிருந்தபோதே புதிய தமிழகம் படைக்கும் பிரச்சாரத்திலும் ஈடுபட்டு விட்டேனென்று சொல்ல வேண்டும். 26–6–45ல் திருச்சி மலைக் கோட்டை மண்டபத்தில் இலக்கியக் கூட்டமொன்று நடைபெற்றது. ...அந்தக் கூட்டத்திலே 'புதிய தமிழகம்' என்னும் பொருள் பற்றி விரிவாகப் பேசினேன். இலக்கியம் பேசுவதாகத் தொடங்கி எனது கற்பனையிலிருந்து புதிய தமிழகம் பற்றி விரித்துரைத்தேன்.

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மேற்படி கூட்டம் பற்றிய இரு குறிப்புகள் ஏனோ ம. பொ. சி.யால் குறிக்கப்படவில்லை. முதலாவது 26–6–45 அவரது 40ஆம் ஆண்டு பிறந்த நாள் என்பது (அரசியலில் எல்லோரும் புகழ்பெற்ற பின்பே தம் பிறந்த நாளை நினைப்பது). மற்றொன்று உள்ளூர்க்காரன் — ஏன்? — மலைக்கோட்டை மண்டபத்தையே பின் சுவராகக்கொண்ட மனையில் பிறந்தவனாகிய யானே மேற்படி கூட்டம் பற்றி விளம்பரம் செய்யப் பேருதவி புரிந்தேன் என்பது. (ஆனால் திரு ம.பொ.சிக்கு அப்போதுதான் நான் அறிமுகமாகியிருந்தேன்) இந்நிகழ்ச்சிக்கு இரண்டு மூன்று நாட்கட்கு முன்புதான் பொன்மலையில் மாபெரும் இரயில்வே தொழிலாளர் மாநாடு நடந்தது. அம்மாநாட்டை ஒட்டி நடைபெற்ற கண்காட்சியைத் திறந்து வைக்கவே ம.பொ.சி. வந்திருந்தார். அம்மாநாடு பற்றி அந்நாளில் 'கல்கி'யில் கல்கி எழுதிய கட்டுரையில் மாநாட்டைத் திறந்து வைத்த ம பொ. சி. 'நானே ஒரு கண்காட்சிப் பொருள்' என்று குறிப்பிட்டதையும் மேற்படி மாநாட்டில் காதுகேளாத கவிஞர்கள் நாமக்கல் கவிஞரும் வள்ளத்தோலும் கலந்து கொண்டது பற்றியும் குறிப்பிட்டிருந்தார். என் வீட்டில் சிறிது காலம் குடியிருந்த திரு சி. வெங்கடசாமி அவர்களோடு நான் இந்த மாநாட்டிற்குச் சென்றபோதே ம. பொ. சி. யையும் கவிஞர்களையும் கண்டேன்.

'எனது போராட்டத்தில் இன்னுமோர் குறிப்பு-பக்கம் 360: மலைக்கோட்டைப் பேச்சுக்குப் பின்னர் 5 மாதம் கழித்து அதாவது 11-11-45இல் சென்னை மண்ணடிப் பகுதியில் லிங்கி செட்டித் தெருவி லுள்ள ஒரு கட்டிடத்தில் 'புதிய தமிழகம்' என்ற தலைப்பிலே தொடர் சொற்பொழிவைத் தொடங்கினேன்....

வாரத்திற்கு வாரம் எனது பேச்சைக் கேட்கும் மக்கள் அதிகரித்து வந்தனர். குறிப்பாகத் தமிழாசிரியர்களும் மாணவர்களுந்தான் மிகுதி யாக வந்தனர் என்று கூறவேண்டும். ஆசிரியர்களிலே வித்துவான் மு. வரதராசனார் (பிற்காலத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்) பேரா சிரியர் அ. மு. பரமசிவானந்தம், வித்துவான் அன்பு கணபதி ஆகியோர் தொடர்ந்து வாரந்தோறும் வந்திருந்து என் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

மேற்கண்ட மேற்கோள் டாக்டர் மு. வ. எழுத்துகளின் பின்புலத்தை ஆய்வோருக்குப் பெருந்துணை புரியும். 'எனது போராட்டம்' (பக். 500) நூலிலிருந்து இன்னும் சில மேற்கோள்கள்:

டாக்டர் மு. வரதராசனார் அவர்களால் 'தமிழ் முரசு' இதழில் 'அன்னைக்கு' — 'தம்பிக்கு' என்னும் தலைப்புகளில் கழகக் கொள்கைகளை விளக்கும் வகையில் தொடர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்தும் நூல்கள் வெளியிடப்பட்டன.

தமிழ்ப் பெரியார் திரு வி. க., டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகிய சான்றோர்கள் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வந்தனர்.

இன்னுமொரு மேற்கோள்:

1953 ஜனவரி, 24, 25 தேதிகளில் த. அ. க. இரண்டாவது மாநில மாநாடு கூடியது. முதல் நாளில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை தலைமையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது. டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்தார். செட்டி நாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

இந்த இலக்கிய மாநாட்டிலும் சென்னைப் பிரச்சனை பற்றியே அதிக மாகப் பேசப்பட்டது. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை 'தமிழரசுக் கழகத்தைத்தான் தமிழ்நாடு நம்பியிருக்கிறது. சென்னையைக் காக்க ம. பொ. சி. காலாலிடும் கட்டளையைத் தலையால் நிறைவேற்ற நான் தயார்' என்று முழங்கினார். அவரது குரல் இன்னமும் என் காது களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது (பக். 614).

இக்கட்டுரையில் டாக்டர் ரா. பி. சே., டாக்டர் மு. வ. ஆகிய இரு பெரும் பேராசிரியர்கட்கு உடன்பாட்டு நிலையில் தேசிய, இலக்கிய, நிலையில் எதிர்மறையான திராவிடப் பின்னணியோடு முழுதும் உடன்

பாடான தமிழரசுக் கழகப் பின்னணியும் மிகுதியாக இருந்ததைக் காட்டவே மேற்கண்ட மேற்கோள்கள். இம்மூன்று பின்னணிகளையும் ஊடுருவிய பொதுவுடைமைப் பின்னணி பெருமளவில் மு. வ. விடமும் ஒரு சிறிது டாக்டர் ரா.பி.சே.யிடமும் காணலாம் (சான்று: ஓராண்டு தீபாவளி மலரின் வெளிவந்த 'சிவனடியார் ஸ்ட்ரைக்' என்னும் கட்டுரை). இந்த வேறுபாட்டுக்கும் ஒரு காரணம் பேராசிரியர் ரா. பி. சே. யின் மூப்பும் டாக்டர் மு. வ. வின் இளமையும்.

இனி, பேராசிரியர்கள் டாக்டர் ரா. பி. சே., டாக்டர் மு. வ. ஆகியோரின் தமிழ்த்தொண்டின் தனிச்சிறப்புகள் பற்றிச் சில கருத்துக்கள்:

1. பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. பாளையங்கோட்டை செயிண்ட் சேவியர் கல்லூரியில் பயின்றமையால் ஓரளவு கிறிஸ்துவப் பின்னணி உடையவர்; டாக்டர் மு. வ. திருப்பத்தூர் குருகுல ஆசிரமத் தொடர்பால் ஓரளவு கிறிஸ்தவப் பின்னணி உடையவர். ஆனால், இவ்விருவருள் டாக்டர் ரா. பி. சே. அவர்கள் 'கால்டுவெல் ஐயர் சரிதம்' (1932), 'கிறித்தவத் தமிழ்த் தொண்டர்' (1946) போன்ற முன்னோடி நூல்களை எழுதியமை நினைக்கத்தக்கது. இதற்கும் அவர்தம் காலப் பின்னணி காரணமாகலாம். அடுத்த நிலையில் பேராசிரியர் புரிந்த பெருந்தமிழ்ப்பணி தமிழ் நூல் சுவையை இனிய செந்தமிழ் நடையால் மேடையிலும் எழுத்திலும் மேம்படுத்தியதன் வாயிலாகத் தமிழ் உணர்ச்சி, அறிவு வெள்ளம் தமிழ் மக்களாகிய கழனி முழுதும் பாய்ந்தது. ஆங்கில மொழியே அருமை பெருமை உடையது என்று கற்றறிந்த தமிழர்களும் கருதிய காலத்தில் மேடைதோறும் ஆங்கிலேயர் உடை அணிந்து அருந்தமிழின் பெருமையை அழகோடும் ஆற்றலோடும் எடுப்போடும் எழிலோடும் அழுத்தம் திருத்தமான ஒலிப்பாலே உயர்த்தியதால் ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்டிருந்தாரும் நாணித் திருந்தினர்; திருந்தாதாரும் தம் உள்ளத்துக்குள் தமிழை மதிக்கத் தொடங்கினர். பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. க்கு முன் 1927 முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிறந்த முறையில் திருவாளர்கள் கே. என். சிவராசப் பிள்ளை, எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை போன்றவர்களால் தமிழாய்வு நிகழ்த்தப்பட்டாலும் — குறைகளிருப்பினும் முன்னோடியாக மிக விரிவான அடிப்படையில் தமிழ்ப் பேரகராதி வெளியிடப்பட்டிருந்தாலும் அவர்தம் பணிகளெல்லாம் நூற்றுக்கணக்கான அறிஞர்கட்கே பயன்பட்டது. அப்பயன்பாட்டை அகலப்படுத்தி — ஆழப்படுத்திப் பல்லாயிரக் கணக்கான மக்கள் 'செஞ்சொற்கவியின்பத்தை செவிநுகர் கனி'களாகப் பெறச் செய்த முதல் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. அவர்களே. புலமை மிக்கவர்களாலும் சாதிக்க முடியாத ஒரு பணியை — தமிழகமெங்கும் தமிழின்பத்தைப் பல்லாயிரவர் நுகரச் செய்யும் பணியைச் செய்து அதன் காரணமாகவே 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்புப் பட்டமும் பெற்றவர் டாக்டர் ரா. பி. சே. இறுதியாக, பேராசிரியர் நாற்பதாண்டுகட்கு முன்பே மொழியியல் ஆய்வின் தேவைகளை உணர்ந்து 'Tamil Literary and Colloquial' என்ற நூலையும் 'Words and their significance' என்ற நூலையும் நம் பல்கலைக்கழக வாயிலாகவே வெளிப்படுத்தினார். இந்நூல்களை யான் தமிழ்த்துறைத் தலைவனானதும்

மறுபதிப்புச்செய்யும் தொண்டினைப் புரிந்தேன். ஒலி, பொருள் ஆகிய இரு பெருந்துறைகள் பற்றிய இந்த ஆய்வின் பெருமையை டாக்டர் தமிழ் சுவலெயில் அவர்களும் போற்றியுள்ளார். அன்றாட வாழ்விலேயே இயற்கையோடு இயற்கையாய் வாழ்ந்த நாட்டுப்புற மு. வ. சங்க நூல்களில் தலைமையிடம் பெற்றுள்ள இலக்கியப் பொருளாகிய இயற்கையைத் தம் பிஎச். டி. ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது வியப்பிற்குரியது இல்லை; விழுப்பம் வாய்ந்ததே. டாக்டர் மு. வ. தமிழாய்வுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் பிஎச். டி. பட்டம் பெற்றவர். அவ்வாறே தம் பெருந்தமிழ்த் தொண்டுக்காக மறைவதற்கு முன் அமெரிக்க விஸ்கான்சன் பல்கலைக்கழகத்தில் D. Litt. பட்டமும் பெற்ற தனிப்பெருமையும் மு. வ. வுக்கு உண்டு. முதலில் தமிழ்ப் புலவர் பட்டம் பெற்றுப் பின்னர் பிஎச். டி. பட்டம் பெற்று, மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆன முதற்பெருமையும் டாக்டர் மு. வ. வுக்கே உண்டு.

ரா. பி. சே. அவர்களுடைய கட்டுரைகளில் என்னைக் கவர்ந்த புதுவகை யான கட்டுரைகள் 'கடற்கரையிலே' என்னும் தலைப்புக்கொண்ட நூலில் உள்ளவையே. பேராசிரியர் ரா. பி. சே. அவர்களுடைய இறுதி நூலாகிய 'ஆற்றங்கரையிலே' அவர் சொல்லச் சொல்ல யான் எழுதி 'கல்கி' வார இதழுக்கு அனுப்பியதாகும். 'ஆற்றங்கரையினிலே' கட்டுரைகளைச் சொல்லின் செல்வர் சொல்லச் சொல்ல யான் எழுதியபோது அவர் எவ்வாறு இலக்கிய—வரலாற்றுச் சிந்தனைக் கடலில் மூழ்கி மூழ்கிக் கருத்து முத்துகளை வாரிக்கொண்டு வருகிறார் என்பதை நேரில் கண்டு இன்புறும் பேறு பெற்றேன். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மணிக்கூண்டு கட்ட டத்தின் வடபால் பகுதியின் முதல் அறையில் உட்கார்ந்து கொண்டு கடற் கரையை நோக்கிய கண்களோடு தம் வாயிலிருந்து வரும் சொல்லையும் பொருளையும் 'தாப்பு, தாமரைப்பூ' என்று தாயும் தமக்கையரும் சொல்லி மகிழும் வகையில் குழந்தை கைவிரல்களை மெல்லச் சுழற்றிச் சுழற்றிக் காட்டுவதுபோலக் காட்டிக் காட்டித் திருவாய் மலர்ந்த திறத்தைப் பன் னாளும் சுவைக்க நேர்ந்தமை—அதுவும் அவர் தம் கடைசி ஆண்டில்—யான் பெற்ற பெரும் பேறாகும்.

ஆம். கட்டுரையும் ஒரு கலையே—கவிதை போன்றதே என்பதைத் தம் யாழும் குழலும் இடியும் மின்னலும் போன்ற பேச்சுக் கட்டுரையாலும் எழுத்துக் கட்டுரையாலும் காண்பித்தவர் ரா. பி. சே.

ரா.பி.சே. யின் ஆய்வுத்திறம் புதிய தமிழகத்தின் ஊர்ப்பேர்களெல்லாம் சீர்பெற உதவியது. தி.மு.க. அரசு தோன்றி ஊர்ப் பெயர்கள் சீர்பெற உந்தியது; உதவியது—வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் திரு ரா. பி. சே. ஊர்ப் பெயர்கள் பற்றிப் பேசிய ஆய்வுகளேயாம். எடுத்துக்காட்டாக 'தியாகத்தை நினைவூட்ட வேண்டிய தியாகராயநகரை 'தியாகை' என்று தமிழ் மரபுப்படிச் சுருக்காமல் தி. நகர், தி. நகர் என்று தீ நினைவு வர அழைக்கலாமோ என்பார். இன்னும் இந்தத் தீம்பு நீங்கவில்லை. என்றாலும் 'பார்க்கு பார்க்கு' (Park) என்று நம் இரயில் நிலையம் ஒன்றை அழைக் கிறார்களே! எதைப் பார்க்கு?! ஏன் பூங்கா என்று பூரிப்புடன் சொல்லு

லாமே என்று மேடைதோறும் அவர் முழங்கிய முழக்கம் வீண்போக வில்லை! 'மாயவரம்' கேட்கிறார்களே! மயிலாடுதுறை என்று வாய் மணக்க அழைக்கலாகாதா? என்ற பேராசிரியர் வினாவுக்கு விடை கிடைக் காமல் போகவில்லை! இதை எல்லாம் எண்ணும்போது இன்று நம்முடன் வாழும் தொண்ணூறு வயது தொண்டுக் கிழவர் (இரு பொருளிலும்) சுத்தானந்த பாரதியார்—தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் இராச ராச சோழன் பரிசாகிய ஒரு நூறாயிரம் பெற்றவர்' 'செந்தமிழுக்குச் சேதுப் பிள்ளை' என்று போற்றியது பெரும் பொருத்தமே என்பது புலனாகும்.

பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் செய்த தனிப்பெருந்தொண்டு படைப்பிலக்கியங்களைப் படைத்தமையே. அதிலும் சிறப்பாகக் குறிக்கத் தக்கது தமிழ்ச் சமூக வாழ்வையே தலைமையாகக் கருதி அவர் படைத்த புதினங்களே. தமிழ் முரசில் வந்த அந்தநாள் தவிர, ஏனையன எந்த வார, மாத இதழ் (விளம்பரத்) துணையுமின்றி அவர் படைத்த புதினங்கள். 1945-1960 ஆகிய பதினைந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டு இளைஞர் உலகில் தனிப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. புதினங்களால் மு. வ. பெற்ற புகழை நோக்க அவர் தம் இலக்கியக்கட்டுரைகள், இலக்கிய ஆய்வுகள், மொழி நூல், மொழியியல் கட்டுரைகளால் எல்லாம் பெற்ற செல்வாக்கு சிறிதே. மழலையர் முதல் முதியவர் வரைக்கும் பல நூல்கள் எழுதியிருப்பினும் மு. வ. வின் புகழுக்கும் செல்வாக்குக்கும் காரணம் அவர் தம் கதைகளிலும், கடிதங்களிலும் காணப்பட்ட சிந்தனைச் சிறப்பே ஆகும். நடை வகையில் எடுத்துக்கொண்டாலும் திரு. வி. க., சேதுப்பிள்ளை போன்றார் செந்தமிழ் நடை இல்லை மு. வ. வின் நடை. ரா. பி. சே. யின் நடை அணிநடை என்றால் மு. வ. வின் நடையை அறிவுநடை - அறநடை எனலாம். முன்ன வர் நடையை வண்ண நடை என்றால், பின்னவர் நடையை அன்ன நடை எனலாம். வேறு - வீறு வகையில் சொன்னால், மு. வ. வின் எளிய இனிய நடை எஃகின் மென்மையையும் வன்மையையும் ஒருங்கே படைத்ததாகும். இதற்குக் காரணம் அவர் பெரிதும் மதித்துப் போற்றிய காந்தியத்தின் 'எளிமையே வலிமை' என்ற எண்ணம்தான் எனலாம்.

ரா. பி. சே. யின் நூல்களைவிட நான்கு மடங்கு அதிக நூல்களை டாக்டர் மு. வ. படைத்ததற்கான பெருங்காரணம் மேடைப் பேச்சுகளை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக்கொண்டு எழுத்துப் பணியில் ஈடுபட்டமையே ஆகும். கலை உணர்வோடு சேதுப் பிள்ளையினும் அழகாகவும் பேசவல்ல டாக்டர் மு. வ. தம் பேச்சுத் திறமை யைத் திட்டமிட்டு அடக்கி ஒடுக்கிக் கொண்டமையால் அவர் தம் நுண்ணறிவு நூல்கள் பலவாய் வெளியிடப்பட்டன. இதனால் தனக்குப் பெரும் பொருளும் புகழும் சேர்த்துக் கொண்டதோடு தமிழர்க்கு அறிவும் ஆற்றலும் அழியாப் புகழும் ஏற்படப் பெரிதும் ஒரு தமிழாசிரியராக இருந்த அவர் தம் காலத்தில், தம்மால் இயன்ற பணிகளைப் புரிந்த நிறைவு அவருக்கும் நமக்கும் ஏற்று வதாய் உள்ளது.

ரா.பி.சே., மு.வ. இருவருக்கும் இருந்த ஓர் ஒற்றுமை தம் கைப்பட மணி மணியான எழுத்துக்களால் நண்பர்கட்குக் கடிதம் எழுதியமை. இதில் மு.வ. வின் கடிதங்கள் பலர் வாழ்வு, சிக்கலுக்குத் தீர்வு காட்டுபவை. ரா.பி.சே. யின் கடிதங்கள் நட்பும் நற்றமிழும் போற்றுபவை.

ஒரு பெரும் வேறுபாடு; மு.வ. நண்பர்களிடமும் பெரிதும் பேச்சைச் சுருக்கி எழுத்தை வளர்த்தவர். ரா.பி.சே. உரையாடலையே - உரையாற்ற லையே கலையாக வளர்த்தவர்.

ரா.பி.சே., மு.வ. இருவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலிரு தமிழ்ப் பேராசிரியர்கள்.[5] தமிழை வேறு வேறு வகைகளில் பலர் புகழ் தமிழாகச் செய்த இரு கண்மணிகள்.

---

5. பேராசிரியர் இருவரும் தாகூரின் பேரன்பர்கள். இது சொல்லின் செல்வர் ரா.பி.சே. தம் வீட்டின் முகப்பில் பாரதியார் 'கவீந்தரராம் ரவீந்திரர்' என்று போற்றிய தாகூரின் நிறை கோலத்திலான வண்ணப்படத்தை வைத்து போற்றியமையாலும் சிந்தனைச் செல்வராகிய டாக்டர் மு. வ. தாகூர் பற்றிய பள்ளிச்சிறுவர்களும் படித்துப் பயனடைய வல்ல புத்தகம் ஒன்றை எழுதியமை யாலும் அறியலாம்.

## பயன்பட்ட நூற்கள்


1. சிவஞானம், ம. பொ., எனது போராட்டம், இன்ப நிலையம், சென்னை-4, 1974.

2. கலியாண சுந்தரனார், திரு வி., வாழ்க்கைக் குறிப்புகள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. 1982.

# கலைக்களஞ்சியக் கலை

## திரு. சிறுவை. மோகனசுந்தரன்

முதலில் கலைக்களஞ்சியம் என்றால் என்ன? என்று பார்ப்போம். கலைக்களஞ்சியம் என்ற சொல்லிற்கு மூலம் கிரேக்கம். கிரேக்க மொழியில் என்கைக்லோபீடியா (Enkyclopaedia) எனின் "ஒரு வட்டம் அல்லது ஒரு முழுமையான ஏற்பாட்டின் அல்லது ஒழுங்கமைப்பு முறைப்படி கற்றல்" என்பது. ஜெர்மானிய எழுத்தாளரும் பதிப்பாசிரியருமாகிய பால் ஸ்காலிக் (Paul Scalic) என்பவர் 1559-ல் முதன்முதலில் கலைக்களஞ்சியம் என்ற சொல்லிற்கு, 'உலக ஒழுகலாறு' (desiplines) அறிவு என்பார். சுருங்கக் கூறின் அகராதி எனலாம் என்பர். எந்த நல்ல அகராதியையும் கலைக் களஞ்சியம் என்று கூறுவதில்லை என்ற முடிபும் உண்டு.

மேலும் நாம் இதனை விரிவாக்கினால், "நம் அறிவுக் கூர்மையின் திறத்தால் பல்வேறு வகையான பெருநூல்களின் சுருக்கத்தைப் படைத்தளிப்பது" எனலாம்.

* காலியர்ஸ் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்த பேராசிரியர் லூயிஸ் ஷோர்ஸ் (Louis Shores) கூறுவார், "எல்லை மீறிய தனித்துறை முயற்சியில் ஈடுபட்டுள்ள உலகத்தில் ஒருசில புதுமை பாதிப்புகளில் அது ஒன்றாகும். அறிவுக்கு ஒரு முகமான நோக்கு இருக்கிறது என்பதை அது நமக்கு அறிவிக்கிறது".

* புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் திரு எச். ஜி. வெல்ஸ், "அது பல திறப்பட்டதாகும்; ஆனால் செறிவு காணப்படும். ஒருவிதத் தெளிவும் ஒரு கூட்டு முயற்சியும் அதில் உண்டு" என்று கூறுகிறார்.

* கிரேக்கர்களும் ரோமர்களும், "ஒருவர் தம் வாழ்க்கையில் தமக்குரிய கடமைகளை முழுவதுமாகச் செய்து முடிப்பதற்கு பயனுள்ள செய்திகள் எல்லாவற்றையும் சேகரிப்பதாகும். புதிய புலவர்களைக் கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பயணம்" என்பார்கள் கலைக்களஞ்சியத்தைப் பற்றி.

* ஆக்ஸ்போர்டு அகராதியில் காணும் குறிப்பு "அறிவுத்துறைகள் எல்லாவற்றையும் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டுள்ள இலக்கிய நூல். அது பெரும்பாலும் அகர வரிசையில் எழுதப்படும்.

* வெப்ஸ்ட்டர்ஸ் அகராதி, "அறிவுசார்ந்த பல்வகைத் துறைகள் எல்லாவற்றையும்பற்றி மிக விரிவாகச் சொல்லும் ஒரு நூல். பெரும்பாலும் அகரவரிசையில் அடுக்கப்பட்ட தனித்தனிக்

கட்டுரைகள் கொண்டதாகும். அன்றியும் ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறையை மட்டும் ஆய்வு செய்யும் அத்தகைய நூல்.

* எல்லாப் பொருளும் இதன்பால் உள எனலாம். குறிப்பிடத் தகுந்த கருத்துகள் பிரதிபலிக்காவிடினும் ஒன்று நிச்சயம், நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் பற்றி இவ்வளவுதானா தெரிந்தோம் என்ற வியப்பு எழும். முதலில் அறிவாற்றலைச் சிறிது மேம்படுத்திக் கொண்டாலும் பின்னர் இதன் வாயிலாக வாழ்க்கையில் மேலும் தெரிந்துகொள்ள வேண்டிய—அறிந்து கொள்ள வேண்டிய விளக்கங்களைப் பெற ஏதுவாய் அமையும்.

* நமது சென்னைப் பல்கலைக்கழக அகராதி, "பல்பொருள் விளக்கம்" என்று குறிக்கிறது.

மேற்கண்ட சிந்தனைகளைக் கண்ட பிறகு மனிதன் கற்க வேண்டும் எனவும் கற்பவை கசடறக் கற்கவேண்டும் எனவும் அவா மிகுந்து கற்க முற்படுகிறான். கற்க முற்படும்போது மனித அறிவின் கூறுபாட்டை பிரான்சிஸ் பேக்கன் (Francis Becon) எனும் சிந்தனையாளர் பற்றிய குறிப்பினை உங்கள் முன் வைக்கிறேன்.

> "மனித மனம் சுற்றிலும் உள்ள பொருள்களைக் காண்கின்றது. அப்படிக் காணும்போது சரியாகவும் நியாயமாகவும் தெரிந்து கொள்ள வேண்டியவைகளை அறியும் பொருட்டு அறிவியல், கலைகள், அனைத்துமான மனித அறிவு ஆகியவற்றை முழுவது மாகத் திருத்தியமைக்கத் தொடங்குவதே கலைக்களஞ்சிய மாகும்." இந்த மிகப் பெரிதான பணியின் ஒரு சிறு கூறு தான் இதுவரை முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நூலின் ஆசிரியர் 130 பிரிவுகளாக இதை எழுத திட்டமிட்டிருக்கின்றார். இந்த 130 பிரிவுகள் மூன்று முக்கியமானப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
>
> 1. புறத்தே உள்ள இயற்கை அமைப்பு
> 2. மனிதன்
> 3. இயற்கையின் மீதான மனிதனின் செயல்பாடு

இதனுடைய பொருளடக்கத்தைப் பார்க்கும்போது முழுவதும் அறிவியல் பூர்வமாக உள்ள ஒரு கலைக்களஞ்சியத்தைத் தொகுப்பதே பேக்கனுடைய நோக்கம். ஆனால் அந்தோ இத்தகைய முயற்சி மனித ஆற்றலுக்கு மேற்பட்டதாகும். இதனை இந்த பேக்கன் அவர்களே புரட்சிகர மானது என்பதை ஒப்புக்கொள்கிறார்.

இந்த பிரான்சிஸ் பேக்கன் அவர்கள் மனிதன் கற்கும்போது அவனது அறிவின் கூறுபாட்டை கீழ்க்கண்ட முறையில் வகைப்படுத்திப் பார்க்கிறார் இது சிந்திக்கத்தக்க தொன்றாகும்.

## அட்டவணை 1

## அறிவு வகைமை

(Francis Becon's classification of knowledge)




இங்ஙனம் மனித அறிவை வகைப்படுத்தி பகுத்துணர்ந்து மனிதன் முழுமையான ஆற்றல் வாய்ந்தவனாக விளங்க பல்வேறு துறைகளில் கற்று, தேர்ந்து, தெளிதல் வேண்டும் என்று திரு பேக்கன் சிந்தித்தார். இதனையே மற்றொரு அறிஞர் குழு கீழ்க்கண்ட முறையில் அறிவுத்துறையை வகைப்படுத்திச் சிந்தித்துச் செயல்படப் பார்த்தனர். அம்முறை,

## அட்டவணை 2




1. பொருண்மையும் ஆற்றலும் (matter and energy)
2. நிலம் (The Earth)
3. வையத்தில் வாழ்தல் (Life on earth)
4. மனித வாழ்க்கை (Human Life)
5. மக்கள் சமுதாயம் (Human Society)
6. கலை (Art)
7. தொழில் நுட்பவியல் (Technology)
8. சமயம் (Religion)
9. மானிட வரலாறு (History of Mankind)
10. அறிவுத்துறைகள்

ஆகவே நல்லறிஞர்கள் இவ்வாறெல்லாம் சிந்தித்து கிழக்கு மேற்கு நாடுகளில் வளர்ந்துள்ள அனைத்து அறிவியல் நுட்பங்களையும் வரலாறுகளையும் கண்டு தெளிந்து ஒரு முழுமையான மனிதன் சிறந்தவைகளைச் சிந்தித்துச் செயல்படவும் பலவற்றை அறிந்து கொள்ளுதலும் இன்றியமையாத தேவை என உணர்ந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட சிந்தனைகளை உள்ளடக்கி கலைக்களஞ்சியம் உருவாக்க முயன்றனர். அங்ஙனம் உருவாக்கியபோது,

> கலைக்களஞ்சியம் பிரிட்டானிக்கா முதல் பதிப்பாக முதன்முதல் 1768–71-ல் 3 தொகுதிகள் வெளியாயின.
>
> ஒன்பதாம் பதிப்பாக 1875–89-ல்
>
> பதினோரும் பதிப்பு 1910–11-ல்

இதன் பின்னர் பல பிற்சேர்க்கைகள் வந்தன. பின்னர் கட்டுரைகள் ஒழுங்கமைப்புடன் கூடியனவாகவும் அதிகார பூர்வமான குறிப்புகளுடனும், கட்டுரைகளில் செய்திகள் விரிவாகவும் அதே சமயத்தில் சுருக்கமும் செறிவும் உடையனவாயும், மதிப்பீட்டுத் தன்மை உடையதாய், அனைத்து நாட்டிற்கும் உரியதாய் அமைந்து 14ஆம் பதிப்பு 1929-ல் வெளியானது.

அதன் பின்னர் 'கலைக்களஞ்சியம்' என்ற சொல்லிற்கு உரிய பொருளை விவரிக்க முயன்றனர். 1. கிடைக்கக் கூடிய பலவகை அறிவுத்துறைகள் அனைத்திற்கும் சுருக்கம் கண்டனர். 2. நாட்டுப் படங்களும் (Maps) விரிவான அட்டவணையும் கண்டனர். 3. பெரு நூல்களின் சுருக்கத்தை அமைக்கச் சில தழுவு முறைகளைக் கையாண்டனர். எடுத்துக்காட்டாக நூலடைவுப் (Bibliography) பட்டியல், விளக்கப் படங்கள் (illustrations), வரை படங்கள் (diagrams), சுருக்கக் குறிப்பு (List of abbreviations), அயல் மொழி தொடர்பு (foreign expressions) பதிவேடுகளின் குறிப்புகள் (Gazetteer) போன்றவை.

இவைகளையெல்லாம் கருத்துள் கொண்டு,

கலைக்களஞ்சியம் பிரிட்டானிக்கா' 1938-ல் 24 தொகுதிகளாக வெளி வந்தன. இது நீங்கலாக

* சேம்பர்ஸ் கலைக்களஞ்சியம் 1923–27-ல் 10 தொகுதிகள் வெளியாயின.

* New International Encyclopaedia 1914–16-ல் 27 தொகுதிகள்.

* Encyclopaedia of Americana 1940-ல் 30 தொகுதிகள். பின்னர் இது பல இணைப்புத் தொகுதிகளை வெளியிட்டன.

* இங்கிலாந்தில் 1931–32-ல் 12 தொகுதிகள் (ஒரு தொகுதி நாடுகளின் படங்கள் (Maps) வெளிவந்தது.

* கொலம்பியா கலைக்களஞ்சியம்—ஒரே ஒரு தொகுதியில் வெளி வந்தது (Single Vol. Encyclopaedia)

* ஜெர்மனியில் ஜெட்லர் என்பவர் 1732–50-ல் 64 தொகுதி களாகவும் பின்னர் 1928–35-ல் 21 தொகுதிகள் தயாரித்தார்.

* Mayer's Conversation—Lexicon 1936-42-ல் 10 தொகுதிகள் (இதில் புவியியல், அறிவியல், தொழில் நுட்பவியல் இருந்திருக்கிறது என்பர்).

* ஜெர்மன் கலைக்களஞ்சியம் 1945-ல் 6 தொகுதிகளாக வெளி வந்தது (இதில் முதலில் வெளியானதை விட சில கட்டுரைகள் பெரிதாக்கப்பட்டன).

* ஃபிரெஞ்சு கலைக்களஞ்சியம் 1886–1902-ல் 31 தொகுதிகளாக வெளியாயிற்று. இதில் அறிவின் திறம் மேம்பட்டுள்ளது.

* புதுமைக் கலைக் களஞ்சியங்கள் பலவற்றுள்ளும் மிக முக்கியமான தாகக் கருதப்படுவது இத்தாலி—ஸ்பெயின் நாட்டுக் கலைக் களஞ்சியம் 37 தொகுதிகள் (1929–30). இதில் மிகச் சிறந்த நீண்ட கட்டுரைகளும், நேர்த்தியும் அழகும் மிக்க விளக்கப் படங்களும் உள்ளன.

* ஸ்பானிஷ் கலைக்களஞ்சியம் 87 தொகுதிகள் (1905–47).

* 'வரலாற்றுக் கால கலைக்களஞ்சியம்' என மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. (1) 1600 வரை, (2) 1601–1799 வரை, (3) 1800 வரை. 'பல்பொருள் அறிவு நிரம்பிய கலைக்களஞ்சியம்' (Encyclopaedia Dictionary) 17, 18-ஆம் நூற்றாண்டில் வெளிவந்தது.

* மூன்று ஸ்காட்லாந்து அறிஞர்கள் 'புதுமைக் கலைக்களஞ்சியம்' என்ற பெயரில் வெளியிட்டனர். அவர்கள்,

  Andrew Bell (1726–1809),

  Colin Macfarguhan (1745–93),

  William Smeller (1740–95).

* Children's Encyclopaedia (1928–30)
* Pictorial Encyclopaedia (1910)
* Books of Knowledge (1912)
* World Book Encyclopaedia (1917–18) 20 Vols.
* Students Encyclopaedia
* Britanica Junior Encyclopaedia
* Oxford junior Encyclopaedia (1955–76) 12 Vols.
* Crompton's Pictorial Encyclopaedia (1922) 15 Vols.
* Australian Encyclopaedia (1958) 10 Vols.

* 19ஆம் நூற்றாண்டில் சேம்பர்ஸ் 'The New Encyclopaedia' என்ற பெயரில் வெளிவந்தது. இதில் உள்ள கட்டுரைகள் எல்லாம் புதியன. மிகச் சிறப்பான வகையில் அமைந்துள்ளது. (1802–20), மீண்டும் 1860–68-ல் வெளியானது.

* போலந்தில் 1860–90

* ஹங்கேரியில் 1961–76

* ரஷ்யாவில் 'பல்பொருள் அறிவு நிரம்பிய குறிப்புத் தொகுப் பகராதி' (Encyclopaedie Reference Dictionary) 1847–55-ல் வெளியானது. பின்னர் கலைக்களஞ்சியம் 58 தொகுதிகள் (1910–48.)

* இதனை அடுத்து, "The Great Soviet Encyclopaedia" என்று 65 தொகுதிகள் வெளிவந்தன. (1926–47) இரண்டாம் பதிப்பாக 1949–58-ல் வெளிவந்தது. இதில் 8000 அறிஞர்கள் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். ஒரு தொகுதி முழுவதும் சோவியத் யூனியனைப் பற்றியதாகும்.

* Colliers Encyclopaedia 1955-ல் 20 தொகுதிகள்.

* U.S. New International Encyclopaedia 1902–04-ல்

* Mc Graw Hill, Kirk & other Encyelopaedia of Science and Technology. (1949–56) 15 தொகுதிகள். 1978-ல் 3-ம் பதிப்பு. பிற்சேர்க்கையும் வந்துகொண்டிருக்கின்றன.

* "International Encyclopaedia of the Social Science" 1968-ல் 16 தொகுதிகள்.

* "Imperial Gazetteer of India" என்ற அறிவுப் பெட்டகம் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் 25 தொகுதிகள் வெளி வந்துள்ளன.

  குறிப்பு: ஆங்கிலேயர் ஆட்சி நடைபெறவும் வரி வசூலிக்கவும் தங்கள் பணியாளர்களுக்குப் பயன்படும் வகையில் வெளியிட்டனர் எனலாம். இந்தத் தொகுதிகளில் இந்தியாவில் உள்ள மலைகள், ஆறுகள், துணை ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், பெரும் குளங்கள், சாலைகள், பயிர் வகைகள், மர வகைகள், மக்கள் இனங்கள், ஒழுகலாறுகள், சமய வழிபாடுகள், கோயில்கள், மடங்கள் இன்ன பிற அமைந்துள்ளன. மக்கள் தொகை குறிப்பும், ஜமீன் முறைகளும் உள்ளன.

இதுவரை இயன்றவரை பல்வேறு கலைக்களஞ்சியக் குறிப்புகளைக் கண்டோம். மேலும் பல உள்ளன.

ஒவ்வொரு பொருளைப் பற்றியும் தனித்தனியாக சிறப்புச் செய்திகளை அறிந்து கொள்ளவும் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி தொகுதிகள் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

* கணிதம், மருத்துவம், தொழில் நுட்பவியல், எந்திரங்கள், கட்டடப் பொறியியல் இதுவரை 16 தொகுதிகள் வெளி வந்துள்ளன.

* வேளாண்மை — 24 தொகுதிகள்

* விலங்குகள் — 3 தொகுதிகள்

* பறவைகள் — 3 தொகுதிகள்
* பாம்புகள் — 1 தொகுதி
* முக்கியச் செடி கொடிகள் — 5 தொகுதிகள்
* தோட்டக்கலை — 1 தொகுதி
* Encyclopaedia the unexplained (Magic, oceultism and Parapsychology) 1974-ல் 1 தொகுதி.

இவை ஒவ்வொன்றிலும் மிக அழகிய வண்ணப்படங்கள் அமைந்துள்ளன. செடிகள், பாம்புகள், பறவைகள், விலங்குகள் பற்றிய படங்கள் அதனதன் இயற்கை வண்ண அமைப்புடனே வண்ண ஒளிப்படம் எடுத்துப் பதித்துள்ளனர். இதனையெல்லாம் கண்டு வியந்து "மெத்த வளருது மேற்கினிலே" எனப் பெருமூச்சு விடுகிறான் பாரதி. நமது நாடு இத்தகைய பணியில் எப்பொழுது ஈடுபடும் என்பதை எண்ணிப் பார்த்தும் சோதிடம் கணித்தும் சொல்ல முடியாத ஒரு தவிப்பு உள்ளது எனின் மிகையாகாது.

அடுத்து இந்திய நாட்டின் நிலைமை பற்றி சிந்திப்போம். இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன்முதலில் தமிழ்க் கலைக் களஞ்சியம் பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தை முன்மாதிரியாகக் கொண்டு தோன்றியது. இது நிற்க, கலைக்களஞ்சியம் என்ற சிந்தனை இதற்கு (இப்பொழுதுள்ள தமிழ்க் கலைக் களஞ்சியத்திற்கு முன்பே) தமிழ், வட மொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, வங்காளி ஆகிய மொழியாளர்கள் சிந்தித்து உள்ளனர்.

இனித் தமிழில் கலைக்களஞ்சியம் என்பதைப் பற்றியும் அதன் பயன் முறைகளையும் சிந்திப்போம். தமிழ்க் கலைக்களஞ்சிய அமைப்பு 1948-ல் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராய் இருந்த திரு. தி சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தோற்றுவித்த முயற்சி. கலைக்களஞ்சியம் பதிப்பிக்க வேண்டும் என அறிக்கை வெளியிட்டபோது மக்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் நன்கொடை வழங்கி ஒரே நாளில் ரூபாய் ஒரு லட்டத்திற்கு மேல் வசூலாகியது. தேசத்தொண்டர் திரு. பொ. திருகூடசுந்தரம் எம்.ஏ., பி.எல். அவர்கள் தலைமைப் பதிப்பாசிரியராய் அமைந்து கலைக் களஞ்சியப் பணியை மேற்கொண்டார். பின்னர் திரு. ம. பொ. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமைப் பதிப்பாசிரியராய் அமைந்து நடத்தினார்கள்.

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கு முதலில் அறிவுத் துறைகளை வகைப் படுத்தி பகுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அத்துறைகளை ஒழுங்குமுறை செய்து ஒவ்வொரு துறையிலும் உள்ள பல்வேறு பிரிவுகளையும் தொகுக்க வேண்டும். திட்டங்கள், செயல்பாடுகள் முதலியனவற்றைச் சிந்தித்து பொருட்குறிப்பு அட்டவணையும், அப்பொருள் குறித்துக் கட்டுரைகள் எழுதும் ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியல் முதலியவைகளையும் அகரவரிசையில் அமைத்துக்கொள்ளவேண்டும். கலைக்களஞ்சியப் பணி சீர்பெற நடைபெற அயலவர் குறிப்பையும் மனத்தில் கொண்டு கலைக்களஞ்சிய செயல்முறைகள் எப்படி

அமைந்தால் சிறந்த வகையில் உருவாக்க முடியும் என்ற அட்டவணையைச் சேர்த்துள்ளேன். மேலும் அதே அட்டவணையில் மிக முக்கியமான அறிவுத்துறை பொருட்குறிப்பு வகைப்படுத்தித் தந்துள்ளேன்.

(பார்க்க: அட்டவணைகள்).

பொருட்குறிப்பு பட்டியல் அமைக்கும் முறை, கட்டுரையாளர்களின் பெயர்ப் பட்டியல் அமைத்தல்.

## அட்டவணை 3

3–0.
வெளியார் எழுதும் கட்டுரைகள்

| | |
|---|---|
| 60 | அகத்தியர் |
| வரிகள் | (தமிழ்) |
| பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் | |
| | ○ |

3–1.
கட்டுரையாளர் முகவரி

| | |
|---|---|
| | டாக்டர் மு. வரதராசனார் |
| | தமிழ்த்துறைத் தலைவர் |
| | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5 |
| | அகத்தியர் |
| | (தமிழ்) ○ |

3–2.
அலுவலக ஆசிரியர் குழு எழுதும் கட்டுரை

| | |
|---|---|
| 10 வரிகள் | அருவாளர் |
| | (வரலாறு) |
| | |
| | அலுவலகம் |
| | ○ |

இந்த முறைகள், அட்டை ஒன்று. தமிழ்த்துறைப் பகுதியில் உள்ள அகத்தியரைப்பற்றி இன்னவர் கட்டுரை எழுதும்படி வேண்டியுள்ளது; அக் கட்டுரையின் அளவு என்ன என்பதையும் குறிக்கும். அட்டை இரண்டில் மேற்படி கட்டுரையாளர் தம் கட்டுரையைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சேர்ப்பிக்கவில்லை எனின் அவருக்கு நினைவு மடல் எழுதப் பயனுகும் அவரது முகவரி. மூன்றாவது அட்டையில் குறித்த கட்டுரை அலுவலக ஆசிரியர்கள் குழுவால் எழுதப்படுவது.

## அட்டவணை 4

## தமிழில் கலைக்களஞ்சியம் அமைக்க மேற்கொள்ளும் செயல்முறைத் திட்டம்

தலைவர்

துணைத் தலைவர்

செயலாளர்

தலைமைப் பதிப்பாசிரியர் (பதிப்பாசிரியர்கள் குழுவின் தலைவர்)

பதிப்புக்குரிய திட்டக் குழு — பதிப்புக்குரிய செயல்துறைக் குழு

மேலாளர்

தலைமைப் பதிப்பாசிரியர்

பதிப்பாசிரியர்கள் குழு

1 { தமிழ் :
இலக்கியம், இலக்கணம், காப்பியம்,
புராணங்கள், பாடல்கள், நாடகங்கள்,
இசை, நடனம், கதைகள், உரைநடை
வளர்ச்சி இன்னபிற
புகழாளர்கள் (மறைந்த)
தொல்காப்பியர், பவணந்தி,
சேக்கிழார், கம்பர், அப்பர்,
மகாத்மா, பாரதி,
திரு. வி. க., மு. வ. }

அறிவியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல் வேளாண்மை இன்னபிற } 5

மொழியியல் } 6

பொறியியல், தொழில் நுட்பவியல், போரியல் சுரங்கவியல் } 7

கணிதம், அளவையியல் விண்வெளியியல் } 8

**ஆங்கிலம் :**

2 { இலக்கியம், பாடல்கள், இசை, நடனம், நாடகங்கள் பிற தமிழைப்போல }

3 { தத்துவம், சமயம், தொல்பொருளியல், உளவியல் }

4 { விலங்கியல், புவியியல், காட்டியல் }

{ மருத்துவம், ரணசிகிச்சை, உணவியல், கால்நடை மருத்துவம் } 9

{ சட்டம், அரசியல் } 10

{ ஓவியம், சிற்பம் கட்டடச் சிற்பம் } 11

{ சமஸ்கிருதம், மலையாளம் } 12

{ தெலுங்கு, கன்னடம், உருது } 13

மொழிநடைப் பதிப்பாசிரியர்
(*Language Editor*)

திட்டப் பதிப்பாசிரியர்

கலை இயக்குநர்

பொருளடக்கத் தொகுப்பாளர்

நூலடைவுப் பட்டியல் தொகுப்பாளர்

அச்சுக் கலைஞர்

பிழை திருத்துவோர்

பிழை திருத்தும் பதிப்பாசிரியர் (*Proof Editor*)

அட்டவணை 4இல் சில முக்கியப் பொருட் பிரிவுகளைக் காட்டியுள்ளேன். இப் பிரிவுகளின் கட்டுரைகள் சுமார் 50 சதவிகிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வரும். அக் கட்டுரைகளை அலுவலகத்தில் உள்ள ஆசிரியர்கள் குழுவினர் மொழியாக்கம் செய்வர். அங்ஙனம் மொழியாக்கம் செய்த கட்டுரைகள் மொழிநடைப் பதிப்பாசிரியரின் பார்வைக்குச் சென்று, தட்டச்சு செய்து மீண்டும் மூலத்துடன் ஒப்பிட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் எழுதிய அக் கட்டுரையாளருக்கு அனுப்பப்பெறும். அவர் தம் கட்டுரையில் உள்ள குறிப்புகள் அனைத்தும் சரி பார்த்து, கருத்துப் பிழைகளைக் கவனித்து, அக் கட்டுரைக்கு உரிய விளக்கப்படங்களை நிழற்படமாகவோ, வரைபடமாகவோ குறித்து அனுப்புவர்.

கட்டுரையாளர் அக் கட்டுரையை அனுப்பிய பின்னர் மேலும் அக் கட்டுரையை மதிப்பீடு செய்யவும், அப்பொருளினை ஆய்வு செய்யும் அறிஞர் குழுவுக்கு அனுப்பப்பெறும். அது அறிஞர் குழு ஒப்புதல் பெற்று வந்த பின்னர் அச்சுக்கு அனுப்ப முறைப்படி ஒழுங்கு செய்யப்பெறும். கட்டுரைக்கு வேண்டிய நிழற்படங்கள், வரை படங்கள் ஏற்கெனவே வேறு அறிவியல் புத்தகங்களில் வெளிவந்தவையாக இருக்கும். ஆகவே அப் படங்களை இங்கு பதிப்பிக்க அப் பதிப்பாளர்களிடத்தில் ஒப்புதல் பெற வேண்டும். முறைப்படி வேண்டுதல் செய்து, அங்ஙனம் அவை ஒப்புதல் பெற்று வந்த பின்னர் நாம் வெளியிடும் கட்டுரையின் அளவுக்கு ஏற்றவண்ணம் சுருக்கியோ, பெருக்கியோ அளவிட்டு அரிச்சித்திரம் (Blocks) செய்ய அனுப்பி அச்சகத்திற்கு அனுப்ப ஆயத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கட்டுரைகள் அச்சுக்குத் தர ஆயத்தம் செய்யும்போது அக் கட்டுரைகளை எடுத்து அகரவரிசைப்படுத்த வேண்டும். அகரவரிசைப்படுத்தி பக்க எண்களை மிகவும் விழிப்புடன் தவறு செய்யாமல் குறிக்க வேண்டும். குறித்த பின் பக்க எண்களை மீண்டும் சோதித்துத் தலைமைப் பதிப்பாசிரியர் பார்வைக்கு வைக்கவேண்டும். ஒருமுறை அச்சுக்குப் போக சுமார் 50 கட்டுரைகளாகப் பிரித்தல் வேண்டும். ஒட்டு மொத்தமாகத் தருதல் கூடாது. என் எனில் சில கட்டுரைகளில் வரும் கருத்து முடிபுகள் ஆய்வுகளுக்கு ஏற்ப நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கும். எடுத்துக்காட்டாக வேதியியலிலும், இயற்பியலிலும் அவ்வாறுன மாறுதல் காணலாம். கட்டுரைகளைத் தலைமைப் பதிப்பாசிரியர் பார்த்த பிறகு அந்தந்தப் பொருள்துறை ஆசிரியர்கள் கட்டுரைகளின் இடையே விளக்கப்படங்கள் எங்கெந்த இடங்களில் அமைக்க வேண்டும் எனக் குறிப்பர்.

பின்னர் கட்டுரைகளில் அமையும் தலைப்புகளுக்கு எந்தவித அச்சு வடிவம், அவ்வெழுத்து எந்தப் புள்ளி அளவில் (Point system) அமைய வேண்டும் எனவும், துணைத் தலைப்பு எந்தப் புள்ளி அளவில் எந்தவித அச்சில் அமைய வேண்டும் எனவும், ஒரு சில பொருள்களுக்கு மையத் தலைப்பு (Centre Heading) எப்படி இருக்கவேண்டும் எனவும் கட்டுரையின் ஊடே குறிக்கப்பெறும் முக்கியக் குறிப்பின் சொற்களை எந்தவித எழுத்து வடிவ அமைப்பில் அமைத்தல் வேண்டும் என்பன போன்றவைகளை கட்டுரைகளின் பிரதிகளிலேயே குறித்து அச்சு கோர்க்க அனுப்பப்பெறும்.

அச்சுக் கோர்த்த பின்னர் காலி மெய்ப்பு, பக்க மெய்ப்பு, பாரம் மெய்ப்பு என மூன்றுமுறை பிழை திருத்த அனுப்புவர். பக்கப் மெய்ப்பு வந்தபோது பிழை திருத்தும் பதிப்பாசிரியர், 1. கட்டுரைகள் அகர வரிசை சரியா, 2. தலைப்புகள், துணைத் தலைப்புகள் சரியாக உள்ளனவா? 3. விளக்கப் படங்கள் பொருத்திய இடங்கள் சரியாக உள்ளனவா? 4. விளக்கப் படங்களின் கீழ் உள்ள அப் படங்களின் பொருட் தலைப்புகள் சரிதானா? கட்டுரைகளின் முடிவில் கட்டுரையாளரின் தலைப்பு எழுத்து (Initials) பிழை இல்லாமல் அமைந்திருக்கிறதா என்றெல்லாம் பார்க்கவேண்டும். கட்டுரையின் உள்ளே வரும் எண்கள், சில குறியீடுகள் சரிதானா என்று பார்க்கவேண்டும். கட்டுரைகளின் இடையே வரும் ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்ய மொழிச் சொற்கள், பெயர்கள் முதலியவற்றின் உச்சரிப்பு (Pronounciation) சரியா என்பதையும் பார்க்கவேண்டும். சில கட்டுரைகளின் இடையே ஒரு மலையை பற்றி குறிப்பு இருக்கும். அந்த மலையின் கிழக்குப் பகுதியில் இருப்பது நிலப்பரப்பா, ஏரியா என்றெல்லாம் விழிப்புடன் கவனிக்க வேண்டும். ஒரு முறைக்கு இரண்டு முறை தலைமை அச்சுப்பிழை திருத்துவோர் பாரம் மெய்ப்பு பார்த்து தலைமைப் பதிப்பாசிரியர் உத்தரவு பெற்று, பின்னர்தான் பாரம் அச்சடிக்க உத்தரவிட வேண்டும்.

தலைப்புகள், துணைத் தலைப்புகள்பற்றிய குறிப்பு, ஒரு சில பொருள்கள் பல்வேறு கிளைகளாகப் பிரியும். மூலப் பொருளின் தலைப்பு (Heading), கிளைப் பொருள்கள் (அதாவது மூலப்பொருளினைத் தழுவியது) துணைத் தலைப்புகள் (Sub Heading) ஆகும். எடுத்துக்காட்டாக,

| | | |
|---|---|---|
| 1. இந்தியா | (தலைப்பு)—இது வரலாறு பற்றியது.<br>புவியடுக்கியல், தட்ப வெப்பநிலை—<br>தாவரங்கள்—விலங்குகள்—மானிட—<br>வியல் — மக்களினங்கள் — மக்கள்<br>தொகை—ஆதிக் குடிகள் (இப்படி<br>விரிந்து செல்லும்) | } துணைத் தலைப்புகள் |
| 2. கோழிகள் | (தலைப்பு)—இது விலங்கியல் பற்றியது.<br>கோழி வகைகள் — லெக்ஹார்ன்<br>கோழிகள்—கருப்பு மினார்க்கா-ரோடு<br>ஐலண்டு சிவப்பு-வெளுப்பு சஸெக்ஸ்<br>(இங்ஙனம் விரியும்) | } துணைத் தலைப்புகள் |

இதில் ஒரு சிறு குறிப்பு: 'நன்னூல்' என்ற கட்டுரை வரும்போது அதன் துணைத் தலைப்பாக பவணந்தியைக் குறிப்பதில்லை. பவணந்தி பற்றி தனித் தலைப்பில் கட்டுரை வரும்.

அனைத்து பாரங்களும் அச்சடித்த பின்னர், முன்னுரை, கலைக்களஞ்சிய செயற்குழுவினர் பட்டியல், பொருள் பட்டி அமைப்புக் குழுவினர் பட்டியல், கலைச்சொற் குழுவினர் பட்டியல், கட்டுரைகள் மதிப்பீடு செய்யும் மேல் மட்டக் குழுவின் பட்டியல், அலுவலக ஆசிரியர்கள் குழு பட்டியல், அத் தொகுதியில் இடம்பெறும் கட்டுரையாளர்களின் பெயர்ப் பட்டியல், திட்டமிடுவோர், ஓவியர், தலைமை அச்சுப் பிழை திருத்துபவர் பெயர், குறியீட்டு விளக்கங்கள் (எ. கா: அமெரிக்க ஐக்கிய நாடுகள்—அ. ஐ. நா., பதவிக் காலம்—

ப.கா., மில்லி மீட்டர்—மி.மீ.), தமிழ் நூல்கள்பற்றிய குறியீட்டு விளக்கம் (எ.கா: அகநானூறு-அகம்., நவநீதப் பாட்டியல்-நவ., வெண்பாப் பாட்டியல் வெண்.), பிறமொழி உச்சரிப்பைக் காட்டும் பட்டியல்—ஆகிய இவைகளை யெல்லாம் தொகுத்து முறைப்படுத்திய பின்னர் கட்டடம் (Binding) செய்யவேண்டும்.

இங்ஙனம் ஒரு கலைக்களஞ்சியத்தை அமைக்கும்போது அதன் ஆசிரியர்கள் குழுவும் அதன் தலைமைப் பதிப்பாசிரியரும் பரந்துபட்ட பேரறிவாளராகத் திகழவேண்டும். எடுத்தக்கொண்ட பணிக்கு உரியவராகத் தன்னை அர்ப் பணித்துக் கொண்டவராக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் குழுவினர் செய்யும் பணியில் சுறுசுறுப்பும், ஆய்வு உணர்வு உடைய்வராயும், பணியில் உண்மை உணர்வோடு கூடிய ஈடுபாடு உடையவராகவும் இருத்தல்வேண்டும். ஒரு சித்தாந்த அடிப்படையில் பார்த்தால், கடவுள் ஒரு மனிதனைப் பார்த்து, 'உன்னை எதற்காக இந்த உலகத்தில் அனுப்பி வைத்தேனோ அதைச் செய்து விட்டுப் புறம்போகாமல் நேரே வா' என்று சொல்லுமாப் போலே கலைக்களஞ்சியப் பணிக்கு (அது எம்மொழி, எந்நாட்டின் பற்றிய தாயினும்) பக்தி உணர்வு உடையவர்களாய் அமையவேண்டும்.

இனி, தமிழ்க் கலைக்களஞ்சியம் 1953இல் அச்சுக்குச் சென்று 1963இல் முடிந்து அகரவரிசையில் 9 தொகுதிகளாக வெளிவந்தன. ஒவ்வொரு தொகுதியும் 750 பக்கங்கள், சுமார் 1,000 கட்டுரைகள், வெளியில் உள்ள கட்டுரையாளர் சுமார் 200 பேர் வரைந்த கட்டுரைகள், ஒவ்வொரு தொகுதி யிலும் ஒரு வண்ணப்படங்கள் 10, மூவண்ணப் படங்கள் 5, கட்டுரைகளுக்கு விளக்கப்படங்கள் சுமார் 400 உடையதாய் விளங்கி வெளிவந்தது.

இதனை அடுத்து, குழந்தைகள் கலைக்களஞ்சியத்திற்குத் திட்டமிட்டு அவை 10 தொகுதிகளாக வெளிவந்தன அகர வரிசையில். அவை பெரும்பாலும் அறிவியல் சிந்தனை உடையன. ஒவ்வொரு தொகுதியும் பலவண்ண மாற்று அச்சடிப்பு (Multi colour offset printing) முறையில் வெளிவந்தன.

இதனைத் தவிர்த்து மேலும் சில குறிப்புகள்: கலைக்களஞ்சியம் என்ற சிந்தனை 18ஆம் நூற்றூண்டிலேயே ஆங்கிலேயர் தொடர்புடன் விளங்கி யுள்ளது. 'Cyclopaedia of India' என்ற 1000 பக்கங்கள் கொண்ட புத்தகம் சென்னையில் அத்தீனியம் அச்சகத்தில் அச்சிட்டு வெளிவந்துள்ளது. 1856இல் முதல் பதிப்பு. 1862இல் இரண்டாம் பதிப்பு வந்துள்ளது. அதன் ஆசிரியர், எட்வர்டு பால்பர் (Surgeon Major, Madras Army) என்பவர். அதில்—அன்னபூர்ணு தேவி, அசோகா செட்டு (செடி), பூகம்பம், மடவே மீன் (மடவை மீன்), திப்பிலி, எமன்தர்மராஜா, திராவிடர்கள் யார்?— என்பன போன்ற கட்டுரைகள் சுவை உடையன.

அடுத்து 'Encyclopaedia of the Madras Presidency and adjacent States' என்ற நூல் சுமார் 1000 பக்கங்கள் கொண்டதாய் வெளி வந்துள்ளது. அதில் நகரங்களின் அமைப்பு, கோயில்கள், பெரும் புகழாளர் களின் வரலாற்றுச் சிறு குறிப்புகள், எங்கெங்குக் கல்லூரிகள் உள்ளன என்பன வெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன. இது 1920–21இல் வெளிவந்தது. இதில் கலவல கண்ணன் செட்டியார் அறப்பணிகள்பற்றிய குறிப்பு சிறப் பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் மாடர்ன் பிரிண்டிங் பிரஸ் என்ற அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.

1902ஆம் ஆண்டில் புராணம், இதிகாசம், இலக்கியம் முதலியவற்றி லிருந்து பொருள்களைத் திரட்டி "அபிதானகோசம்" என்ற பெயரில் திரு நா. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

1908-இல் தமிழ் நூல்களிலும், வடமொழி நூல்களிலும் உள்ள சிறப்புப் பெயர்களுக்கு விளக்கம் தரும் நோக்குடன் "சிறப்புப் பெயரகராதி" என்ற பெயரில் சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் போராசிரியர் திரு ஈக்காடு இரத்தினவேல் முதலியார் அவர்களால் வெளியிடப்பட்டது.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் போராசிரியர் திரு ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்களால் "அபிதான சிந்தாமணி" என்னும் பெயரில் ஒரு நூலை 1910இல் வெளியிட்டார். அதில் முன்னவர்கள் செய்த பொருள் அமைப்புடன் வேறு சில பொருள் குறிப்புகளும் இணைத்து ஆக்கப்பட்டது.

திரு டி. வி. சாம்பசிவம் பிள்ளை என்பவர் "Tamil English, Cyclo-paedia Dictionary" என்ற பெயரில் மருத்துவம், தாவரவியல், ரசாயனம் ஆகிய துறைகளில் உள்ள பொருள்களைப் பற்றி ஒரு களஞ்சியம் 4 தொகுதி களாக வெளியிட முயன்றார். இரண்டு தொகுதிகள் வெளிவந்தன. எஞ்சியது விளக்கம் தெரியவில்லை. இந்தச் சாம்பசிவம் பிள்ளையின் முயற்சி பேரறிஞர் அண்ணாவின் பார்வைக்கு வந்தது. 2-வது உலகத் தமிழ் மாநாட்டின்போது அந்தக் களஞ்சியத்தின் ஆங்கில முன்னுரையில் உள்ள சில சிறப்பு அம்சங்களை எடுத்து 49 பக்கங்களில் அச்சிட்டு அயல்நாட்டு அறிஞர்கள் கையில் தந்தார்கள். அதில் ஓர் இடத்தில் நம் உடலைப் பற்றி,

> "The Siddars' School fully recognises these ninety-six Tatwas and further add that the human body is composed of 72,000 blood-vessels, 13,000 nerves, 10 main arteries, 10 vital airs (Prana), all together the form of a net-work; and it is, owing to the derangement of the three humours becomes liable to 4448 diseases" —as per "ஈஸ்வர மெய்ஞான நாடி"

## கலைக்களஞ்சியம் மறுமதிப்பு

கலைக்களஞ்சியம் உருவாகச் சில நெறி முறைகளைக் கவனித்தோம். இனி அதனை மறுபதிப்பு கொண்டுவரும்போது கவனிக்கவேண்டிய சில குறிப்புகள். கலைக்களஞ்சியத்தில் உள்ள சில பொருள் காலத்திற்குக் காலம்—ஏன் நாளுக்குநாள் மாற்றமடையக்கூடியவைகள் உண்டு. கணிதவியல், வேதியியல், இயற்பியல், புவியியல் முதலியன மாறுதல் அடையும். ஆகவே கலைக்களஞ்சியங்கள் ஒரு தொடர் பதிப்புகளாக வெளிவந்து கொண்டே இருக்கவேண்டும்—பிற்சேர்க்கை (Supplement or year Book) என்ற முறையில் ஒரு மருத்துவர் அறுவை சிகிச்சையின்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைத் திட்டமிடுவது போல (Plane for the whole operation) இங்கும் திட்டமிட்டு முழுமையான சிந்தனை புடன் பணியை மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகப் புவியியலில் வட்டங்கள் (Taluks), மாவட்டங்கள் (Districts) எல்லைகள் மாற்றம்

——————— (1978), *Ilakkaṇa ulakil Putiya pārvai*, (Vol. 1, 2nd edition) Madras, (also see under Portkō).

——————— (1980), *Linguistic Studies in Tamil*. Madras.

——————— (1981), Ilakkaṇa ulakil putiya pārvai, Vol. II, Madras, (also see under Portkō):

——————— (1983), "Ilakkaṇakkōṭpāṭukaḷ" in *Uyarōyvu*, Ed. Dr. N. Sanjeevi, Madras.

T. P. Meenakshisundaram (1965), *History of Tamil Language*, Poona.

Portkō (1978), *Ilakkaṇa ulakil putiya pārvai*, (Vol. 1. 2nd edition), Madras.

——— (1981), Ilakkaṇa ulakil putiya pārvai, (Vol. II), Madras.

S. Sakthivel (1984), *Tamiḻ moḻi varalāṟu*, Chidambaram.

N. Sanjeevi (Editor), (1983), *Uyarāyvu*, Madras.

A. Veluppillai (1979), *Tamiḻ varalāṟṟilakkaṇam* (2nd edition), Madras,

AN EXTEMPORE SPEECH BY Prof. Dr. N. SANJEEVI
OF MADRAS UNIVERSITY

In VIII World Poets Conference held at Corfu (Greece)
in the panel discussion on

# Mediteranean Civilization and Poetry

Under the Presidentship of Poet L. Sedar—Sengor
(Former President of Senagal) on 30—9—1985)

Respected President and Dear Fellow—Participants,

I am deeply grateful to our learned and beloved president for giving me an opportunity to 'intervene briefly' in this discussion on Mediteranean civilization and poetry. I shall cherish this opportunity as a great privilege and honour offered not merely for myself but for India, —the country, that I represent, and the University of Madras where I teach and research.

I particularly feel previleged not only because I happen to speak under the presidentship of a great poet and a national leader whose reputation is world-wide, but also because he took great interest in the study and spread of Dravidian studies in his country for which we, the Tamils, are ever greatful. However, I beg your pardon, sir, when I say frankly that I felt disappointed that no reference whatsoever has been made about the cultural and commercial contacts between the Mediteranean civilization and that of Dravidian, which exists in the deep south of India either in the learned presidential address of yours or in any of the remarks of about twenty subsequent interventions by distinquished delegates. Henee, I thought, my short intervention permitted by your beloved self will really enhance the academic value of the discussion on 'mediteranean civilization and poetry' because we have to look at the impact

of Mediteranean civilization and poetry from a global point of view and that would never be complete without an adequate study of the Dravidian civilization and poetry. As such I wish to emphasis with all the strength at my command that the value of the impact of Mediteranean civilization and poetry could never be valued fully and correctly without a proper reference to India and particularly to South India and more particularly to Tamilnadu and its ancient civilization and poetry which is on an equal footing to that of Sanskrit with which European languages are closely connected. To be more factual I should say that while Sanskrit has become obsolete like Latin, Tamil language is still the spoken Idiom of millions of people in Tamilnadu and in countries like Sri Lanka, Burma, Malasia, Singapore, Fiji, Mauritius, Re-union and South Africa. In Europe and America there are thousands of Tamil successfully engaged in different vocations.

Ancient Tamil classical Literature which belongs to a few centuries before and after the dawn of Christian Erah as a number of significant references about the maritine contacts between Ancient Greece and Rome and Tamilnadu. The Greek Ionions were known to the Tamils as Yavanaas. There were Greek warriors in the position of our palace guards. And Lamps of great workmanship from Greece adorned our palaces. There were also colonies of Greek and Roman traders in ancient cities like Poompuhar—the Eden of East. A modern Tamil Research scholar, Mylai-Seeni Venkatasamy is of the opinion that the Tamil word 'எழினி' meaning 'a stage screen' is drawn from Greek 'Yavanika'. He has also drawn comparisons and similarities between the structures of battle fields of Ancient Greece and Rome with that of ancient Tamilnadu. That there was a continuous commercial flow is established not only by references in Ancient Tamil literature but also by the foreign notices of South India recorded by persons like Megasthenes, Strabo, Pliny and others. An European historian lamented that all the Roman treasures is emptied by the high value of pearls of Pandinad (a part of Tamilnadu) got in exchange for wine.

I am sure you will be interested to learn that there is a theory that the Dravidian race migrated from or imigrated to Mediteranean, suggested by non-Tamil scholars like Lahovary and Balakrishna Nayar. We have found enough archaeological evidences also such as Greek and Roman coins and Liquor Jars from Greece and Rome to establish the commercial contacts between ancient Greece and Rome on one hand and that of Tamilnadu on the other hand. It shall be equally interesting and important to note that the great musical instrument—harp known in ancient Tamil as 'yaal', now extinct in Tamilnadu is found in Greece and Rome (and also in China).

Sir, I have just pointed out a rich field for deep investigation to realise the ancient commercial and cultural contacts between the Mediteranean and Tamilnadu the southern most State of India which is considered to be the cradle of Dravidian civilization. In this context, I would very much plead with you, sir, to appoint a permanent commission for investigation of the ancient contacts between the Mediteranean and India, particularly with the deep South of India unearthing and identifying the material that should be available here from Tamilnadu. This will strengthen better understanding and closer colabration and will certainly expand and enliven the greatness of Mediteranean civilization itself. With regard to the poetry of mediteranean and ancient Tamil classics I should point out to you that there is a significant parallel in the concept of academies of ancient Greece and that of Cankams in ancient Tamilnadu. It also appears to me that the ethos of Mediteranean civilization was similar to that of ancient Tamils. In fact even the political divisions and conditions were similar I have also often thought that the reasons for the decline and fall of Rome as described by the great historian Gibbon were the same for the ancient Tamils. Many parallels could be found between the ancient poetry of Greece and Rome and that of Ancient Tamil, particularly literary generes like elegies and lyrics.

Sir, I may be permitted close this brief intervention by highlighting a striking parallel between the life of Socrates father of European philosophy and a thought of Tiruvalluvar of Ancient Tamilnadu of the first century B.C. or A.D. The name and fame of Socrates is well-known in Tamilnadu because of the writings of not less than two great personalities, who were former Chief ministers of Tamilnadu also, Rajaji and Kalainger Karunanithi. While both were popular writers of great standards, the latter who is fortunately still in our midst, is a very powerful orator, Novelist, short-story writer, dramatist, play-wright and a poet also. The parallel between the life of Socrates and the thought of Tiruvalluvar, who is the author of Tirukkural—a book on ethics, polity and love that has no parallel, in the world literature, is found in the following couplet (when rendered in English):

> Men of graceful courtesy
> Take hemlock and look cheerfully (580)

Let me close my brief talk with this memorable thought.

Thnk you very much.

---

# தோழர்-சிங்காரவேலர்
# ஒரு சிறந்த பொதுவுடைமையாளர்

### பா. வீரமணி

இந்நூற்றாண்டில் தமிழகம் கண்ட சிந்தனையாளர்களுள் தலை சிறந்தவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். தத்துவம், அரசியல் பொருளாதாரம், உளவியல், வரலாறு, சட்டம், இயற்கை விஞ்ஞானம் ஆகிய துறைகளில் வல்லமை பெற்றிருந்ததோடு, அவற்றை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகத் தமிழில் எழுதியும் வந்தவர். விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் எழுத முடியுமா? என ஐயுறும் இன்றைய பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் விடைகூறும் வகையில் 1920-லிருந்தே விஞ்ஞான கட்டுரைகளைத் தமிழில் எழுதி வந்தவர் சிங்காரவேலர். டேக்கார்ட், ஸ்பினோசா, யமானுவேல் கான்ட், லாப்லஸ், ஹெர்பர்ட் ஸ்பென்ஷர், மெட்சினிகாப், ஹெகல், சார்லஸ் டார்வின், ஆல்பர்ட் ஈன்ஸ்டின், கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகிய அறிவுலக மேதைகளை முதன் முதலில் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி, அவர்களுடைய கருத்துக்களை விளக்கியும், விமர்சனம் செய்தும் வந்தவர் சிங்காரவேலர் இத்தகைய ஆற்றல் பெற்றவராக இருந்ததனால்தான் 1925-ஆம் ஆண்டில் கான்பூரில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் சிறப்பு அவர்க்குக் கிடைத்தது எனலாம். ஒரு சிறந்த பொதுவுடைமையாளர்க்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமோ, அவற்றையெல்லாம் நிரம்பப் பெற்றவர் சிங்காரவேலர். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களைத் தொழிற்சங்கத்தில் ஈடுபடுத்தியவர் இவரே. தந்தை பெரியார் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்கு முன்னோடியாக விளங்கித் துணைபுரிந்தவர் இவரே தேசிய கவியாக விளங்கிய பாரதியார், பொதுவுடைமை கொள்கையிடத்து நாட்டம் கொள்வதற்கு வழி காட்டியாக விளங்கியவரும் இவரே.

“இந்தியாவிலேயே விஞ்ஞான அறிவுக்கலை சம்பந்தமாகவும், பொதுவுடைமை சம்பந்தமாகவும் அதிகம் படித்தும் புரிந்துகொண்டு, அந்த அறிவைக் கொண்டு மற்றவர்களுக்குப் புரியும் படியாகச் செய்த பெருமைக்குரிய இடத்தில் முன்வரிசையில் முதலிடம் அவருக்கே அளித்தாக வேண்டும்.”

(சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் எனும் தலைப்பில்
பேரறிஞர் அண்ணா எழுதியது. ப. 6)

“கூர்தலறத்தை டார்வின் ஆராய்ச்சி கொண்டு முதல் முதல் எனக்கு அறிவுறுத்தியவர் தோழர் எம். சிங்காரவேல் செட்டியார்”

“கோமளீசுவரன்பேட்டை புதுப்பேட்டையிலே ஒரு பௌத்த சங்கம் கூடிற்று. அதிலே இலட்சுமி நரசு நாயுடு, சிங்காரவேல் செட்டியார்

முதலியோர் பேசுகின்றனர் என்று கேள்வியுற்றேன். யான் கூட்டத்துடன் அங்குச்சென்றேன். சிங்காரவேல் செட்டியார் டார்வின் கொள்கையைத் தமிழிலே விளக்கினர். என் உள்ளம் அதில் ஈடுபட்டது. கலகஞ்செய்யபோந்த யான் டார்வின் வகுப்பு மாணாக்கனானேன். செட்டியார் ஆசிரியரானார்.

"எனது வாழ்க்கை தொடக்கத்தில் சமயப் பணியில் ஈடுபட்டது. அதனால் பலசமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை+சமரசம்—ஏன் உலகில் பரவவில்லை? என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை. சிங்காரவேல் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கஞ் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலை நிறுத்த வல்லது கார்ல்மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது".

(திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்-திரு. வி. க.
(பக். 3, 619, 579)

மேற்கண்ட கருத்துக்களால் சிங்காரவேலர் எத்துணை ஆற்றல் வாய்ந்தவர் என்பது நன்கு புலனாகும். சிங்காரவேலர் கார்ல் மார்க்ஸின் தத்துவத்தில் ஆழ்ந்த அறிவு உள்ளவர். வளர்ந்து வரும் விஞ்ஞானக் கருத்துக்களிலும் ஆற்றல் பெற்றவர். மிகச் சிறந்த பொதுவுடைமை வாதியாக விளங்கிய அவர், சமய நூல்களையும் கற்றிருக்கிறார். முற்போக்கு வாதிகளாக உள்ளவர்கள் சமய நூல்களில் "என்ன உள்ளது? ஒன்று மில்லை" என்று ஒதுக்வதுதான் இயல்பு. சமய நூல்களில் குறை உள்ளன என்று விளக்குவதற்கும், அவற்றைக் கற்றால்தானே முடியும்; ஆனால், சிங்காரவேலர், அத்வைதம், துவைதம், விசிஸ்டாத்வைதம், கைவல்ய நவநீதம் ஆகியவற்றோடு பைபிள், குரான் ஆகியவற்றையும் நன்கு படித்து, விமர்சனம் செய்து இருக்கிறார், என்பதை அவருடைய நூல்களில் பார்க்கலாம்.

"மனிதகுலத்தால் உருவாக்கப்பட்ட அனைத்து அறிவுத்துறைகளிலும் வல்லமை பெறுபவனே ஒரு சிறந்த கம்யூனிஸ்டாக ஆகமுடியும்" (You can become a Communist only when you enrich your mind with all knowledge of treasures created by man kind"—LENIN Berth of genius page-3., என்ற லெனின் வரையறைக்கு முற்றிலும் தகுதியானவர் சிங்காரவேலர்.

## சிங்காரவேலரும், அத்துவைதமும்

இந்தியத் தத்துவ ஞானத்தில் மிகுந்த செல்வாக்கு உடையது அத்துவைதம். இதனைப் பற்றிப் பேராசிரியர் பலர் நன்கு விளக்கிப் பல நூல்களை எழுதியுள்ளனர். அத்துவைதத்தை விளக்க டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் டி. எம். பி. மகாதேவன் போன்ற பலர் வழிவழியாகக்

கூறிவரும் உதாரணத்தைச் சிங்காரவேலர் மிகச் சாதாரணமாக மறுப்பதைக் காணலாம். அத்துவைதம் சங்கரரால் உருவாக்கப்பட்டது. "அத்துவைதம் என்றால் இரண்டற்றது" என்பது பொருள். அதாவது பிரும்மமும் ஜீவனும் ஒன்றேயன்றி வேறு அல்ல என்பதே இதன் பொருளாகும். இனி, இத்தத்துவத்தைப் பற்றி மற்ற அறிஞர்கள் எழுதியுள்ளதைக் காண்போம்.

"இவ்வுலகு பொய்த் தோற்றம் உடையது. மித்தையானது என்று கருதுவதாகக் கூறப்படுகிறது. இவ்வுலகிற்கும், பிரம்மத்திற்கும் இடையே உள்ள உறவுகளை விளக்க சங்கரர் ஆளுகின்ற எடுத்துக்காட்டினால், "சங்கரர் இவ்வுலக மித்தை எனக்கொண்டார் என்று கருதத் தூண்டுகிறது. கயிறு ஒன்றே உள்ள இடத்தில் தோன்றும் பாம்பு உள்ளதுமன்று, இல்லதுமன்று. பாம்பு தோன்றுகிற ஒரு காட்சியாகும். நாம் காணத்தோன்றுகின்ற ஒன்றாகும். ஆனால் உள்ளதுமன்று, உண்மையுமன்று. நன்கு ஆராய்கிறபோது கயிறு ஒன்றே புலனாகின்றது. பாம்பு தோன்றவில்லை. தழையற்ற நேரிய அறிவு தோன்றும்வரை பாம்பு தோன்றிக் கொண்டே இருக்கும். பிரமததில் உலகு ஊன்றியுள்ளதை அறியும் வரை உலகம் உள்ளதாகத் தோன்றும்".

("டாக்டர் ராதாகிருஷ்ணன்" கீழை மேலைநாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு-பக். 488)

"அத்துவைதம் வேதாந்த மதங்களுள் ஒன்றாகும். பிரம்மம் இரண்டற்ற மூலப்பொருள். "பலவாகக் காணப்படும் உலகம் பொய்த்தோற்றம் உடையது. ஜீவன் பிரம்மத்தைவிட வேறன்று" என்று அத்துவைதம் கூறுகிறது. அத்துவைதம் என்ற சொல்லுக்கு இரண்டற்றது என்று பொருள். பிரும்மத்திடமிருந்து இவ்வுலகம் பிறக்கிறது. பிறந்தபின் அதனிடத்தே நிலைக்கின்றது. இறுதியில் அதனுள்ளே அடங்குகிறது. ஆனால், உலகம் பிறப்பதும், நிலைப்பதும், அடங்குவதும் வாஸ்தவமல்ல. கயிற்றினிடத்தே பாம்பு தோன்றுவது போல், பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு உலகம் தோன்றுகிறது.

அஞ்ஞானத்தினால் ஜீவன் தான் வேறு பிரமம் வேறு என்று கருதுகிறான். தானல்லாதவற்றைத் தானாகப் பாவிக்கிறான். ஜீவாத்மாவின் வாஸ்தவ சொரூபம் பிரமம். இந்த தண்மையை தத்+துவம்+அசி ஆகிய மகாவாக்கியங்கள் போதிக்கின்றன. தத்+துவம்+அசி என்ற வாக்கியத்திற்கு "அது நீ" "நீ அதுவாய்" இருக்கிறாய் என்று பொருள்.

(கலைக்களஞ்சியம்—டி. எம். பி. மகாதேவன்-பக். 78)

அத்துவைதத்தைப் பற்றி ஆழ்ந்த புலமை பெற்ற அறிஞர்கள் எழுதியிருப்பதைக் கண்டோம். இதனைச் சிங்காரவேலர் தன் நுண்மாண் நுழைபுலத்தால் எவ்வாறு மறுக்கிறார் என்பதை இனிக் காண்போம்.

"தத்+துவம்+அசி என்ற மூன்று மூலச் சொற்களுக்குரிய பொருள்களை யாவரும் அனுபவத்தில் கண்டதில்லை (They are mere

assumptions) அவை வெறும் சங்கல்பங்களே. அவை வெறும் சொற்கள், அது நீ ஆனாய் என்று பிரித்தபோது 'அது' என்பதை யாரும் அநுபவித்தாரில்லை. 'அது' வென்றால் எது? பிரமம் என்றால் எது அது வென்பார். இவ்விதமாக ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல்லைக் காட்டி வருகிறார்களே யொழிய அச்சொல்லுக்குரியதைத் தெரிய செய்த பாடில்லை. இதைத்தான் சங்கர பாஸ்யத்தில் காண்கிறோம். இந்தச் சொல்லின் பேரில் எழுதியுள்ள வியாக்கியானங்களுக்கு அளவு இல்லை இதுதான் அத்துவைதம் என்பார்.

இந்த மாயவாதிகளை எடுத்துக் கொள்வோம். இவர்கள் உலகம் மாயை என்று கூறுவார்கள். அதாவது நமது புலன்களுக்குத் தோன்றும் உலகம் உண்மையல்ல. புலன்கள் உலகை உள்ளபடி (பிரமத்ததின்படி) அறிவிக்கமுடியாது. (Senses are all deceptives) அதாவது புலன்கள் எப்போதும் மோசம். புலன்களால் அறியக்கூடிய உலகம் மெய்யல்ல. உண்மையாக இருப்பது ஆன்மாவே! ஆன்மாவின் மயமே இவ்வுலகமாகும் என்று வாதிப்பார்கள். உலகை மாயம் என்று நிரூபிக்க சில திருஷ்டாங்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

கிளிஞ்சலை வெள்ளிபோலும், கயிற்றைப் பாம்பு போலும் பாவித்து நடப்பதைப் போல் பிரமத்தை உலக சராசரப் பொருள்களாகப் பாவிக்கிறோம் என்பார்கள்.

ஆனால், இந்த வாதத்தில் (Arguments of analogy) ஒரு பிழை இருந்து வருகிறது. அதாவது 'பிரமம்' என்ற சொல்லில் அடங்கிய பொருளை யாரும் கண்களால் பார்த்ததில்லை. ஆனால், காட்டும் திருஷ்டாந்தத்தில் கிளிஞ்சல், வெள்ளி, கயிறு, பாம்புமுதலிய திருஷ்டாந்திர பொருள்களை கண்களால் பார்த்து வருகின்றோம். இப்பொருள்களைப் பார்த்திராதவனுக்கு, ஒன்று மற்றொன்றாகப் பார்க்கும் மருள் எழாது. பார்ப்பதில் மருள் ஒன்றுமில்லை. கண்களால் மருள் எழுவதில்லை. கண்கள் ஏதோ பொருள் இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் மருள் எப்படி எழுகிறதென்றால் இவ்விரண்டு வஸ்துக்களையும் பார்த்தவன் ஒன்றை மற்றொன்றாக அர்த்தப்படுத்துகிறான். பார்த்த பொருள் ஏதோவொன்று. ஆனால் அதனை அர்த்தப்படுத்துவதில்தான் மருள் உண்டாகின்றது.

இரண்டு பொருள்களில் ஒன்றை மாத்திரம் பார்த்தவனுக்கு வெள்ளியென்றாகிலும், பாம்பென்றாகிலும் எண்ண முடியாது. பாம்பைப் பார்த்திராதவன் கட்டையைப் பார்த்து எவ்வாறு பாம்பு என்று எண்ணுவான்? நாம் உலகமொன்றைத்தான் பார்க்கிறோம். பார்த்த பொருளைத்தான் ஒன்றை மற்றொன்றாகப் பாவிக்கமுடியும். பாராத பிரமத்தை உண்மை என்று கூறி பார்க்கும் உலகை மித்தை, மாயை, மருள் என்று கூறுவது குருடன் பார்க்கும் பார்வையாகும். மலடி மக்களைப்

பெற்றுள்ளதைப் போன்ற கதையையொக்கும். வேதாந்திகள் தங்கள் வாதத்தில் மறந்துள்ள இந்த வழுவைக் கவனியாமல் வேதாந்தம் பேசுவது விசனிக்க தக்கதே.

(தத்துவமும் வாழ்க்கையும் பக். 22-சிங்காரவேலர்)

கயிற்றையும் பாம்பையும் பார்த்தவனுக்குதான் கயிற்றைப் பார்க்கும் போது பாம்பாகவும், அதேபோன்று கிளிஞ்சலையும் வெள்ளியையும், பார்த்தவனுக்குத்தான், கிளிஞ்சலைப் பார்க்கும் போது வெள்ளியாகவும் தோன்றுவது இயல்பு. ஆனால்; பிரும் மத்தைக் காணாத ஒருவன், இவ்வுலகை எப்படி பிரமமாக உணர முடியும்? சிங்காரவேலரின் கேள்வி சரியான கேள்வியன்றோ! மேலும் புலன்களால் எதனையும் உள்ளவாறு உணரமுடியாது. என்று கூறுவது அத்துவைதம், புலன்களின் ஆற்றலின்மையால்தான், இவ்வுலகை பிரமமாக உணரமுடியவில்லையென்றும் கூறுகிறார்கள். ஆனால், சிங்காரவேலர் இதனையும் மிக ஆழமாக மறுக்கிறார். கயிற்றைப் பார்க்கும்போது, கண் களுக்கு அது கயிராகத்தான் தெரிகிறது. கயிறாகத் தெரிகிறவொன்று பாம்பாகத் தெரிவதற்குக் காரணம் கண்களின் குறையல்ல, மாறாக, அதனை அர்த்தப்படுத்துகின்ற மனிதனின் சிந்தனையே ஆகும் என்று சிங்காரவேலர் கூறும் வாதம் அசைக்கமுடியாத வாதமல்லவா?. மற்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன், அவர்கள் 'நேரிய அறிவு தோன்றும்வரை, இவ்வுலகம் உள்ளதாகத்தான் காட்சியளிக்குமேயன்றி, பிரமமாக காட்சி யளிக்காது என்கிறார். "புலன்கள் எப்போதும் குறையுடையன" என அத்துவைதம் கூறுகிறபோது, குறையுடைய புலன்களால் நேரிய அறிவை எப்படி பெற முடியும்? என்று நாம் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களை கேட்கலாம் அல்லவா? டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுவது பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும் முற்றிலும் புறம்பாக இருப்பதைச்சற்றுக் காண்போம்.

"உலகம் மெய்யென்பதும் பொய்யென்பதும் நமது புலன்களால் உண்டாகும் அனுபவத்தைக் கொண்டுதான் தெரிந்து கொள்ளமுடியும். லோகாயுதவாதிகள் புலன்களால் அறியக் கூடிய உலகத்தை முழுமை யும் நன்றாக அறிய முடியாவிடினும் அறிந்தவரை உண்மையே என் கிறார்கள். பரிட்சையால் இவ்வுலகத்தை அதிகமாக தினம் தினம் அறிந்து வருகின்றோம். புலன்கள் அன்னியில் உலகைத் தெரிந்து கொள்ள முடியா விடினும், நெருங்கிப்பார்க்குமளவில் அதிகமாக தெரிந்துக்கொள்ள இட முண்டு, புலன்கள் காட்டும் உலகத்தைக் கொண்டே நமது லௌகீக வாழ்க்கையை நடத்தி வருகிறோம். நாம் உணரும் பசியும் துக்கமும் புலன்கள் காட்டும் வழிகளால்தான் நீக்கிக் கொள்கிறோம். இதனைப் பொய்யென்று வாதிப்பது மாயையாகும்".

(தத்துவமும் வாழ்க்கையும் பக். 22 சிங்காரவேலர்)

சிங்காரவேலர் மிக நடுநிலையாகவே தன் கருத்தை விளக்குகிறார். இதுவரை, உலகில் உள்ள எல்லாவற்றையும் புலன்களால் அறிந்து

விட்டோம் என்று கூறவில்லை. மாறாகப் படிப்படியாகத்தான் அறிந்து வருகிறோம் என்கிறார். குறிப்பாக, மதவாதிகள் முதன்முதலில் எவ்வித ஆதாரமும் இல்லாமல், பூமி தட்டையாக இருக்கிறது என்றார்கள். ஆனால் நாளடைவில் விஞ்ஞான வளர்ச்சியினால் பூமி உருண்டையாக உள்ளது என்பதைத் தெரிந்துக் கொண்டோம். எவ்வாறு? சந்திரன் மீது விழும் பூமியின் நிழலைக் கண்டு, பூமி உருண்டை வடிவம் கொண்டது என முதன் முதலில் பிதாகொரஸைப் பின்பற்றிய விஞ்ஞானிகளின் வாயிலாகத் தெரிந்துகொண்டோம். பின்பு சீரிய சிந்தனை வளர்ச்சியாலும், புலன் களின் செயற்பாட்டினாலும் உருவாக்கப்பட்ட விண்வெளிக் கலங்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்களாலும், செயற்கைக் கோள்களில் வலம்வந்த யூரிகாகரின் போன்றவர்கள் கூறிய கூற்றுக்களிலிருந்தும் பூமி உருண்டை வடிவம் உடையதே என்பதை உறுதி செய்தாகிவிட்டது. மேலும், நாம் பூமியிலிருந்து பார்க்கும்போது, விண்ணில் சூரியனும், சந்திரனும், விண்மீன் களும்தான் தென்படுகின்றன. ஆனால், கலிலியோ என்ற விஞ்ஞானி, தன் சிந்தனை வளர்ச்சியாலும் தன் புலன்களின் செயற்பாட்டினாலும் கண்டுபிடித்த தொலைநோக்குக் கண்ணாடி மூலமே விண்வெளியில் மிக நீண்ட தூரத்தில் உள்ள வியாழனையும் அதனுடைய துணைக்கோள்ளையும் கண்டுபிடித்ததை யாரும் மறுக்க முடியாது. சூரியனிலிருந்து விழுந்த துணுக்குதான் பூமியென்றும், அந்தப் பூமியின் அனல் போதுமான அளவிற் குக்குறைய பலகோடி ஆண்டுகள் ஆயின வென்றும் மனிதன் தோன்றிப் பத்து லட்சம் ஆண்டுகளே ஆகியுள்ளன என்பதையும் விஞ்ஞானம்தான் நமக்குப் பறைசாற்றுகிறது. இந்த விஞ்ஞானம்தான், இன்று பூமிக்கடியி லுள்ள நீர், நிலக்கரி, பெட்ரோல், எரிவாயு, போன்றவைகளின் அளவையும் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. இத்தகு வளர்ந்த விஞ்ஞானம் வெறும் பூமி ஆராய்ச்சியோடு நின்றுவிடாமல், விண்ணையும் நன்கு ஆய்ந்து வருகிறது. அதன் பயனாக, மண்ணும் விண்ணும் நெருங்கி வருவதைக் காண்கிறோம். "கண்ணில் தெரியும் பொருள்களைக் கைகள் கவர்ந்திட மாட்டாவோ" என ஏங்கிய நெஞ்சங்கட்கு "மண்ணில் தெரியுது வானம், அது நம் வசப்படலாகாதோ" என்று நினைக்கும் அளவுக்கு, விண்ணை மண்ணோடு நெருங்கவைத்துக் கொண்டிருக்கிறது இன்றைய விஞ்ஞானம். இத்தகைய விஞ்ஞானம் வளர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? இடையறாத சிந்தனை வளர்ச்சியும், புலன்களின் செயற்பாட்டு வளர்ச்சியும் தானே! அத்தகைய புலன்களை மாயை என்றும், குறையுடையன வென்றும் கூறு வது இக்காலத்திற்குப் பொருந்துமா?. இன்னொரு எடுத்துக்காட்டையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். 1979-ஆண்டு ஜூன் 7-ஆம் தேதியன்று சோவியத் யூனியன் உதவியுடன் விண்ணிலே செலுத்தப்பட்ட "பாஸ்கரா" கோளின் வாயிலாக, இதுவரை அறிந்திராத இந்தியநாட்டின் இயற்கை வளங்களை அறிந்திருக்கின்றனர். குறிப்பாக, நம் நாட்டிலுள்ள மலைத் தொடர்கள், ஆறுகள், காடுகள், பாலைவனங்கள் ஆகியவற்றைப் பற்றியும், பூமிகடியிலுள்ள தாதுக்களின் அளவினையும், பருவ காலங்களின் மாற்றத் தையும், புயல்களையும், சூறாவளியையும் முன்னறிவிக்கவும், உதவியிருக் கின்றது எனின், மிகப்பெரும் விந்தையன்றோ! அதுவும், பூமியிலிருந்து 600 கி.மீ. உயரத்திலிருந்து ஒரு செயற்கைக் கோள் பல புதிய தகவல்களைத் தருகின்றது எனில், விந்தையிலும் விந்தையன்றோ! இத்துணைப் பெரும்

வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது? உலகம் மாயை என்றும், நம் புலன்கள் குறையுடையனவென்றும் வாளாவிருந்திருந்தால் இத்தகைய பெரும் முன்னேற்றத்தை அடைந்திருக்க முடியுமா?.

மேலும், சிங்காரவேலர், "உலகம் மாயை, புலன்கள் மாயை, குறையுடையன" எனும் கருத்தை ஆராய்வதோடு நின்றுவிடாமல், உலகத்தை மாயை என்று கருதுவதால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புகளையும் சுட்டிக் காட்டுகிறார். அதனையும் சுருக்கமாகப் பார்ப்பது நமது கடமையாகும்.

"பார்த்ததைப் பொய்யென்று வழங்கும் வேதாந்த மருளினால் (Idealist Illusions) உலகில் விளைந்த தீமைக்கு கணக்கே இல்லை. உலகில் பிறந்து வளர்ந்து வாழவேண்டிய மக்களுக்கு இவ்வுலகமே பொய் யென்ற மனப்பாதகத் தத்துவத்தைப் போதித்து வந்தபடியால், இவ்வுல சுகவாழ்விற்கு வேண்டியவற்றை தேடாமலும், அதற்கு வழிவகைகளை கண் பிடிக்காமலும், கற்பனை லோகங்களை நோக்கி வாழ்நாள் முழுமையும் வருந்தலாயிற்று. மக்கள் கண்ணோட்டம் மேலுலகின் மேல் வைக்க வைக்க இவ்வுலக வாழ்வுக்கு வேண்டிய தேவைகளின் மேல் ஆசையில்லாமல் போயிற்று. இம்மாபெரும் மருளால், இவ்வுலகில் உயிரை இனிது வளர்க்க செய்யும் விஞ்ஞானத்தை கைவிடவும் பழிக்கவும் நேரிட்டது. நமது நாடு விஞ்ஞான ஆராய்ச்சியை கைவிட்டதின் முக்கியக் காரணம் என்னவெனில் கற்பனை உலகத்தின் மேல் மக்கள் வைத்துள்ள நோக்கமேயாகும். **நாம் வாழவேண்டிய உலகமே பொன்யென்றால் அந்தப் பொய் உலகை ஏன் விசாரித்தறிய வேண்டும்?.** இந்த மருளை ஆதாரமாகக்கொண்ட மதங்களால், எத்தனைக் கோயில்கள், குருக்கள், மௌலாளர்கள், பிஷப்புகள் உயிர் வளர்க்கின்றனர்".

(தத்துவமும் வாழ்க்கையும் பக். 22 சிங்காரவேலர்)

அவர் கூறுவது எத்துணை உண்மை! நமது இலக்கியங்களிலும் திருக்குறள், சங்க இலக்கியம் ஆகியவற்றைத் தவிர, பதினென்கீழ்க்கணக்கு, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி போன்ற நூல்களும், பிற் காலத்திய சமய இலக்கியங்களும், இடையறாது தொடர்ந்து, "உலகம் நிலையாமை," "யாக்கை நிலையாமை," "நரகம்," "சொர்க்கம்" ஆகிய வற்றைத்தானே பெரிதும் உணர்த்தி வந்திருக்கிறது. இதன் காரண மாகத்தானே நமது நாடு விஞ்ஞானத்தில் மிகவும் பின் தங்கியுள்ளது. நமது நாட்டு மக்களும், இன்னும் சாதி-மத பேதங்களிலும், மூடநம்பிக்கைகளிலும் மூழ்கியுள்ளதற்குக் காரணம் இதுதானே. சடங்குகளுக்கும், சம்பிரதாயங் களுக்கும் கட்டுப்பட்டவர்களாகத்தானே நம்மக்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் இருந்தும், நோயாளி களும், பெண்களும் வேப்ப மரத்தைத்தானே சுற்றி வருகின்றனர். கொடும் நோய்க்கு இரையாகி, விஞ்ஞான வளர்ச்சியினால் உயிர் பெற்று வந்தவர் களும், உடல் நலம் தேறியதற்கு மூகாம்பிகை அருள் என்றுதானே கூறு கிறார்கள், ஆண்டி "முதல்" அமைச்சர் வரை பெரும்பாலானவர்கள் இப்படித்தானே இருக்கிறார்கள்! இதற்கெல்லாம் காரணம் உலகம் மாயை,

கடவுள் நம்பிக்கை, சொர்க்கம் போன்ற கருத்துக்கள் தானே. இந்தக் கருத்துக்களினால் தானே நம் நாட்டு மக்கள் சற்றும் விஞ்ஞானத்தின் மீது பிடிப்பு இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். வாழ்க்கை வேறு விஞ்ஞானம் வேறு என்ற கருத்தை மக்களிடையே நிலை நிறுத்தியது இந்த ஐதிக கருத்துக்களே ஆகும் எனில் மறுப்பார் உண்டோ?.

மேற்கூறியவற்றுள், ஆயிரத்தொள்ளாயிரத்து இருபதுகளிலேயே சிங்காரவேலர், அத்துவைத கருத்துக்களை தருக்க ரீதியாக மறுத்திருக்கிறார் எனில் மிகவும் போற்றத்தக்கதன்றோ!

"ஓயாத படிப்பு, உள்ளத்திலே வேதனை தரும் கால பிரச்சனைகளும், அவர் காரண காரியம் தேடுவதிலேயே மிகக் கவலை எடுத்துக் கொண்டார். நுனிப்புல் மேய்வது அவருக்குப் பிடிக்காது"
(சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் திராவிடநாடு பக். 6. பேரறிஞர் அண்ணா) என்று அண்ணா அவர்கள் சிங்காரவேலரைப் பற்றிக் கூறுவது மிக பொருத்தமுடைத்து. பொதுவுடைமையாளருக்கு வெறும் எழுத்துத் தொண்டும் மட்டும் போதுமானதன்று. மக்கள் இயக்கங்களில் பெரிதும் ஈடுபாடு வேண்டும். தோழர் சிங்காரவேலர் நாட்டு விடுதலைக்காகப் பெரிதும் உழைத்தவர். பின்பு நாட்டு விடுதலை டாட்டா-பிர்லாக்களுக்குத் தான் பயன்படுமேயன்றி, ஏழை எளியவர்கள் என்ற நிலையை மாற்ற உதவாது என்று எண்ணி, கால முழுதும் பொதுவுடைமை இயக்க வளர்ச்சிக்கும், தொழிலாளர் இயக்க வளர்ச்சிக்கும் தோன்றாத் துணையாக இருந்து உழைத்து வந்தார். இவற்றிடையே, இடையுறாமல் மார்க்சிய தத்துவத்தை விளக்கியும், ஏனைய தத்துவங்களை விமர்சித்தும் வாழ் நாள் இறுதிவரைத் தொண்டாற்றினார் என்றால், அவர் ஒரு சிறந்த பொதுவுடைமையாளர் எனில் வியப்பேது!

# சிவாகமங்களும் திராவிட நாகரிகமும்

டாக்டர் குல சபாரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி.
(இணைப் பேராசிரியர், சைவசித்தாந்தத் துறை)
சென்னைப் பல்கலைக்கழகம்.

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் எல்லா உயிர்க்கூட்டங்களும் உய்திபெறும் வண்ணம் தகுதியும் பக்குவமும் வாய்ந்தார்க்கு வெளிப்படுத்தி அருளிய மறைமொழிகளே வேதங்களும் சிவாகமங்களும். வேதங்கள் இறைவனின் மூச்சு என்றும் ஆகமங்கள் இறைவனின் பேச்சு என்றும் குறிக்கப்படுகின்றன.[1] வேதங்களைப் பற்றிய ஆராய்ச்சி விரிவடைந்திருப்பது போன்று சிவாகமங்களைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் உரியமுறையில் விரிவுபெறவில்லை. நூற்பாவுக்கும் அதன் பேருரைக்கும் உள்ள தொடர்பு போன்றது வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் உள்ள தொடர்பு. வேதம்—சிவாகமம் இவற்றினிடை அங்க—அங்கி பாவம் உண்டு எனக் கூறுவார் அம்பலவ நாவல ஞானசம்பந்த பராசக்தி அவர்கள். பேருரையின் துணையைக்கொண்டே நூற்பாவுக்குரிய உட்கருத்தை விளங்கிக் கொள்ள முடியும். அதுபோன்றே சிவாகமங்களில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களின் அடிப்படையில்தான் வேதங்களின் உட்பொருளை உணர்ந்துகொள்ள வேண்டும். சிவாகமங்களைப் புறக்கணித்து விட்டு வேதங்களை மட்டுமே அறிஞர்கள் (மேலைநாட்டினர், நம் நாட்டினர் உட்பட) பயின்றும் ஆய்ந்தும் கூறியுள்ள முடிபுகளுள் பல உண்மைக்குப் புறம்பானவையாகத் தோன்றுகின்றன. வேதங்களை ஆய்ந்துணர்ந்த செருமானிய அறிஞர் மேக்ஸ்மூலர் தென்னாட்டுக் கலைச்செல்வங்களான சிவாகமங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தார். இந்திய வரலாற்றின் உண்மை நிலையையும் இந்திய மெய்ப்பொருளியலின் உண்மை நிலையையும் அறிந்துகொள்ளச் சிவாகமங்களும், தமிழ்மொழிச் சித்தாந்த சாத்திரங்களும் பெருந்துணை செய்யும் என அவர் நம்பினார்[2]. ஆனால் அவரது அறிவுரையை யாரும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. சிவாகமங்களின் அடிப்படையில் வேதங்களை நோக்கும்போது நமக்குத் தெரியவருகின்ற நம் பண்டை நாகரிகமான திராவிட நாகரிகத்தின் சிறப்புக்களுள் சிலவற்றை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

எந்த ஒரு நூலையும் அந்நூல் எழுந்த காலத்தின் பின்னணியில் ஆய்வதே பொருத்தமுடையது. காலப் பின்னணியைக் கொள்ளாத ஆய்வு முழுமை பெறாது. எனவே வேதங்களும் சிவாகமங்களும் தோன்றிய காலத்தைக் குறித்து நாம் உணரவேண்டும்.

---

* 17—1—86 முதல் 15—2—86 வரை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் விருந்து முதுஆய்வுரைஞராய்ப் பணியாற்றி நிகழ்த்திய ஆய்வுரைகளின் சுருக்கம்.

வேதவழிப்பட்ட பொது வேள்விகளைப் பற்றிக் கூறும் சுரௌத சூத்திரங்களும் வீடுகளிற் செய்யப்பெறும் சடங்குகளைப் பற்றிக் கூறும் கிருகிய சூத்திரங்களும் அறநெறிகளைக் கூறுவனவாக உள்ள தரும சூத்திரங்களும் கல்ப சூத்திரங்கள் எனும் பொதுப்பெயரால் வழங்கப்படு கின்றன. இத்தகைக் கல்ப சூத்திரங்கள் வடமொழியில் நூற்றுக்கணக்கில் உள்ளன. இவற்றுள் ஆசுவலாயன சுரௌதம், லாட்யாயன சுரௌதம், பௌதாயன சுரௌதம், ஆசுவலாயன கிருகியம், பௌதாயன கிருகியம், கௌதம தரும சூத்திரம் முதலானவை ஏனைய கல்ப சூத்திரங்களைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டவை.

பாணினியின் காலம் கி.மு. எட்டாம் நூற்றுண்டு.[3] பாணிக்கும் முற்பட்ட காலத்தைச் சார்ந்தவர்களே மேற்குறிப்பிடப்பெற்ற ஆசுவலா யனர், போதாயனர், கௌதமர் முதலானோர். ஆபஸ்தம்பர் எனபவரும் பாணினிக்கு முற்பட்டவரே. டாக்டர் பியூலர் என்பார் மேற்கூறப்பட்ட கல்ப சூத்திரங்களை ஆய்ந்து ஆபஸ்தம்பரும் போதாயனரும் தென்னாட்டைச் சார்ந்தவர்களே என நிறுவுகின்றார். சரணவியூகம் என்னும் நூலின் உரையாசிரியரால் மேற்கோள் காட்டப்பெறும் மகாரணவம் என்னும் நூல் ஆபஸ்தம்பர், ஆசுவலாயனர், போதாயனர் மூவரும் தென்னகத்தைச் சார்ந்தவர்கள் என்றே குறிப்பிடுகின்றது. இவர்களின் சூத்திர நூல்களில், "இவ்வாறு ஆகமம் அறிந்தோர் கூறுவர்" என்றும் "இவ்வாறு ஆகமங்கள் கூறும்" என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. சதுரம் வட்டம் முதலான வற்றை வரைவதற்குப் பௌதாயனர் கூறும் முறை, சிவாகம அடிப் படையில் அமைந்ததே.

பௌதாயனர் முதலானோரின் காலத்துக்கும் முற்பட்டவை பிராம் மணங்களும் ஆரண்யகர்களும் டாக்டர் ஹக என்பார் தாம் எழுதிய 'பிராம் மணங்களின் காலம்' என்னும் நூலில் அவற்றின் காலம் கி.மு 1400-1200 என உறுதிப்படுத்துகிறார். அவரது கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதே. பிராம்மணங்களிலும ஆரணியகங்களிலும் கூடச் சிவாகமங்களின் கருத்துக்கள் பல இடம் பெற்றிருப்பதைத் தெளிவாகக் காணலாம். யாக அமைப்பு, பிரபஞ்ச அமைப்பு, நிலத்தேர்வு முதலானவை குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பிராம்மண – ஆரணிய கங்களுக்கும் முற்பட்டவை வேதங்கள். வேதங்களின் காலம் கி.மு. 2400–2000 என்பதில் பெரும்பாலான அறிஞர்கள் உடன்படுகின்றனர்.[4] ஏறக் குறைய இதே கால எல்லைக்கு உரியனவே சிவாகமங்கள். சிவாகமங்களின் காலத்தை உறுதி செய்யும் போது மொழியின் இயல்பைக் கருத்தில் கொள்ளக்கூடாது. பயின்று உணர்வதற்கு அரியது வேத — வடமொழி, பயின்று உணர்வதற்கு எளியது சிவாகம — வடமொழி. இவ்வெளிமை கருதிச் சிவாகமங்களை மிகவும் பிற்பட்ட காலத்திற்குக் கொண்டு வருவோர் பலர்[5]. மொழி இயல்பை அடிப்படையாகக் கொள்ளாமல், கூறப்படும் கருத்துக்களையும் மரபையுமே (tradition) அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்தால் வேதங்களும் ஆகமங்களும் ஒரே காலத்தைச் சார்ந் தவையே என்பதை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.[6]

## சிவாகம அடிப்படையில் திராவிட நாகரிகம் :

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள நாட்டில்தான் சைவம் தோன்றியது எனக் கூறுகிறது காரணாகமம் (I : 30 : 28 :) சைவம் தென்னாட்டில் தோன்றியது எனில் சைவத்திற்கு அடிப்படையான சிவாகமங்களும் இறைவனின் திருவாக்குகளே என்பதில் ஐயமில்லை.[7] அங்ஙனமாயின் வேதங்களையும் சிவாகமங்களையும் வெளிப்படுத்தி அருளிய இடம் தென்னாடே ஆகும். சிவாகமங்களைத் தென்னாட்டில் வெளிப்படுத்தி வேதங்களை வடநாட்டில் வெளிப்படுத்தினான் எனக் கருதவும் இயலாது. எனவே வேதங்களும் சிவாகமங்களும் தென்னாட்டுச் செல்வங்களே. வேத நெறி ஆகமநெறி என்ற இரண்டின் வழியேயும் தங்கள் நாகரிகத்தை வளர்த்துக்கொண்ட திராவிடர்கள் கி. மு. 1000-2500 கால எல்லையில் இந்தியாவின் முழுப்பரப்பிலும் வாழ்ந்திருந்தனர், செழித்திருந்தனர் எனக் கூறலாம்.[8]

வேத ஆராய்ச்சியை மேற்கொண்ட பிறநாட்டு அறிஞர்களும் நம் நாட்டு அறிஞர்கள் சிலரும் வேதங்கள் ஆரியர்களின் படைப்புகள் எனக் குறிப்பிட்டுள்ளனர்.[9] இறைவனின் நூல்களாகக் கருதப்படும் வேதங்களை இவர்கள் இவ்வாறு கூறிவிட்டார்களே எண்ணி வருந்த நேர்ந்தாலும் இப்பொழுது கிடைக்கும் வேதப்பகுதிகள் சில உண்மையில் ஆரியர்களின் படைப்புகளாகவே தோன்றுகின்ற காரணத்தால் அவர்களின் கூற்றிலும் ஓரளவு நியாயமுண்டு என அமைதி பெறலாம். ஆம்! சிந்து சமவெளியிலும் வடஇந்தியப் பகுதிகளிலும் ஆரியர்களும் திராவிடர்களும்போராடியும் கலந்தும் வாழ்ந்திருந்த காலத்தில் இறைவனின் வாக்காம் வேதத்திலும் இடைச்செருகல்களும் மாற்றங்களும் ஆரிய முனிவர்களால் செய்யப்பட்டு விட்டன. இக்கூற்று, பலர்க்கு அதிர்ச்சியைத் தரலாம். ஆயினும் உண்மை அதுதான். 'இன்ன இன்ன செய்கையின்போது இன்ன இன்ன வேத மந்திரத்தைக் கூறுக, என சிவாமங்களில் குறிக்கபட்டருக்கும் வேத மந்திரங்களையும் மற்றும் தோத்திரங்களாகவும் தெய்வ ஆற்றல்—இயற்கை ஆற்றல் பற்றிய வருணனைகளாகவும் வரும் பகுதிகளையும் தவிர்த்து வேதத்துள் காணப்படும் ஏனைய பகுதிகள் ஆரிய முனிவர்களின் படைப்புகளே. இவ்வாறு கூறுவதற்கு அடிப்படைக் காரணம் உண்டு.

இறைவாக்காக உள்ள சிவாகமங்களில் வரலாற்றுக் குறிப்புகளையோ, அரசர்களின் பெயர்களையோ, யாகம் நடத்திய குருமார்களின் பெயர்களையோ காண முடியாது. மதங்கர், குரு முதலான முனிவர்களின் பெயர்கள் அவர்கள் உபதேசம் பெற்ற காரணத்தால் ஆகமங்களில் இடம் பெறுகின்றன. அகத்தியர், கௌதமர், காசியபர் முதலான பெயர்களெல்லாம் சைவ கோத்திரத்தைத் தோற்றுவித்தவர்கள் என்ற அளவில் ஆகமங்களில் இடம் பெறுகின்றன. இவற்றைத் தவிர்த்து 'இன்னார் இன்ன நிகழ்ச்சியை நடத்தினார்' என்பது போன்ற வரலாற்றுக் குறிப்புக் கிடையாது. ஆனால் வேதங்களில் வரலாற்றுக் குறிப்புகளையும் தனிப்பட்ட முறையில் அரசர்கள்-இளவரசர்களின் பெயர்களையும் யாகத்தை இன்னார், இன்னார் முன்னிலையில் நடத்தினர் என்பது போன்ற குறிப்புகளையும் பெருமளவில் காண்கிறோம். இடைச்செருகலுக்கும் மாற்றத்திற்கும் இடம் கொடுக்காமல்

இறைவாக்காகவே இயல்பு குறையாது இருந்திருக்குமாயின் வேதங்களில் இத்தகைய குறிப்புகளைக் காண இடனுமோ?. அங்கவிரோசனன் அஜாத சத்துரு, அதிதிகவன் முதலான அரசர்களைப் பற்றிய குறிப்புகளும், அச் சுதர், அசாவாகர், அணிசின்மௌனர் முதலான யாக குருமார்களைப் பற்றிய குறிப்புகளும் மற்றும் பல போர் நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்பு களும் வேதத்தில் ஏன் இடம் பெற வேண்டும்? மெய்ப்பொருள் உணர்த்தும் ஞானசிரியனாகவே இறைவனை நமது சாத்திரங்கள் காட்டுகின்றன. நாட்டு நடப்பு கூறும் வரலாற்று ஆசிரியனாக அல்ல. ஆரியர் வருகைக்குப் பின்னர் வேதம் மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனபது மறுக்க இயலா உண்மையாகும்.

ஆரியர்கள் சிந்துவெளிக்கு வரத்தொடங்கிய காலம் கி.மு. 2500-2000 ஆக இருக்கலாம் எனப் பெருபாலன அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். ஆரியர்கள் சிந்துவெளிப் பகுதிக்கு வருவதற்கு முன்னர் அப்பகுதியில் வேதநெறி சிவாகமநெறி இரண்டையும் கடைப்பிடித்து வந்த திராவிட மக்களே வாழ்ந்திருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம்.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தின் பல்வேறு சிறப்புகளையும் அறிஞர் ஜான்மார்ஷல் தமது 'மொகஞ்சோதாரோவும் சிந்துவெளி நாகரிகமும' (இலண்டன், 1930) என்ற நூலில் மிகத் தெளி வாக விளக்கியுள்ளார். வரலாற்றுக காலததுககு முறபட்ட இநதியா என்னும் நூலில் பி. மிசிரா அவர்கள் திராவிட நாகரிகம் மேன்மையை இனிது விளக்கியுள்ளார். ஆரியர் வருகைக்கு முற்பட்ட திராவிட நாகரிகம் இந்தியா முழுமையும் பரவி இருந்தது என்பது உறுதி செய்யப்படுகிறது.[10]

சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என நிறுவுவதில் அறிஞர்கள் பலரும் இடர்ப்பாடு காண்கின்றனர். அவர்கள் திராவிட நாட்டுக் கலைச் செல்வங்களான சிவாகமங்களையும் சிற்ப நூல்களையும் ஆய்ந்து பார்ப்பரேல் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என ஐயத்திற்கு இடமின்றிக் கூறத் தயங்க மாட்டார்கள். அறிஞர் எச் ஆா ஹால் என்பவர் தமது Ancient History of Near East என்ற நூலில் சுமேரியர்களின் நாகரிகம் சிந்துவெளி நாகரிகத்தின் வழிப்பட்டதே என்றும் சிந்துவெளித் திராவிடர்களே சுமேரியக்குக் கட்டிடக்கலையையும் எழுத்துக்கலையையும் கற்றுத் தந்தனர் என்றும் கூறுகின்றார். ஒத்த வடிவுடைய முத்திரைகள் மெசபட்டோமியாவிலும் சிந்துவெளியிலும் காணப்படுகின்றன என்றும் இவை சுமேரியர்களின் காலத்துக்கும் முற்பட்டவை என்றும் சிந்துவெளி நாகரிகத்தின் முதிர்ச்சி நிலையில் மெசபட்டோமிய நாகரிகம் தொடக்க முற்றது என்றும் சைல்டு என்பார் கூறுகின்றார்.[11] இவ்வாறு சிந்து வெளியின் திராவிட நாகரிகம் மேற்புலங்களில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது ஆரியர் வருகைக்கு முன்னரேயாம்.

ஆரியர்கள் படையெடுத்து வந்த போது சிந்துவெளியில் வாழ்ந்திருந்த திராவிடர்கள் கோட்டை, நகர அமைப்புக்களுடனும் பெரும் செல்வச் செழிப்புடனும் வாழ்ந்திருந்தனர்.[12] சிந்துவெளி நகரங்களே இருக்கு

வேதத்தில் குறிக்கப்பெறும் நகரங்களாகும். அவை கி. மு. 15-ஆம் நூற்றாண்டில் ஆரியப்படையெடுப்பால் அழிக்கப்பட்டன என்று மார்டிமர் வீலர் என்னும் அறிஞர் கூறுகின்றார். அப்பொழுது ஏற்பட்ட போரின் விளைவால் திராவிடர்கள் சிந்துவெளியினின்றும் நீங்கிக் கீழ்த்திசை நிலங்களில் நகரமும் கோட்டையும் அமைத்து வாழத் தொடங்கினர்.

ஆரியர் வருகைக்குப் பின்னர் வேதத்தில் மாற்றங்கள் நேர்ந்துவிட்ட காரணத்தால் இப்பொழுது கிடைக்கும் வேதபாகங்களில் திராவிடம் என்ற சொல்லாட்சியைக் காண முடியவில்லை. அவ்வாறே குமரிக் கண்டத்தைப் பற்றிய குறிப்பும் வேதத்தில் காண இயலவில்லை. திராவிடத்தைப் பறறிய குறிப்புகளும் குமரிக் கண்டத்தைப் பற்றிய குறிப்புகளும் சிவாகமங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மிருகேந்திர ஆகமத்தில் (13:93-97) பாரதபூமி குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது: "பாரத வர்ஷத்தில் ஒரு குணமுண்டு. அதாவது இவ்விடத்தில் முயற்சி செய்பவன் பயன் அனைத்தும் பெறுவான். இது தான் கன்மபூமி. இதன்கண் ஒன்பது கண்டங்கள் (தீவுகள்) உள்ளன. அவை இந்திரம், கசேரு, தாமிரவருணம், கபத்திமான், நாகம், சாந்திரம் (சௌமியம்), காந்தருவம், வாருணம், குமரிகை, என்பன." குமரிகை என்பது குமரிக்கண்டததைக் குறிக்கும். கிரணம், சுப்பிரபேதம் முதலான ஆகமங்களிலும் இக்கருத்து இடம் பெற்றுள்ளது. நால்வகை வருணப்பாகுபாட்டுடனும் நால்வகை ஆசிரம நிலைகளுடனும், கங்கை முதலான புண்ணிய ஆறுகளுடனும் காசி முதலான புண்ணியத் தலங்களுடனும் விளங்குவது குமரிக்கண்டம் என ஆகமங்கள் கூறுகின்றன. குமரிக்கண்டம் தவிர்த்த ஏனைய இடங்களெல்லாம் மிலேச்சர்கள் வாழும் இடங்கள் என்றும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. சிவாகமங்களை முழுதுணர்ந்த சிவஞான முனிவர் தமது மாபாடியத்திலும் பின்வருமாறு கூறுகின்றார்: "இவ்வொன்பதினுள்ளும் குமரிக்கண்டமொன்றே வேதாகம வழக்கும் சாதிவரம்பும் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களுப் காசி முதலிய புண்ணியத் தலங்களும் உடைத்தாய்ச் சிறந்தது. ஏனை எட்டுக் கண்டமும் மிலேச்சர் வாழிடங்களாம்"[13].

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்கும் போது வேத—ஆகம நெறி தழைத்திருந்த முற்காலத்தில் நாவலந்தீவு முழுவதுமே குமரிக் கண்டம் என்ற பெயரால் குறிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும் எனக் கருத இடமேற்படுகிறது.[14] இந்தக் குமரித்தீவு அல்லது நாவலந்தீவு முழுவதிலும் வாழ்ந்திருந்த திராவிடர்களைப் பற்றிய குறிப்பு வேதத்தில் காணப்படவில்லை எனினும் வேதவழிப்பட்ட பிராமணங்களிலும் ஆரணியகங்களிலும் காணப்படுகின்றது. மனுதரும நூலிலும் (X : 43, 44) இவர்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சிவாகமங்களில் ஆரியர்களைப் பற்றிய, குறிப்போ ஆரியதிராவிடப் பூசலைப் பற்றிய குறிப்போ இடம்பெறாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.

ஆரியர்க்கும் திராவிடர்க்கும் இடையே சிந்து சமவெளியில் ஏற்பட்ட போரில் திராவிடர்களின் நகரங்களும் கோட்டைகளும் அழிக்கப்பட்ட என முன்னர்க் கூறப்பட்டது. போருக்குப் பிறகு ஆரியர்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட திராவிடக் குடிகள் சில அங்கேயே தங்கியிருக்க, எஞ்சிய குடிமக்கள் கீழை மாநிலங்களை நோக்கிச் சென்று புதிய வாழ்க்கை தொடங்கியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் வாழத்தொடங்கிய இடங்களே குருபாஞ்சாலம் என்றும் கோசலவிதேகம் என்றும் வேதங்களில் குறிக்கப்படுகின்றன.[15] விதேக மாதவன் என்பான் கோசலவிதேகம் என்னும் ஊரைத் தாண்டி சதாநீரம் எனப்படும் ஆற்றின் கீழ்க்கரையில் வாழமுற்பட்டதாகவும் அதுகாறும் பயிரிடப்படாமலும் நாகரிக நிலைக்கு உட்படாமலும் இருந்த அப்பகுதி அப்பொழுது வேளாண்மையால் செழிப்புற்றும் நாகரிகத்தால் பொலிவுற்றும் விளங்கியதாகவும் சதபதப் பிராம்மணம் குறிப்பிடுகின்றது. (I:4:1:4-17). உபநிடத காலங்களிலும் கோசலவிதேகம், குருபாஞ்சாலம் முதலானவை புகழ்பெற்று விளங்கின என அறிய முடிகின்றது. இவ்வூர்களில் வாழ்ந்து கலைகளை வளர்த்த திராவிடர்களே பாஞ்சஜனம் என்றும் பாஞ்சமானுஷம் என்றும் பஞ்சக்ஷிதய என்றும் இருக்கு வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளனர்.[16]

பாஞ்சஜனம் முதலான மூன்று சொற்களுக்கும் பொருள் கொள்வதில் அறிஞர்கள் இடர்ப்பாடு காண்கின்றனர். இச்சொற்கள் தேவர்கள், பித்ருக்கள், அசுரர்கள், காந்தர்வர், நிஷாதர் (இராற்சசர்) எனப்படும் ஐவகையினரையே குறிக்கும் எனச் சாயனரும் ஔபமன்யரும் கருதுகின்றனர்.[17] இவர்கள் கூறும் பொருள் பொருந்தாது என மெக்டொனல் அவர்களும் கெய்த் அவர்களும் கூறுகின்றனர்.[18] வேதமரபில் ஊறித் திளைத்த சாயனர் கூறும் உரைகளைப் பல இடங்களிலும் இவ்வாறே இவ்விருவரும் மறுக்கின்றனர். வேத ஆராய்ச்சி என்ற பெயரில் இந்திய நாகரிகத்தையும் மெய்ப்பொருள் உணர்வையும் இழிவுபடுத்திக் காட்ட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்திருக்கின்றது. எனவே கண்மூடித்தனமாக அவர்கள் நற்கருத்துக்களையெல்லாம் மறுத்து விடுகின்றனர். ஜிம்மர் என்பவரோ, பாஞ்சஜனம் முதலான சொற்கள் ஆரியரை மட்டுமே குறிக்கும் என்றும் ஆரியரல்லாதாரை இச்சொற்களால் குறிப்பிடக் கூடாது என்றும் கூறுகின்றார். ஏன் அவ்வாறு கொள்ள வேண்டும் என்பதற்குரிய காரணத்தை அவர் கூறவில்லை.

சிவாகம அடிப்படையில் நோக்கும் போது பாஞ்சஜனம் முதலான சொற்கள் திராவிடர்களை மட்டுமே குறிக்கும் என்பது புலனாகும்.

சிவாகமங்களில் தலப்பிரதான வாஸ்து, ஜலப்பிரதான வாஸ்து, ரூபப்பிரதான வாஸ்து என்ற பிரிவுகளில் பலவகை நிலப்பாகுபாடுகள் கூறப்படுகின்றன. சிவாகமங்களில் கூறப்படும் நிலப்பாகுபாட்டிற்கும் சங்கத் தமிழ் நூல்களில் கூறப்பட்டிருக்கும் ஐவகை நிலப்பாகுபாட்டிற்கும் தொடர்பு உண்டு. இதனைக் கருத்திற் கொண்டு நோக்கினால் பாஞ்சஜனம், பாஞ்சமானுஷம் என்பதற்கு ஐவகை நிலங்களில் வாழ்வோர் என்றும்

பஞ்சக்ஷிதய என்பதற்கு ஐவகை நிலங்களை உடையவர்கள் என்றும் பொருள் கொள்வது பொருத்தமே எனத் தோன்றும். மேலும் இவர்கள் 'அவ்ரத' என்றும் 'அக்ரது' என்றும் 'ம்ருத்ரவாச' என்றும் வேதங்களில் கூறப்பட்டுள்ளனர்.[19] உயிர்க்கொலைக்கு இடமளிக்கும் வேள்விகளை எதிர்த்த காரணத்தாலும் தவிர்த்த காரணத்தாலும் இவர்கள் இவ்வாறு வருணிக்கப்படுகின்றனர். பாஞ்சஜனம் என்பது ஆரியரைக் குறிக்குமாயின் 'அவ்ரத' என்பதும் 'அக்ரது' என்பதும் அவர்களுக்கு எவ்வாறு பொருந்தும்? ஜிமமர், கெய்த் முதலானோர் இதனை நன்கு சிந்தித்திருக்க வேண்டும். ம்ருத்ரவாச என்பது இனிமையாகப் பேசுவர்கள் எனப் பொருள்படும். திராவிட மொழி இயல்பை நோக்கி அவர்கள் இவ்வாறு குறிக்கப்பட்டனர். ஆனால் கெய்த் என்பவரே 'கொடுமையாகப் பேசுபவர்கள்' எனப் பொருள் காண்கிறார். அவர் இவ்வாறு பொருள் கொள்வதுதான் கொடுமையாக உள்ளது.

ஆரியர்களும் திராவிடர்களும் கலந்து வாழத் தொடங்கிய அக்காலத்தில் ஆரியமொழி திராவிடமொழி இரண்டுமே வழங்கப்பட்டு வந்தன.[20] இத்தகைய இருமொழி மரபு (Bilingual tradition) இந்திய வடபகுதியில் கி பி. 300 வரை தொடர்ந்து இருந்திருக்கின்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவனான வசிட்டபுத்ர சதகர்ணி என்ற அரசனால் வெளியிடப்பட்ட நாணயங்களில் பிராக்ருதமும் தமிழும் மட்டும் காணப்படுவது இங்குக் கருதத்தக்கது.[21]

## சிவாகம அடிப்படையில் திராவிடர்களின் கிராம நகர அமைப்பு:

சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே எனில் அங்குக் காணப்படும் நகர அமைப்புக்களும் கட்டிட அமைப்புக்களும் திராவிடர்களின் முதிர்ந்த கலைத்திறத்தை வெளிப்படுத்துவனவாகத் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

சிவாகமங்களின் பூருவபக்கமாகக் (முதல்நிலை நூல்களாக) கருதப்படும் வேதங்களிலும் அவ்வேதங்களைச் சார்ந்த பிராம்மணம் கல்பசூத்திரம் முதலானவற்றிலும் கிராமத்தைக் குறித்தும் நகரங்களைக் குறித்தும் கூறப் கருத்துக்களை நோக்குவோம். ஒருகுறிபிட்ட எல்லையைக் குறிக்கும் சொல்லே கிராமம் என்பது எடுத்துக் காட்டாகக் குணக்ராமம் என்பதும் மூன்று என்ற எல்லையைக் குறிக்கும்; பூதக்ராமம் என்பது ஐந்து என்ற எல்லையைக் குறிக்கும். (குணம்—முக்குணம் — மூன்று; பூதம்—ஐம்பெரும் பூதம்— ஐந்து). ஒவ்வொரு குறிப்பிட்ட எல்லைக்குள் முறைமைப்படி அமைக்கப்படும் சிற்றூர், பேரூர் முதலானவைகளும் கிராமம் எனும் பெயரால் வழங்கப்பட்டன.

சிற்றூர்களைக் குறிக்கும் கிராமம் என்ற சொல் வேத வழக்கில் உள்ளதே. (இருக்கு: I. 44, 10; II. 12.7; அதர்வம் IV 56 7, 8; சதபதம் XIII. 2. 4. 2) பெரிய அளவில் அமைந்த ஊர் மஹாக்ராமம் என வழங்கப்

பட்டது. (சைமினீய உபநிடத பிராம்மணம்: III. 13. 4). கிராமத் தலைவன் என்ற பெருளில் கிராமணீ (இருக்கு X. 62. 11) எனும் சொல் வருகிறது. தெய்வகாலமும் தேசகாலமும் விழைவோர் கிராம வாழ்க்கையையே மேற்கொள்ள வேண்டும். என்றும் புலனடக்கித் தவம் செய்வோரே ஆயினும் அவர்கள் நகரங்களில் வாழ்வரேல் அவர்களால் வீடுபேறு பெற முடியாது என்றும் பௌதாயனர் கூறுகின்றார்.[22]

வேதங்களிலும் வேதச்சார்பான நூல்களிலும் கிராம வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றனவே தவிரக் கிராமத்தை எவ்வாறு திட்டமிட்டு அமைப்பது என்றோ எத்தகைய நிலப்பகுதி மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றது என்றோ அந்நூல்களில் கூறப்படவில்லை. கிராமங்களின் வகை களைக் குறித்தும் கிராம, நகர அமைப்புக்கு ஏற்ற நிலப்பாகுபாடுகளைக் குறித்தும் விளக்கமாகக் கூறுபவை சிவாகமங்களும் மானாசாரம், மயமதம் முதலான சிற்பநூல்களுமேயாம்.

காமிக ஆகமத்தில் பன்னிரண்டு வகைப்பட்ட கிராமங்கள் கூறப்படு கின்றன. அவை—மங்களம் அல்லது அக்கிரகாரம், கிராமம், குடிகம், (ஏகபோகம்), நகரம், கர்வடம், பட்டினம் கண்டகை, கேடம், சிபிரம், சேனைத்தானம் சேனாமுகம், மடம், என்பன.[23] சுப்பிரபேதம் என்னும் சிவாகமத்தில் கிராமம், நகரம், பட்டினம் கர்வடம், புரம், கேடகம், குடிகம், சிபிரம், ராசதானி, சேனாமுகம் எனப்படும் பத்து வகைப்பட்ட கிராம அமைப்புகள் கூறப்படுகின்றன.[24]

அந்தணர்களும் சான்றோர்களும் வாழக்கூடிய இடம் **மங்களம்** அல்லது **அக்கிரகாரம்** எனப்படும்; நால்வகைச் சாதியினரும் சேர்ந்து வாழும் இடம் **குடிகம்**, அல்லது **ஏகபோகம்**; திரவியங்களைக்கொண்டும் மற்றும் பலபணிகள் மேற்கொண்டும் வாழ்கின்ற மக்கள் நிறைந்துள்ளதும், பல சாதியினரும் வாழ்வதும், பலவேறு வகைப்பட்ட தொழில்கள் செய் வோர் நெருங்கி வாழ்வதும். அந்த அந்தத் திசைக்குரிய தெய்வத் தானங்களோடு விளங்குவதும **நகரம்** எனப்படும்; மேற்கூறப்பட்ட தன்மைகள் உடையதாகவும் கடற்கரையை ஒட்டி உள்ளதாகவும் விளங் குவது **பட்டினம்** எனப்படும்; நகரத்துக்குரிய இலக்கணங்களும் பட்டினத் துக்குரிய இலக்கணங்களும் ஒருங்கே பெற்றுத் திகழ்வது **கர்வடம்** எனப் படும்; நெய்தல் தொழில் செய்வோரும் வணிகரும் பெரும்பான்மையின ராகவும் ஏனைய சாதியினர் சிறுபான்மையினராகவும் விளங்குவது **புரம்**. நான்காம் வருணத்தவர் மட்டும் முக்கியமாகம் நிறைந்து வாழும் ஊர் வனத்தைச் சார்ந்ததாக இருந்தால் **கண்டகை** என்றும் நகரத்தைச் சார்ந்ததாக இருந்தால் **கேடகம்** என்றும் கூறப்படும்; செல்வச்செழிப்பு மிக்க சிற்றரசர்களும் சேனைகளும் சேர்ந்து வாழும் இடம் **சிரபிம்** யானைப்படை குதிரைப்படைகளோடு கூடிய இடம் **சேனைத்தானம்.** நால்வகைப் படைகளுடனும் அரண்மனையுடனும் விளங்குவது **ராசாணித** எனப்படும எல்லாச் சாதி மக்களும் சேர்ந்து வாழ்வதாகவும் நால்வகைப்பட அரண்மனை, கோட்டை இவைகளுடன் கூடியதாகவும் விளங்குவது **சேனா முகம்** எனப்படும் அதிதிகளுக்கும் துறவியர்க்கும் ஏற்றதாய் நல்ல

நீர்நிலையோடு விளங்கும் இடம் மடம் எனப்படும். மேற்கூறப்பட்ட கிராமம், கேடகம் முதலானவைகளை ஒட்டியுள்ளதாக விளங்குவது குப்சம் என்றும் சேரிகை என்றும் கூறப்படும்.

கிராம வகைகள் மேலே கூறப்பட்டன. எந்த எந்த வடிவத்தில் கிராமம் அல்லது நகரத்தை அமைக்கவேண்டும் என்பதைக் குறித்தும் சிவாகமங்கள் கூறுகின்றன. தண்டகம், சுவத்திகம், பிரத்தரம், பிரகீர்ணம், சம்பத்கரம், பராகம், பத்மகம், ஸ்ரீபிரதிட்டிதம், ஸ்ரீவத்சம், வைதிகம், நந்தியாவர்த்தம், கும்பகம் எனப்படும் பன்னிரண்டு வடிவங்களுள் ஏற்றதொரு வடிவத்தில் கிராமத்தை அமைக்கலாம்.[25] இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன வடிவம் ஏற்றது என்பதைப்பற்றியும் ஊர்களில் அவ்வத்தொழில் செய்வோர்க்குரிய வீதியும் இடமும் என்பதைப் பற்றியும் ஆகமங்களும் சிற்பநூல்களும் கூறுகின்றன.

கிராமங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள இயலும் அளவிற்கு நகரங்களைப் பற்றி வேதநூல்களில் அறிய இயலவில்லை. நூறு வாயில்களோடு அல்லது சுவர்களோடு கூடிய கோட்டை ஒன்று சதபுஜி என்னும் சொல்லால் இருக்கு வேதத்தில் குறிக்கப்பெற்றுள்ளது. (I. 166:8; IV. 15-14); சுடப்படாத செங்கற்களால் கட்டப்பட்ட கோட்டையைப் பற்றிய குறிப்பும் இவ்வேதத்தில் காணப்படுகிறது. (IV. 30-20) ஆனால் நகரமும் கோட்டையும் அமைக்கப்படும் முறை வேதங்களில் கூறப்படவில்லை.

சிவாகமங்களில் பல்வேறுபட்ட நகர அமைப்புக்களைப் பற்றியும் அவற்றை நிருமாணிக்கும் முறை பற்றியும் காண முடிகின்றது. ராசதானீயம், நகரம், நகரீ, புரம், கேடம், கர்வடம், குப்ஜகம், பட்டணம்— இவை காமிக ஆகமத்தில் கூறப்பட்டிருக்கும் நகரவகைகளாகும். இவ்வாறே சிபிரம், வாஹினீமுகம், ஸ்தானீயம், துரோணகம், ஸம்வித்தம், கோளகம், நிகமம், ஸ்கந்தாவாரம் எனப்படும் கோட்டை வகைகளைப் பற்றிய குறிப்புகளும் ஆகமங்களில் காணப்படுகின்றன. கிரிதுர்க்கம், வனதுர்க்கம், பங்கதுர்க்கம், ரததுர்க்கம், தேவதுர்க்கம், மிசிரதுர்க்கம் எனப்படும். கோட்டை வகைகளைப்பற்றியும் சிவாகமங்களில் காணலாம் நரேந்திரன், சக்கிரவர்த்தி, மஹாராஜன், மண்டலேசன் என அரசர்களில் பலவகையினர் உண்டு; என்றும் அவரவர் தகுதிக்கு ஏற்ப உத்தமம், மத்திமம், அதமம் என்ற வகையில் அமைக்கப்பட வேண்டிய நகரங்களின் வகைகள் நானூற்று நாற்பத்தேழு (447) என்றும் சிவாகமங்களும் மானசாரம் மயமதம் முதலான சிற்ப நூல்களும் கூறுகின்றன. "பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து" என நெடுநல்வாடையில் குறிக்கப் பெறுவது கவனிக்கத் தக்கது.

இவ்வாறு கிராமங்களைக் குறித்தும் நகரங்களைக் குறித்தும் கோட்டைகளைக் குறித்தும் சிவாகமங்களிலும் சிற்ப நூல்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நோக்கும் போது, சிந்துவெளியில் வாழ்ந்திருந்த திராவிட மக்கள் இவற்றின் அடிப்படையிலேயே நகரங்களையும் கட்டிடங்களையும் அமைத்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.[26]

## சிவாகமங்களும் திராவிடமக்களின் இறைக்கொள்கையும் :

வேதங்களில் இந்திரன், மித்திரன், வருணன், அங்கி முதலான பல தெய்வ வழிபாடே விதிக்கப்பட்டிருக்கிறது என்றும் இவ்வழிபாடு பின்னர்த் திருமால் வழிபாடாக மாறி அதன் பிறகு சிவவழிபாடாக மாறியது என்றும் தங்கள் மனம் போனவாறெல்லாம் மேலை நாட்டு அறிஞர்கள் 'ஆய்வுரைகள்' வழங்கியுள்ளனர். இவர்களுள் மிகவும் இகழ்ச்சிக்கும் நகைப்புக்கும் அதே நேரத்தில் அதிர்ச்சிக்கும் இடம் தரும் வகையில், உளறல்களின் கருவூலமாக 'இந்திய சமயங்கள்' (Religions of India) என்னும் நூலை உருவாக்கியவர் ஹாப்கின்ஸ் என்பவர். 'பிரிட்டிஷ் ஆட்சியே இந்திய நாட்டிற்கு நலம்பயக்க வல்லது என்று அந்நூலில் 'நியாயம்' காணும் அவர் "சிவன் சூத்திரர்களின் தெய்வம்" என்றும் 'தென்னகத்து ஏழைகளின் தெய்வம்' என்றும் 'குருதிப்பலிகொள்ளும் கொடும் தெய்வம்' என்றும் கூறியுள்ளார். மேலைநாட்டவர் கூற்றே வேதவாக்கு எனக் கருதும் நம் நாட்டு அறிஞர்கள் அந்நூலைப் பதிப்பித்தும் அந்நூலின் கருத்துக்களை மேற்கோள் காட்டியும் 'அருந்தொண்டு' செய்து வருகின்றனர்.[27]

தமிழ்மரபு தவறாத் தொல்காப்பியர் நிலப்பாகுபாடுகளையும் அவற்றிற்குரிய சேயோன், மாயோன், இந்திரன், வருணன் என்னும் தெய்வங்களையும் குறிப்பிடுகின்றார். இந்திரன், வருணன் முதலான தெய்வங்களெல்லாம் வேத காலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்களே. எனினும் இத்தெய்வங்கள் திராவிடர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களே தவிர ஆரியர்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள் அல்ல. அங்ஙனமாயின் தாஸ்யுக்களை (திராவிடர்களை) அழிக்குமாறு இந்திரனையும் பிறதெய்வங்களையும் வேண்டுகின்ற தோத்திரங்கள் வேதத்தில் ஏன் காணப்பட வேண்டும் எனும் கேள்வி எழுகிறது. திராவிடர்களை அசுரர்கள் என நினைத்தும் விருத்திராசுரனை அழித்த இந்திரனைத் துதித்தால் இவ்வசுரர்களையும் வெற்றிகொள்ளலாம் என்றும் ஆரிய முனிவர் கருதி அத்தோத்திரங்களை இயற்றியிருக்க வேண்டும். இவ்வாறு வருகின்ற தோத்திரங்கள் இடைச்செருகலும் பிற்சேர்க்கையுமேயாம்.[28]

வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் இடையே அங்க—அங்கி (அங்கி—அங்கத்தை உடையது) அல்லது அம்ச—அம்சித் (அம்சி—அமிசத்தை உடையது) தொடர்பு உண்டு என முன்னர்க் கூறப்பட்டது. வேதத்தில் கூறப்பட்டிருக்கும் இந்திர வழிபாடு முதலானவை அங்க அல்லது அமிச வழிபாடு, சிவாகமங்களில் கூறப்பட்டிருக்கும் சிவவழிபாடு அங்கி அல்லது அம்சி வழிபாடு, "ஆகமத்திற் சொல்லப்பட்டது போல வேதத்தில் ஒரே தெய்வம் சொல்லப்படாமல் பலதெய்வம் சொல்லப்பட்டமை என்னெனின் சிவனடியார்களைச் சிவனாகவே வழிபட வேண்டும் என ஆகமம் விதித்தாங்குப் பரமேசுவரனது விபூதியில் (விபூதி—மகிமை; ஐசுவரியம்) சருவ மூர்த்திகளையும் பரமேசுவரனாக வழிபடவேண்டும் என அவ்வேதமும் விதித்தது எனக்கொள்க" எனப் பாம்பவன் சுவாமிகள் தமது 'வேதத்தைக் குறித்த வியாசம்" என்னும் நூலில் கூறுகின்றமை

நோக்கத் தக்கது. வேதத்தின் இறுதிப் பகுதியும் முடியும்போது "ஏனைய தேவர்களெல்லாரையும் விடுத்துச் சிவன் ஒருவனே தியானிக்கப்பட வேண்டும்" எனக் அறிவுறுத்தி முடிவுறுவதைக் காண்க.

வேத இந்தியா என்னும் நூலில் அறிஞர் ராகேசின் என்பார் சிவ வழிபாடு திராவிடர்களுடையதே என்கிறார். சிவவழிபாட்டையே முதன்மை யாகவும் ஏனைய துர்க்கை, திருமால், சூரியன் முதலான தெய்வங்களின் வழிபாட்டை அங்கமாகவும் கூறும் சிவாகமங்கள் திராவிடர்களின் இறைக் கொள்கையைப் புலப்படுத்துனவே.[29] அரப்பாவிலும் மொகஞ்சோதாரோ விலும் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முத்திரைகளில் மூன் றுாற்றுக்கும் மேற்பட்டவைகளில் திருமால், துர்க்கை கணேசர் முதலான தெய்வ வடிவங்கள் காணப்படுவதை ஹிரோசினி என்பார் குறிப்பிடு கின்றார்.[30] அங்குக் கண்டெடுக்கப்பட்ட பல படிமங்கள் கூத்தப்பெரு மானின் வடிவத்திலும் அமைந்துள்ளன.[31]

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் உருவத்திற்கும் பெயருக்கும் அப் பாற்பட்டவன் என்பதைத் திராவிட முனிவர்கள் உணர்ந்திருந்தாலும் வழி பாட்டின் பொருட்டும் தியானத்தின் பொருட்டும் குறிப்பிட்ட ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் பற்பல தெய்வ வடிவங்களைக் கற்பித்தனர். திராவிடர்களுடைய வழிபாட்டுமுறை உருவ வழிபாடு உருவமற்ற (நிட்கள) வழிபாடு என்னும் இருவகையிலும் அமைந்திருந்தது.

உருவவழிபாட்டு முறை வேதத்தில் குறிப்பிடப்படவில்லை என்பார் கூற்று ஆதாரமற்றது. பிரதிமை என்ற சொல்லாட்சி இருக்கு வேதத்தில் காணப்படுகிறது. (X. 130-3) "யாகப் படையலை (ஹவிஸ்) ஏற்றுக் கொள்ளும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேவதையே பிரதிமை" எனச் சாயனரும் அதற்கு உரை கூறுகின்றார். உருவத்தை அமைக்கும் முறை வேதத்தில் கூறப்படவில்லை எனக் கூறலாம். இன்ன இன்ன தெய்வ வடிவத்தை இன்ன இன்ன இலக்கணப் படி அமைக்க வேண்டும் எனச் சிவாகமங்களும் சிற்பநூல்களும் மட்டுமே விரிவாகக் கூறுகின்றன. வேதத்தில் வரும் பூஜை என்ற சொல் திராவிடச் சொல்லான பூசுதல் என்பதன் திரிபே என அறிஞர்கள் கூறுகின்றனர்.[32] வேதத்தில் வரும் சுபாணி (இருக்கு. III. 33-6) என்ற சொல்லில் பாணி என்பதற்குப் பூசை செய்வது என்றே பொருள் எனக் கூறுகிறார் சாயனர். நிருக்தம் தந்த யாஸ்கரும் இவ்வாறே பொருள் காண்கிறார். எனவே கையினால் உபசாரங்களைச் செய்து வழிபடும் உருவ வழிபாட்டு முறையே அங்கே குறிப்பிடப்படுகிறது எனக் கருதலாம். உருவ வழிபாட்டு முறை ஆரியர்கள் ஏற்காத ஒன்று. எனவே உருவவழிபாடு செய்யும் திராவிட மக்களை அவர்கள் தம்மினும் கீழ்ப்பட்டவர்களாகக் கருதினர். உயிர்க்கொலைக்கு இடமளிக்கும் வேள்வி திராவிடர்கள் ஏற்காத ஒன்று. எனவே இத்தகைய வேள்விகளைச் செய்யும் ஆரியர்களைத் திராவிடர்கள் எதிர்த்தனர்.

இனிச் சிவலிங்க வழிபாட்டைக் குறித்துச் சில கருத்துக்களைக் கூற வேண்டும். சிவலிங்க வழிபாடு என்பதை Phallic worship என முதன் முதல் எந்த 'அறிவாளி' மொழிபெயர்த்தார் எனத் தெரியவில்லை. அவர் யாராக இருந்தாலும் அவர் அறிவிழந்தவராகவும் பண்டைக் கிரேக்க வழிபாட்டு முறைகளில் பறிகொடுத்துவிட்ட உள்ளம் உடையவராகவுமே இருந்திருக்க வேண்டும். Phallus வழிபாட்டு முறை கிரேக்க நாட்டில் இருந்ததே தவிர இந்திய நாட்டில் கிடையாது. ஹெர்மஸ், பிரியாபஸ், டயோனிசஸ் முதலான கிரேக்கக் கடவுளர்களே Phallus வடிவில் வழி படப் பெற்றனர்.[33] கிரேக்க வரலாற்றுணர்வுடன் வேதங்களைப் பயின்ற மேலை நாட்டினர் வேதத்தில் வரும் சிசுனதேவன் என்ற சொல்லைக் கண்டதும் ஹெர்மஸ் வழிபாட்டு முறையையும் இதனையும் இணைத்துப் பார்த்து விட்டுச் சிவலிங்க வழிபாடு சிசுனதேவ வழிபாடே என முடிவு கட்டிவிட்டனர். எத்துணை விபரீதமான—கொடுமையான—விளக்கம்! உண்மைக்கும் மெய்ப்பொருள் உணர்வுக்கும் புறம்பான இக்கருத்தை நம் இந்திய நாட்டு அறிஞர்களும் ஏற்றுக்கொண்டு சிவலிங்க வழிபாட்டை Phallus worship எனக் குறிப்பிட்டு வருவது மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது.

கெய்த், மெக்டொனல், மேக்ஸ் முல்லர் முதலானோர் சிசுனதேவன் (இருக்கு: VII. 21-5; X. 99-3) என்பதற்குச் சிசுனத்தை (ஆண்குறியை) வழிபடுவோர் என மிக இழிவான முறையில் பொருள் கூறினர். சிசுன தேவன் என்பதற்குப் "பிரம்மசரியத்தைக் காப்பாற்றாதவர்கள், களி யாட்டத்தில் பிழைப்பவர்கள்" என்றே சாயனரும் யாஸ்கரும் பொருள் கூறுகின்றனர். இவர்கள் கூறிய இந் நற்பொருளைப் புறக்கணித்துவிட்டு இழிவான முறையில் பொருள் கூறினர் முற்கூறப்பட்ட கெய்த் முதலா னோர். இருக்கு வேதத்தில் வரும் அந்ருத தேவர் (VII.104-4) என்பதற்குப் பொய்கூறிப் பிழைப்போர் எனப் பொருளே தவிரப் பொய்யை வணங்கு வோர் என்பது பொருளன்று; இவ்வாறே மூர தேவர் (இருக்கு: X. 4-4) என்பதற்கு மூடத்தன்மை வாய்ந்தோர் எனப்பொருளே தவிர மூடத்தை வணங்குவோர் என்பது பொருளன்று. இவ்வாறே சிசுனதேரர் என்ப தற்கும் சிசுனத்தால் (களியாட்டத்தால்) பிழைப்போர் எனப் பொருளே தவிரச் சிசுனத்தை வழிபடுவோர் என்பது பொருளன்று.[34] பிரபஞ்சத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பது எதுவோ அது லிங்கம் எனச் சிவாகமம் கூறும் விளக்கத்தை அவர்கள் கண்டிருந்தால் இப் பெரும்பிழையை அவர்கள் செய்திருக்கமாட்டார்கள்.[35]

சிவலிங்க வடிவம் இருக்கு வேதத்திலும் 'சாருசித்ரம்' (= அழகிய வடிவம்) என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. (V. 3-3) சாருசித்ரம் என்பது உருத்திரரான சிவபெருமானின் வடிவமே (லிங்கம்) எனப் பராசர புராணம் மேற்கூறப்பட்ட வேத மந்திரத்திற்குப் பொருள் கூறுகிறது.[36] சிந்துவெளியில் வாழ்ந்த திராவிட மக்களால் வழிபடப் பெற்ற சிவலிங்க வடிவங்களே இன்று அரப்பா முதலான இடங்களிலும், நடு அமெரிக்க நாடுகளிலும் காணப்படுகின்றன.

நடராச வழிபாடு திராவிட இறைக்கொள்கையின் உயர்ந்த தத்துவமே. வடஇந்தியக் கோயில்களைக் காட்டிலும் தென்னகக் கோயில்களில்தான் கூத்தவழிபாடு இன்றளவும் செழித்தோங்கி வந்திருக்கின்றது.[37]

சிவபெருமானின் எண்வகை வடிவங்களுள் ஞாயிற்று வடிவமே சிறப்பானது என்றும் ஞாயிறு வழிபாடு செய்து ஆன்மசக்தியைப் பெற்ற பிறகே சிவவழிபாடு செய்யவேண்டும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. இவ்வகையில் பண்டைத் திராவிடர்கள் ஞாயிற்றை வழிபடுபவர்களாக விளங்கியதும் ஆகம நெறிக்கு ஒத்ததாகவே விளங்குகிறது. ஒவ்வொரு கோயிலிலும் தலவிருட்சம் இருப்பதை இன்றும் காண்கிறோம். நறுவில்லி, ஆல், கடகம், அத்தி, கொன்றை, அரசு, வேம்பு, கல்லால் என்னும் எண்வகைத் மரங்களையும் வடகிழக்குத்திசை முதல் வடக்கு வரை முறையே வளர்த்தால் கிராமங்களில் ஏற்படவுள்ள குற்றங்களும் தீமைகளும் நீங்கும் எனக் காமிக ஆகமம் கூறுகிறது. தெய்வ அருள் நிகழ்ச்சிக்கும் தருக்களுக்கும் தொடர்பு இருப்பதை உணர்ந்த திராவிட முன்னோர் மர வழிபாட்டையும் மேற்கொண்டனர். நாகவழிபாடும் திராவிட வழிபாட்டு முறைகளுள் ஒன்றே.[38] சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டிருக்கும் முத்திரைகள் சிலவற்றில் சக்கரங்களும் சுவத்திகை வடிவங்களும் காணப்படுகின்றன.[39] சிவாகமங்களில் கூறப்பட்டிருக்கும் மண்டலங்களுள் சக்ர மண்டலமும் சுவத்திகை மண்டலமும் குறிப்பிடத்தகுந்தவை. மண்டலம் அல்லது யந்திர வடிவம் அமைத்து வழிபடும் முறையும் திராவிட வழிபாட்டு முறையைச் சார்ந்ததே.

திராவிட முன்னோர்கள் மெய்ப்பொருள் இயலிலும் இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆய்விலும் மிகவும் நுண்திறன் பெற்றிருந்தனர். ஐம்பெரும் பூதங்களுக்கும் கோண வடிவங்களுக்கும் (geometrical figures) தொடர்பு உண்டு என்பதைச்சிவாகம நெறிப்படி அவர்கள் உணர்ந்திருந்தனர்.

## சிவாகமங்களும் திராவிட நாட்டுக் கலைகளும் :

திராவிட நாட்டுக் கலைகள் என்றதும் உடனே நம் நினைவில் எழுபவை, திருக்கோயில்களும், அவற்றை அழகு செய்யும் சிற்பங்களும், நூற்றுக்கால்—ஆயிரக்கால் மண்டபங்களும், கலை அழகு கொழிக்கும் கட்டிடங்களுமேயாகும். இவற்றை அமைக்கும் முறைகளையெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுபவை சிவாகமங்களும் சிற்பநூல்களுமேயாம். வீடுகளைக் கட்டும் வழிமுறைகளும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

சிந்துசமவெளியில் வாழ்ந்த திராவிடர்கள் ஆரியர் வருகைக்கு முன்னமேயே நகரங்களையும் கோட்டைகளையும் சிறப்புற அமைத்திருந்தனர்.[40] அவர்கள் அவ்வாறு அமைப்பதற்கு வழிவகைகளைக் கூறும் நூல்களாகச் சிவாகமங்கள் அப்பொழுதே இருந்திருக்க வேண்டும். அங்கு அத்தகைய கலைகளை வளர்த்த திராவிடர்களே மேலும் மேற்கு நோக்கி நகர்ந்து பலுசித்தானம் முதலான நிலங்களுக்குச் சென்று அங்கும் கோயிற்

கலையையும் கட்டிடக்கலையையும் வளர்த்தனர். பலுசித்தானத்தில் திராவிட நாட்டுக் கோயில் பாணியில் அமைந்துள்ள சிவன்கோயில் ஒன்றைப்பற்றி அகழ்வாராய்ச்சி அறிஞர் கன்னிங்காம் என்பவர். குறிப்பிடுகின்றார். எச். ஆர். ஹால் என்பவர் Ancient History of Near East என்ற நூலில் சுமேரியர்கள் தொடக்ககாலத்தில் திராவிட மக்களாகவே இருந்திருக்க வேண்டும் எனக்கூறுகின்றார். திராவிடர்கள் மேன்மேலும் மேற்கு நோக்கி நகர்ந்தும் கடல்கடந்தும் பல்வேறு தேயங்களில் வாழ்ந்து தங்கள் கலைகளையும் நாகரிகத்தையும் பரப்பினர். மெக்சிகோவின் தென்பகுதியிலும் மைய அமெரிக்கப் பகுதியிலும் யுகாதான் காடுகளிலும் திராவிநாட்டு மயன் என்பாளின் மரபு வழிப்பட்ட கலைச்செல்வங்கள் பெருமளவில் காணக்கிடைக்கின்றன.[41]

மார்க்கஸ் விட்ருவியஸ் போலியோ என்பவன் கிரேக்க நாட்டுக் கட்டிடக்கலைஞன். கி. மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவன் கட்டிடக்கலையைப் பற்றிய பெருநூல் ஒன்று (De Architectura) எழுதியுள்ளான். அந்நூலில் அவன் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹெர்மோஜென் என்னும் கலைஞனைப்பற்றிக் குறிப்பிட்டு அவன் கருத்துக்களைத் தழுவியே தனது நூலை வரைவாதகக் கூறியுள்ளான். அந்நூலில் அவன் உரிய நிலத்தைத் தேர்ந்தெடுக்கும்முறை (பூபரிக்ரகம்), ஆனிரைகளைத் தங்கவிட்டு நிலத்தின் தன்மையை ஆராயும் முறை, நிலத்தின் தட்டவெப்ப நிலைக்கு ஏற்றவாறும் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் கட்டிடங்களை அமைக்கும் முறை, நகர அமைப்பு முறை, முதலானவற்றை விளக்கிக் கூறுகிறான். அவன் கூறும் கருத்துக்களை நோக்கினால் நம்நாட்டுச் சிவாகமங்களையும் சிற்ப நூல்களையும் பயின்றுதான் அவன் அவ்வாறு கூறுகின்றோனோ என எண்ணத் தோன்றும்.[42] R. J. Forbes என்னும் அறிஞர் கிரேக்கர்கள் கட்டிடக்கலையில் கீழை நாட்டு முறைகளையே மிகுதியாகக் கையாண்டனர் எனக் கூறுகின்றார்.[43] இவற்றையெல்லாம் நோக்கும்போது சிவாகம வழிப்பட்ட திராவிடர்களின் கட்டிடக்கலைப்பாணி மயன் வழியாக மேலைத்தேயங்களில் பாவிச் செழித்தது எனக் கூறலாம்.[44]

பலுசித்தானத்து ஊர் என்னுமிடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கோயிலின், அமைப்பையும் பூசகரின் செயல்முறைகளையும் விளக்கி அவை பெரும்பாலும் திராவிடப்பாணியை ஒத்திருக்கின்றன என Errst Dieரு என்பார் கூறுகின்றார். அங்குக் காணப்படும் வீடுகளும் நகரங்களும் கீழை நாடுகளிற் காணப்படுவனவற்றையே ஒத்து விளங்குகின்றன என்றும் அவர் கூறுகின்றார்.[45]

இசைக்கலையைக் குறித்தும் நாட்டியக்கலையைக் குறித்தும் கூடச் சிவாகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன. காலை வேலையில் காந்தாரம், மாளவம் என்னும் பண்களையும் நண்பகலில் தக்காரகம், கௌசிகம் என்னும் பண்களையும் மாலை நேரத்தில் இந்தளப் பண்ணையும் இரவில் (அர்த்தயாம பூசையில் பஞ்சமப் பண்ணையும் இசைக்க வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது· மற்றும் கொல்லி, காமேசம், நட்டபாடை, சீகாமரம்,

தக்கேசி முதலான பண்களைப் பற்றியும் கூட ஆகமங்கள் குறிப்பிடுகின்றன இறைவன் திருமுன்னர் அளிக்கப்பட வேண்டிய உபசாரங்களைப் பற்றிக் கூறும்போது நாட்டிய வகைகளைப் பற்றிச் சிவாகமம் கூறுகின்றது. இவ் விசைக்கலையும் நாட்டியக்கலையும் பண்டைத் திராவிடர்களின் நாகரிக மேம்பாட்டைப் புலப்படுத்துபவையே.

வேத நெறியும் சிவாகம நெறியும் முரண்படுவன அல்ல, எனினும் இருநெறிகளும் ஒருதன்மைப்பட்டனவே எனக்கூற முடியாது. உயிர்க் கொலைக்கு இடமளிக்கும் வேதவேள்விகள் சிவாகம நெறிக்கு ஒத்தவை அல்ல. வேதத்தில் கூறப்படும் ஆகவனீ அங்கி, சிவாகமத்தில் கூறப்படும் சிவாக்கினியின் ஆயிரத்தில் ஒரு கூறே. யகாத்தில் இடப்படும் அசுவிகளைத் தாங்கிச் செல்வதால் வன்னி (வஹ்னி) என்ற பெயர் அக்கினிக்கு ஏற் பட்டது என வேதம் கூறுகிறது. வ—ஞாவம் என்றும் 'ஹ்னி' ஆணவமல அழிவு என்றும் கூறி எது ஞானத்தை வழங்கி ஆன்மாவின் ஆணவ அழுக்கை அகற்றுகின்றதோ அது வன்னி என்று சிவாகமம் பொருள் கூறுகிறது. யாக குண்டங்களை அமைப்பதிலும் வேதவழி வேறு; ஆகம வழி வேறு இவ்வாறு பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. வேதங் களையும் சிவாகமங்களையும் குறித்துச் சூரிரபட்டார் கூறும் கருத்துக்கள் இங்கே நோக்கத்தக்கவை.

> "மறைகள் சிவாகமங்கட என்னும் இவ்விரண்டில் ஒன்று பயனற்ற தாகுமே எனில், அவ்வாறில்லை. மிகவும் நுட்பமான பொருள்களை உடைய மறையானது முரண் பட்ட பல சமாத்தவர்களின் ஐயப்பாடுகளுக்கு இடமாக இருத்தலால் அந்த மறைகளின் உட்பொருள்களை விளக்கும் சிவாகமங்கள் பலருக்கும் உபயோகமானவையே." [46]

> "தத்தம் நன்மைக்கென (சுய பலனுக்காக) வேதங்களில் விதிக்கப்பட்ட செயல்கள் சிவாகமநெறிப்பட்ட சித்தாந்தி களால் தள்ளத்தக்கனவாம்" [47]

இவ்வாறு கூறப்பட்ட வேறுபாடுகள் செயல்நெறியை (கிரியா மார்க்கம்) ஒட்டி ஏற்பட்டனவே. ஞானநெறியை நோக்கும் போது வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் இடையே வேறுபாடு இல்லை எனக் கூறலாம். கருமம், உபாசனை யோகம் எனச்சென்று வேதம் ஞானத்தில் நிறைவுறுகிறது. சரியை, கிரியை, யோகம் எனச்சென்று சிவாகமம் ஞானத்தில் நிறைவுறு கிறது. இதனால்தான் திருமூலர் வேதத்தின் அந்தமும் ஆகமத்தின் அந்த முமாகிய இரண்டு அந்தமும் பெரியோர்க்கு அபேதமாக விளங்கும் எனக் கூறுகின்றார். [48]

"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும், நாஅல் வேதநெறி திரியினும்" எனப் புறநானூறு வேதத்தைக் குறிப்பிட்டது போல் சங்கத்தமிழ் நூல்கள் ஆகமங்களைப்பற்றிக் கூறவில்லையே எனும் ஐயம் எழலாம். ஆகமம் என்ற சொல்லாட்சி இல்லையே தவிர ஆகமக் கருத்துக்கள் சங்கத்தமிழ்

நூல்களில் இடம்பெற்றுள்ளன என்றே கூறவேண்டும். சிவபெருமானைக் குறித்தும் முருகப் பெருமானைக் குறித்தும் கூறப்படும் கருத்துக்கள் ஆகமக் கருத்துக்களே.

"விரிகதிர் பரப்பிய வியன்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

என நெடுநல்வாடையில் கூறப்படும் செய்தி, சிவாகமங்களில் கூறப் பட்டிருக்கும். சங்குத்தாபனம் எனப்படும் நிகழ்ச்சியே. (சங்கு - முளைக் குச்சு) சரியான முறையில் திசைகளை உறுதிசெய்ய இந்நிகழ்ச்சி மேற் கொள்ளப்படவேண்டும் என ஆகமத்திலும் சிற்ப நூல்களிலும் கூறப் பட்டுள்ளது.

"பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்
... ... ... ... ...
... ... ... ... ...
உள்ளீடாகிய இருநிலத் தூழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம்"

எனப் பரிபாடலில் கூறப்பெறும் ஊழிக்கணக்கும் காலக்கணக்கும் சிவாக மங்களில் கூறப்பட்டிருப்பவையே. இன்னபல எடுத்துக்காட்டுகள் காட்டலாம்.

சிவாகமங்களால் புலனாகும் திராவிட நாகரிகம் காலத்தால் முந்தியது; கலைச்சிறப்புகளால் பொலிவு பெற்றது; உலகமெங்கும் தழைத்துப்படர்ந்த ஒன்று. இந்நாகரிகச் சிறப்புகளை உள்ளபடி உணர்வதற்கு வேதங்களை மட்டும் பயின்று பயனில்லை; சிவாகமங்களையும் நடுநிலை நெஞ்சத்தோடு ஆழ்ந்து பயின்றுணர வேண்டும்.

## அடிக்குறிப்புகள்

1. அம்பலவ நாவல ஞானசம்பந்த பராசக்தி—பௌட்கராகம முன்னுரை. பக்-45.
2. Max Muller—*The Six Systems of Indian Philosophy*-pp. 10-11.
3. பாணினியின் காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறு பாடு உண்டு. V. A. Smith என்பார் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தியவராகப் பாணினியைக் கொள்ள முடியாது என்கிறார். R. G. Bhandarkar, Goldstücker முதலானோர் கூறுகின்ற முடிவு களே பொருத்தமானவை.
4. வேத ஆராய்ச்சி தொடர்பான கருத்துக்களைப் பொறுத்தவரையில் A. B. Keith Macdonell முதலானோரின் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. இவர்கள் வேதங்களின் காலம் கி, மு. 13-ஆம் நூற்றாண்டு என்கின்றனர். உண்மைநிலை அறிந்துகொள்ள Dr. Haugh என்பாரின் நூலையும் Dr. Winternity என்பாரின் நூலையும் காண்க.
5. J. N. Farquhar, *An outline of the Religious Literature of India* (Motial Banarsidass, Varanasi, 1967) p. 193.
   இவர் சிவாகமங்களின் காலம் கி.பி. 9 அல்லது 10ஆம் நூற்றாண்டு எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது. திருமூலரும் சுந்தரரும் சமகாலத்தவர் எனக் கூறும் இவர்தம் உரை அனைத்தும் பொய் யுரையே.
6. Dr. K. C. Pandey—Comparative Aesthetics (Chowkambika Sans- krit Series, Varnasi, 1959) Vol. I, p. 585.
7. " உலகில் எம்மத முறைக்குமுற் பவநிலை யுண்டெண்
   விலக நின்றவன் தந்தவே தாகமங் கட்கோர்
   நிலையதின்றத னாலவை மேலென நிகழ்த்திக்
   கலைகள் நாயகம் என அயிர்ப் பில்லையென் கருத்தே
   —பாம்பன் சுவாமிகள், திருப்பா : 32 : 2
8. i. Sir John Marshall—*Mohenjo-daro and the Indus civilisation* (London, 1930).
   ii. P. Misra, *Pre-historic India (*Calculta University, 1927).
9. இவ்வாறு கூறுவோர் மேலைநாட்டவர்களுள் கெய்த் ஜூலியஸ் எகலிங் ரோத், ஹில்பிராண்ட், பூர்னப், வீபர்.
   முதலானோரும் இந்தியநாட்டு அறிஞர்களுள் S. N. Dasgupta, Hiriyanna முதலானோரும் ஆவர்.
10. Krishna Chaitarya—*A new history of Sanskrit Literature*, (Manohar Book Service, New Delhi, 1977), p. 2.
11. V. Gordan Childe, *The Most Ancient East* (London, 1928) p. 220.

12. T. R. Sesha Iyengar, *The Dravidian India* (Asian Educational Service, New Delhi, 1982) p. 75.

13. *சிவஞான முனிவர்*, மாபாடியம்: 2-ஆம் சூத்திரம் 3-ஆம் அதிகரணம்

"மன்னுமகந் திரமலயம் சையஞ் சத்தி
மாகிருடம் பாரியாத் திரமே விந்தம்
என்னுமலை ஓரேழும் காஞ்சி யாதி
எழுநகரும் தானமொரா யிரமேல் எட்டும்
பன்னும்அரு மறைமுதலோர் மேயதேயம்
பற்பலவும் சுருதிமுறை பயில்வும் மேவி
மெய்ந்நெறிசேர் வதுகுமரி கண்டம் ஏனை
மிலேச்சரிடம் ஒரெட்டும் வியப்பிலாவே"

எனவரும் கந்தபுராணக் கருத்தும் (2:11:47) நோக்கத்தக்கது.

14. Prof. Maya Prasad Tripati, *Development of geographic Knowledge in Ancient India* (Varnasi-1, 1969) p. 191

15. காடக சம்மிதை X. 6; சதபதம் III. 2-3-15; XI. 4-1-1.

16. இருக்கு: III. 37-9; VIII. 32-22 (பாஞ்சஜனம்)
மேலது VIII. 9-2. (பாஞ்சமானுஷம்)
மேலது. I. 7-9. (பஞ்ச க்ஷிதய)

17. யாஸ்கரின் நிருக்தம் காண்க.

18. *Vedi Index* (Motilal Banarsi Dass, New Delhi, 1982) Vol. I.

19. இருக்கு I. 174-2.

20. இவ்விருமொழி மரபு குறித்து "Encyclopaedia of Britanica. Dravidian Languge"—என்பதில் காண்க.

21. கல்வெட்டுக் கருத்தரங்கு (R. Nagasamy Ed), Books India Pvt. Ltd, Madras-1, 1966) p. 53.
Banerjee என்பாரின் "*The Development of Hindu Iconography*" எனும் நூலையும் காண்க.

22. பௌதாயன தரும சூத்திரம், II. 3-6:33.

23. காமிகம், 20-ஆம் படலம், கிராமாதி லட்சணவிதி.

24. சுப்பிரபேதம், 23-ஆம் படலம், கிராமதி லட்சணவிதி.

25. காமிகம், 24-ஆம் படலம், தண்டிகாதிவிதி.

26. K. C. Pandey, *Comparative Aesthetics* (Chowkambika Sanskrit Series, Varnasi, 1959) Vol. I, pp. 585-86.

27. நம்நாட்டை இழிவுபடுத்தும் நூல் எனத்தெரிந்தும் முன்ஷிராம் மனோகர்லால் நிறுவனமும் சந்த் அண்டு கோ. நிறுவனமும் மோதிலால் பனர்சிதாஸ் நிறுவனமும் இத்தகைய நூல்களை வெளியிட்டு வருவது வருந்தத்தக்கதே.

28. வேதங்களில் பிற்சேர்க்கை நிகழ்ந்திருக்கலாம் எனப் பாம்பன் சுவாமிகள் தமது வேதத்தைக் குறித்த வியாசம் எனும் நூலில்

கூறுகின்றார். மனு தர்ம நூலிலும் மகாபாரத காலத்திற்குப் பிறகு மாற்றமும் சேர்க்கையும் நிகழ்ந்திருக்கின்றன என்பது சுவாமிகளின் கருத்து.

பார்க்க : பாம்பன் சுவாமிகளின் பரிபூரணானந்த போதம், பக். 208.

29. Gilbert Slater, *The Dravidian Element in Indian Culture*, (Asian Educational Series, New Delhi, 1982) p. 50, 55, 56.
30. Dr. Bedrich Hrozny—*Ancient History of western Asia Indian and Greek*,
31. Roy. C. Craven, *A concise History of Indian Art*, (Praeger Publishers, New York, 1976) p. 21.

    க. த. திருநாவுக்கரசு சிந்துவெளி தரும் ஒளி, (வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, *1971*) p. 85.
32. i. J. Charpentier-The meaning and etymology of *Pūja Indian Antiquary*, Vol. 56, p. 99.

    ii. T. V. Sairam *Indian Temple: Forms and Foundations* (Agam Kala Prakashan, Delhi-52, 1982) p. 53. ff.
33. B. Bhattacharya, *Saivism and the Phallic world* (Oxford and I B H Publishing Co., New Delhi, 1975) Vol. I. pp. 20-26, 272, 273.
34. P. V. Kane, *History of Dharma Sastra* (Bhandarkar Oriental Research Institute, Poona, 1953), Vol. I, part II.
35. லிங்கம் என்பதன் வேர்ச்சொல் லிகி என்பது. லிகி–சித்திரித்தல். தன் தோற்றத்தால் ஐவகைத் தொழிற்பாடுகள் மூலம் பிரபஞ்சத்தைச் சித்திரிப்பதால் லிங்கம் எனப்படுகிறது எனக் கூறுவார் நிர்மலமணிதேசிகர் அகோரசிவாசாரியாரின் தீக்ஷாவிதிக்கு அவர் அருளிய உரையைக் காண்க.
36. பாம்பன் சுவாமிகள், தகராலய ரகசியம் (இரண்டாம் பதிப்பு *1973*). பக். *201*, பாம்பன் சுவாமிகள் திருப்பா : பதிகம் *87*, செய்யுள். 4.
37. க. த. திருநாவுக்கரசு, சிந்துவெளி தரும் ஒளி (வள்ளுவர் பதிப்பகம் புதுக்கோட்டை, *1971*) p 80: "வேறுசில உருவச் சிலைகள் சிவபெருமானின் திருநடனக் கோலத்தைச் சித்திரிப்பது போன்று காணப்படுகின்றன...பிற்காலச் சோழப் பேரரசர் காலத்தில் செய்யப்பட்ட நடராசரது வெண்கலச் சிலைகள் சிந்துவெளி நாகரிக காலம் முதல் படிப்படியாகக் கலைத்துறையில் வளர்ச்சியுற்றுச் சிறப்புற்றதை எடுத்தியம்புகின்றன.
38. i. Gilbert Slater, *The Dravidian Element in Indian Culture* (Asian Educational Services, New Delhi, 1982), p. 48, p. 83.

    ii. க. த. திருநாவுக்கரசு, சிந்துவெளி தரும் ஒளி *(வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1971)* பக். *94*.
39. J. Finegar, *The Archaeology of world Religions* (Princeton University Press, New Jeresay, 1952) p. 128.

    க. த. திருநாவுக்கரசு, சிந்துவெளி தரும் ஒளி, பக். 83, 84, 95.

40. பிப்ரு என்பானின் கோட்டையைப் பற்றியும் சம்பரன் என்பானின் கோட்டையைப் பற்றியும் இருக்கு வேதம் குறிப்பிடுவது காண்க. (இருக்கு : I. 51-5; I. 130-7; II. 14-6; II. 19-6; VI 20-7; VIII. 32-2; X. 138-3) ஆரியர் வருவதற்கு முன்பிருந்தே இவர்கள் சிந்துவெளிப் பகுதியை ஆட்சிசெய்தவர்களாக இருக்க வேண்டும்.

41. K. C. Pandey, *Abhinavagupta-A historical and philosophical study* (chowkambika Sanskirt Series, Varnasi, 1963) pp. 593-95.

42. மார்க்கஸ் விட்ருவியஸ் கூறும் சில கருத்துக்கள்

Book I. ch. II: "Temples of particular gods should be built only on particular sites; the divinity presiding over that element is drawn away by the rites and sacrifices performed in due manner."

Book I. ch. IV: "The precepts of the ancients should be ever observed. They always, after sarifice, carefully inspected the livers of those animals fed on that spot where on the city was to be built or where on a stative encampment was intended. If the livers were diseased and livid, they tried others, in order to ascertain whether accident or disease was the cause of imperfection. But if the greater part of the experiments proved by the sound and healthy appearance of the livers, that the water and food of the spot were wholesome they selected it for the garrison"

மேலே காணப்படும் விட்ருவியஸ் கருத்துக்களுக்கும் காமிக ஆகமத்தில் பிரவேசபலி விதி, பூபரிக்கிரக விதி, பூகர்ஷண விதி என்னும் படலங்களில் கூறப்படும் கருத்துக்களுக்கும் ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

43. R. J. Forbes, *Studies in Ancient Technology* (Leiden, Netherlands, 1955) p. 159.

44. மயன் மானசார மரபும் மேலைநாடுகளில் பெற்றிருந்த செல்வாக்கைக் குறித்து விரிவாக அறிய, P. K. Acharya எழுதிய *Architecture of Manasara* என்னும் நூலையும் *Hindu Architecture in India and Abroad* என்னும் நூலையும் காண்க.

45. Ernst Diez, '*The Ancient Worlds of Asia*' (Macdonald, London, 1961) p. 27, 29, 31.

46. சூரியபட்டர், சைவசித்தாந்த பரிபாஷை (சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1926) பக். 5.

47. மேலது, பக். 78, 79.

48. பாம்பன் சுவாமிகள், திருப்பா (மகாதேசோ மண்டலசபை, திருவான்மியூர், சென்னை, 1974) பக். 101-02.

## புத்தக மதிப்புரை

# ஓர் அழுகை ஆதரவு தேடுகிறது

ஆசிரியர்: மருதூர். அரங்கராசன்

பாலமுருகன் பதிப்பகம் மருதூர், திருச்சி மாவட்டம் - 621 710.

ப-ம். 92, விலை ரூ. 6/-

மருதூர் அரங்கராசன் புதுக்கவிதைகளை ஒரு புதிய முறையில் தொகுத்து வகுத்துப் புதுமை படைத்திருக்கிறார். நூலை எந்தக் கோணத்தில் பார்த்தாலும் புதுமை; எங்கெங்கு பார்த்தாலும் புதுமை; எப்படிப் பார்த்தாலும் புதுமை.

புதிய இலக்கிய முயற்சியில் நாட்டமுடையவர்கள் எல்லோரும் படித்துப்பார்க்கலாம். புதுக் கவிதைச் சுவைஞர்கள் எல்லோரும் படித்து மகிழலாம்.

புதுக்கவிதை உலகில் வரவேற்கத்தக்க பல புதுமைமகளைப் படைத்துள்ள அரங்கராசன் அவர்கள் மேலும் பல புதுக்கவிதை நூல்களை வழங்க வேண்டும் தமிழுலகம் அவ்வகையில் அவருக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

டாக்டர் **பொற்கோ.**

## வாணிதாசன் கவிதைகள் - தொகுதி - 3

பதிப்பாசிரியர் : அரங்க நலங்கிள்ளி

வாணிதாசன் பதிப்பகம், சேலியமேடு, புதுவை மாநிலம் - 607 402.

ப - ம். 40 + 108 விலை ரூ. 10/-

கவிஞர் வாணிதாசன் அவர்களின் அன்பு மைந்தர் டாக்டர் நலங்கிள்ளி அவர்கள் கவிஞரின் கவிதைகளைத் தொகுத்து வகுத்து மூன்றாம் தொகுதியாக வெளியிட்டுள்ளார். இதற்கு முன்பே இரண்டாந் தொகுதியும் இவர் முயற்சியாலேயே வெளிவந்தது. முதல் தொகுதி மட்டும் கவிஞர் வாழ்ந்தபோதே வெளிவந்தது.

கவிஞர் தமது வாழ்வில் இறுதிக் காலத்தில் "நினைத்துப் பார்க்கின் ............" என்ற தலைப்பில் எழுதி வைத்த வாழ்க்கைக் குறிப்பினைப் பதிப்பாசிரியர் இந்த நூலில் சேர்த்திருக்கிறார். இந்தக் குறிப்பைத் தமிழுலகுக்கு வழங்கியதற்காகப் பதிப்பாசிரியர்க்கு நாம் எல்லோரும் நன்றி கூறவேண்டும். முறையான ஆய்வாளர்க்கும் கவிஞர்களுக்கும் சுவைஞர்களுக்கும் மொழியின் மீதும் நாட்டின் மீதும் அக்கறை கொண்ட பெரியவர்கட்கும் இந்த வாழ்க்கைக் குறிப்பு மிகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

நூலின் இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு அகர வரிசை ஒன்றை உருவாக்கிச் சேர்த்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது.

கவிதைகளை வகுத்திருக்கும் முறையும் கவிதைகளைப் பதிப்பித்துள்ள முறையும் மற்றவர் போற்றிப் பின்பற்றத் தக்க அளவு சிறப்பாக அமைந்துள்ளது. தந்தையின் தமிழ்ப்பணியை நிறைவேற்றித் தந்தைக்குப் பெருமை சேர்த்துத் தமிழுக்கு வளஞ்சேர்க்கும் டாக்டர் நலங்கிள்ளிக்குத் தமிழுலகம் மென்மேலும் ஊக்கமளிக்க வேண்டும்.

டாக்டர் **பொற்கோ.**

# பாட்டியல் இலக்கண வரலாறு

தமிழில் கடந்த சில ஆண்டுகள் வரையிலும் கைவிடப்பட்டு வந்த பாட்டியல் ஆய்வு தற்போது ஆய்வுலகில் ஆழமாகவும் அகலமாகவும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில் மருதூர் அரங்கராசன் என்ப வரால் எழுதப்பட்ட 'இலக்கண வரலாறு - பாட்டியல் நூல்கள்' எனும் நூல் இதுவரை தமிழில் எழுந்துள்ள அனைத்தும் பாட்டியல் நூல்களைப் பற்றிய வரலாற்றினை முறையோடும் தெளிவோடும் விளக்க முயன் றுள்ள முதல் நூலாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள செய்திகள் அனைத்தையும் மூன்று நிலைகளில் பகுத்துப் பார்க்கலாம். அவை:

1. பாட்டியல் பற்றிய முன்னுரைச் செய்திகள்:
2. பாட்டியல் பற்றிய முதன்மைச் செய்திகள்.
3. பாட்டியல் பற்றிய முடிவுச் செய்திகள்.

## பாட்டியல் பற்றிய முன்னுரைச் செய்திகள்

இப்பிரிவின் கீழ் நூலில் இடம் பெற்றுள்ள முன்னுரை, இலக்கண வளர்ச்சி, பாட்டியல் தோற்றம் ஆகிய மூன்று தலைப்புகளையும் அடக்கிக் காணலாம். முன்னுரையில் பாட்டியல் பற்றிய சில பொதுவான செய்தி களை நூலாசிரியர் தருகின்றார். இலக்கண வளர்ச்சி என்ற தலைப்பில் இந்நூலாசிரியர் தொல்காப்பியத்திற்குப் பின் தமிழ் இலக்கண உலகில் நேர்ந்துள்ள முறையான இலக்கண வளர்ச்சியைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றார். தொல்காப்பியர் கூறிய மூன்றிலக்கணம் அவருக்குப் பின் படிப்படியே நான்கு, ஐந்து, ஆறு என வளர்ந்த நிலைகளையும் இந்நூல் விளக்குகிறது. அடுத்து இலக்கியங்கள் பல்கிப் பெருகிய நிலையில் பாட்டியல் என்ற ஆறாவது இலக்கண வகை கி. பி. 10-ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றியது என்பதை பாட்டியல் தோற்றம் என்ற தலைப்பில் ஆசிரியர் விளக்குகிறார்.

## பாட்டியல் பற்றிய முதன்மைச் செய்திகள்

இப்பிரிவின் கீழ் பாட்டியல் நூல்கள் என்ற தலைப்பில் விளக்கப் பட்டுள்ள 17-பாட்டியல் நூல்கள் பற்றிய செய்திகளை உள்ளடக்கிக் காணலாம். பாட்டியல் நூல்கள் என்ற பிரிவில் இன்று தமிழில் கிடைக் கின்ற இந்திரகாளியம், அவிநயம், பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், பிரபந்தத் திரட்டு, சுவாமி நாதம் முத்து வீரியம் பிரபந்த தீபிகை, பொருத்த விளக்கம், பிரபந்த தீபம், யாப்பு நூல் ஆகியன பற்றி ஆராயப் பட்டுள்ளன. ஒவ்வொரு பாட்டியல் நூல் பற்றிய விவரங்களும் முன்னுரை, ஆசிரியர், நூல், உரை, பதிப்பு ஆகிய தலைப்புகளின் கீழ் திரட்டித்தரப் பட்டுள்ளன.

## பாட்டியல் பற்றிய முடிபுச் செய்திகள்

இப்பிரிவின் கீழ் பிற பாட்டியல் நூல்கள், உரைநடை நூல்கள், நிகண்டு நூல்கள் ஆகிய தலைப்புகளில் கூறப்பட்ட செய்திகளை அடக்கிக்காணலாம்.

பிற பாட்டியல் நூல்கள் என்ற தலைப்பில் பெயரளவில் தெரி கின்ற பாட்டியல் நூல்கள், மேற்கோள் நூற்பாக்களின் வழி அறிகின்ற

பாட்டியல் நூல்கள், அச்சேறாமல் முடங்கிக் கிடக்கும் பாட்டியல் நூல்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

உரைநடை நூல்கள் என்ற தலைப்பில் சதுரகராதி, பொருத்த வினாவிடை, செய்யுளிலக்கணம் (கத்தியரூபம்) இலக்கண மணிமாலை, பாட்டியலும் இலக்கிய வகைகளிலும் எனும் உரைநடை நூல்களில் பேசப் பட்டுள்ள பாட்டியல் பற்றிய செய்திகளே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

பாட்டியல் நூல்களைப் பற்றிய விரிவான விவரங்களைத் தருகின்ற முதல் நூலாக இது அமைகிறது. பாட்டியல் நூல்களின் பெயர் பற்றியும் ஆசிரியர் பற்றியும் விளக்குகின்ற இடங்களில் இதுகாறும் இருந்து வந்த தடை விடைகளைச் சுட்டிக்காட்டித் தாம் நிறுவப்புகும் கருத்திற்கு முன் பின் தொடர்புடைய செய்திகளை இணைத்துத் தமது கருத்தினை இந் நூலாசிரியர் நிறுவியுள்ளார். தேவையான இடங்களில் அட்டவணைகளை இணைத்துக் கருத்துத் தெளிவிற்கு வழி செய்துள்ளார். ஒவ்வொரு தலைப்பிற்கும் பல்வேறு நூல்களிலிருந்து செய்திகடைத் தேடித் திரட்டித் தந்துள்ளமை ஆசிரியரது கடின உழைப்பைப் புலப்படுத்துகிறது.

பிரபந்தங்கள் 96 என்பதிலுள்ள கருத்து மாறுபாடு, இலக்கண விளக்கம் நூல் பற்றி எழுந்த எழுத்துப்போர், அவிநயத்தின் வழிக்காட்டப் படுகின்ற நாலடி நாற்பது, காஞ்சிப்படலம், ஒற்றளபெடை, ஆய்தக்குறுக்கம், பொருள்கோள் போன்ற பாட்டியலுக்கு நேரடித் தொடர்பில்லாத செய்தி கள் இந்நூலில் இணைக்கப்பட்டமைக்கான காரணம் விளங்கவில்லை.

பொருத்த வினாவிடை, செய்யுளிலக்கணம் ஆகிய பாட்டியல் நூல் களைப் பாட்டியல் நூல்கள் என்ற பிரிவில் அடக்கிக் காண்பதே பொருத்த மானதாகும். மாறாக உரைநடை நூல்கள் என்ற பிரிவில் அவை சேர்க்கப்பட்டுள்ளமைக்கான காரணம் புரியவில்லை.

மேற்கோள் நூற்பாக்கள் என்ற அளவில் மட்டுமே அறியக்கூடியஇந்திர காளியம் அவிநயம் ஆகிய இரு நூல்களையும் இறந்து போன பாட்டியல் நூல்கள் என்ற தலைப்பில் சேர்க்காமல் முழுமையாகக் கிடைக்கின்ற பாட் டியல் நூல்கள் பற்றித் பிரிவில் சேர்த்துள்ளமை ஏனென்று தெரியவில்லை.

பாட்டியல் நூல்களின் வழி 226 இலக்கிய வகைகளைப் பற்றி அறியும் வேளையில் இந்நூலில் 150 என்று எண்ணிக்கை இடப்பட்டிருப்பதும் அண்டகோசம், ஆடாமணி முதலாய இலக்கிய வகைகட்குப் பிரபந்தத் திரட்டு எனும் நூல் இலக்கணப் கூறியிருக்க இந்நூலில் மேற்சொன்ன இலக்கிய வகைகட்கு எந்த நூலிலும் இலக்கணம் கூறப்படவில்லை எனக் கூறியுள்ளதும் திருத்தம் செய்தற்குரியன.

பாட்டியலாய்வு புறக்கணிக்கப்பட்ட நிலைமாறித் தற்போது செழிக்கத் தொடங்கியுள்ளமைக்கு இந்நூல் ஒரு சிறந்த சான்று எனின் மிகையாகாது. தமிழில் தனியொரு இலக்கண வகைக்கென்று ஓர் இலக்கண வரலாற்று நூல் வெளிவந்துள்ளமை சிறப்பிற்குரியது. தமிழுலகம் இந் நூலை வரவேற்றுப் பயன்கொள்ளும் என நம்பலாம்.

டாக்டர் அரங்க நலங்கிள்ளி

# கலைக்களஞ்சியத்தில் தமிழியல் கட்டுரைகள்

## ஒரு வகைதொகை

**பகுதி : 3**

(இலக்கியம், இலக்கிய வகை, இலக்கிய வடிவம், இலக்கிய மாந்தர், இலக்கியம் நுவல் பொருள், தமிழ் எழுத்துகள், இலக்கணமும் மொழியியலும் முதலியன)

டாக்டர் கு. மோகனராசு, பி.எசி., எம்.ஏ., பிஎச்.டி.,
பெருஞ்சான்றிதழ்கள் : மானிடவியல், நிலவியல், உயர்கல்வியல்,
சான்றிதழ்கள் : சமசுகிருதம், அகராதியியல், மொழியியல்
திருக்குறள் ஆய்வு மையம், தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகம்
1985

## குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| க. | = | கட்டுரை |
| க.+பா. | = | கட்டுரை+பார்க்க |
| கு. | = | குறிப்பு |
| கு.+பா. | = | குறிப்பு+பார்க்க |
| சி.கு. | = | சிறு குறிப்பு |
| சி.கு.+பா. | = | சிறு குறிப்பு+பார்க்க |

[25 வரிகளுக்கு மேல் கட்டுரை; 4-25 வரிகள் குறிப்பு; 1-3 வரிகள் சிறு குறிப்பு எனக் கொள்ளப்பட்டுள்ளன.]

## குறிப்பு

'கலைக்களஞ்சியத்தில் தமிழியல் கட்டுரைகள்: ஒரு வகை தொகை' என்னும் இத்தொகுப்பின் முதற்பகுதி (சங்க காலம்) தமிழாய்வு 3-ஆம் தொகுதியில் (1976) வெளிவந்துள்ளது. இத்தொகுப்பின் இரண்டாம் பகுதி (இடப்பெயர்கள்) தமிழாய்வு 4-ஆம் தொகுதியில் (1977) வெளிவந்துள்ளது.

முதல் தொகுதியில் 688 தலைப்புகள் வகை தொகை அடைவு செய்யப்பட்டு 32 பக்க அளவில் வெளிவந்துள்ளன. இரண்டாவது தொகுதியில் 764 தலைப்புகள் (689-1452) வகை தொகை அடைவு செய்யப்பட்டு 40 பக்க அளவில் வெளிவந்துள்ளன.

இம் மூன்றாவது பகுதியில் 900 தலைப்புகள் (145 -2354) வகை தொகை அடைவு செய்யப்பட்டு வெளிவருகின்றன.

# 1. நூல்கள்

## 1.1. காப்பியங்கள்

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1453 | 1 | இரட்சணிய யாத்திரிகம் | சவரிமுத்து, சி. வி. | — | 2 | 36-37 | க. |
| 1454 | 2 | ஐம்பெருங்காப்பியம் | ஆசிரியர் குழு | — | 2 | 630 | கு.+பா. |
| 1455 | 3 | கம்பராமாயணம் | சேதுப்பிள்ளை, ரா. பி. | 12 | 3 | 217-220 | க. |
| 1456 | 4 | காப்பிய இலக்கணம் | கனகராஜையர், நா. | — | ,, | 507 | க. |
| 1457 | 5 | காப்பியம் | மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. | — | ,, | 505-507 | க. |
| 1458 | 6 | குண்டலகேசி | ஆசிரியர் குழு | 7 | 4 | 15 | கு. |
| 1459 | 7 | குண்டலகேசி விருத்தம் | — | ,, | ,, | ,, | பா. |
| 1460 | 8 | சிந்தாமணி | — | 2 | ,, | 665 | ,, |
| 1461 | 9 | சிலப்பதிகாரம் | வரதராசனார், மு. | ,, | ,, | 696-699 | க. |
| 1462 | 10 | சிறுகாப்பியம் | — | — | ,, | 751 | பா. |
| 1463 | 11 | சீவக சிந்தாமணி | வேணுகோபாலப்பிள்ளை | — | 5 | 24-29 | க. |
| 1464 | 12 | சீறாப்புராணம் | உவைஸ், ம. மு. | — | ,, | 30-31 | ,, |
| 1465 | 13 | சூளாமணி | மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. | — | ,, | 141-143 | ,, |
| 1466 | 14 | திருத்தொண்டர் புராணம் | ஆசிரியர் குழு | — | ,, | 749 | கு.+பா. |
| 1467 | 15 | தேம்பாவணி | ,, | 18 | 6 | 161 | க. |
| 1468 | 16 | நளவெண்பா | ,, | — | ,, | 313-314 | ,, |
| 1469 | 17 | நீலகேசி | ,, | 14 | ,, | 544 | ,, |
| 1470 | 18 | நைடதம் | ,, | -- | ,, | 611 | ,, |
| 1471 | 19 | பாரதம் | சுந்தராசாரியர், சாகித்திய, தி. | — | ,, | 182-185 | ,, |
| 1472 | 20 | பாரத வெண்பா | ஆசிரியர் குழு | 9 | ,, | 185 | ,, |
| 1473 | 21 | பெரிய புராணம் | சுப்பிரமணிய முதலியார், சி. கே. | 12 | ,, | 596-597 | ,, |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1474 | 22 | பெருங்கதை | வன்மீக நாதன், கி. சி. | — | 6 | 603-604 | க. |
| 1475 | 23 | பெருங்காப்பியம் | — | — | ,, | 604 | பா. |
| 1476 | 24 | மணிமேகலை | இராசாக்கண்ணனார், மு. | — | 8 | 79 | க. |
| 1477 | 25 | மனோன்மணீயம் | சிவமுத்து, புலவர் மயிலை | — | ,, | 204-205 | ,, |
| 1478 | 26 | யசோதர கவியம் | ஜெயின், எஸ். ஏ. | — | ,, | 573-574 | ,, |
| 1479 | 27 | வளையாபதி | ஆசிரியர் குழு | — | 9 | 181 | ,, |

## 1.2. நீதி நூல்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1480 | 1 | அருங்கலச் செப்பு | ஆசிரியர் குழு | 13க்கு முன் | 1 | 196-197 | கு. |
| 1481 | 2 | அறநெறிச்சாரம் | ,, | 13 | ,, | 260 | ,, |
| 1482 | 3 | அறவியல் | — | — | 10 | 27 | பா. |
| 1483 | 4 | ஆசாரக்கோவை | ஆசிரியர் குழு | — | 1 | 334 | சி.கு. |
| 1484 | 5 | ஆத்திசூடி | ,, | — | ,, | 364 | கு. |
| 1485 | 6 | இன்னா நாற்பது | ,, | — | 2 | 154 | ,, |
| 1486 | 7 | உலகநீதி | ,, | — | ,, | 321 | சி.கு. |
| 1487 | 8 | கைந்நிலை | ,, | — | 4 | 224 | கு. |
| 1488 | 9 | கொன்றை வேந்தன் | ,, | — | ,, | 270 | ,, |
| 1489 | 10 | சுக்கிர நீதி | பார்த்தசாரதி, ஆர். கே. | — | 5 | 51-52 | க. |
| 1490 | 11 | தமிழ் அறநூல் வரலாறு | துரையரங்கசாமி, மொ. அ. | — | 1 | 259-260 | ,, |
| 1491 | 12 | நல்வழி | ஆசிரியர் குழு | — | 6 | 308 | கு.+பா. |
| 1492 | 13 | நறுந்தொகை | ,, | — | ,, | 316 | கு. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1493 | 14 | நன்னெறி | ஆசிரியர் குழு | — | 6 | 320 | கு. |
| 1494 | 15 | நான்மணிக்கடிகை | ,, | — | 4 | 429-430 | க. |
| 1495 | 16 | நீதி நூல்கள் | ,, | — | 6 | 502-503 | ,, |
| 1496 | 17 | நீதிநெறி விளக்கம் | ,, | — | ,, | 504 | கு |
| 1497 | 18 | நீதி வெண்பா | ,, | — | ,, | 507 | ,, |
| 1498 | 19 | மூதுரை | ,, | — | 8 | 464 | சி.கு.+பா. |
| 1499 | 20 | வாக்குண்டாம் | ,, | — | 9 | 187 | கு. |
| 1500 | 21 | வெற்றி வேற்கை | ,, | — | ,, | 504 | ,, |

## 1.3. புராணம் / சமயம்சார் நூல்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1501 | 1 | அப்போஸ்தலர் நடபடிகள் | ஆசிரியர் குழு | — | 1 | 94 | கு. |
| 1502 | 2 | அஷ்டாதச ரகசியங்கள் | ,, | — | ,, | 286 | ,, |
| 1503 | 3 | ஆக்கினேய புராணம் | ,, | — | ,, | 298 | ,, |
| 1504 | 4 | ஆசார்ய ஹ்ருதயம் | பூவராகவம் பிள்ளை, வித்துவான் ஆ. | — | ,, | 334 | ,, |
| 1505 | 5 | ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | ,, | — | ,, | 363 | க. |
| 1506 | 6 | இதிகாசம் | ராகவன், டாக்டர் வே. | — | ,, | 559 | ,, |
| 1453 | 7 | இரட்சணிய யாத்திரிகம் | சவரிமுத்து, சி. வி. | — | 2 | 36 27 | ,, |
| 1507 | 8 | இலிங்க புராணம் | ஆசிரியர் குழு | — | ,, | 121 | கு. |
| 1508 | 9 | கந்த புராணம் | சண்முகசுந்தரம் செட்டியார், ரா. | — | 3 | 191-193 | க.+பா. |
| 1455 | 10 | கம்பராமாயணம் | சேதுப்பிள்ளை, ரா. பி. | 12 | ,, | 217-220 | க. |
| 1509 | 11 | கருடபுராணம் | ஆசிரியர் குழு | — | ,, | 254 | கு. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1510 | 12 | காசி காண்டம் | ஆசிரியர் குழு | — | 3 | 430 | கு. |
| 1511 | 13 | காந்த புராணம் | ,, | — | ,, | 479 | ,, |
| 1458 | 14 | குண்டலகேசி | ,, | 7 | 4 | 15 | ,, |
| 1459 | 15 | குண்டலகேசி விருத்தம் | — | ,, | ,, | ,, | பா. |
| 1512 | 16 | குசேலோபாக்கியானம் | வாதராஜ ஐயங்கார், வீ. வ. | 19 | 3 | 740-741 | க. |
| 1513 | 17 | குர் - ஆன் | சையது அப்துல் வாஹாபு புகாரி | — | 4 | 47-48 | ,, |
| 1514 | 18 | கூர்ம புராணம் | ஆசிரியர் குழு | — | ,, | 180 | கு. |
| 1515 | 19 | கைவல்ய நவநீதம் | கந்தசாமி, ச. | — | ,, | 225 | க. |
| 1516 | 20 | சரசுவதி அந்தாதி | ஆசிரியர் குழு | — | ,, | 507 | கு. |
| 1460 | 21 | சிந்தாமணி | — | — | ,, | 665 | |
| 1517 | 22 | சிவகீதை | தேவசேனாபதி, வ. ஆ. | — | ,, | 705 | பா. |
| 1518 | 23 | சிவப்பிரகாசம் | ,, | 14 | 7 | 709 | க. |
| 1463 | 24 | சீவக சிந்தாமணி | வேணுகோபாலப்பிள்ளை, மகாவித்துவான், மே. வீ. | 9 | 5 | 24-29 | ,, |
| 1519 | 25 | சிவசம்போதனை | அருணாசலம், மு. | 4 | 10 | 266 | ,, |
| 1464 | 26 | சீறாப்புராணம் | உவைஸ், ம. மு. | — | 5 | 30-31 | ,, |
| 1465 | 27 | சூளாமணி | மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. | — | ,, | 141-143 | ,, |
| 1520 | 28 | ஞான வாசிட்டம் | கந்தசாமி, ச. | 17 | ,, | 291-292 | ,, |
| 1521 | 29 | ஞானவெட்டி | அருணாசலம், மு. | 18 | 10 | 284 | ,, |
| 1522 | 30 | தணிகை புராணம் | ஆசிரியர் குழு | — | 5 | 452-453 | ,, |
| 1523 | 31 | தத்துவ சேகரம் | — | — | ,, | 453 | பா. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1524 | 32 | தத்துவத்திரயம் | ஆசிரியர் குழு | — | 5 | 453 | பா. |
| 1525 | 33 | தமிழ்ப் புராணங்கள் | மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. | — | 7 | 438-441 | க. |
| 1526 | 34 | திரிபிடகம் | ஆசிரியர் குழு | — | 5 | 719 | கு. |
| 1527 | 35 | திருக்கைலாய ஞான உலா | ,, | 9 | ,, | 736 | கு.+ப. |
| 1528 | 36 | திருக்கோவையார் | துரையரங்கசாமி, மொ. அ. | 3 | ,, | 738-739 | க. |
| 1529 | 37 | திருச்சிற்றம்பலக் கோவையார் | — | ,, | ,, | 742 | பா. |
| 1530 | 38 | திருஞானசம்பந்தர் தேவாரம் | ஜகந்நாதன், கி. வா. | — | ,, | 746-747 | க. |
| 1466 | 39 | திருத்தொண்டர் புராணம் | ஆசிரியர் குழு | — | ,, | 749 | கு.+பா |
| 1531 | 40 | திருநாவுக்கரசர் தேவாரம் | ஜகந்நாதன், கி. வா. | 7 | 6 | 3-4 | க. |
| 1532 | 41 | திருப்பாவை | நாராயணசாமி நாயுடு, அர. சு. | 8 | ,, | 13-14 | ,, |
| 1533 | 42 | திருப்புகழ் | செங்கல்வராயபிள்ளை, தணிகைமணி, வ. சு. | 15 | ,, | 15-16 | ,, |
| 1534 | 43 | திருமந்திரம் | இளவழகனார் | — | ,, | 21 | க.+பா. |
| 1535 | 44 | திருமுறை | ஆசிரியர் குழு | — | ,, | 27-28 | க. |
| 1536 | 45 | திருமுறை கண்ட புராணம் | ,, | — | ,, | 28 | கு. |
| 1537 | 46 | திருவருட்பா | தேவசேனாபதி, வ. ஆ. | 19 | ,, | 31-33 | க. |
| 1538 | 47 | திருவாசகம் | துரையரங்கசாமி, மொ. அ. | — | ,, | 36-37 | க.+பா. |
| 1539 | 48 | திருவாய்மொழி | புருஷோத்தம நாயுடு, பண்டித வித்துவான், பு. ரா. | — | ,, | 39-40 | க. |
| 1540 | 49 | திருவிசைப்பா | குருசாமி, வி. ச. | — | ,, | 46 | ,, |
| 1541 | 50 | திருவிளையாடற் புராணம் | சரவண முதலியார், அ. மு. | — | ,, | 47-48 | ,, |
| 1542 | 51 | திருவெம்பாவை | துரையங்கசாமி, மொ. அ. | — | ,, | 51-52 | ,, |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1543 | 52 | திவ்வியப் பிரபந்தம் | சீனிவாசன், அ. | 3-8 | 6 | 61 | க. |
| 1544 | 53 | தெய்வீக உலா | ஆசிரியர் குழு | 14 | ,, | 130 | கு. |
| 1467 | 54 | தேம்பாவணி | ,, | 18 | ,, | 161 | க. |
| 1545 | 55 | தேவாரம் | செங்கல்வராய பிள்ளை தணிகைமணி, வ. சு. | 11 | ,, | 185 | ,, |
| 1546 | 56 | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | பாலசுந்தர நாயகர், கோ. | 5-9 | ,, | 422 | ,, |
| 1469 | 57 | நீலகேசி | ஆசிரியர் குழு | 14 | ,, | 544 | ,, |
| 1547 | 58 | பதும கதைகள் | ,, | — | ,, | 719 | சி.கு.+பா. |
| 1548 | 59 | பதும புராணம் | ,, | — | ,, | ,, | கு. |
| 1549 | 60 | பவிடிய புராணம் | ,, | — | 7 | 29 | சி.கு. |
| 1550 | 61 | பாகவதம் | பூவராகவம்பிள்ளை, வித்துவான் ஆ | — | ,, | 80-81 | க. |
| 1471 | 62 | பாரதம் | சுந்தராசாரியார், சாகித்திய வல்லப, தி. | — | ,, | 182-185 | ,, |
| 1472 | 63 | பாரத வெண்பா | ஆசிரியர் குழு | 9 | ,, | 185 | ,, |
| 1551 | 64 | பாஷ்யம் | ராகவன், டாக்டர் வே. | — | 10 | 378 | கு. |
| 1552 | 65 | பிரபுலிங்கலீலை | ஆசிரியர் குழு | 17 | 7 | 287 | க. |
| 1553 | 66 | புலவர் புராணம் | ,, | — | ,, | 470 | ,, |
| 1473 | 67 | பெரிய புராணம் | சுப்பிரமணிய முதலியார், சீ. கே. | 12 | ,, | 596-597 | ,, |
| 1554 | 68 | பைபிள் | பட்லர், ரெவரண்ட், ஜே. எப். | — | ,, | 640-641 | ,, |
| 1555 | 69 | மகாபாகவதம் | ஆசிரியர் குழு | — | 8 | 21 | சி.கு.+பா. |
| 1556 | 70 | மகாபுராணம் | ,, | — | ,, | 23 | கு. |
| 1557 | 71 | மச்சபுராணம் | ,, | — | ,, | 32 | க. |
| 1476 | 72 | மணிமேகலை | இராசாக்கண்ணனார், மு. | — | ,, | 79 | ,, |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1558 | 73 | மாயூரப் புராணம் | அருணாசலம், மு. | — | 10 | 435 | கு. |
| 1559 | 74 | மார்க்கண்டேயம் | — | — | 8 | 241 | பா. |
| 1560 | 75 | மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் | பாலூர் கண்ணப்ப முதலியார், வித்துவான் | — | ,, | 376 | க |
| 1478 | 76 | யசோதர காவியம் | ஜெயின், எஸ். ஏ. | — | ,, | 573-574 | ,, |
| 1561 | 77 | வசவ புராணம் | ஆசிரியர் குழு | — | 9 | 88 | க.+பா. |
| 1479 | 78 | வளையாபதி | ,, | — | ,, | 181 | க. |
| 1562 | 79 | விக்கிரமாதித்தன் கதை | ,, | — | ,, | 292-293 | ,, |
| 1563 | 80 | விநாயக புராணம் | சிங்கார வேலனார், வித்துவான் செ. | — | ,, | 327 | ,, |
| 1564 | 81 | விவிலிய நூல் | — | — | ,, | 416 | பா. |
| 1565 | 82 | விஷ்ணு புராணம் | — | — | ,, | 439 | க. |
| 1566 | 83 | ஸ்காந்த புராணம் | பூவராகம் பிள்ளை, வித்துவான் ஆ. | — | ,, | 662 | பா. |
| 1567 | 84 | ஹரிகதை | — | — | ,, | 691 | ,, |
| 1568 | 85 | க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ் | — அருணாசலம், மு. | — | 10 | 560 | க. |

## 1.4. சிற்றிலக்கியங்கள்



| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1505 | 1 | ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | பூவராகம் பிள்ளை வித்துவான் ஆ. | — | 1 | 363 | க. |
| 1569 | 2 | கப்பற்கோவை | ஆசிரியர் குழு | 13 | 3 | 210 | கு. |
| 1570 | 3 | கலிங்கத்துப் பரணி | சதாசிவ பண்டாரத்தார், தி.வை. | 12-க்கு முன் | ,, | 332-334 | க. |
| 1571 | 4 | கார்மண்டல சதகம் | ஆசிரியர் குழு | 11 | ,, | 530 | கு. |
| 1572 | 5 | குற்றாலக் குறவஞ்சி | ,, | — | 4 | 129 | க.+பா. |
| 1573 | 6 | கூடல் சங்கமத்துப் பரணி | ,, | — | ,, | 167 | கு. |
| 1574 | 7 | கொங்கு மண்டல சதகம் | ,, | 17-க்குப்பின் | ,, | 230 | க. |
| 1575 | 8 | கொப்பத்துப் பரணி | ,, | — | ,, | 250 | கு. |
| 1516 | 9 | சரசுவதி அந்தாதி | ,, | — | ,, | 507 | ,, |
| 1576 | 10 | சோழ மண்டல சதகம் | ,, | 17-18 | 5 | 274 | க. |
| 1577 | 11 | தக்கயாகப் பரணி | ,, | — | ,, | 400-401 | ,, |
| 1578 | 12 | தஞ்சைவாணன் கோவை | லிங்கம், வித்துவான் பா. சொ. | 13 | ,, | 423 | ,, |
| 1579 | 13 | தண்டலையார் சதகம் | ஆசிரியர் குழு | — | ,, | 441 | கு. |
| 1580 | 14 | தமிழ் முத்தரையர் கோவை | ,, | — | ,, | 508 | ,, |
| 1527 | 15 | திருக்கைலாய ஞான உலா | ,, | ,, | ,, | 736 | கு.+பா. |
| 1544 | 16 | தெய்வீக உலா | ,, | — | 6 | 130 | கு. |
| 1581 | 17 | தொண்டை மண்டல சதகம் | ,, | 14 | ,, | 212 | கு.+பா. |
| 1582 | 18 | நந்திக் கலம்பகம் | தங்கவேலு, மூ. க. | — | ,, | 290-291 | க. |
| 1583 | 19 | நால்வர் நான்மணிமாலை | ஆசிரியர் குழு | 9 | ,, | 420-421 | ,, |
| 1584 | 20 | நெஞ்சுவிடு தூது | ,, | — | ,, | 578 | கு.+பா. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1585 | 21 | பணவிடு தூது | ஆசிரியர் குழு | 17 | 6 | 696-697 | க. |
| 1586 | 22 | பாண்டி மண்டல சதகம் | ,, | — | 7 | 136 | ,, |
| 1560 | 23 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | பாலூர் கண்ணப்ப முதலியார், வித்துவான் | — | ,, | 376 | ,, |
| 1587 | 24 | முக்கூடற்பள்ளு | ஆசிரியர் குழு | 17 | 8 | 379 | ,, |
| 1588 | 25 | வருண குலாதித்தன் மடல் | அருணாசலம், மு. | 15 | 10 | 476 | ,, |
| 1568 | 26 | க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் | ,, | 18 | 1 | 560 | ,, |

## 1.5. இலக்கண நூல்கள்

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1589 | 1 | அகத்தியம் | ஆசிரியர் குழு | — | 1 | 8 | கு. |
| 1590 | 2 | அகப்பொருள் விளக்கம் | ,, | 12 | ,, | 12 | ,, |
| 1591 | 3 | இசை நுணுக்கம் | ,, | — | ,, | 531 | ,, |
| 1592 | 4 | இந்திரகாளி | ,, | — | ,, | 722 | சி.கு. |
| 1593 | 5 | இலக்கணக் கொத்து | ,, | 17 | 2 | 103 | கு. |
| 1594 | 6 | இலக்கண விளக்கச் சூறாவளி | ,, | ,, | ,, | 107 | ,, |
| 1595 | 7 | இலக்கண விளக்கம் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 1596 | 8 | இறையனார் அகப்பொருள் | ,, | கடைச்சங்கம் | ,, | 152 | க. |
| 1597 | 9 | உவமான சங்கிரகம் | அருணாசலம், மு. | 15 (அல்) 17 | 10 | 132 | ,, |
| 1598 | 10 | ஐந்திரம் | ஆசிரியர் குழு | — | 2 | 628 | கு. |
| 1599 | 11 | கல்லாடம் | ,, | — | 3 | 292 | ,, |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1600 | 12 | களவியல் | ஆசிரியர் குழு | — | 3 | 375 | கு.+பா. |
| 1601 | 13 | காக்கை பாடினியம் | ,, | — | ,, | 418 | கு. |
| 1602 | 14 | சின்னூல் | ,, | — | 4 | 768 | சி.கு.+பா. |
| 1603 | 15 | சொல்லகத்தியம் | ,, | — | 5 | 253 | சி.கு. |
| 1604 | 16 | தண்டியலங்காரம் | கிருஷ்ணமூர்த்தி, லெப்டினெண்ட் அ. | 12 | ,, | 442-443 | க. |
| 1605 | 17 | தொன்னூல் விளக்கம் | நடேச நாயகர், பண்டித ரா. | 18 | 6 | 250-253 | ,, |
| 1606 | 18 | நம்பியகப்பொருள் | ஆசிரியர் குழு | — | ,, | 292 | சி.கு.+பா. |
| 1607 | 19 | நவநீதப் பாட்டியல் | முருகவேள், வித்துவான் ந. ரா. | — | 10 | 338 | க. |
| 1608 | 20 | நற்றத்தம் | ஆசிரியர் குழு | — | 6 | 315 | சி.கு. |
| 1609 | 21 | நன்னூல் | வேங்கடராஜுலு ரெட்டியார், வித்துவான் வே. | 12-13 | ,, | 319-320 | க. |
| 1610 | 22 | நேமிநாதம் | ஆசிரியர் குழு | 12 | ,, | 602 | ,, |
| 1611 | 23 | பாரத சேனாபதீயம் | ,, | — | ,, | 747 | கு. |
| 1612 | 24 | பன்னிரு படலம் | ,, | — | 7 | 57 | ,, |
| 1613 | 25 | பன்னிரு பாட்டியல் | ,, | — | ,, | ,, | க. |
| 1614 | 26 | பாட்டியல் | நாராயணசாமி நாயுடு, அர. சு. | — | ,, | 129-130 | ,, |
| 1615 | 27 | பிரயோக விவேகம் | ஆசிரியர் குழு | — | ,, | 296-297 | கு. |
| 1616 | 28 | புறப்பொருள் வெண்பாமாலை | ,, | — | ,, | 524 | க. |
| 1617 | 29 | மாபுராணம் | ,, | — | 8 | 225 | சி.கு. |
| 1618 | 30 | மாறன் பாப்பாவினம் | ,, | — | ,, | ,, | சி.கு.+பா. |
| 1619 | 31 | மாறனலங்காரம் | கிருஷ்ணமூர்த்தி, லெப்டினெண்ட் அ. | 16 | ,, | 256 | க. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1620 | 32 | யாப்பருங்கலக் காரிகை | சிதம்பரநாதன் செட்டியார் டாக்டர் அ. | 10 (அல்) 11 | 8 | 578 | க. |
| 1621 | 33 | யாப்பருங்கலம் | ,, | ,, | ,, | 578-579 | ,, |
| 1622 | 34 | வச்சனந்தி மாலை | ஆசிரியர் குழு | — | 9 | 84 | சி.கு.+பா. |
| 1623 | 35 | வரையறுத்த பாட்டியல் | ,, | — | ,, | 157 | கு. |
| 1624 | 36 | வீரசோழியம் | ,, | 12 | ,, | 448.449 | க. |
| 1625 | 37 | வெண்பாப் பாட்டியல் | சிங்காரவேலனார், வித்துவான் சொ. | — | ,, | 464 | ,, |

## 1.6. நிகண்டுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1626 | 1 | அபிதான கோசம் | முத்துக்குமாரசாமி, இரா. | 19 | 10 | 15 | க. |
| 1627 | 2 | அபிதான சிந்தாமணி | ஆசிரியர் குழு | 20 | 1 | 96 | கு. |
| 1628 | 3 | ஆசிரிய நிகண்டு | ,, | — | ,, | 339 | சி.கு. |
| 1629 | 4 | உரிச்சொல் நிகண்டு | ,, | 16 | 2 | 303 | கு.+பா. |
| 1630 | 5 | சதுரகராதி | ,, | — | 4 | 419 | ,, |
| 1631 | 6 | சிந்தாமணி நிகண்டு | ,, | 18 | ,, | 665 | கு. |
| 1632 | 7 | சூடாமணி நிகண்டு | ,, | 12 | 5 | 115 | க. |
| 1633 | 8 | திவாகரம் | ,, | 8 | 6 | 61 | ,, |
| 1634 | 9 | தொகை நிகண்டு | ,, | 19 | ,, | 207 | கு. |
| 1635 | 10 | தொகைப் பெயர் நிகண்டு | ,, | ,, | ,, | ,, | ,, |
| 1636 | 11 | நாநார்த்த தீபிகை | ,, | ,, | ,, | 404 | க. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1637 | 12 | நாமதீப நிகண்டு | ஆசிரியர் குழு | 18 | 6 | 405 | க. |
| 1638 | 13 | நிகண்டு | சண்முகம்பிள்ளை, வித்துவான் மு. | — | ,, | 437-440 | ,, |
| 1639 | 14 | பல்பொருட் சூடாமணி | ஆசிரியர் குழு | 17 | 7 | 17 | கு. |
| 1640 | 15 | பாரதி தீபம் | ,, | 17-18 | ,, | 185-186 | ,, |
| 1641 | 16 | பிங்கல நிகண்டு | ,, | — | ,, | 265 | க.+பா. |
| 1642 | 17 | பொதிகை நிகண்டு | ,, | 18-19 | ,, | 646-647 | க. |
| 1643 | 18 | பொருட்டொகை நிகண்டு | ,, | — | ,, | 663 | ,, |
| 1644 | 19 | விரிவு நிகண்டு | ,, | — | 9 | 356 | கு. |
| 1645 | 20 | வேதகிரியார் சூடாமணி | ,, | 19 | ,, | 516 | ,, |

## 1.7. பலதுறை நூல்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1646 | 1 | ஆசிரிய மாலை | ஆசிரியர் குழு | — | 1 | 339 | சி.கு. |
| 1647 | 2 | இந்திரகாளியம் | ,, | — | ,, | 722 | ,, |
| 1648 | 3 | உள்ளமுடையான் | ,, | 12-13 | 2 | 366 | கு. |
| 1649 | 4 | ஓவிய நூல் | ,, | — | ,, | 728 | ,, |
| 1650 | 5 | கணக்கதிகாரம் | ,, | — | 3 | 121 | ,, |
| 1651 | 6 | கணித ரத்தினம் | ,, | — | ,, | 153 | ,, |
| 1651அ | 7 | கனவும் தமிழ் நூல்களும் | ,, | — | ,, | 403-404 | க. |
| 1652 | 8 | காவட நூல் | ,, | — | ,, | 243 | கு. |
| 1653 | 9 | கனா நூல் | ,, | 12 | ,, | 406 | ,, |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1654 | 10 | குணவாகடம் | ஆசிரியர் குழு | — | 4 | 17 | கு. |
| 1655 | 11 | சிற்ப நூல்கள் | வைத்திய நாதஸ்தபதி, ம. | — | ,, | 720-721 | ,, |
| 1656 | 12 | சூடாமணி உள்ளமுடையான் | — | — | 5 | 115 | பா. |
| 1656அ | 13 | தமிழிலுள்ள மருத்துவ நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் | தியாகராஜன், டாக்டர் ஆர். | — | 8 | 140-143 | க. |
| 1657 | 14 | தாள்வகையோத்து | ஆசிரியர் குழு | — | ,, | 677 | கு. |
| 1658 | 15 | நூல் | ,, | — | 6 | 566 | ,, |
| 1659 | 16 | பஞ்சாங்கம் | குப்பண்ணா சாஸ்திரி, டி.எஸ். | — | ,, | 644-646 | க. |
| 1660 | 17 | பட்சி சாஸ்திரம் | கோவிந்தசாமி, டாக்டர் சி. | — | ,, | 654-655 | ,, |
| 1661 | 18 | பாத சாஸ்திரம் | ராகவன், டாக்டர் வே. | — | ,, | 746-747 | ,, |
| 1662 | 19 | மனையடி சாஸ்திரம் | ஆசிரியர் குழு | — | 8 | 203 | ,, |

## 1.8. மறைந்த தமிழ் நூல்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1589 | 1 | அகத்தியம் | ஆசிரியர் குழு | | 7 | 8 | கு. |
| 1646 | 2 | ஆசிரிய மாலை | ,, | | ,, | 339 | சி.கு. |
| 1591 | 3 | இசை நுணுக்கம் | ,, | | ,, | 531 | கு. |
| 1592 | 4 | இந்திர காளி | ,, | | ,, | 722 | சி.கு. |
| 1647 | 5 | இந்திர காளியம் | ,, | | ,, | ,, | ,, |
| 1663 | 6 | இளந்திரையம் | ,, | | 2 | 140 | ,, |
| 1664 | 7 | ஊசிமுறி | ,, | | ,, | 440 | சி.கு.+பா. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1598 | 8 | ஐந்திரம் | ஆசிரியர் குழு | | 2 | 628 | கு. |
| 1649 | 9 | ஓவிய நூல் | ,, | | ,, | 728 | ,, |
| 1665 | 10 | கடகண்டு | ,, | | 3 | 46 | ,, |
| 1651 | 11 | கனிதரத்தினம் | ,, | | ,, | 153 | ,, |
| 1666 | 12 | கந்தன் பாட்டு | ,, | | ,, | 195 | சி.கு. |
| 1652 | 13 | கரவட நூல் | ,, | | ,, | 243 | கு. |
| 1667 | 14 | கலியாண கதை | ,, | | ,, | 336 | ,, |
| 1668 | 15 | கலைக்கோட்டுத்தண்டு | ,, | | ,, | 350 | ,, |
| 1669 | 16 | களரியாவிரை | ,, | | ,, | 375 | சி.கு. |
| 1601 | 17 | காக்கைபாடினியம் | ,, | | ,, | 418 | கு. |
| 1670 | 18 | காலகேசி | ,, | | ,, | 602 | ,, |
| 1671 | 19 | கிரணியம் | ,, | | ,, | 667 | ,, |
| 1672 | 20 | குணகாங்கியம் | ,, | | 4 | 16 | ,, |
| 1673 | 21 | குணநாற்பது | ,, | | ,, | ,, | சி.கு. |
| 1654 | 22 | குணவாகடம் | ,, | | ,, | 17 | கு. |
| 1674 | 23 | குறுவேட்டுவச் செய்யுள் | ,, | | ,, | 136 | ,, |
| 1573 | 24 | கூடல் சங்கமத்துப் பரணி | ,, | | ,, | 167 | ,, |
| 1575 | 25 | கொப்பத்துப் பரணி | ,, | | ,, | 250 | ,, |
| 1603 | 26 | சொல்லகத்தியம் | ,, | | 5 | 253 | சி.கு. |
| 1675 | 27 | தகடூர் யாத்திரை | ,, | | ,, | 403 | க. |
| 1580 | 28 | தமிழ் முத்தரையர் கோவை | ,, | | ,, | 508 | கு. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1657 | 29 | தாளவதையோத்து | ஆசிரியர் குழு | | 5 | 677 | கு. |
| 1608 | 30 | நற்றத்தம் | ,, | | 6 | 315 | சி.கு. |
| 1658 | 31 | நூல் | ,, | | ,, | 566 | கு. |
| 1676 | 32 | பஞ்சமரபு | ,, | | ,, | 643 | ,, |
| 1611 | 33 | பரத சேனாபதீயம் | ,, | | ,, | 744 | ,, |
| 1612 | 34 | பன்னிருபடலம் | ,, | | 7 | 57 | ,, |
| 1677 | 35 | பாண்டிக்கோவை | ,, | | ,, | 136 | க. |
| 1678 | 36 | பெரும்பொருள் விளக்கம் | ,, | | ,, | 608 | கு. |
| 1617 | 37 | மாபுராணம் | ,, | | 8 | 225 | சி.கு. |
| 1679 | 38 | மூவடி முப்பது | ,, | | ,, | 471 | கு. |
| 1680 | 39 | மோதிரப் பாட்டு | ,, | | ,, | 561 | ,, |
| 1681 | 40 | வச்சத் தொள்ளாயிரம் | ,, | | 9 | 84 | ,, |

## 1.9. மொழிபெயர்ப்பு நூல்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1489 | 1 | சுக்கிர நீதி | பார்த்தசாரதி, ஆர். கே. | 20 | 5 | 51-52 | க. |
| 1682 | 2 | சூதசங்கிதை | ராகவன், டாக்டர் வே. | — | ,, | 118 | கு. |
| 1683 | 3 | தருக்க சங்கிரகம் | ஆசிரியர் குழு | — | ,, | 524 | ,, |
| 1470 | 4 | நைடதம் | ,, | — | 6 | 611 | க. |
| 1684 | 5 | பஞ்சதந்திரம் | பாலசுப்பிரமணியன், த. சு. | 19 | ,, | 642 643 | ,, |
| 1685 | 6 | மெய்ஞ்ஞான விளக்கம் | ஆசிரியர் குழு | — | 8 | 490 | கு.+பா. |
| 1686 | 7 | வாயு சங்கிதை | ,, | 17 | 9 | 212 | கு. |

## 1.10. பிற நூல்கள்

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | நூல் எழுந்த நூற்றாண்டு | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1687 | 1 | இரும்பல் காஞ்சி | ஆசிரியர் குழு | — | 2 | 82 | சி.கு. |
| 1688 | 2 | கபிலர் அகவல் | பெருமாள், வ. | — | 10 | 169 | க. |
| 1689 | 3 | தமிழ் நாவலர் சரிதை | ஆசிரியர் குழு | 16 | 5 | 506-508 | ,, |
| 1690 | 4 | தனிச்செய்யுட் சிந்தாமணி | ,, | 20 | ,, | 544 | ,, |
| 1691 | 5 | தனிப்பாடல் திரட்டு | ,, | 19 | ,, | 545 | ,, |
| 1692 | 6 | திருவள்ளுவமாலை | ,, | — | 6 | 34 | கு. |
| 1693 | 7 | தொல்காப்பியச் சூத்திரவிருத்தி | ,, | 19 | ,, | 215 | ,, |
| 1694 | 8 | பரமார்த்த குருகதை | — | — | ,, | 752 | பா. |
| 1695 | 9 | புறத்திரட்டு | ஆசிரியர் குழு | 15 | 7 | 519 | க. |
| 1696 | 10 | பெருந்தொகை | ,, | — | ,, | 607 | கு. |
| 1697 | 11 | மகாராஜா துறவு | ,, | — | 8 | 23-24 | ,, |
| 1698 | 12 | முத்தொள்ளாயிரம் | சிதம்பரநாதன், டி. கே. | — | ,, | 412 | க. |
| 1699 | 13 | விநோதரச மஞ்சரி | — | — | 9 | 328 | பா. |
| 1700 | 14 | விவேக சிந்தாமணி | ஆசிரியர் குழு | — | ,, | 416-417 | கு. |
| 1701 | 15 | க்ஷேத்திரக் கோவை | அருணாசலம், மு. | — | 10 | 560 | ,, |

# 2. இலக்கிய வகைகள்

## 2.1 சிற்றிலக்கிய வகைகள்

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 1702 | 1 | அங்கமாலை | ஆசிரியர் குழு | 1 | 24 | கு. |
| 1703 | 2 | அந்தாதி | சேதுரகுராமன், வித்துவான் ந. | ,, | 91-92 | க. |
| 1704 | 3 | அட்டகம் (அஷ்டகம்) | சண்முகம்பிள்ளை, வித்துவான் மு. | 10 | 6-7 | ,, |
| 1705 | 4 | அனுராக மாலை | ஆசிரியர் குழு | 1 | 282 | சி.கு. |
| 1706 | 5 | அஷ்டமங்கலம் | ,, | ,, | 286 | ,, |
| 1707 | 6 | இணைமணிமாலை | ,, | ,, | 540 | கு. |
| 1708 | 7 | இரட்டை மணிமாலை | ,, | 2 | 39 | ,, |
| 1709 | 8 | இருபா இருபஃது | ,, | ,, | 82 | ,, |
| 1710 | 9 | உலா | முருகன், பா. | ,, | 343-344 | க. |
| 1711 | 10 | உழத்திப்பாட்டு | சஞ்சீவி, ந. | ,, | 362-363 | ,, |
| 1712 | 11 | உழிஞை மாலை | ஆசிரியர் குழு | ,, | 364 | சி.கு. |
| 1713 | 12 | உற்பவ மாலை | ,, | ,, | 426 | கு. |
| 1714 | 13 | ஊசல் | ,, | ,, | 437 | ,, |
| 1715 | 14 | ஊர் விருத்தம் | ,, | ,, | 554 | சி.கு. |
| 1716 | 15 | ஊர் வெண்பா | ,, | ,, | ,, | ,, |
| 1717 | 16 | ஊரின்னிசை | ,, | ,, | 455 | கு. |
| 1718 | 17 | ஏசல் | சேதுரகுராமன், வித்துவான் ந. | 10 | 146 | க. |
| 1719 | 18 | ஒருபா வொருபஃது | ஆசிரியர் குழு | 2 | 678 | கு. |
| 1720 | 19 | ஒலியந்தாதி | ,, | ,, | 689 | ,, |
| 1721 | 20 | கடிகை வெண்பா | ,, | 3 | 86 | சி.கு. |
| 1722 | 21 | கலம்பகம் | சண்முகம்பிள்ளை, வித்துவான் மு. | ,, | 325-329 | க. |

| தொடர் எண் | பகுதி எண் | தலைப்பு | ஆசிரியர் | தொகுதி எண் | பக்கம் / பக்கங்கள் | தன்மை |
|---|---|---|---|---|---|---|
அதன் பின்னர் கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் ஏற்பட்ட குழப்பங்களும், வேற்றுமதச் செல்வாக்கும், மதச்சண்டை களும், இருண்ட காலத்தன்மைகளும் மக்களிடமிருந்து அமைதியை யும், அறத்தையும் புறம் தள்ளின. இக்காலகட்டங்களில் செல் வாக்கு பெற்ற மதங்கள் தங்கள் தங்கள் மதக்கொள்கைகளை

நீதிகளாக்கி நூல்களாக்கின. அதன் விளைவாக அப்போது பெரும்பான்மையானவை நீதிநூல்களாகவே எழுந்தன. 'இந்தியாவின் பண்டைய இலக்கியங்களின் தலையாய நோக்கம் நன்னெறி காட்டுவதாகும். இந்தியர்களுடைய எந்தக்கதையைப் பார்த்தாலும் அது ஏதேனும் ஒருநீதியைப் போதிப்பதாகவே இருக்கும்'[1] என்ற சர்வில்லியம் ஜோன்சு கூற்றிற்குத் தமிழிலக்கியம் தக்கதொரு சான்றாக விளங்குகிறது. அதனால்தான் 'அறக்கருத்துக்கள் நிறைந்த இலக்கியங்களைக் கொண்ட தமிழர்கள் 'அறவர்' என்று அழைக்கப்பட்டதாக டாக்டர் குண்டர்ட் குறிப்பிட்டுள்ளார்.[2]

### தமிழில் நீதி

சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் தலைதூக்கிய போதுதான் நீதி என்ற சொல்லாட்சியும் தமிழில் வழங்கத் தொடங்கியிருக்கிறது. குறிப்பாக கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கொங்குவேளிர் என்ற புலவரே முதன்முதலாக,

*'நீதிப் பெருமை நூலோதியு மோரோய்'* (பெருங். *2:1:26*)
*'நிலைமைக் கொத்த நீதியை'* ( ,, *1:36:327*)

என்று நீதி எனும் சொலலாட்சியை வழங்கியுள்ளார். தேவாரத்தில்,

*'நீதி பேணுவீர்'* *(1:96:3)*
*'நீதி நின்னையல்லால் நெறியாதும் நினைந்தறியேன்'* *(111:55:6)*

என்று சம்பந்தரும், திருவாசகத்தில்,

*'நீதியிலேன்'* (*602*)

என்று மாணிக்கவாசகரும்,

*'நீதியான கேள்வியார்'*

என்று திவ்யபிரபந்தத்திலும் (760) நீதி எனும் சொல்லாட்சிகள் வந்துள்ளன.

அவற்றிற்கு முற்பட்ட இலக்கியங்களில்,

*'அறம்பாடிற்றே ஆயிழை கணவ'* *(புறம். 34)*

என்று நீதி எனும் சொல்லாட்சிககுப்பதிலாக அறம் எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. நீதி இலககியம் என்றழைக்கப்படும் திருக்குறளிலும் நீதி எனும் சொல ஆட்சி செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக அறம் என்ற சொல்லும நயன் என்ற சொல்லும் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கில் பதினொரு நூல்கள் நீதி நூல்களாக உள்ளன. சமய மறுமலர்ச்சிக்குப் பிறகு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, உலகநீதி, நறுந்தொகை, நன்னெறி, அறநெறிச்சாரம் நாலடியார் போன்ற நீதி நூல்கள் தோன்றின. அவற்றுள் அறத்தைப்பாடிய தமிழகத்தின் சாப்போ (Sappho) என்று போற்றப்படும் ஔவையார் எழுதியுள்ள நீதி நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.[3]

ஔவையார்

தமிழை அறிந்தவர்கள் ஔவையாரையும் அறிந்திருப்பார்கள். 'ஔவை வாக்கு' தமிழர்களுக்கு வேதவாக்காகும். ஔவை என்பதற்குத் தமிழில் மட்டுமன்றி தெலுங்கு கன்னடமொழிகளிலும் அன்னை, பாட்டி, கிழவி என்பனவே பொருள்களாக வழங்குகின்றன. 'அம்மை என்பதன் திரிபாகிய அவ்வை என்ற சொல்லுடன் சிறப்புணர்த்தும் விகுதியாகிய ஆர் சேர்ந்து ஔவையார் (அம்மையார்) என்னும் சொல், பெண்களில் உயர்ந்தவரைக் குறிக்க வழங்கியிருககிறது.[4]

ஔவையார் வரலாறு

ஔவையார் எனும் பெயர் இலக்கியங்களில் பல்வேறு காலங்களோடு தொடர்பு கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் நற்றிணையில் ஏழும், குறுந்தொகையில் பதினைந்தும், அகநானூற்றில் நான்கும் புறநானூற்றில் முப்பத்து மூன்றும் (அதியமான் பற்றி மட்டும் 23) ஆக ஐம்பத்தொன்பது பாடல்களை ஔவையார் பாடியுள்ளார்.[5] அவைதவிர,

*'அணுவைக் குறுகத் தரித்த குறள்'*

*'இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி*
*விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்*
*பஞ்சமே யானாலும் பரமனவ னுக்கன்னாய்*
*நெஞ்சமே யஞ்சாதே நீ'*

*'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி'*

*'உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை*
*ஒப்பிக்கும் என்றன் உள்ளம்'*

*'மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று*
*மிதியாமை கோடியுறும்'*

*'அற்றதலை போக அறாததலை நான்கினையும்*
*பற்றித் திருகிப் பறியேனோ—வற்றன்*
*மரமனையா னுக்கிந்த மானை வகுத்த*
*பிரமனையான் காணப் பெறின்'*

*'அறம்செய விரும்பு'*

எனும் பாடல் வரிகளோடும் ஔவையார் பெயர் தொடர்பு கொண்டுள்ளதால் அவர் ஒருவர் தானா, ஒன்றுக்கும் மேற்பட்டவரா என்பது பற்றிப் பல்வேறு செய்திகள் உள்ளன.

ஔவையாரின் பிறப்பு பற்றி திருவள்ளுவர் கதை, கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, பன்னிரு புலவர் சரித்திரம் ஆகிய நூல்கள் பல்வேறு கதைகளைக் கூறு கின்றன, இவைதவிர,

*'முன்னௌவை கலிவருட மூன்றாவ தாயிரத்தால்*
*பின்னௌவை நான்காவ தாயிரத்திற் பிறந்திட்டாள்'*

என்று இரண்டு ஔவையார்கள் இருந்ததாகக் கூறி, ஔவையார் பெயரில் உள்ள இலக்கியங்களை அவர்கள் இருவருக்கும் பங்கு போட்டுக் கூறினர்.[6]

அத்துடன் திருக்குறளைத் தவிர வேறொன்றும் எழுதாதத் திருவள்ளுவரை 'ஞானவெட்டி' நூலுக்கு ஆசிரியராக்கியிருப்பதைப் போன்று ஔவையார் பெயரையும் பல்வேறு கால இலக்கியங் களுக்கு ஆசிரியர் என்றாக்கி விட்டனர் என்றும் சிலர் கருது கின்றனர்.[7] மேலும் நீதி நூல் எழுதிய ஒப்புமை கருதியும், சுனித் குமார் சாட்டர்ஜி போன்றோர் ஔவையாரைத் திருவள்ளுவரின் உடன் பிறப்பாககினர்.[8]

இவ்வாறு பிரச்சினைக்குட்பட்ட ஔவையாரின் பெயரில் சிற்றிலக்கிய வகையில் அசதிக்கோவை, பந்தனந்தாதி பெட்டகம் நீதி இலக்கிய வகையில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, கல்வியொழுக்கம், சமயநூல்களுள் ஞானக்குறள், விநாயகர் அகவல், கணபதி ஆசிரிய விருத்தம், உயர்ஞான சர நூல் சாத்திரம், விநோதரசமஞ்சரி கூற்றின்படி பிடகநிகண்டு, நவமணிமாலை, தரிசனப்பத்து, அருந்தமிழ்மாலை, நன்னூற் கோவை, நான்மணிக்கோவை, தனிப்பாடல்கள் ஆகியவை காணப் படுகின்றன.

இவ்விலக்கியங்களையும் காலவேறுபாடுகளையும் கருத்தில் கொண்டு, சங்ககால ஔவை, இடைக்கால ஔவை, சோழர்கால ஔவை, சமயப்புலவர் ஔவை, பிற்கால ஔவை I, பிற்கால ஔவை II என ஆறு ஔவையார்கள் இருந்திருக்கிறார்களென்று மு. அருணாசலம் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.[9]

எனினும் ஔவையார் என்றதும் நமது நினைவுக்கு வருவது ஒரே உருவம்தான். தமிழர்தம் உள்ளங்களில் வீற்றிருக்கும் ஔவையாருக்குத் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் தில்லை விளாகத்திற்குத் தெற்கே துளஜாபட்டினம் என்ற ஊரில்தான் கோயில் உள்ளது.[10]

## நீதிநூல் ஔவையார்

ஔவையார்களுள் நீதி நூல்களை எழுதிய ஔவையாரே தமிழர்களால் பெரிதும் போற்றப்படுகிறார். உ.வே. சாமிநாதையர் தனது சிலப்பதிகாரப் பதிப்பில், 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே' எனும் பகுதியின் அடிக் குறிப்பில் மூதுரை-27, நான்மணிக்கடிகை-84 என்று எழுதி வைத்ததைக் கொண்டு, இளங்கோவடிகள் ஔவை யாரின் கருத்தினை எடுத்தாண்டிருக்கிறார் எனும் கருத்தில் நீதி நூல்களைச் சிலப்பதிகாரக் காலத்திற்கும் முன்னதாக சிலர் கருதினர்.[11]

ஆனால் 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி' எனும் மூதுரைப் பாடல் சங்ககாலத்தது என்றால் வான்கோழி சங்க காலத்தில் இருந்திருக்க வேண்டும். வான்கோழி வெள்ளையர்களால் 16-ஆம் நூற்றாண்டில்தான் இந்தியாவிற்குக் கொண்டு வரப் பட்டது என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார். எனவே மூதுரையில் காணப்படும் இப்பாடல் 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்றாகிறது.[12] ஆகவே நீதி நூல்களின் காலம் பின்னுக்குக் கொண்டுவரப்படுகிறது. காலக் குறிப்பில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதிநூல்களை எழுதிய ஔவை யார் உலகியல் அறிவும், கலைகளில் தேர்ச்சியும் தெளிவும் உடை யவர் என்பதில் எவர்க்கும் இருவேறு கருத்துகள் இல்லை எனலாம்.

**ஆத்திசூடி**

கட்டளை மொழிகளால் இரண்டிரண்டு சொற்களில் தமிழ் நெடுங்கணக்கு முறையில் அமைந்துள்ள பாடல்களாக ஆத்திசூடி அமைந்துள்ளது. அதிலும் மொழி முதலாக வரும் தமிழ் எழுத்துகளை முதல் எழுத்தாகக் கொண்டும், அவ்வாறு வரப்பெறாத எழுத்துகளை இரண்டாவது எழுத்துகளாகக் கொண்டும் அமைந்துள்ளது. இது இதன் காப்புச் செய்யுளின் முதலிரு சொற்களையே பெயராகக் கொண்டு 107 பாடல்களோடு உள்ளது.

**சிறப்பும் வரலாறும்**

தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தொடங்கும் குழந்தைகள் அனைவருடைய பாடநூல்களிலும் இடம்பெறும் சிறப்பினை ஆத்திசூடி பெற்றுள்ளது, இங்கிலாந்து நாட்டில் அகரவரிசைப் பட்டியல் பாடநூல்கள் (Alphabetical Catalogue of Poetry) போன்று தமிழில் உள்ள தனிநூல் ஆத்திசூடியாகும்.[13]

கிறித்தவ சமயத்தினரும் தங்கள் பள்ளிகளில் சனிநீராடு, திருமாலுக் கடிமைசெய், தேசத்தோடொத்துவாழ், தையல்சொற் கேளேல், நாடொப்பனசெய், புகழ்ந்தாரைப் போற்றிவாழ், மெல் லினல்லாள் தோள்சேர், ஊருடன் கூடிவாழ், எனும் பாடல்களை நீக்கிவிட்டு மற்றவற்றைப் பாடநூல்களில் சேர்த்துக்கொண்டனர்.[14]

'*தமிழ்மகள் சொல்லிய சொல்அமிழ்தம்*'

என்றும்

'தமிழ்நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக் கொள்ளவல்லது. ஔவைப் பிராட்டியின நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம். அது மீட்டும் சமைத்துக் கொள்ளமுடியாத தனிப் பெருஞ் செல்வம்'[15]

என்றும் பாரதி கருதிய பெருமைக்கு ஆத்திசூடி உரியதாகும்.

சென்ற நூற்றாண்டினரான வேதநாயகம்பிள்ளையின் நீதிநூல் இந்நூற்றாண்டைச் சேர்ந்தவர்களான பாரதியின் புதிய ஆத்திசூடி, பாரதிதாசனின் ஆத்திசூடி, இளையபாரர் ஆத்திசூடி, வாணிதாசனின் புதிய ஆத்திசூடி, சுத்தானந்த பாரதியாரின் பொதுநெறி, டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் தமிழ்சூடி, டாக்டர் ந. சஞ்சீவியின் பொதுவுடைமை ஞான அறிவுசூடி—ஆத்திசூடி,

தமிழண்ணலின் ஆய்வுசூடி, டாக்டர் கு. மோகனராசுவின் குறள் தரும் ஆத்திசூடி, நாரா. நாச்சியப்பனின் நெறிசூடி, ச. மெய்யப்பனின் அறவியல்சூடி, ரெ. முத்துக்கணேசனின முத்துச்சூடி, பொ. கு. வரதாசனின் வரததாசன் ஆத்திசூடி, என்று கால வளர்ச்சிக்கேற்ப எழுநதுள்ள பல்வேறு நூல்களுககு ஔவையாரின் ஆத்திசூடி, முதல் நூலாக விளங்குகிறது.[16] அத்துடன், 'அறம் செய விரும்பு' என்று அறமும், 'பொருள்தனைப் போற்றி வாழ்' என்று பொருளும், 'மெல்லியலாள் தோள் சேர்' என்று இன்பமும், 'வீடுபெற நில்' என்று வீடுமாகிய நாற்பொருள் பயக்கும் தன்மையாகவும் ஆத்திசூடி விளங்குகிறது.

## ஆத்திசூடி உரை வரலாறு

ஆத்திசூடி எளிமையாய்த் தோன்றினும் சிந்திக்கவல்லார்க்கு மாபாடியம் போனறு பல விரிவிரைகளை அது ஏற்கும் தகுதி வாய்ந்தது.[17] அதனால் ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடித் திறவு கோல், ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள் எனப்பல நூல்கள் ஆத்திசூடியை விளக்கவந்தன.

அவைதவிர ஆத்திசூடிக்கு அறிஞர்கள் பலர் உரை எழுதி உள்ளனர். அவற்றுள் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் எழுதிய பாலபாடமும், இராமாநுசக்கவிராயர் எழுதிய பதவுரையும், அரியூர் சுவாமிநாத ஐயரால் எழுதப்பட்டு, உ. வே. சாமிநாத ஐயரால் பார்வையிடப்பட்டு 1898-இல் வெளிவந்துள்ள விருத்தியுரையும், இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளது ஆதீனத்தைச் சேர்ந்த வேதாந்தியால், வேதாந்தத் தத்துவப்படி வெளிப்படை, உள்ளுறைப் பொருள்களோடு 116 பக்கங்களில் எழுதி வெளியிடப்பட்டுள்ள உரையும், மாகறல் கார்த்திகேய முதலியாரின் ஆத்திசூடி, முதற் சூத்திர விருத்தி உரையும், ஆத்திசூடியில் உள்ள 13, 31, 45, 51, 58 ஆகிய எண்களுடைய பாடல்களுக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் எழுதிய உரையை மறுத்து, செந்தமிழ் இதழின் ஆறாம் தொகுதியில், 'ஔவையார் நீதி மொழியுரை மயக்கம்' எனும் தலைப்பில் மு. சு. பூரணலிங்கம் பிள்ளை எழுதியுள்ள உரையும் குறிப்பிடத்தக்கனவாகும்.[18]

## பரிமேலழகர் உரை

ஆத்திசூடிக்குப் பரிமேலழகர் பெயரில் உரை இருப்பதாக மேற் குறிப்பிட்டுள்ள உரையாசிரியர்கள் எவரும் குறிப்பிடவில்லை,

சென்னை அரசினர் கிழக்கியல் சுவடிகள் நூலகத்தில், 'ஆத்தி சூடி பரிமேலழகர் உரையுடன்' எனும் தலைப்பிட்ட முதல் ஓலை யுடன் கூடிய ஓலைச்சுவடி கிடைத்தது.[19] அதில் ஆத்திசூடிக்கு இதுவரை வெளிவந்துள்ள உரைகளிளின்றும் வேறுபட்ட உரை, தக்க இடங்களில் பொருத்தமான குறட்பாக்களுடன் எழுதப் பட்டுள்ளது.

ஓலைச்சுவடியில் றகர, ரகர, லகர, ளகர, ழகர, ணகர, நகர, னகர வேறுபாடுகளும், ஆத்திசூடிப்பாடல்களுக்குப் பல்வேறு பாடபேதங்களும், பலபிழைகளும் உள்ளன. சுவடியில் உள்ளவற்றை அப்படியே தரவேண்டும் எனும் காரணத்தாலும், அக்காலத்தில் எழுதியவர்களின் கல்வியறிவு, மொழிநடை ஆகியவை ஆய்விற்குப் பயன்படும் எனும் காரணத்தாலும் அவை அப்படியே அடிக்குறிப்பில் தரப்பட்டு, திருத்தமான பாடல்கள் நூலின் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளன. சுவடி எழுதப்பட்ட காலத்தை அறிந்து கொள்ளும் வகையில் எந்தவித குறிப்பும் இடம் பெறவில்லை,

**பரிமேலழகர் வரலாறு**

கி.பி. 13-ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் பரிமேலழகர்,

'*போற்றுதமிழ்க் கூடல் பரிமேலழகியான்*' (பெருங் 1548) எனும் பாடல் வரியாலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பரிமேலழகர் நினைவாக உள்ள பல கோவில்களினாலும் மதுரையைச் சேர்ந் தவர் என்று சிலர் கருதுகின்றனர்.

> '*திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன் வள்ளுவன் நூற்கு*
> *வழிகாட்டினான்*'

எனும் தொண்டைமண்டலச் சதகத்தின் (41) பகுதியாலும் 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்த விசய கண்ட கோபாலன் எனும் தெலுங்கச் சோழனின் 22-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1272) எழுந்த கல்வெட்டில் காணப்படும்,

> '*வண்டுவரப் பெருமாளான பரிமேலழகியான*
> *பெருமாள் தாதன்*'

எனும் வரிகளாலும், மு. இராகவ ஐயங்காரின் சாசனத் தமிழ்க்கவி சரிதத்தின் கூற்றுப்படியும் பரிமேலழகர் காஞ்சிபுரத்தைச் சேர்ந் தவர் என்று வேறு சிலர் கருதுகின்றனர்,[21]

**பரிமேலழகரின் பெயர் வேறுபாடுகள்**

*'வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்*
*விதிமுறை பயின்ற நெறியறி புலவன்* (பெருங். 1543)

என்று போற்றப்படும் பரிமேலழகழர், பரிமேலழகியார், பரிமேலழகியான், பரிமேலழகரையன், என்று பலவாறு அழைக்கப்பட்டுள்ளார்.[22] சிவஞான முனிவர் இவரைப் பரிமேலழகியார் என்றே குறிப்பிட்டுள்ளார். இரா. இராகவ ஐயங்கார் பரிப்பெருமாளைப் பரியென்று கொண்டு அவரினும் சிறந்த உரையாசிரியர் எனும் பொருளில் பரிமேலழகர் என அழைக்கப்பட்டிருக்கலாமென்று ஊகம் செய்துள்ளார். பரிமேலழகர் என்ற பெயர் திருமாலுக்கு உரியது என்றும், திருமால் பரிமேல் அழகராகவும் யானைமேல் அழகராகவும் எழுந்தருளுவது இன்றைக்கும் வைணவக் கோயில் வழக்கம் என்றும் சிலர் பெயர்க்காரணம் கூறுகின்றனர்.[23]

**உரையாசிரியர்**

திருக்குறளுக்கு உரை எழுதி பெருமை பெற்ற பரிமேலழகர் திருமுருகாற்றுப்படைக்கும் உரை எழுதியுள்ளதாகக் கூறி வெளியிட்டுள்ளனர் ஆனால் பத்துப்பாட்டைப் பதிப்பித்த உ. வே. சாமிநாத ஐயர் அவ்வுரையை 'வேறுரை' என்றே குறித்துள்ளார்; எனினும்

*'அரிமேல் அழகுறூஉம் அன்பமை நெஞ்சப்*
*பரிமேல் அழகன் பகர்ந்தான்—விரிவுரைமூ*
*தக்கீர்இஞ் ஞான்று தனிமுருகாற் றுப்படையாம்*
*நக்கீரன் நல்ல கவிக்கு'*

எனும் பழைய பாடல் ஒன்று திருமுருகாற்றுப்படைக்குப் பரிமேலழகர் உரை எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளது.[24]

*'நீள்நிலம் கடந்தோன் தாள்தொழு மரபின் பரிமேலழகர்'*

பரிபாடலுக்கும் உரை எழுதியுள்ளார். பரிமேலழகர் தான் எழுதிய உரைகளில் தனது சமயப்பற்றை ஆங்காங்கே புலப்படுத்தியுள்ளார். சான்றாக,

'மடியிலா மன்னவன்' எனும் குறளில் (610) அடியளந்தான் என்பதற்கு, 'தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்' என்று பொருள் கூறியுள்ளார். 'தமாரைக் கண்ணான் உலகு' எனும் குறளுக்கு (1103) 'துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்' என்று பொருள் கூறியுள்ளார், மேலும்

'இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர். தாமரைக் கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன்மை அறிக' என்று பிறர் கூற்றை மறுத்துள்ளார். 'பற்றற்ற கண்ணே' எனும் குறள் (349) உரையில் 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்று திருவாய் மொழியிலிருந்தும் (1, 2, 5) 'ஆரா இயற்கை' எனும் குறள் (370) உரையில், 'நன்றாய் ஞானம் கடந்து போய்' என்ற திருவாய்மொழிப்பாடல் (78-6) முழுவதையும் மேற்கோள் காட்டியுள்ளார். பொருட்பால் இறைமாட்சியின் தொடக்கத்தில், 'திருவுடை மன்னனைக்காணில் திருமாலைக் கண்டேனே என்னும் என்று பெரியாரும் பணித்தார்' என்று நம்மாழ்வார் பாடலை (4-4-) எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள பரிமேலழகரின் உரைப்பகுதிகளிலிருந்து அவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர் என்று தெளிவாகிறது.[25]

## ஆத்திசூடிக்குப் பரிமேலழகர் உரை

இப்பின்புலத்தில் ஆத்திசூடிக்குக் கிடைத்துள்ள பரிமேலழகர் உரையை ஆராய்ந்து பார்த்தால் திருவள்ளுவருக்கு உடன் பிறப்பாக ஔவையாரைக் கருதியது போன்றும், பல இலக்கியங்களுக்கு ஔவையார் பெயரைச் சூட்டியது போன்றும், ஞானவெட்டியான் பாடலைத் திருவள்ளுவருடன் தொடர்புடுத்தியது போன்றும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் ஆத்திசூடியுடனும் தொடர்பு படுத்தப்பட்டிருக்கலாமென்று எணணத் தோன்றுகிறது. இருப்பினும் ஆத்திசூடிக்குப் புதிதாக ஆனால் பழைய உரை ஒன்று திருக்குறள் எடுததுககாட்டுகளுடன கிடைத்திருப்பது தமிழுக்கு வரவு எனும் கருத்தில் பதிப்பிககப்படுகிறது.

## புதிய உரை

ஆத்திசூடிக்கு இதுவரை உள்ள உரைகளினின்றும் வேறுபட்டும், புதிய செய்திகளைக் கொண்டும், புதிய விளக்கங்களைக் கொண்டும் பரிமேலழகர் உரை விளங்குகின்றது. மேலும் உரையின் பொது இலக்கணங்களான தொகுத்துக் கூறுதல், விரித்துக் கூறுதல், அரும்பொருள் விளக்கம் தருதல், அருநதொடர் நயம் பாராட்டல், உவமைக்கு விளக்கம் தருதல், பழமொழிக்கு விளக்கம் தருதல், பாடபேதம் காட்டுதல், பிறர் உரை மறுத்தலும் ஏற்றலும், முன்னொடுபின் மலையாமை காட்டுதல், உரையில் நூலின் பகுதியை மேற்கோள் காட்டுதல், உரையில் பிற நூல்களை மேற்

கோள் காட்டுதல் இலக்கணக் குறிப்புகள் தந்து விளக்குதல்[28] என்ற பலவகைப் பண்புகளில் சிலவற்றைக் கொண்டும் பரிமேலழகரின் ஆத்திசூடி உரை விளங்குகிறது.

1. கொடுக்கக் கூடியதை ஒளிக்கலாகாது என்ற வகையிலேயே பலரும் பொருள் கூறியுள்ள 'இயல்வது கரவேல்' எனும் பாடலுக்கு (3) 'இயலாகிய நற்கருமங்களை ஒளியாதே என்பதாம். இதுவன்றித் தனக்கு இயன்ற மாத்திரம் முன் சென்மத்திலே தான் செய்த நன்மைக்குத் தக்கதாகக் கர்த்தா கொடுத்த பொருளை இளைத்து வந்து கேட்ட பேர்க்கு இல்லையென்று ஒளியாமல் கொடுக்கவேணும் என்று சொல்லுவாரென்றவாறு' என்று பரிமேலழகர் உரை பொருள் கூறுகிறது.

2. கணக்கையும் இலக்கணத்தையும் கற்க வேண்டும் என்று பொருள் கூறப்பட்டுள்ள, 'எண்ணெழுத்து இகழேல்' எனும் பாடலுககுப் (7) பரிமேலழகர் உரையில், 'எண்ணாகிய சோதிடமும் எழுத்தாகிய தோத்திரமும், எண்ணாகிய கணக்கும், எழுத்தாகிய படிப்பும் எந்நேரமும் இடைவிடாமல் பார்த்துப் படித்து அதிலே சொன்னபடி நடந்து கொள்ள வேணுமெனபதாம்,' என்று கூறப் பட்டுள்ளது.

3. தானியத்தைக் குறைத்து விற்கலாகாது என்று பொருள் கூறப்பட்டுள்ள, 'அஃகஞ் சுருக்கேல்' என்பதற்குத் 'தானிய விலைகளைக் குறைக்க வேண்டாம். தானிய விலைகளைக் குறைத்தால் சகலசனங்களும் திகில் படுவார்கள். அந்தத் திகிலாகிற நெருப்பு தானியம் குறைத்தவனுடைய செல்வத்தையும் அவன் வம்சத்தையும் சுட்டெரித்து நிர்மூலமாக்கி விடும் ஆதலால் தானிய விலைகளைக் குறைக்கலாகாதென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

4. ஒன்றைப் பார்த்து வேறு ஒன்றைச் சொல்லாதே எனும் பொருள் தரும், 'கண்டொன்று சொல்லேல்' எனும் பாடலுக்குப் (14) பரிமேலழகர் உரையில், 'தான் கண்டதே காட்சியாய் தன்னை அழுத்தினதே சமுத்திரமாய் அவர்களுக்குப் பயனில்லாத வார்த்தைகளைச் சொல்ல வேண்டாமென்பதாம்' என்று உரை கூறப் பட்டுள்ளது.

5. 'ஙப்போல் வளை' எனும் பாடலுக்கு (15) 'உலகத்தின் கண் தான் ஐசுவரியனாயிருந்தால், தன் சுற்றத்தாராகிய தாய் வர்க்கம், தகப்பன் வர்க்கம், தன்பெண்சாதி வர்க்கம், மற்றுமுண்டான சுற்றத்தாரையெல்லாம் விசாரித்து அதிலே இளைத்த பேர்களுக்கு அன்னவஸ்திரங்களைக் கொடுத்து தன்னாலே ஆன தொழில் துறைகளிலே வைத்துக் கூட்டி வளைத்துக்கொண்டு போஷித்துக் காக்க வேண்டுமென்பதாம். அதெப்படியென்றால் ஙப்போல் வளை என்ற சொல்லுக்கு விரிவு சொல்லுகிறோம். ங, ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ, ங் என்று சொல்லப்பட்ட இந்தப் பதின்மூன்று எழுத்திலேயும் ஒரு எழுத்து இங்கன்னாவெனும் எழுத்தொன்றுமேயிட்டு கவிகளிலே வழக்கமாய் தன்னினமான மற்றப் பனிரெண்டெழுத்தையும் காத்து ரட்சித்தாப் போலே உலகத்திலே ஒருத்தர் நன்றாயிருந்தால் தன் சுற்றத்தாரையெல்லாம் காக்கவேணுமென்பதாம். இதை ஙப்போர் வளை என்பாரும் உளர். ஙப்போர் வளையாவது உயித்தியங்களிலே தலைமையான உயித்தியம் குதிரைச்சண்டையாதலால் குதிரைச்சண்டையே செய்யவேணுமென்று சொல்வாருமுளர்' எனும உரை எழுதப்பட்டுள்ளது.

6. சனிககிழமை தோறும் எண்ணெய் இட்டுக்கொண்டு தலைமுழுகவேணடும அலலது குளிர்ந்த நீரில் குளிககவேணடும் எனறு பொருள கூறப்படும 'சனி நீராடு' எனும் பாடலுககு (16) 'சனியாவது காரி, காரியாவது பொழுது விடிகிற காலத்திற்கு முன்பு தினமானமும் ஸ்நானம் பண்ணவேணுமென்பதாம். இதற்கு விரிவு தன்தன நேமாதிக கிரமங்களை அனுட்டித்திருக்கின்ற பேரும தன் சரீரததைப போஷிததுக் கொள்ள வேணடினபேரும் ஆரோக்கியம் வேண்டின பேரும் தினமானமும் அருணோதய காலமாகாமுன் பிரத்கால ஸ்நானஞ்செய்து அவரவர் கிரமஙகளை முடித்துககொள்ள வேணுமெனபதாம். இதைச் சனிக்கிழமையிலே அறபஙகி ஸ்நானம் பணணவேணுமென்று சொல்வாருமுளர்' என பரிமேலகழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

7. வீட்டைப் பெரிதாகக் கட்டலாகாது என்று பொருள் கூறப்படும் 'இடம்பட வீடு எடேல்' எனும் பாடலுக்கு (18) 'வீடானது தலைவாசலுககு வலதுபக்கம் இடம்பெரிதாய் இடது பக்கம் இடம் சிறிதாய்ககட்ட வேணுமென்பதாம். பின்னையும் டகாரத்தைப்போலே வீடு இருபக்கமாகக் கட்டப்போகாது பினனையும் இடம் பெரிதாய் மிகுதியும் வெகு பொருளை நேர்ந்து கட்டாமல்

இலக்கணமாக மனைக்கு நாலுபக்கமுஞ் சுற்றிவரச் சுருக்கத்திலே வீடுகட்டிக் கொண்டு இல்லற முறைமை வழுவாமல் வாழவேணு மென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

8. அந்தந்தத் தானியங்கள் விளையுங் காலத்திலே பயிர் செய்ய வேண்டும் எனும் கருத்தமைந்த 'பருவத்தே பயிர் செய்' எனும் பாடலுக்கு (22) 'பயிரிடுகிற காலமறிந்து காலத்திற்கேற்ற பருவமறிந்து, அந்தப் பருவத்துக்குத் தக்கன பயிரிடவேணும். பருவ மறிந்து காலத்துக்கேற்ற பயிரிடாமல் சோம்பலாயிருக்கும் சம்சாரி குடித்தனம் இளைத்து மாடுகன்று மாண்டு மைகாணி பூமியெல்லாம் இழந்து தரித்திரனாய் அன்னவஸ்திரங்களுக்குக் கஷ்டப்படுவன். ஆதலால் காலந்தப்பாமல் பிரயாசைப்பட்டுப் பருவத்திலே பயிரிட்டு உண்ணவேணுமென்பதாம்' என்று சுவடியில் கூறப்பட்டுள்ளது.

9. உன் பொருள் பிறருக்கும் உரியதாயிருக்க வாழ வேண்டும் எனும் கருத்துடைய 'கிழமைப் படவாழ்' எனும் பாடலுக்கு (34) 'தான் வாழ்நாளற்று மாண்டு போனாலும் தான் செய்யும் நன்மை உலகத்தின் கண் நாளுக்குநாள் மேன்மேலும் விளங்கத் தக்க நன்மையாக வாழவேணுமென்பதாம்' என்று சுவடியில் உரை கூறப்பட்டுள்ளது.

10. கெட்ட ஆட்டங்களில் பயிலலாகாது என்று பொருள் கூறப்பட்டுள்ள 'கோதாட் டொழி' எனும் பாடலுக்கு (42) 'பிள்ளை சீராட்டுகிறதை ஒழித்துவிடு. சீராட்டினால் அந்தப் பிள்ளைகள் சிறுபிள்ளைகளான படியினாலே பயம்போம். பயமிலலாவிட்டால் அந்தப்பிள்ளைகள் புத்திவித்தை கற்று முன்னுக்கு வராமல் யார் சொல்லும் கேளாமல் கெர்விச்சுக கெட்டுப்போம். ஆதலால் அந்தப் பிள்ளைகளைச் சீராட்டி செல்வம்பாராட்டிய தாய் தகப் பனுக்கு மகத்தாகிய பாவமும் பழியும் வசையும் வருமென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

11. சூதாடக் கூடாது என வலியுறுத்தும் 'சூது விரும்பேல்' எனும் பாடலுக்கு (48) 'சூதாட நினையாதே. சூதாடினால் ஒன்று வர நூறு நஷ்டமாம். அதினாலே மனது அதில் அழுந்தி அதை விட்டுப பிரியாமல் துட்டாசை பற்றி அதிலே தொழிலாய மற்றொரு தொழிலின் பேரிலே சிந்தனையில்லாமல் பிரமை கொண்டு திரியப் பண்ணும். ஆதலால் உலகத்தின் கண் அவனிடத்திலே லட்சுமி இராள. மூதேவி குடியிருப்பாளென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

12. சொல்ல வேண்டுவதை மறவாமற் சொல்ல வேண்டும் எனும் பொருள் தரும் 'சொற்சோர்வு படேல்' எனும் பாடலுக்கு (52) தான் முன் சொன்ன சொல்லைப் பின்பு இல்லையென்று மாறுபாடாகச் சொல்லி, அந்தச் சொல்லினாலே திருடனாகப் போகவேண்டாமென்பதாம்' என்று சுவடியில் கூறப்பட்டுள்ளது.

13. திருமாலைத் தொழுதுவணங்க வேண்டும் என்று எவரும் இயல்பாகப் பொருள் கொள்ளும், 'திருமாலுக் கடிமை செய்' எனும் பாடலுக்கு (56) 'திருவென்னும் மெஞ்ஞான சத்திக்கு மாலென்னும் ஆசையாகிய சர்வக்கியானான சர்வேசுவரனுக்கே அடியனாய் எந்நேரமும் அந்தச் சருவேசுவரனையே தோத்திரம் செய்துகொண்டு இருக்கவேணுமென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

14. யாதொரு செயலையும் சிந்தித்துச் செய்ய வேண்டும் எனும் பொருளுடைய 'தூக்கி வினை செய்' எனும் ஆத்திசூடிப் பாடல், சுவடியில் 'தூக்கி வினைசெய்யேல்' என்று இடம் பெற்றுள்ளது. அப்பாடலுக்கு (59) ஒருவருக்கு ஒரு உபகாரம் செய்யுமிடத்துத் தனக்குப் புண்ணியமே காரணமாகப் புண்ணியத்தைக் குறித்துச் செயய வேணுமேயலலாமல், தனக்குப் பிரதி உபகாரம் இவன் இன்னமார்க்கத்திலே செய்வானென்று நினைத்துத் தனக்குப் பிரதி உபகாரம் செய்யுமிடத்திலே செய்ய வேண்டாம். அஃது உபகாரமல்ல வென்பதாம்' என்று உரை கூறப்பட்டுள்ளது.

15 கடவுளை நிந்திக்கலாகாது எனும் பொருள்தரும் 'தெய்வம் இகழேல்' எனும் ஆத்திசூடிப் பாடலுக்கு (60) தான் எந்தச் சமயமோ, அந்தச் சமயத்துத் தெய்வமே தனக்குப் பார்த்து வருமென்று கெட்டியாய் நம்பி, மற்றதொரு சமயத்துத் தெய்வங்களை இகழ்ந்து தூஷணிக்காமலிருக்கவேணுமென்பதாம்' என்று சுவடியில் உரைகூறப்பட்டுள்ளது.

16. நோய் உண்டாவதற்குக் காரணமானவைகளைச் செய்யக் கூடாது எனும் பொருள்தரும், 'நோய்க்கு இடம் கொடேல்' எனும் பாடலுக்கு (75) தன்தன் சரீர நேர்மையறிந்து தன் சரீரததிற்கு ஒத்தப்படிக்குக் காலந்தப்பாமல் உண்ணல், உடுத்தல் முழுகல் இவை முதலானவைகளினாலே திதந்தப்பாமல் சரீரத்தைப் போஷித்துக்கொண்டு நோயான பிணிக்கு இடம் கொடாமல் நடந்து கொள்ள வேணுமென்பதாம்' என்று உரை கூறப்பட்டுள்ளது.

17. அடுத்தவர்களைக் காப்பாற்ற வேண்டும் எனும் கருத்தமைந்த 'புகழ்ந்தாரைப் போற்றிவாழ்' எனும் பாடலுக்கு (80) 'உலகத்தின் கண் சர்வசுகியனான சாவேசுவரனை எந்நேரமும் அன்புடனே புகழ்ந்து கொண்டாடப்பட்ட அடியார்களை எந்நாளும் தொழுது போற்றி வாழவேணுமென்பதாம். கர்த்தாவைத் தான் காணாதபடியினாலே, கர்த்தாவின அடியார்களைக் கண்டு போற்றினால் கர்த்தாவைக் கண்ட பலனைக் கொடுக்கும். அந்த கர்த்தாவும் அடியார்களிடத்திலே இருத்தலால் இதைத்தன்னைப் புகழ்ந்தாரைத்தான் போற்றி வாழவேணுமென்று சொல்லுவாருமுளர்' என்று உரை எழுதப்பட்டுள்ளது.

18. மனைவியோடு மகிழ்ந்திருக்க வேண்டும் எனும் பொருளுடைய 'மெல்லியாள் தோள் சேர்' எனும் பாடலுக்கு (93) 'தான் விவாகம் பண்ணின மெல்லியலான தன் பெண்சாதி தோள் சேர்ந்து தன் தாரமன்றிப் பிறர்தாரப் புத்திரனாய் இருக்க வேணுமென்பதாம்' என்று பரிமேலழகர் உரையில் கூறப்பட்டுள்ளது.

19. பொது மகளிர் வீட்டிற்குப் போகாதே எனும் கருத்தமைந்த 'மைவிழியார் மனையகல' எனும் பாடலுக்கு (95) 'மைவிழியாராகிய வேசியர்கள் வீட்டுவழி சேராதே. அந்த வேசியரைச் சேர்ந்தால் கையிலிருந்த திரவியமும் போய், ககனமும் போய் நல்லோர்கள், பெரியோர்கள், தாய், தகப்பன், குரு, தெய்வம், தன் மனிதர், மக்கள் என்கிற விசுவாசமும் போய், லட்சுமிகரமும் போய் நானாபிஎஷ்டனாய் மற்றதொரு சிந்தனையுமில்லாமல் அதுவே பிரமையாய் தரித்திரனாய்க் கெட்டுப்போவார்கள். ஆதலால் வேசியரைக் காமமோக வாஞ்சையினாலே விரும்பிச் சேரலாகாதென்பதாம்' என்று உரை கூறப்பட்டுள்ளது.

20. வீண்தர்க்கம் பேசலாகாது என்று பொருள் கூறப்பட்டுள்ள 'வாது முற்கூறேல்' எனும் பாடலுக்கு (99) 'ஒரு வருடனேயும் சாதிசமய ஆதிகளும், விருது விருதாவளிகளும் பேசாதே' என்று சுவடியில் உரை கூறப்பட்டுள்ளது.

21. மோட்சத்தை அடையும்படியான வழியிலே நடக்க வேண்டும் என்று பொருள் கூறப்பட்டுள்ள 'வீடு பெற நில்' எனும் பாடலுக்கு (101) 'உலகத்தின் கண் இன்னார் வீடு என்கிற பேர் போகாமல் எந்நாளும் எல்லோரும் சொல்லிக் கொண்டாடப்பெற்று வாழவேணும். அதுவன்றி வீடாகிய மோட்சவீடு பெறத்தக்க

எங்கெந்த வழிபாட்டிலே நின்று நடந்து கொள்ள வேணுமோ அந்த மார்க்கமான வழிபாட்டிலே நிற்க வேணுமென்பதாம்' என்று கூவடியில் உரை கூறப்பட்டுள்ளது.

உரைதரும் குறிப்புகள்

1. ஆத்திசூடி உரைமொழி நடைக்கும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரை மொழி நடைக்கும் வேறுபாடுள்ளது.

2. வைணவ மதததைச் சார்ந்தவராகக் கருதப்படும் பரிமேலழகரின் இயல்பிற்கு மாறாக, 'திருமாலுக்கு அடிமை செய' எனும் ஆத்திசூடிப் பாடலுக்குக் கூட சிவபெருமானுக்கு அடிமை செய் என்று பொருள்தரப்பட்டுள்ளது.

3. அளவுக்கதிகமாகப் பிறமொழிச்சொற்கள் கலக்கப்பட்டுள்ளன.

4. ஆத்திசூடிப் பாடல்களில் சிலவற்றிற்குத் திருக்குறள் எடுத்துக் காட்டப்படவில்லை.

5. உலகியலை ஒட்டியே உரை எழுதப்பட்டுள்ளது.

6. எதிர்பாராத வகையில் சிறப்பாகவும் கொண்டுகூட்டியும் பல பாடல்களுக்கு உரை எழுதப்பட்டுள்ளது.

முடிவுரை

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரே ஆத்திசூடிக்கும் உரை எழுதியிருக்கிறார் என்று உரையை வைத்து மட்டும் உறுதியாகக் கூற முடியவில்லை; எனினும் ஆத்திசூடிக்கு இதுவரை வழங்கிவரும் அனைத்து உரைகளினின்றும் வேறுபட்டும், சிறந்தும் பரிமேலழகர் பெயரில் உள்ள உரை விளங்குகிறது. திருமுருகாற்றுப்படைக்குக் காணப்படும் உரையாசிரியர் உரை எனும் பரிமேலழகர் உரைபோன்றும், ஆத்திசூடிக்குப் பரிமேலழகர் உரை காணப்படுகிறது. ஆனால் எப்படி திருக்கோவையாருக்குரிய உரை முதலில் நச்சினார்க்கினியருடையது என்று கருதிவந்து, பிறகு பேராசியருடையது என்று உறுதி செய்யப்பட்டதோ அப்படி ஆத்திசூடிக்குரிய இந்த உரைக்குரியவரையும் காலம் நமக்குக் காட்டும் என்று கருதலாம்.

## 17

### பதிப்பாய்வுரை பின் குறிப்புகள்

1. 'கலைக்களஞ்சியம்,' தொகுதி 6, ப. 503.
2. Cald well, R, 'A Comparative Grammary of Dravidian Laugueges,' P. 15.
3. க. த திருநாவுக்கரசு, 'திருக்குறள் நீதி இலக்கியம்,' ப. 344.
4. 'கலைக்களஞ்சியம்,' தொகுதி 2, ப. 754.
5. ம. பொ. சிவஞானம், 'ஔவை-யார் ?,' ப. 158.
6. அனவரத விநாயகம், 'ஔவையார் சரித்திரம்,' பக். 4, 19, 20.
7. மேற்படி நூல் ப. 16.
8. சுனித்குமார் சாட்டர்ஜி, 'இந்தியனிசமும் இந்தியாவின் கூட்டுப் பண்பும்,' ப. 102.
9. மு. அருணாசலம், 'தமிழ் இலக்கியவரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு,' ப. 499.
10. சரசுவதி சங்கராச்சாரியார், தமிழ்த்தாத்தாக்களும், தமிழ்ப்பாட்டிகளும் 'கல்கி தீபாவளி மலர்-1984,' ப. 56.
11. அனவரத விநாயகம், 'ஔவையார் சரித்திரம்,' ப. 20.
12. மேற்படி நூல் / பக்கம்.
13. க. த. திருநாவுக்கரசு, 'திருக்குறள் நீதி இலக்கியம்,' ப. 345.
14. ம. பொ. சிவஞானம், 'ஔவை-யார் ?', பக். 82, 83.
15. பாரதியார், தமிழ் நாட்டு நாகரிகம், பாரதி கட்டுரை, ம. பொ. சி.யின் 'ஔவை-யார்' நூலிலிருந்து மேற்கோள், பக். 10, 11.
16. கு. மோகனராசு, 'குறள்தரும் ஆத்திசூடி,' ப. 10.
17. பண்டிதமணி கதிரேசன் செட்டியார், 'உரைநடைக் கோவை' ம. பொ. சி. யின் 'ஔவையார் ?' எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. ப. 77.
18. ம. பொ. சிவஞானம், 'ஔவை-யார் ?,' பக் 73-79.
19. அரசினர் கிழக்கியல் சுவடிகள் நூலகம், சுவடி எண். டி. 2570, [illegible]

20. 'முருக. தனுஷ்கோடி மணிவிழா மலர்,' (1967) பக். 74, 75.

21. மு. இராகவ ஐயங்கார், 'சாசனத் தமிழ்க்கவி சரிதம்,' பக். 114-118.

22. மு. வை. அரவிந்தன், 'உரையாசிரியர்கள்,' ப. 316.

23. இரா. இராகவஐயங்கார், 'சேதுநாடும் செந்தமிழும்,' ப. 16.

24. மு. வை. அரவிந்தன், 'உரையாசிரியர்கள்,' ப. 363.

25. மேற்படி நூல், ப. 318.

26. டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, 'பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன் ஓர் ஆய்வு,' சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வேடு, ப. 106.

# ஆத்திசூடி - பரிமேலழகர் உரையுடன்

டாக்டர் ம. இராசேந்திரன், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

## நூல்

ஆத்திசூடி யமர்ந்த தேவரை
யேத்தி யேத்தித் தொழுவோம் யாமே.[1]

என்பது ஆத்தி புஷ்பத்தை முடித்துக் கொண்டிருக்கிற பரமேசுவரருடைய புத்திரரான விக்கினவிநாயதேவரைத்[2] துதித்துத் தோத்திரம் பண்ணி இரு கையினாலும்[3] கூப்பித்தொழுது நமஸ்கரித்தேனென்றவாறு.[4]

**1. அறம்செய விரும்பு**[5]

என்றது தருமத்தைச் செய்யவே நினை. தருமத்தைச் செய்யவே இம்மைக்குக் கீர்த்தியும் புகழும் மறுமைக்கு சொர்க்காதி போகமும்[6] மெஞ்ஞான வழிபாடும் கொடுக்கும். ஆதலால் உலகத்தின் கண் மனித செனனமெடுத்தால் இல்லறத்திலிருந்து கொண்டு தருமத்தைச்[7] செய்யவேணுமென்பதாம்.

*'அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை*
*மறத்திலி னூங்கில்லைக் கேடு'*[8]

*'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை'*[9]

என்றவாறு.

---

* தொடக்கத்தில், 'விநாயகர் திருவிளம்' என்று சுவடியில் உள்ளது.

** 'அவ்வையுரைத்த நீதிசொல் உரையுடன்' என்று சுவடியில் உள்ளது. ஔவை என்பது இந்த இடத்தில் மட்டும் 'அவ்வை' எனறு சுவடியில் எழுதப்பட்டு உள்ளது.

1. தொழுவோ நாமே (சு. பா-சுவடியில் உள்ள பாடம்)
2. இடையூறு போக்கும் விநாயகன்.
3. இருக்கையினாலும் (சு. பா.)
4. தொழுவோம் எனும் சொல்லிற்கு வணங்குவோம் என்பது போன்று பொருள் கூறப்படாமல் பல இடங்களில் இதனைப்போன்றே வடமொழிச்சொற்கள் உரையில் இடம் பெற்றுள்ளன.
5. அறஞ்செயல் விரும்பு (சு. பா.)
6. சொர்க்கம் முதலாகிய போகங்கள்.
7. தற்மத்தை (சு. பா.)
8. அறன் வலியுறுத்தல், குறள் எண். 32.
9. ,, ,, ,, 37.

**2. ஆறுவது சினம்**

என்பது கோபத்தைப் பொறுக்கவே பாவம் சேராது, தான் செய்யும் தவமும் சிவமும் விக்கினமன்றியிலே[1] முடிந்து தான் வேண்டிய வரமும் சித்திக்கும். ஆதலால் தனக்கு சர்வகாரிய[2] சித்தியும் முத்தியும் உண்டாமென்பதாம். இதற்குதாரணம்,

> *'உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தால்[3]*
> *உள்ளான் வெகுளி யெனின்'[4]*

**3. இயல்வது கரவேல்[5]**

என்பது இயலாகிய நற்கருமங்களை ஒளியாதே யென்பதாம். இதன்றியிலே தனக்கு இயன்ற மாத்திரம்[6] முற்செனனத்திலே தான் செய்த நன்மைக்குத் தக்கதாய் கர்த்தா[7] கொடுத்த பொருளை இளைத்து வந்து கேட்ட பேர்க்கு இல்லையென்று ஒளியாமல் கொடுக்க வேணும் என்று சொல்லுவாரென்றவாறு.

**4. ஈவது விலக்கேல்[8]**

என்பது ஒருவர் ஒருவருக்குச் சாற்காரமாகக்[9] கொடுக்கிறதைத் தான் பொறாமையினாலே கொடாதே நீ என்று[10] விலக்கலாகாது. கொடுக்கிறதை விலக்கித் தடுத்தவனும், தடுத்தவனுடைய சுற்றமும் உடுக்க வஸ்திரமும்[11] உண்ணச் சோறும் கிடைக்காமல் அபகீர்த்திப்பட்டு[12] வம்ச நாசமாய்ப்[13] போவார்கள் என்பதாம். இதற்கு உதாரணம்,

---

1. குறைபாடுகளின்றி
2. சற்வகாரிய (சு. பா.)
3. உள்ளத்தான் (சு. பா.)
4. வெகுளாமை, குறள் எண். 309.
5. இயல்வது கரவன் (சு. பா.)
6. மாதிரம் (சு. பா.)
7. கற்தா (சு. பா.)
8. ஈவது விலக்கேன். சுவடியில் ஈஎனும் எழுத்து. .ா. என்றவாறு எழுதப் பட்டுள்ளது.
9. உதவியாக
10. நீயன்று (சு. பா.)
11. உடையும்
12. புகழ் அழிந்து—பழியேற்பட்டு
13. பரம்பரையற்று

*'கொடுப்ப தழுக்கறுப்பான்[1] சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉ மின்றிக் கெடும்'[2]*

**5. 'உடையது விளம்பேல்'[3]**

என்பது, தனக்கு உண்டான திரவியத்தையும் தான் பெற்ற குரு உபதேசத்தையும் தான் கண்ட சிவானுபவத்தையும் தான் செய்த நன்றியையுந் தனக்குத் தானே பெருமையாகத் தான் சொல்லிக் கொள்ளலாகாது. சொல்லிக்கொண்டால் தனக்குண்டானதும், தான்பெற்றதும், தான் கண்டதும், தான் செய்ததும் விறுத்தமாய்த்[4] தனக்குதவாமல் வீணாய்ப் போமென்பதாம்.

**6. ஊக்கமது கைவிடேல்[5]**

என்பது ஊக்கமென்னும் வலிமையான் நல்லோர் பெரியோர்கள் தன்னாட்டியன்[6] அதிகாரமுடைய பலவான் என்னும் இவர்களுடைய சார்வையும் மனோதைரியத்தையும், உற்சாகத்தையும்,[7] அறிவையும் கைவிடாமலிருக்கவேணுமென்பதாம். அதற்குதாரணம்,

*உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்*
*உடைய துடையரோ மற்று.[8]*

**7. எண்ணெழுத்து இகழேல்**

என்பது எண்ணாகிய சோதிடமும் எழுத்தாகிய இலக்கணமும் எண் ஆதியான ஞானசாத்திரமும், எழுத்தாகிய தோத்திரமும், எண்ணாகிய கணக்கும், எழுத்தாகிய படிப்பும் எந்நேரமும் இடைவிடாமல் பார்த்துப் படித்து அதிலே சொன்னபடி நடந்து கொள்ள வேணுமென்பதாம். இதற்கு உதாரணம்,

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு.[9]*

---

1. கொடுப்ப தொழுக்கறுப்பான் (சு.பா.)
2. அழுக்காறாமை, குறள் எண். 166.
3. உடையது விளம்பன் (சு. பா.)
4. துன்பமாய்
5. ஊக்கமது கைவிடேன் (சு.பா.)
6. தன்நாட்டைச் சேர்ந்தவன்
7. உச்சாகத்தையும் (சு. பா.)
8. ஊக்கமுடைமை, குறள் எண். 591.
9. கல்வி, குறள் எண். 392.

## 8. ஏற்பது இகழ்ச்சி[1]

என்பது ஒருவரிடத்திற் சென்று அவர்கள்கை மேலும், தன் கை கீழுமாக ஈயென்று[2] ஏற்றுண்டு[3] வாழ்கிறது, உலகத்தின் கண் மகா ஈனமும் இகழ்ச்சியுமாம். ஏற்கிறவனுக்கு உயிர் பரசாதக மில்லை.[4] ஆதலால் தன் சரீரத்தை வருத்தித் தன்னால் வஞ்சக மில்லாமல், தன்னாலே ஆன தொழிலைச் செய்து அந்தத் தொழிலி னாலே கிடைத்த பொருளைக் கொண்டு இட்டுண்டு வாழ்வதே நன்றென்பதாம். அதற்குதாரணம்,

*'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்*
*கிரவின் இளிவந்த தில்'*[5]

## 9. ஐயமிட்டுண்

என்பது பிச்சையிட்டு உண். பெரியோர்களாய் வந்த அததி,[6] பரதேசிகளுக்கும்,[7] பசித்து வந்து கேட்டப்பேர்க்கும் இல்லை என்று கூறாமல் பத்தியுடனே பிச்சையிட்டு உண்ணவேணுமென்பதாம். அதற்குதாரணம்,

*'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை*
*மாற்றுவார் ஆற்றலின் பின்'*[8]

## 10. ஒப்புரவு ஒழுகு

உன்பது உலகத்தின்கண் நாலுபேருக்கும்[9] சம்மதியாக[10] வணக்க ஒழுக்கத்துடனே நடக்க வேணும் என்பதாம் அதற்கு உதாரணம்,

*ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்.*[11]

---

1. ஏற்பதிகட்சி (சு.பா.)
2. கீழுமாகத் தேகீயென்று (சு. பா.)
3. யேத்துண்டு (சு பா.)
4. நிலையானதில்லை
5. இரவச்சம், குறள் எண், 1066.
6. வெளியூர்க்காரர்
7. வெளியூரிலிருந்து வந்த கதியற்றவர்கள்
8. ஈகை, குறள் எண். 225.
9. நான்கு பேர்களுக்கும்
10. இசைவாக
11. ஒழுக்கமுடைமை, குறள் எண். 131.

**11. ஓதுவது ஒழியேல்**[1]

என்பது தன்தன் சமய சாத்திரங்களையும்[2] தோத்திரங்களையும்[3] மற்றும் உலகநீதிகளையும் எந்நேரமும் விடாமல் பாராட்டிப் படித்துக் கொண்டே இருக்கவேணுமென்பதாம். இதற்குதாரணம்,

*தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு.*[4]

**12. ஔவியம் பேசேல்**[5]

என்றது தன்தன் குற்றத்தைத் தானாராய்ந்து பார்த்துக்கொண்டு மற்றொருவர் பேரிலே ஒரு குற்றமும் சொல்லாது இருப்பதே நல்லவர்களுக்கு லட்சணம்[6] என்பதாம். இதற்குதாரணம்,

*'புறம்கூறிப் பொய்த்துயிர்*[7] *வாழ்தலின் சாதல்*
*அறம்கூறும் ஆக்கம் தரும்'*[8]

**13. அஃகஞ் சுருக்கேல்**[9]

என்பது தானிய விலைகளைக் குறைக்கவேண்டாம். தானிய விலைகளைக் குறைத்தால் சகல சனங்களும் திகில்படுவார்கள். அந்தத் திகிலாகிற நெருப்பு தானியம் குறைத்தவனுடைய செல்வத்தையும் அவன் வம்சத்தையும் சுட்டெரித்து நிர்மூலமாக்கிவிடும். ஆதலால் தானிய விலைகளைக் குறைக்கலாகாது என்பதாம். அதற்குதாரணம்,

*'அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை'*[10]

**14. கண்டுஒன்று சொல்லேல்**[11]

என்பது தான் கண்டதே காட்சியாய் தன்னை அழுத்தினதே சமுத்

---

1. ஓதுவது ஒழியேன் (சு. பா.)
2. மதநூல்களையும்
3. வழிபாட்டு நூல்களையும்
4. கல்வி, குறள் எண். 396.
5. ஔயம் பேசன் (சு. பா.)
6. நல்லவர்களுக்கு இலக்கணம்
7. போற்றுயிர் (சு. பா.)
8. புறம்கூறாமை, குறள் எண் 183.
9. அஃகஞ் சுருக்கன் (சு. பா.)
10. கொடுங்கோன்மை, குறள் எண். 555
11. கண்டன சொல்லன் (சு. பா.)

திரமாய்[1] அவர்களுக்குப் பயனில்லாத கண்டகமான[2] வார்த்தை களைச் சொல்ல வேண்டாமென்பதாம்; அதற்குதாரணம்,

*'பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி யெனல்'*[3]

## 15. ஙப்போல் வளை[4]

என்பது உலகத்தின்கண் தான் ஐசுவரியனாயிருந்தால்[5] தன் சுற்றத்தாராகிய தாய்வர்க்கம்[6] தகப்பன் வர்க்கம்,[7] தன் சாதி வர்க்கம்,[8] மற்றுமுண்டான[9] சுற்றத்தாரையெல்லாம் விசாரித்து அதிலே இளைத்த பேர்களுக்கு அன்னவத்திரங்களைக்[10] கொடுத்து தன்னாலே ஆன தொழில் துறைகளிலே வைத்து கூட்டி வளைத்துக் கொண்டு போஷித்துக்[11] காக்கவேணுமென்பதாம்.[12] அதெப்படி யென்றால் ஙப்போல் வளை என்ற சொல்லுக்கு விரிவு சொல்லு கிறோம். ங, ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ, ங் என்று சொல்லப்பட்ட இந்த பதின்மூன்று எழுத்தி லேயும் ஒரு எழுத்து இங்கன்னா வெனும் எழுத்தொன்றுமே இட்டு கவிகளிலே வழக்கமாய் தன்னினமான மற்றப் பனிரெண்டெழுத் தையும் காத்து ரட்சித்தாப்போல உலகத்திலே ஒருவர்[13] நன்றா யிருந்தால் தன் சுற்றத்தாரை எல்லாம் காக்கவேணுமென்பதாம். இதை ஙப்போர் விளை என்பாரும் உளர். ஙப்போல் விளையாவது, யுத்தங்களிலே[14] தலைமையான யுத்தம் குதிரைச்சண்டையாதலால் குதிரைச் சண்டையே செய்யவேணுமென்று சொல்வாருமுளர். அதற்கு உதாரணம்,

---

1. கடலாய்
2. வீணான, கொடுமையான
3. பயனில சொல்லாமை, குறள் எண் 196
4. ஙப்போல் விளை (சு. பா.)
5. செல்வந்தனாக
6. தாய்வழிச் சுற்றம்
7. தந்தைவழிச் சுற்றம்
8. மனைவிவழிச் சுற்றம்
9. மத்துமுண்டான (சு. பா.)
10. உணவு, உடை
11. வளர்த்து, பாதுகாத்து
12. கார்க்கவேணுமென்பதாம் (சு. பா.)
13. ஒருத்தர் (சு. பா.)
14. உயித்தங்களிலே (சு. பா.)

*'சுற்றத்தால் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தால் பெற்ற பயன்.'* [1]

## 16. சனிநீர் ஆடு

என்பது சனியாவது காரி, காரியாவது பொழுது விடிகிற[2] காலத்திற்கு முன்பு. தினமானமும்[3] ஸ்நானம்[4] பண்ணவேணு மென்பதாம். இதற்கு விரிவு தன்தன் நேமாதிக்கிரமங்களை[5] அனுட்டித்திருக்கினற[6] பேரும் தன்சரீரத்தைப் போஷித்துக்கொள்ள வேண்டினபேரும் ஆரோக்கியம் வேண்டினபேரும் தினமானமும் அருணோதய[7] காலமாகா முன் பிரத்கால ஸ்நானம்[8] செய்து அவரவர் கிரமங்களை[9] முடித்துக்கொள்ள வேணுமென்பதாம். இதை சனிக்கிழமையிலே அற்பங்கி ஸ்நானம்[10] பண்ணவேணு மென்று சொல்லுவாருமுளர். இதற்கு உதாரணம்,

*'பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்*
*இருடீர வெண்ணிச் செயல்.'* [11]

## 17. ஞயம்பட உரை[12]

என்பது தான் சொல்லுகின்ற சொல்லைப் பிரயோசனமுள்ள[13] சொல்லாய் நயமான வார்த்தையாய்ச் சொலவேணுமென்பதாம். அதற்கு உதாரணம்,

*'சிறுமையு ணீங்கிய இன்சொல் மறுமையும்*
*இம்மையும் இன்பம் தரும்.'* [14]

---

1. சுற்றந்தழால், குறள் எண் 524
2. வெடியுற (சு பா.)
3. நாள்தோறும்
4. குளியல்
5. னேமாதிக்கிறங்களை (சு. பா.)
6. கடைப்பிடித்திருக்கின்ற
7. சூரியன் உதிக்கும்
8. விடியற்காலக் குளியல். பிறத்கால ஸ்நானம் (சு. பா.)
9. காலைக்கடன்களை
10. எண்ணெய் தேய்த்துக் குளித்தல்
11. வினை செயல்வகை, குறள் எண் 675
12. ஞயம் பெறவுரை (சு. பா.)
13. பிரையோசனமுள்ள (சு. பா.)
14. இனியவை கூறல், குறள் எண் 98

**18. இடம்பட வீடு எடேல்**[1]

என்றது வீடானது தலைவாசலுக்கு வலதுபக்கம் இடம் பெரிதாய் இடது பக்கம் இடம் சிறிதாய் கட்டவேணுமென்பதாம். பின்னையும் டகாரத்தைப்போலே வீடு இருபக்கமாகக் கட்டப்போகாது. பின்னையும் இடம் பெரிதாய் மிகுதியும் வெகுபொருளை நேர்ந்து கட்டாமல் இலக்கணமாக மனைக்கி நாலு பக்சமும் சுற்றிவரச் சுருக்கத்திலே வீடு கட்டிக்கொண்டு இல்லற முறைமை வழுவாமல் வாழவேணுமென்பதாம். அதற்குதாரணம்,

*'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை*[2] *அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.'*[3]

**19. இணக்கமறிந்து இணங்கு**[4]

என்பது இவனுடனே இணங்கிச் சினேகிதம் பண்ணலாம், பண்ணலாகாதென்றறிந்து ஆராய்ந்து பார்த்துக்கொண்டு நல்லவர்களாயிருக்கின்ற பேர்களுடனே நட்பு கொண்டிருக்க வேணுமென்பதாம். இதற்கு உதாரணம்,

*'குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்*
*கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.'*[5]

**20. தந்தை தாய்ப்பேண்**

என்பது, தகப்பனையும் தாயையும் பேணி போஷித்துக்கொண்டு அவர்கள் மனது சந்தோஷமாக அன்புடனே வணங்கி நடந்து கொள்ள வேணுமென்பதாம். அதற்கு உதாரணம்,

*'அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு.'*[6]

---

1. டம்பெற விடேல் (சு. பா.) சுவடியில் ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கு முறைககு ஏற்ப எந்த எழுத்து வரவேணடுமோ அந்த எழுத்தையே முதலாகக் கொண்டு அமைந்துள்ளது. பொருள் தெளிவிலலா விட்டாலும், மொழிக்கு முதலில் வராத எழுத்தாக இருநதாலும் கூட ஆததிசூடி வரிசையில் பாடல்கள் அவ்வெழுத்துக்களைக் கொணடு அமைககப்பட்டுள்ளன. இப்பாடலைப் போன்று வேறுபல பாடல்களும் இவ்வாறே அமைந்துள்ளன.
2. யில்வாட்டை (சு. பா.)
3. இல்வாழ்ககை, குறள் எண். 49
4. ணக்கமறிந் திணங்கு (சு. பா.)
5. நட்பாராய்தல், குறள் 794
6. அன்புடைமை, குறள் எண். 80.

## 21. நன்றி மறவேல்[1]

என்பது, தனக்கு முன்னொருவர் செய்த நன்றியை ஒருக்காலும் மறவாமல், தனக்குப் பின்னவர்கள் எத்தனை குற்றம் செய்தாலும் அந்த குற்றமாகிய பொல்லாங்கை எல்லாம் அப்போதே மறந்து அவர்கள் செய்த நன்றியை எப்போதும் மறவாமல் நடந்துகொள்ள வேணுமென்பதாம். அதற்கு உதாரணம்,

*'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லா*
*தன்றே மறப்பது நன்று.'*[2]

## 22. பருவத்தே பயிர்செய்

என்பது பயிரிடுகிற[3] காலமறிந்து, காலத்திற்கேற்ற[4] பருவமறிந்து அந்தப் பருவத்துக்குத் தக்கன பயிரிடவேணும்,[5] பருவமறிந்து காலத்துக்கேத்த பயிரிடாமல் சோம்பலாயிருக்கும் சம்சாரி[6] குடித் தனம் இளைத்து மாடு கண்[7] ஆண்டு மை[8] காணி பூமியெல்லாம் இழந்து தரித்திரனாய் அன்னவஸ்திரங்களுக்குக்[9] கஷ்டப்படுவன். ஆதலால் காலம் தப்பாமல் பிரயாசைப்பட்டுப் பருவத்திலே பயிரிட் டுண்ண வேணுமென்பதாம். அதற்கு உதாரணம்,

*'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்.'*[10]

## 23. மன்று பறித்து உண்ணேல்[11]

என்பது ஒருவன், ஒருவன் காணியை[12] வஞ்சனையினாலேயாவது[13] பலவந்தத்தினாலேயாவது[14] பறிதுக்கொண்டு அந்த மண்ணிலே

---

1. நன்றி மறவன், (சு.பா.)
2. செய்ந்நன்றியறிதல், குறள் எண். 108.
3. பயிரிடுகுற, (சு. பா.)
4. காலத்துக்கேத்த, (சு. பா.)
5. தக்கவற்றைப் பயிரிட வேண்டும்.
6. சங்சாரி (சு. பா.)–இல்வாழ்க்கையில் ஈடுப்பட்டிருப்போன்.
7. மாடுகன்று
8. வெள்ளாடு போன்ற பிற கால்நடைச் செல்வங்கள்.
9. உணவு உடைகளுக்கு
10. உழவு, குறள் எண். 1040.
11. மண்பறித்துண்ணேன், (சு. பா.)
12. நிலத்தை
13. சூழ்ச்சியாலேயாவது, வஞ்சினை (சு. பா.)
14. வலபந்தம், (சு. பா.)

இருந்து உண்ணவேண்டாம். அப்படி பறித்துக் கொண்டவன் உடனே கெட்டு நிலையாமல் வம்மிச நாசமாய்ப்[1] போவான் எனபதாம்.

**24. இயங்கித் திரியேல்[2]**

என்பது யாதொரு காரியங்களிலேயும் ஏக்கம் கொண்டு மயங்கித் தியங்கி[3] உற்சாக பங்கமாய்ப்[4] பெருமை கொண்டவனைப் போலத் திரியாதே என்பதாம். அதற்கு உதாரணம்,

இயன்றபோதே தியக்கமில்லாமல்[5] மனோதைரியத்துடனே[6] இருக்கவேணுமென்பதாம்,

**25. அரவம் ஆட்டேல்[7]**

என்பது பாம்பு பிடாரனாய்[8] ஆட்டிக்கொண்டு திரியாதே என்பதாம். அந்தப் பாம்பினிடத்திலே கொடிய விஷம் இருக்கிற படியினாலே அதை ஆட்டிக்கொண்டு திரிகிறவனுக்குப் பிராண ஆணி[9] வருமென்பதாம்.

**26. இலவம் பஞ்சில் துயில்[10]**

என்பது, இலவம் பஞ்சணை மெத்தையின் பேரிலே நித்திரை பண்ணபேர் சரீரத்துக்கு ஆரோக்கிய சுகமுண்டென்பதாம்.

**27 வஞ்சகம் பேசேல்[11]**

என்பது ஒருவர் பேரிலே விவகாரம் வந்தவிடத்து மனோ வஞ்சக[12] மான வஞ்னை பேசவேண்டாமென்பதாம். வஞ்சனை பேசவே அந்த வஞ்சனை தன் நெஞ்சில் மிஞ்சின புண்ணாய் மிகவும் துக்கத்தைக் கொடுக்கும். ஆதலால் வஞ்சனை ஒருக்காலும் பேசாதே என்பதாம்.

1. பரம்பரையற்று.
2. யங்கித் திரியன் (சு. பா.) அச்சு நூல்களில் 'இயல்பலாதன செயேல்' என்று வந்துள்ளது.
3. மயக்கம்கொணடு
4. ஆர்வம் மேலீட்டால்
5. தயக்கமில்லாமல்
6. துணிவுடன்
7. 'ரவவமாட்டன்' (சு பா.)
8. பாம்பாட்டியாய்
9. உயிர் இழப்பு
10. 'லவம் பஞ்சிற் றுயில்' (சு. பா.)
11. வஞ்சகம் பேசேன் (சு. பா.)
12. விபகாரம் (சு. பா.)

**28. அழகு அலாதன செய்யேல்** [1]

என்பது ஒருக்காலும் இடைவிடாமலிருக்கின்ற நல்ல கருமங்களைச் செய். [2] செய்யவே உலகத்தின் கண் எல்லோருக்கும் நல்லவனாய் சருவகாரிய [3] சித்தியுமுண்டாய் பரசாதகனாவன் [4] என்பதாம்.

**29. இளமையில் கல்** [5]

என்பது இளமையாகிய சிறுபிராயத்திலேதானே சகலமான கல்வி யும் கற்கவேணுமென்பதாம். இளமையில் கல்லாமல் முதுமையிலே கற்கிற வித்தை அற்பமாய் உற்பணம் [6] கொடாது பகுத்தறிவும் இராது. ஆதலால் இளமையில் தானே கற்கவேணும் எனபதாம்.

**30. அறனை மறவேல்** [7]

என்பது, உலகத்தின் கண் அவரவர் தராதன்மையை [8] ஒருக்காலும் மறவாமல் நடககவேணும் என்பதாம். தராதன்மையை மறநது நடந்தால் அதனாலே பெருமைகெடடு சிறுமைப்படுவர் என்பதாம்.

**31. அனந்தல் ஆடேல்** [9]

என்பது அதிகமான நித்திரை பண்ணினால் [10] சோம்பல் ஏறிய தனாலே உற்சாக பங்கமாய் [11] மனோவியாதி [12] கொண்டு போவன் என்பதாம்.

**32. கடிவது மற**

என்பது, ஒருவரைக் கடினமான வார்த்தை பேசினால் உலத்திலே சகலமான பேருக்கும் வருத்தப்பட்டுக் கெட்டுப்போவன் என்பதாம்.

---

1. 'ழகலாதன செய' (சு. பா.)
2. கருமங்களைச் செயச் செய்யவே (சு. பா.)
3. சற்வகாரிப (சு. பா.)
4. வீட்டுலகத்திற்கு உரியவன்
5. 'ளமையிற் கல்' (சு. பா.)
6. நிலைத்து நிற்காது.
7. 'றனை மறவேல்' (சு. பா.)
8. தாரா தன்மையை (சு. பா.)
9. 'னந்த லாடன்' (சு. பா.)
10. நித்திரை பண்ணால் (சு. பா.)
11. யுச்சாக பங்கமாய் (சு. பா.)—ஊக்கம் இன்றி
12. மனநோய்

## 33. காப்பது விரதம்[1]

என்பது, தன்னிடத்திலே அடைக்கலமாக வந்து அடைந்த பேரைத் தான் காட்டிக் கொடாமல்,[2] அவர்கள் நிமித்தம் தன்பிராண பரியந்தமும்[3] அவர்களைக் காத்து ரட்சிக்கிறதே[4] மகாநல்ல விரதம். மற்ற விரதமெல்லாம் இந்த விரதத்துக்குச் சமானமல்ல. ஆதலால் அடைக்கலம் காப்பதே[5] விரதம் எனபதாம்.

## 34. கிழமைப்பட வாழ்[6]

என்பது, தான் வாழ்நாளற்று மாண்டுபோனாலும் தான் செய்யும் நன்மை உலகத்தின்கண் நாளுக்கு நாள் மேன்மேலும் விளங்கத் தக்க நன்மையாக வாழவேணும் என்பதாம்.

## 35. கீழ்மை அகற்று[7]

என்பது, கீழான சாதிகளுடைய இணக்கத்தையும், கீழான துர்சனப்[8] புத்தியையும் விட்டுவிடவேணும் என்பதாம்.

## 36. குணமது கைவிடேல்[9]

என்பது யாதொன்றிலே நற்குணம் நற்செய்கைகள் உண்டோ அதைக் கைவிடாமல் இருக்கவேணும் என்பதாம்.

## 37. கூடிப் பிரியேல்[10]

என்பது ஒருவருடனே சிநேகம்[11] பண்ணினால் அந்த சிநேகிதன் தனக்கு எனன குற்றம் செய்தாலும் அந்தக் குற்றங்களைப் பாராட்டாமல் பொறுத்து சினேகிதத்திற்கு வருத்தம் வராமலும் பிரியாமலும் எந்நாளும் கூடி வாழவேணும் என்பதாம்.

---

1. 'காற்பது விரதம்' (சு. பா.)
2. காட்டிக் குடாமல் (சு. பா.)
3. உயிர் உள்ளளவும்
4. பாதுகாத்தலே
5. காற்பதே (சு. பா.)
6. கிழமைபட வாழ் (சு. பா.)
7. கீழ்மையகத்து (சு. பா.)
8. தீயவர்கள்
9. குணமது கைவிடேன் (சு. பா.)
10. கூடிப்பிரியன் (சு. பா.)
11. ஸ்தினேகம் (சு. பா.)

**38. கெடுப்பது ஒழி**

என்பது, தான் கெட்டாலும் ஒருவரைக் கெடுத்துத் தான் சுகப்பட வேணும் என்கிற புத்தியை ஒழித்து ஒருவருக்கும் கேடு நினையாமல் இருக்கவேணும் என்பதாம்.

**39. கேள்வி முயல்**[1]

என்பது, தான் கல்லாதவனாகிலும் கற்ற பெரியோர்களிடத்திலே உலக நீதியையும் உலக நியாயங்களையும், தர்மக் கதைகளையும்,[2] தர்ம சாத்திரங்களையும், சிவ அறிக்கைகளையும்,[3] சிவ அரிதோத்திரங்களையும்[4] எந்நேரமும் கேட்க வேணும் என்பதாம்.

**40. கைவினை கரவேல்**[5]

என்பது தன் கைவந்த வித்தையை ஒளியாமல் பலருக்கும் உபகாரமாகப் பக்குவமான பேருக்குச் சொல்லிக் கற்பிக்க வேணும் என்பதாம்.

**41. கொள்ளை விரும்பேல்**[6]

என்பது பிறர் பொருளைக் கொள்ளையிட்டுக் கொண்டு வருவோமென்று ஒருக்காலும் நினையாதே. கொள்ளையிட்டுவந்த பொருள் நில்லாது. தனக்குள்ள பொருளையும் கெடுத்து தன்னையும் கெடுத்துவிடும் எனபதாம்.

**42. கோதாட்டு ஒழி**

என்பது பிள்ளை சீராட்டுகிறதை[7] ஒழித்துவிடு. சீராட்டினால் அந்தப் பிள்ளைகள் சிறு பிள்ளைகளானபடியினாலே பயம் போம். பயமில்லாவிட்டால் அந்தப் பிள்ளைகள் புத்திவித்தை கற்று முன்னுக்கு வராமல் யார் சொல்லும கேளாமல் கெர்விச்சுக்[8] கெட்டுப்போம். ஆதலால் அந்தப் பிள்ளைகளைச் சீராட்டி செல்வம் பாராட்டிய தாய், தகப்பனுக்கு[9] மகத்தாகிய பாவமும் பழியும் வசையும் வருமென்பதாம்.

---

1. கேழ்வி முயல் (சு. பா.)
2. தற்மக் கதைகளையும் (சு. பா.)
3. சிவ அரிக்கைகளையும் (சு. பா.)
4. சிவ அரித்தோத்திரங்களையும் (சு. பா.)
5. கைவினை கரவன் (சு. பா.)
6. கொள்ளை விரும்பன் (சு. பா.)
7. சீராட்டு குறத்தை (சு பா.)
8. கெற்விச்சு (சு. பா.)
9. தோப்பனுக்கு (சு. பா.)

**43. சக்கர நெறிநில்**

என்பது, உலகத்திலே மனுநீதி தப்பாமல் துஷ்ட நிக்கிரகம்[1] சிஷ்ட பரிபாலனம்[2] செய்து கொண்டு ஆக்கினா சக்கரத்திற்குப்[3] பயந்து தருமம்[4] தப்பாமல் நடப்பித்துக்கொண்டு வருகிற சக்கரவர்த்திகளான[5] ராசாக்கள் கட்டளையிட்ட நெறி முறைமையான வழியிலே சகல சனங்களும் நின்று வாழவேணும் என்பதாம்.

**44. சான்றோர் எனத்திரி[6]**

என்பது, தன்னை உலகத்திலே எல்லாரும் இவன் புத்திமான் என்று சொலலிக்கொண்டாடத்தக்கதாக நடக்க வேணும் என்பதாம்.

**45. சித்திரம் பேசேல்[7]**

என்பது, விஸ்தாரமாக[8] சித்திர அவுதானமானச் சொற்களை[9] உபாயமுபாயமாய் ஓயாமல்[10] படப்படவென்று பேசவேண்டாம் என்பதாம்.

**46. சீர்மை மறவேல்[11]**

என்றது, உலகத்தின்கண் நடக்க வேண்டிய வாய்மை வரிசை ஒரு நாள் கண்ட சீராக ஒருக்காலும் மறவாமல் நடக்கவேணும் என்பதாம்.

**47. சுளிக்கச் சொல்லேல்[12]**

என்பது ஒருவர் மனது திடுக்கிட்டுச் சுளிக்கத்தக்கதாக[13] கர்ண கடூரமான வார்த்தைகளைச்[14] சொல்லவேண்டாம் என்பதாம்.

---

1. துஷ்ட்ட நிறகம் (சு. பா)—பகைவர்களை அழித்தல்
2. சிஷ்ட்ட பரிபாலனம் (சு. பா.)—நல்லவர்களைப் பாதுகாத்தல்.
3. சக்கிறத்துக்கு (சு பா.)
4. தற்மம் (சு. பா.)
5. சக்கிறவற்திகளான (சு. பா.)
6. சான்றோ ரினத்திரு என்று அச்சுநூலில் வந்துள்ளது.
7. சித்திரம் பேசன் (சு. பா.)
8. விரிவாக
9. சித்திர அவுதானமானச் சொல்லுகளை (சு. பா.)—கற்பனை கலந்த சொற்களை
10. வோயாமல் (சு. பா.)
11. சீர்மை மறவேன் (சு. பா)
12. சுழியச் சொல்லன் (சு. பா.)
13. முகம் மாறத்தக்கதாக
14. செவிக்கு இன்னா சொற்களை

**48. சூது விரும்பேல்**[1]

என்பது, சூதமாட நினையாதே. சூதமாடினால் ஒன்றுவர நூறு நஷ்டமாம்.[2] அதினாலே மனது அதில் அழுந்தி அதைவிட்டுப் பிரியாமல் துட்டாசை[3] பற்றி அதிலே தொழிலாய் மற்றொரு தொழிலின் பேரிலே சிந்தனையில்லாமல் பிரேமை கொண்டு[4] திரியப்பண்ணும். ஆதலால் உலகத்தின்கண் அவனிடத்திலே இலட்சுமி இராள்[5] மூதேவி குடியிருப்பாள் என்பதாம்.

**49. செய்வன திருந்தச் செய்**

என்பது, யாதாமொரு காரியங்களைச் செய்யத்தக்கன காரியங் களை ஒருவர் பழிக்கச்செய்யாமல் சாங்கோ பாங்கமாக[6] நன்றாய்[7] செய்யவேணும் என்பதாம்.

**50. சேரிடம் அறிந்துசேர்**[8]

என்பது, இன்ன இடத்திலே சேரலாம், சேரலாகாதென்று உத்தா யுத்தம்[9] தெரிந்து இடனறிந்து சேரவேணும் என்பதாம். சேராத இடமாவது துர்சனாள்[10] இருக்கும் இடம். சேரும் இடமாவது சர்சனாள்[11] இருக்கும் இடம், துர்சனாள் இருக்கும் இடத்திலே சேர்ந்தால் அபகீர்த்தியும் பிராண ஆணியும்[12] வரும். சர்சனாள் இருக்கிற இடத்திலே சேர்ந்தால் கீர்த்தியும் புகழும் மேம்பாடாம். ஆசார ஒழுக்கமும் மேலான அறிவும் உண்டாம். ஆதலால் சர்சனாளையே[13] சேரவேணும் என்பதாம்.

---

1. சூது விரும்பன் (சு. பா.)
2. இழப்பாகும்
3. துற்றாசை (சு. பா.)
4 பிறமைகொண்டு (சு. பா.)
5. லக்ஷ்சுமி யிராள் (சு. பா.)
6. வழக்குச் சொற்களை உரையில் கையாண்டுள்ளமைக்கு இது சான்று.
7. நன்றாயிச் (சு. பா.)
8. சேர்விட மறிந்துசேர் (சு. பா.)
9. நல்லது கெட்டது அறிந்து
10. தீயவர்கள்
11. நல்லவர்கள். துற்சணாள் சற்சனாள் (சு. பா.)
12. உயிர் இழப்பும்
13. நல்லவர்களையே

**51. ஸையெனத் திரியேல்**[1]

என்பது, சீ இவன் செய்கைக் கெட்டவன்[2] இல்லறத்துக்கு ஏற்ற சம்சாரியல்லவென்று[3] நாலுபேரும் சொல்லிக்கொள்ளத் தக்கதாக திரியவேண்டாம். நாலுபேரும் பளாயிவன்[4] இங்கிதம் அறிந்த[5] சம்சாரி[6] என்று சொல்லிக்கொள்ளத் தக்கதாக நடந்து கொள்ள வேணும் என்பதாம்.

**52. சொற்சோர்வு படேல்**[7]

என்பது, தான் முன் சொல்லின சொல்லைப் பின்பு இல்லை என்று மாறுபாடாகச் சொல்லி, அந்த சொல்லினாலே திருடனாய்ப் போகவேண்டாம் என்பதாம்.

**53. சோம்பித் திரியேல்**[8]

என்பது யாதொரு உத்தியோகங்களைச் செய்து உத்தரிசமறுது[9] உண்டாயிருந்தால், சோம்பல் வந்தால், அந்த சோம்பலினாலே எந்த காரியமும் ஆகாமல் போகும். ஆதலினாலே தன்னுடைய ஆதிக்கம் எல்லாம் பகை என்பதாம்.

**54. தக்கோர் எனத்திரி**

என்றது[10] தன்னை உலகத்திலே எல்லோரும் இவர் பெரியவர், புத்திமான் என்று கொண்டாடத் தக்கதாக நடக்கவேணும் என்பதாம்.

**55. தானமது விரும்பு**

என்றது, மனிதர் சரீரம் எடுத்தால், தான் சம்பாதித்து உலகத்தின் கண் நல்லோர் பெரியோர்களுக்கு சோடிசமாக[11] தானமும் செய்ய வேணும் என்று நினைத்துச் செய்யவேணும் என்பதாம்.

---

1. ஸையெனத் திரியேன் (சு. பா.)
2. ஸைகைக் கெட்டவன் (சு. பா.)
3. சங்கிசாரியல்லவென்று (சு. பா.)-குடும்பத்தையுடையவன் அல்லவென்று
4. பழகியவன்
5. முறையறிந்த
6. சங்கிசாரி (சு. பா.)
7. சொற்சோர்வு படேன் (சு. பா.)
8. சோம்பித் திரியன் (சு. பா.)
9. புதிய சொல்லாக இருக்கிறது
10. என்றுது (சு. பா.)
11. இணையாக

## 56. திருமாலுக்கு அடிமைசெய்[1]

என்பது, திருவென்னும் மெஞ்ஞான சத்திக்கு[2] மாலென்னும் ஆசையாகிய சருவக்கியானான[3] சருவேசுவரனுக்கே[4] அடியனாய் எந்நேரமும் அந்த சருவேசுவரனையே தோத்திரம் செய்து கொண்டு இருக்கவேணும் என்பதாம்.

## 57. தீவினை அகற்று[5]

என்பது, தீவினையாகிய பாவங்களைச் செய்யாமல் விட்டுவிடு; நல்வினையாகிய புண்ணியங்களைச் செய்யவேணும் என்பதாம்.

## 58. துன்பத்திற்கு இடம்கொடேல்[6]

என்பது, துன்பமான காரியங்களுக்கு[7] இடம் கொடாதே[8] இடம் கொடுத்து, அக்காரியங்களைச் செய்வாயானால் எந்நேரமும் ஆறாத விசாரத்தையும்[9] துக்கத்தையும்[10] கொடுத்து, தன் பிராண பரியந்தமும்[11] துன்பப்படுத்தி, பின்னும் தன் சந்ததியாகிய[12] வர்க்கத்தாரையும் துக்கப்படுத்தும் என்பதாம்.

## 59. தூக்கி வினைசெய்யேல்[13]

என்பது, ஒருவருக்கு ஒரு உபகாரம் செய்யுமிடத்துத் தனக்குப் புண்ணியமே காரணமாய், புண்ணியத்தைக் குறித்துச் செய்ய வேணுமே அல்லாமல் தனக்குப் பிரதி உபகாரம் இவன் இன்ன மார்க்கத்திலே செய்வானென்று நினைத்துத் தனக்குப் பிரதி உப காரம் செய்யுமிடத்திலே செய்யவேண்டாம், அது[14] உபகாரமல்ல என்பதாம். அதற்கு உதாரணம்,

---

1. திருமாலுக்கு அடுமைசெய் (சு. பா.)
2. சக்திக்கு
3 & 4. சிவபெருமானைக் குறித்த வடமொழிப்பெயர்கள்
5. தீவினை யகத்து (சு. பா.)
6. துன்பத்துக்கு இடங்கொடேன் (சு. பா.)
7. அகாரியங்களுக்கு (சு. பா.)
8. இடம்குடாதே (சு. பா.)
9. தீராத துன்பத்தையும்
10. துற்கத்தையும் (சு. பா.)
11. உயிர் உள்ளளவும்
12. சத்தியாகிய (சு. பா.)
13. தூக்கி வினைசெய் என்றும்பாடம்.
14. அஃது

*'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மைக் கடலிற் பெரிது.'* [1]

## 60. தெய்வம் இகழேல் [2]

என்பது, தான் எந்த சமயமோ [3] அந்த சமயத்து தெய்வமே தனக்கு பார்த்து [4] வருமென்று கெட்டியாய் நம்பி மற்றொரு சமயத்துத் தெய்வங்களை இகழ்ந்து தூஷிக்காமல் இருக்கவேணும் என்பதாம்.

## 61. தேசத்தோ டொத்துவாழ்

என்பது, தான் எங்கெந்த தேசத்திலே இருந்தாலும் அந்தந்த தேசத்தாரோடே ஒப்பந்தமாய் ஒத்து வாழ்ந்துகொண்டு தன் தேச ஆசாரம் விடாமல் நடந்துகொள்ளவேணும் என்பதாம்.

## 62. தையல்சொல் கேளேல் [6]

என்பது, பெண்சாதி பேச்சைக் கேளாதே, அவள் பேச்சைக்கேட்டு அவள சொல்வழியே நடந்தால், அந்த இல்லறமாகிய குடித்தனத் திற்கு [7] இழிவு வரும். ஆதலால் அவள் சொல்வழியே நடக்கின்ற புத்தியில்லாத ஆண்பிள்ளையைப் பார்க்க [8] வெட்கத்துடனே இருக்கிற பெண்சாதி மிகவும் பெருமை உடையவள் என்பதாம்.

*'பெண்ணேவல் செய்தொழும் ஆண்மையின் நாணுடைய*
*பெண்ணே பெருமை உடைத்து.'* [9]

## 63. தொன்மை மறவேல் [10]

என்பது, பழமை பாராட்டமாய் [11] வருகிற நன்மையான செயல் களை ஒருக்காலும் மறக்கவேண்டாம் என்பதாம்.

---

1. 'பயன்றூக்காச் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மைக் கடலிற் பெரிது' (சு. பா.)—செய்ந்நன்றியறிதல்,
குறள் எண். 103.
2. 'தெய்வமிகழன்' (சு. பா.)
3. சமையமோ (சு. பா.)
4. பாத்தது (சு. பா.)
5. பழித்துரைக்காமல்
6. தையல்சொல் கேளன் (சு. பா.)
7. குடித்தினத்துக்கு (சு. பா.)
8. பாற்க (சு. பா.)
9. 'பெண்ணேவல் கொண்டொழுகும் ஆண்மையின் நாணுடைய
பெண்ணே பெருமை யுடைத்து' (சு. பா.)
—பெண்வழிச்சேறல், குறள் எண். 907.
10. தொன்மை மறவன் (சு. பா.)
11. காரணமாக

**64. தோற்பன தொடரேல்** [1]

என்பது, தோல்வியான காரியங்களை வெற்றி பெறலாமென்று எண்ணித் துட்டாசையினாலே [2] தொடர்ந்து பிடியாதே. தொடர்ந்தாயானால் அதனாலே உத்தியோக நட்டமும் திரவியச் சேதமும் (தனமும்) கொடும். பிறர் சூடும் நாணமும் மனமடிவும் [3] வரும். ஆதலால் வெல்லாத காரியத்தை வெல்லுமென்று தொடர வேண்டாமென்பதாம். [4]

**65. நன்மை கடைப்பிடி** [5]

என்பது, நன்மையான காரியங்களை மறவாமல் எந்நாளும் அந்த நன்மையைத் தானே செய்து கொண்டிருக்கவேணும் என்பதாம்.

**66. நாடொப்பன செய்**

என்பது, யாதொரு காரியங்களும் உலகத்துக்கேற்ற காரியங்களைச் செய். உலகத்திற்கு ஏற்காத காரியங்களை ஒருக்காலும் செய்ய வேண்டாம் என்பதாம்.

**67. நிலையில் பிரியேல்** [6]

என்பது, தனது நிலைக்கு இருக்கின்ற [7] தானத்தை விட்டுப் பிரிந்து மற்றொரு தானங்களிலே போகாமல் நிலைத்த இடத்திலேதானே இருந்து அடங்கி வாழவேணும் என்பதாம்.

*'நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்*
*மலையினும் மானப் பெரிது.'* [8]

**68. நீர்விளை யாடேல்** [9]

என்பது, எந்நேரமும் தண்ணீரிலே பிராண ஆணி [10] வருமென்பதாம்

---

1. தோற்பன தொடரேன் (சு. பா.)
2. பொருளாசையினாலே
3. விரக்திக்குரிய வேறு சிறப்பான சொல்
4. துடரவேண்டாம் (சு. பா.)
5. நன்மை கடப்பிடி (சு. பா.)
6. நிலையிற் பிரியன் (சு. பா.)
7. தகுதிக்கு இருக்கின்ற
8. 'நிலையிற் பிரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது' (சு. பா.)
அடக்கமுடைமை, குறள் எண். 124.
9. நீர்விளை யாடன் (சு. பா.)
10. உயிரிழப்பு

**69. நுண்மை நுகரேல்**[1]

என்பது, கொஞ்ச காரியமான ஈனவிருத்தி[2] காரியங்கள் யாதோ, அந்தக் காரியங்களிலே இச்சைப்படாதே என்பதாம்.

**70. நூல்பல கல்**

என்பது எந்நேரமும் ஏமாறாமல் பல சாத்திரங்களையும் கற்க வேணும் என்பதாம். அதற்கு உதாரணம்

*'யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு.'*[3]

**71. நெற்பயிர் விளை**

என்பது, உலகத்தின்கண் விளைகின்ற பயிர்களுக்கெல்லாம் தலைமையான பயிர் நெற்பயிர். ஆதலால் உழுது பயிரிட்டு உண்ணுகிற சம்சாரி[4] நெற்பயிரையே பயிரிட்டு உண்ணவேணும் என்பதாம். அதற்கு உதாரணம்,

*'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்.'*[5]

**72. நேர்பட ஒழுகு**

என்பது, உலகத்தின்கண் நல்லோர் பெரியோர்களுக்கு இயற்கையாக தான் செவ்வையான ஆசார ஒழுக்கத்துடனே நடக்கவேணும் என்பதாம்.

**73. நைவினை நணுகேல்**[6]

என்பது, தான் கெடபோகின்ற[7] காரியங்கள் யாதொன்று உண்டோ அந்த காரியத்தை ஒருக்காலும் அணுகிச் செய்யவேண்டாம் என்பதாம்.

---

1. நுன்மை நுகரன் (சு. பா.)
2. ஈனவிறத்தி (சு. பா.)
3. 'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
   சாந்தனையும் கல்லாத வாறு' (சு. பா.)
   கல்வி, குறள் எண். 397.
4. சங்கிசாரி (சு. பா.)
5. உழவு, குறள் எண். 1033.
6. நைவினை நனுகன் (சு. பா.)
7. கெடபெறகின்ற (சு. பா.)

**74. நொய்ய உரையேல்**[1]

என்பது, ஒருவர் மனது நோக நொய்தாகிய இழிவான வார்த்தைகளைச் சொல்லவேண்டாம் என்பதாம்.

**75. நோய்க்கு இடம் கொடேல்**[2]

என்பது, தன்தன் சரீர நேர்மையறிந்து, தன் சரீரத்திற்கு ஒத்தப் படிக்குக் காலம் தப்பாமல் உண்ணல் உடுத்தல் முழுகல் இவை முதலானவைகளினாலே மிதந்தப்பாமல்[3] சரீரத்தைப் போஷித்துக் கொண்டு[4] நோயான பிணிக்கு இடம் கொடாமல் நடந்துகொள்ள வேணும் என்பதாம்.

**76. பழிப்பன பகரேல்**[5]

என்பது, உலகத்திலே நாலுபேரும் பழிக்கத்தக்கன வார்த்தைகளைப் பேசாதே என்பதாம்.

**77. பாம்பொடு பழகேல்**[6]

என்பது, பாம்புடனே பழகித் திரியாதே, பாம்பைப் போலே விஷம்[7] பொருந்திய கடின சித்தமுடைய பொல்லாத துர்சனாளுடைய[8] பழக்கத்தை விட்டுவிடவேணும். பாம்புக்குப் பல்மட்டுக்கும் விஷம். துர்சனாள்[9] பழக்கத்தைக் கனவிலும் நினையாமல் விட்டுவிட வேணும் என்பதாம்.

**78. பிழைபடச் சொல்லேல்**[10]

என்பது, பிழை என்னும் தப்பான[11] வார்த்தைகளை ஒருக்காலும் சொல்லவேண்டாம் என்பதாம்.

---

1. நொய்யவுரை (சு. பா.)
2. நோய்க்கிடங் கொடேன் (சு. பா.)
3. தவறாமல்
4. வளர்த்துக்கொண்டு
5. பழிப்பெனப் பகரன் (சு. பா.)
6. பாம்பொடு பழகேன் (சு. பா.)
7. நஞ்சு
8. தீயவர்களுடைய
9. தீயவர்கள்
10. பிழைகள் சொல்லன் (சு. பா.)
11. தப்பறையான (சு. பா.)

**79. 'பீடுபெற நில்'**

என்பது, உலகத்தின்கண் மனித சரீரமெடுத்தால்[1] பீடாகிய பெருமையும், புகழும் கீர்த்தியும் எந்நாளைக்கும் நிற்கத்தக்கதாக வாழவேணும் என்பதாம்.

**80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்**

என்பது, உலகத்தின்கண் சருவக்கியானான்[2] சருவேசுவரனை[3] எந்நேரமும் அன்புடனே புகழ்ந்து கொண்டாடப்பட்ட அடியார்களை எந்நாளும் தொழுதுபோற்றி வாழவேணும் என்பதாம். கர்த்தாவைத்தான் காணாதபடியினாலே கர்த்தாவின்[4] அடியார்களைக் கண்டு போற்றினால் கர்த்தாவைக்[5] கண்ட பலனைக் கொடுக்கும். அந்தக் கர்த்தாவும் அடியார்களிடத்திலே இருத்தலால் இதைத் தன்னைப் புகழ்ந்தாரைத் தான்போற்றி வாழ வேணுமென்று சொல்லுவாரும் உளர்.

**81. பூமி திருத்துண்[6]**

என்றது, பூமியை நன்றாய் திருத்திச் சமன்செய்து பயிரிட்டு உண்ணவேணும் என்பதாம்.

**82. பெரியாரைத் துணைக்கொள்**

என்பது, பெரியோர்களை வணங்கி, அவர்களுக்கு மனதுவர நடந்துகொண்டு, அவர்கள் கிருபையாகிய கருணையே தனக்குத் துணையாகக் கொண்டிருக்கவேணும் என்பதாம்.

**83. பேதைமை அகற்று**

என்றது, பேதைமை புத்தியான அறிவில்லாமையை விட்டுவிடவேணும் என்பதாம். என்றபோதே புத்திகோசாரமாய்[7] அறிவுடனே கூடியிருக்கவேணும் என்பதாம்.

**84. பையலோடு இணங்கேல்[8]**

என்பது, சிறியவர்களுடனேயும், சிறியவர்களாகிய புத்தியில்லாத பேருடனேயும் இணங்காதே. சிறியவர்களுடனே இணங்கினால் அறிவும் நடக்கையும் மாறுபாடாய் கெட்டுப்போம் என்பதாம்.

---

1. மனிதனாகப் பிறந்தால்
2, 3. சிவபெருமான்
4, 5. கற்தா (சு. பா.)
6. பூமி திருத்தி உண்
7. புத்திக்கேற்ற
8. பையலோ டிணங்கேல் (சு. பா.)

**85. பொருள்தனைப் போற்றிவாழ்**

என்பது, தனக்குண்டான திரவியத்தைப் பெருக்கிக்கொண்டு அதைச் சுருக்காமல் [1] போஷித்துக்கொண்டு [2] போற்றி வாழவேணும் என்பதாம், என்பதற்கு உதாரணம்,

*'பொருளாட்சி போற்றாதாாக் கில்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.'* [3]

**86. போர்த்தொழில் புரியேல்** [4]

என்பது, சண்டைத் தொழிலாகிய வருத்தம் [5] வரப்பட்ட தொழில் யாதோ அந்தத் தொழில்களை ஒருக்காலும் செய்யவேண்டாம் என்பதாம். [6]

**87. மனம்தடு மாறேல்** [7]

என்பது, யாதொரு காரியத்திலும் மனது தடுமாறாமல் திடசித்த மாக இருக்கவேணும் என்பதாம்.

**88. மாற்றானுக்கு இடம்கொடேல்** [8]

என்பது, தன்னைக் கெடுக்கப்பட்ட மாற்றானாகிய [9] சத்துருக் களுக்கு இடம் கொடுக்காமல் இருக்கவேணும் என்பதாம்.

**89. மிகைபடச் சொல்லேல்** [10]

என்பது, ஒருவர் பேரிலே மிகையான வார்த்தைகளை ஒருக்காலும் சொல்லவேண்டாம் என்பதாம்.

**90. மீதூண் விரும்பேல்** [11]

என்பது, யாதொரு வஸ்துவும் அமிர்தமேயாகிலும், அதன் பேரிலே அபேட்சையாய் ஊண்மேல் உண்ணாதே. ஊண்மேல் உண்டால் வியாதிகள் மேன்மேலும் உண்டாம் என்பதாம்.

---

1. சிறுக்காமல் (சு. பா.)
2. பாதுகாத்துக்கொண்டு
3. புலான் மறுத்தல், குறள் எண், 252.
4. போர்த்தொழில் பிரியன் (சு. பா.)
5. விருத்தம் (சு. பா.)
6. போர்த் தொழில் பழகு—பாரதியார்.
7. மனந்தடுமாறன் (சு. பா.)
8. மாற்றானுக் கிடங்கொடேன் (சு. பா.)
9. மாற்றானானாகிய (சு. பா.)
10. மிகபடச் சொல்லன் (சு. பா.)
11. மீதூண் விரும்பன் (சு. பா.)

91. முனைமுகத்து நில்லேல்[1]

என்பது, ஒருவருக்கொருவர் சண்டை பண்ணச்சே, அந்த சண்டை முகனையிலே நிற்கவேண்டாம் என்பதாம்.[2]

92. மூர்க்கரோடு இணங்கேல்[3]

என்பது, மூர்க்கமான பொல்லாத குணத்தையுடைய மூடருடன் கூடி இணங்காதே என்பதாம்.

93. மெல்லியார் தோள்சேர்

என்பது, தான் விவாகம் பண்ணிய மெல்லியலான தன் பெண்சாதி தோள் சேர்ந்து, தன்தாரமன்றிப் பிறர்தாரப் புத்திரனாயிருக்க வேணும்[4] என்பதாம்.

94. மேன்மக்கள் சொற்கேள்

என்பது, மேன்மக்களாகிய பெரியோர்கள் சொல்லும் வசனத்தையும்[5] கேட்டு, அவர்கள் சொல்லும் வழிபாட்டின் வழியே[6] நடந்து கொள்ளவேணும் என்பதாம்.

95. மைவிழியார் மனையகல்

என்பது, மைவிழியாராகிய வேசியர்கள் வீட்டுவழி சேராதே. அந்த வேசியரைச் சேர்ந்தால் கையிலிருந்த திரவியமும் போய், ககனமும் போய்,[7] நல்லோர்கள், பெரியோர்கள், தாய், தகப்பன், குரு, தெய்வம், தன்மனிதர், மக்கள் என்கிற விசுவாசமும்போய், லட்சுமி கரமும் போய்,[8] நானாபிஷ்டனாய்,[9] மற்றதொரு[10] சிந்தனையும் இல்லாமல், அதுவே பிரமையாய் தரித்திரனாய்க்[11] கெட்டுப்போவார்கள். ஆதலால் வேசியரைக் காமமோக வாஞ்சையினாலே விரும்பிச் சேரலாகாது என்பதாம்.

---

1. முனை முகத்து நில்லன் (சு. பா.)
2. பாரதி, பாரதிதாசன் இருவரும் ஆத்திசூடியினின்றும் வேறுபடும் இடங்களில் ஒன்று.
3. மூர்க்கரோடு இணங்கன் (சு. பா.)
4. மற்றவர் மனைவிக்கு மகனாயிருத்தல்
5. அறிவுரை
6. நெறியின்படி
7. சொர்க்கம்
8. திருமகள் அருளும் இழந்து
9. மனம்போன போக்கில்
10. மத்தொரு (சு. பா.)
11. தாரித்திரனாய் (சு. பா.)

*'நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில்*
*கொண்ட கருவழிக்கும் கொள்கைபோல்—ஒண்டொடீ*
*போதந் தனங்கல்வி பொன்றவரும் காலமயல்*
*மாதர்மேல் வைப்பார் மனம்.*[1]

*'பொருட்பெண்டிர் பெண்மை முயக்கம் இருட்டறையில்*
*ஏதில் பிணந்தழீஇ யற்று.'*[2]

*'பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை*
*தேம்படு தெள்கயத்து மீன்காட்டும்—ஆங்கு*
*மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்*
*விலங்கண்ண வெள்ளறிவி னார்.'*[3]

**96.** மொழிவ தறமொழி[4]

என்பது, சொல்லுகிற சொல்லை; அந்தந்த காரியபாகம்[5] அறிந்து, அறப்பேசி[6] உறவு கொள்ளவேணும். ஆதலால் சொல்லுகிற சொல்லை முகநட்பாம்[7] மனதில் ஒன்றும் வாக்கிலொன்றுமாய்[8] பேசாமல் மனதில் உள்ளபடி வாக்குனாலே கண்டபடி பேசவேணும் என்பதாம்.[9]

---

1. குறள் தவிர வேறுபாடலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
'நன்று சிப்பி வேய்கதலி நாசம்வரும் காலத்துக்
கொண்டைக் கருவழிக்குங் கொள்கைபோல்—ஒண்டொடியீர்
போதனஞ்சொல் லவிகுலம் போன்றுவரும் காலத்து
மாதர்மேல் வெக்கும் மனம்.' (சு. பா.)
—நல்வழி, பாடல் எண். 36.

2. 'பொருட்பெண்டீர் பெண்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று' (சு. பா.)
வரைவின் மகளிர், குறள் எண். 913.

3. 'பாம்பிற் கொருத்தலை காட்டி யொருதலை
தேம்படு தெள்கயற்று மீன்காட்டு மாங்கே
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.' (சு. பா.)
—நாலடியார், பாடல் எண். 375.

4. மொழிகலதறமொழி (சு. பா.)
5. செயலின் தன்மை அறிந்து
6. முழுமையாகப்பேசி
7. முகத்தாட்சண்யம் என்பதற்குரிய தமிழ்ச்சொல்
8. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல்
9. உண்மையைப் பேசவேணுமென்பதாம்.

**97. மோகத்தை முனி**

என்பது, காமமோக வாஞ்சையும், யாதொரு பொருள்களின் பேரிலே மிகுந்த ஆசையையும் முனிந்து விட்டுவிடவேணும் என்பதாம்.

**98. வளமை பெறவாழ்**[1]

என்பது உலகத்தின்கண் இந்த குடித்தனம் சகல வண்மையும் உள்ள குடித்தனம்,[2] என்று சகலரும் சொல்லிக்கொண்டு கொண்டாடப்பெற்று வாழவேணும் என்பதாம்.

**99. வாதுமுற் கூறேல்**

என்பது, ஒருவருடனேயும் சாதி சமய[3] ஆதிகளும் விருது, விருதாவளிகளும்[4] பேசாதே என்பதாம்.

**100. வித்தைவிரும்பு**

என்பது, சகலமான வித்தைகளும் கற்கவேணும் என விருப்பமாக நினைத்துக் கற்கவேணும் என்பதாம்.

**101. வீடுபெற நில்**

என்பது, உலகத்தின்கண் இன்னார்[5] வீடு என்கிற பேர் போகாமல்[6] எந்நாளும், எல்லாரும் சொல்லிக்கொண்டாடப் பெற்று வாழவேணும். அதன்றியிலே வீடாகிய மோட்ச வீடு பெறத்தக்க எந்தெந்த வழிபாட்டிலே[7] நின்று நடந்துகொள்ள வேணுமோ, அந்த மார்க்கமான[8] வழிபாட்டிலே நிற்கவேணும்.

**102. வுத்தமனாய் இரு**[9]

என்பது, உலகத்திலே நல்லோர்கள் பெரியோர்கள் இவன் மகா உத்தமனென்று சொல்லிக்கொள்ளத்தக்க நடந்து கொண்டிருந்து வாழவேணும் என்பதாம்.

---

1. 'வல்லமை பேசேல்' என்றும்பாடம்
2. குடித்தினம் (சு. பா.)
3. சாதிபற்றிப் பேசவேண்டாம் என்றுள்ள உரை குறிப்பிடத்தக்கதாகும்.
4. தற்பெருமை
5. இத்தகையோர்
6. என்கிற பெயர் கெட்டுப்போகாமல்
7. வழி முறைகளிலே
8. வகையான
9. வுத்தமனாயிரு (சு. பா.) சுவடியில் 'உத்தமன்' என்பது 'வுத்தமன்' என்று குறிபபிடப்பட்டுள்ளது. எழுத்து வரிசைக்கு ஏற்ப அவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

**103. லூருடன் கூடிவாழ்**[1]

என்பது, தானிருக்கும் ஊராரோடே ஒப்பந்தமாய் ஊரவர்களைப்[2] பகைத்துக் கொள்ளாமல் கூடிவாழவேணும் என்பதாம்.

**104. வெட்டெனப் பேசேல்**[3]

என்பது, வெட்டென்னும் வெடித்த சொல்லாய் பதைப்புடனே பட படவென்று உரைத்த வார்த்தையாய்ப் பேசாதே. பேசினால் சகல ருக்கும் வருத்தம் வரும். ஆகையால் வெட்டென்ற சொல் வெல்லாது.[4]

**105. வைகறை துயிலெழு**[5]

என்பது, சூரிய உதயகாலத்திலே நித்திரை பண்ணாமல் நித்திரையை ஒழித்து, சருவக்கியானான சருவேசுவரனைத் தோத்திரம் பண்ணித் துதித்துத் தொழுதுகொண்டு எழுந்திருக்கவேணும் என்பதாம்.

**106. வொன்னாரைச் சேரேல்**[6]

என்பது, ஒன்னாராகிய[7] எதிராளிகளுக்கு இளைத்துத் தோத்துப் போகாமல் எதிராளியை வெல்லவேணும் என்பதாம்.

**107. வோரஞ் சொல்லேல்**[8]

என்பது, உலகத்திலே தன்னவன், பிறத்தியான், சிநேகிதன்,[9] பகைத்தவன், உரத்தவன்,[10] இளைத்தவன் என்று பார்த்து பார பட்சமாய்[11] மண்ணில் நின்று வழக்கோரம்[12] பேசவேண்டாம்.

---

1. ஊருடன் கூடிவாழ்
2. ஊரில் உள்ளவர்களை
3. வெட்டெனப் பேசேன் (சு. பா.)
4. வெற்றிபெறாது 'வேண்டி வினைசெயேல்' எனும் ஆத்திசூடி சுவடியில் இடம் பெறவில்லை.
5. வைகறை துயிலொழி (சு. பா.)
6. வொண்ணாரைத்தேரேன் (சு. பா.)
7. பகைவராகிய
8. வோரெனச் சொல்லன் (சு. பா.)
9. நண்பன்
10. வலியவன்
11. நடுவிகந்து
12. வழக்கு தவறி

எல்லோரையும் சருவத்திராமானமாய்[1] பார்த்து வழக்கு வந்த விடத்து நடுக்கண்ட வழக்காய் தருமமாம்படியே[2] பேசவேணும் என்பதாம். அதற்கு உதாரணம்,

*'நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்*
*குற்றமும் ஆங்கே தரும்.'*[3]

ஔவையார்[4] அருளிச்செய்த நீதிச்சொல் முற்றும் என்பது ஔவையார்[5] உலக உபகாரமாக இந்த நீதியை அகர எழுத்து முதலாக ஃ.[6] ஈறாக எழுத்துப் பதின்மூன்று, ககரம் முதலாக னகாரம் ஈறாக எழுத்து 18; ககரம் முதலாக கோகாரம் ஈறாக எழுத்து 11; சகரம் முதலாக சோகாரம் ஈறாக எழுத்து 11; தகரம் முதலாக தோகாரம் ஈறாக எழுத்து 11; நகரம் முதலாக நோகாரம் ஈறாக எழுத்து 11; பகரம் முதலாக போகாரம் ஈறாக எழுத்து 11; மகரம் முதலாக மோகாரம் ஈறாக எழுத்து 11; வகரம் முதலாக வோ காரம் ஈறாக எழுத்து 11; இப்படியாக உயிரெழுத்து முதல் உடலெழுத்தெனும்[7] உடலும் உயிரும் கூடி உச்சரிக்கப்படா நின்ற எழுத்துக்களிலே தலைநின்ற எழுத்துக்களினும் இடை நின்ற எழுத்துக்களினும் ஔவையார்[8] செய்த நீதிச்சொல் நூற்றெட்டும் முற்றும்.[9]

---

1. சமமாக எண்ணி
2. தற்மமாம் படியே (சு. பா.)
3. வெ.ஃகாமை, குறள் எண். 171.
4, 5. வெளயார் (சு. பா.)
6. ஆய்த எழுத்து ஃ என்பதற்குப் பதிலாக 'கூ' என்று எழுதப்பட்டுள்ளது.
7. மெய்யெழுத்திற்கு உடலெத்து என்று இன்னொரு பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.
8. வெளயார் (சு. பா.)
9. முத்தும் (சு. பா.)

இறுதியில் 'திருச்சிற்றம்பலம் ஆத்துசிவடி உரை' என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

# பின்னிணைப்பு—1

| ஆத்திசூடிப்பாடல் | | எடுத்துக்காட்டாக வந்துள்ள குறள் |
|---|---|---|
| 1. அறம்செய விரும்பு | — | அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை<br>மறத்தலி னூங்கில்லைக் கேடு. (32)<br><br>அறத்தா றிதுவென வேண்டா சிவிகை<br>பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (37) |
| 2. ஆறுவது சினம் | — | உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தான்<br>உள்ளான் வெகுளி யெனின். (309) |
| 3. இயல்வது கரவேல் | — | |
| 4. ஈவது விலக்கேல் | — | கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்<br>உண்பதூஉம் இன்றிக் கெடும். (166) |
| 5 உடையது விளம்பேல் | — | |
| 6. ஊக்கமது கைவிடேல் | — | உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லார்<br>உடையது உடையரோ மற்று. (591) |
| 7. ‘எண்ணெழுத்து இகழேல்’ | | எண்ணென்ப ஏனை எழுத்தென்ப யிவ்விரண்டும்<br>கண்ணென்ப வாழு முயிர்க்கு. (392) |
| 8. ஏற்பது இகழ்ச்சி | — | ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு<br>இரவின் இளிவந்த தில் (1066) |

| ஆத்திசூடிப்பாடல் | | எடுத்துக்காட்டாக வந்துள்ள குறள் |
|---|---|---|
| 9. ஐயமிட்டுண் | — | ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை<br>மாற்றுவா ராற்றலின் பின். (225) |
| 10. ஒப்புரவொழுகு | — | ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்<br>உயிரினும் ஓம்பப் படும். (131) |
| 11. ஓதுவது ஒழியேல் | — | தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத் தூறும் அறிவு. (396) |
| 12. ஔவியம் பேசேல் | — | புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்<br>அறங்கூறும் ஆக்கம் தரும். (183) |
| 13. அஃகஞ் சுருக்கேல் | — | அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே<br>செல்வத்தைத் தேய்க்கும் படை. (555) |
| 14. கண்டு ஒன்று சொல்லேல் | | பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்<br>மக்கட் பதடி யெனல் (196) |
| 15. ஙப்போல் வளை | — | சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்<br>பெற்றத்தால் பெற்ற பயன். (524) |
| 16. சனி நீராடு | — | பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்<br>இருள்தீர எண்ணிச் செயல். (675) |
| 17. ஞயம்பட உரை | — | சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்<br>இம்மையும் இன்பம் தரும். (98) |

18. இடம்பட வீடு எடேல் — அறனெனப் பட்டதே
இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.
(49)

19. இணக்கமறிந்து இணங்கு — குடிப்பிறந்து தன்கண் பழிநாணு
வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும்
நட்பு. (794)

20. தந்தை தாய்ப்பேண் — அன்பின் வழிய துயிர்நிலை
யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (80)

21. நன்றி மறவேல் — நன்றி மறப்பது நன்றன்று
நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (108)

22. பருவத்தே பயிர்செய் — இலமென் றசைஇ இருப்பாரைக்
காணின்
நிலமென்ற நல்லாள் நகும்.
(1040)

23. மன்றுபறித்து உண்ணேல்-முதல்
58. துன்பத்திற்கு இடம்கொடேல்
வரை } குறட்பாக்கள் சான்று காட்டப்படவில்லை.

59. தூக்கிவினை செய்யேல் — பயன்றூக்கார் செய்த உதவி
நயன்தூக்கின்
நன்மைக் கடலிற் பெரிது (103)

60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோ டொத்து வாழ் } ———

62. தையல சொற் கேளேல் — பெண்ணேவல் கொண்டொழுகும்
ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து
(907)

63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடொப்பன செய் — ———

67. நிலையில் பிரியேல் — நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. (124)

68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல் — ———

70. நூல்பல கல் — யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (397)

71. நெற்பயிர் விளை — உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பினசெல் பவர். (1033)

72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பனப் பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைகள் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
81. பூமி திருத்துண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதைமையகற்று
84. பையலோடு இணங்கேல் — ———

85. பொருள்தனைப் போற்றிவாழ்—பொருளாட்சி போற்றாதார்க்
கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின்
பவர்க்கு. (252)

86. போர்த்தொழில் புரியேல்
87. மனந்தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச்சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லியலார் தோள்சேர்
94. மேன்மக்கள் சொற்கேள்

—————

95. மைவிழியார் மனையகல் — பொருட்பெண்டிர் பெண்மை
முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. (913)

96. மொழிவதற மொழி
97. மோகத்தை முனி
98. வளமைபெற வாழ்
99. வாதுமுற் கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாக இரு
103. ஊருடன் கூடிவாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வைகறை துயிலொழி
106. வொன்னாரைச் சேறேல்

—————

107. வோரெனச் சொல்லேல் — நடுவின்றி நன்பொருள்
வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். (171)

## குறள் தவிர சான்றாக வந்துள்ள பிறபாடல்கள்

95. மைவிழியார் மனையகல் — நண்டுசிப்பி வேய்கதலி
நாசமுறும் காலத்தில்
கொண்ட கருவளிக்கும்
கொள்கைபோல் —
ஒண்டொடீ
போதந் தனங்கல்வி
பொன்ற வரும் காலம்
அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்.
—நல்வழி, 36.
ந. மு. வேங்கடசாமி
*நீதி நூற்கொத்து-முதல் பாகம்.*

பாம்பிற் கொருதலை காட்டி
யொருதலை
தேம்படு தெண்கயத்து
மீன்காட்டும்—ஆங்கு
மலங்கன்ன செய்கை
மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.
(நாலடியார்-375)

## பின்னிணைப்பு—2

*தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் திரு. இரா. நாகசாமி அவர்களால் தொகுக்கப்பட்டு, இப்போது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ள சுவடிகளில் கீழ்க்கண்டவாறு ஓர் ஓலைச் சுவடி உள்ளது.*

### நீதி நூல்

நெடுமால் திருமருகா நித்தன் முதலாயக்
கொடுமால் வினையறுக்குங் குன்றே—தடுமாறாய்
யெண்ணெழுத்து முப்பதுவு மென்சித்தத் தேநிற்கப்
பண்ணுந் தமனே பணி.

கடன்படு வழக்கம் கண்ணியம் குறைக்கும்
காடுணி யங்தொலை காருணியம் நிறை
கிரமங் தப்பினாற் சிரம முண்டு
கீலகஞ் செய்வது கீழோர்க் குரியது
குடிப்பவன் குடி கெடுமோர் நொடி
கூத்தில் இச்சை கொடுத்திடும் பிச்சை
கெடுதி நினைப்பவர் சடுதியிற் கெடுவர்
கேவலச் சொல்லைக் கேட்டதிற் பழகேல்
கைதூக்கி விடு கஷ்டமுள் ளோரை
கொடுப்பதைத் தடுப்பது கொடும் பாவமது
கோடிப் பணமும் ஓடிப்போம் க்ஷணம்
கௌவைச் சொல்லைக் கனவிலும் நினையேல்
சபையின் சாரம் சாஸ்திர விசாரம்
சாடிச் சொற்குச் சற்றுமிடங் கொடேல்
சிறியனும் பெரியன் சிறப்புநடை யுடையன்
சீரியர் சினேகம் சிறப்பைக் கொடுக்கும்
சுருக்கி யெழுதிப் பெருக்கிப் போதி
சூர னாவான் குரூர னாகான்
செய்கை நலத்தால் ஜன்மஞ் சிறந்ததாம்

சேர்க்கைச் சேருமுன் தீர்க்கச் சோதனைசெய்
சொத்தைக் காட்டிலும் வித்தை விசேஷம்
சோதனை பலத்தால் நீதி விளங்கும்
சௌந்தரி யத்திலுஞ் சாந்தமே சலாகியம்
ஞான வழியை ஞாபகத் தேவை
தஞ்சமென் றோர்க்குச் சஞ்சலம் போக்கு
தாகமென் றோர்க்குத் தகையைப் போக்கு
திறமை யுடையார் சிரம மடையார்
தீயர் கேண்மை தீயிலும் கொடுமை
துர்க்குணச் சகிப்புச் சற்குணச் சிறப்பு
தூண்டி விடுபவன் நீண்டு வருந்துவன்
தெளிவாய்க் கற்று தேவனைப் போற்று
தேவதூ ஷணசெயிற் பாவமோ சனமிலை
தையலுக் கழகு தையல் கற்பது
தொகுத்தறி வதிலும் வகுத்தறி வதுநலம்
தோழ னுரிமையைத் துன்பத் தேஅறி
நல்வழி யேநட கல்விப் பயன்பட
நாயிலுங் கடையன் தாயைப் பழிப்பவன்
நிதியைக் காட்டிலும் மதியே மேலாம்
நீதி கெடுப்பவன் நிற்கதி யடைவான்
நுணுக்கமாய்ப் பார்த்து இணக்கப் படுத்து
நூலறி வுயரச் சீலஞ் சிறக்கும்
நெறிதவிர்த்த நடை வெறிபிடித்த நடை
நேத்திரம் போன்றவர் சாஸ்திரம் தேர்ந்தவர்
நொண்டி குருடரைக் கண்டு நகையேல்
நோக்க மறிந்து நுவல்வது நன்று
பரத்தையர் நேசம் பிராண மோசம்
பாலிய வயசில் பழக்குநல் வழியில்
பிராணி யிமிசையில் திராணி செலுத்தேல்.

—சுவடி முற்றுப்பெறவில்லை.

## பின்னிணைப்பு—3

*திருமாகறல்—கார்த்திகேய முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற ஆத்திசூடி முதற்சூத்திர விருத்தியுரை, ஆத்திசூடிக்குரிய உரைகளிலேயே சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தாகும். 1918-இல் வெளிவந்த இந்நூலின் அருமைகருதி பின்இணைப்பில் கொடுப்பட்டுள்ளது.*

### ஆத்திசூடி முதற்சூத்திர விருத்தியுரை

*'ஆத்தி சூடி யமர்ந்த தேவனை*
*யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே'*

என்பது பாயிரம்.

எந்நூலுரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்துரைக்கற் பாற் றென்பது இயற்றமிழ் முறைமையாம்.

*"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்*
*பாயிர மில்லது பனுவ லன்றே"*

அப்பாயிரம் பொதுவும் சிறப்புமென இருவகைப்படும். சிறப்புப் பாயிரமே தானுரைக்கின்ற நூற்கு இன்றியமையாதது. பிறவும் விரித்துரைப்பிற் பெருகும். பண்டைநூலிற் கண்டு கொள்க.

இனிச் சிறப்புப் பாயிரம் எண் வகைப்படும். அவை யாவையோ வெனின் :—

ஆக்கியோன் பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனும் என இவை என்னை ?

*" ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை*
*நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே*
*கேட்போர் பயனோ டாயெண் பொருளும்*
*வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"*

என்றாராகலின்.

*"காலங் களனே காரண மென்றிம்*
*மூவகை யேற்றி மொழிநரு முளரே"*

எனவுங் கூறுவாராகலின் இவைமூன்றும் சேர்த்துப் பதினொன்றா மென்பது.

இந்நூல் செய்தார் யாரோ எனின்? தமிழ்நாடு முதலிய பல் வகை நாடும் செய்த நல்வினைப் பயனால் வந்த கலைமகள் வடிவேயாய திருந்திய நோன்பிற் பெருந்தகைக் கற்புடைக் கடவுட் புலமை ஔவையாரென்பது. இவர் பந்தன் கொடுத்த பொற் படாமும் நெல்லியங்கனியிற் பாதியும் பெற்று நெடிதுகால மிருந்தனர்.

வழியென்பது இந்நூல் இன்ன வழியதென்பது. கல்விப் பொருட்கு இறைமை பூண்ட கலைமகளே மற்றொரு வடிவாய் வந்து செய்தருளினமையின் வழி நூலென்று சொல்லப்படாது முதனூலெனப்படுமென்பது. எல்லையென்பது இந்நூல் இன்ன எல்லையுள் நடக்குமென்பது. இந்நூல் எவ்வெல்லையுள் நடக்கு மோ எனின் அகப்பாட்டெல்லையுட் பெரும்பாலும் புறப்பாட் டெல்லையுட் சிறுபான்மையும் நடக்குமென்பது.

நூற்பெயரென்பது நூலது பெயரன்றவாறு. இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், கொன்றைவேந்தன் வாக்குண்டாம் வேழ முகம் முதலியன போல முதற்குறிப்பான் வந்த காரணப் பெயர்த்து.

இனி யாப்பென்பது நூல்யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்கு வகையான் யாக்கப்படும்.

தொகுத்தும் விரித்தும் தொகைவிரியாகவும் மொழிபெயர்த்தும் என, என்னை?

*"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்*
*ததர்ப்பட யாத்தலோ டனைவகைப் படுமே"*

என்றாராகலின் அவற்றுள் இஃது தொகுத்து யாக்கப்பட்டது. என்னை, இப்பரவை யுலகின்கண்ணே வழங்கும் எவ்வகைப் பட்ட மொழியையும் பிழிந்தெடுத்த நறுஞ்சாற்றின் தீஞ்சுவையாக இந்நூல் தொகுத்தாராகலின் என்பது. நுதலிய பொருளென்பது நூற்பொருளைச் சொல்லுதலென்பது. இந்நூல் என்னுதலிற்றோ எனின், நூற்பயன் நான்கும் நுதலிற்றென்பது. கேட்போரென்பது இன்னார் கேட்டற்குரியாரென்பது. இந்நூல் கேட்டற்குரியார் யாரோ எனின், இளைஞர் முதல் எல்லோரும் கேட்டற்குரியா ரென்பது. அவரவர் அறிவுக்குத் தக்கப்பொருள் புலப்படலின்.

பயனென்பது இதுகற்க இன்னது பயக்குமென்பது. இந்நூல் என்ன பயக்குமோ எனின், அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நூற்பயன் நான்கும் பயக்குமென்பது. இனிக்காலமென்பது இன்ன காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டதென்பது. இந்நூல் எக்காலத்த தோ எனின் மதுரைக் கடைச்சங்கத்தார் காலத்ததென்பது.

களமென்பது இன்ன இடத்தில் நூலேறியதென்பது. இந்நூல் எவ்விடத்து ஏறியதோவெனின் அக்காலத்திருந்த தமிழரசர் அவைக்களத்தேறியதென்பது.

காரணமென்பது இன்ன காரணங் கருதி இந்நூல் இயற்றப் பட்டதென்பது. இந்நூல் எக்காரணத்தினால் இயற்றப்பட்டதோ எனின், பரவையுலகின்கட் படர்ந்த அறியாமையை எளிதே தவிர்க்க வேண்டுமென்னும் அருட் காரணத்தானென்பது.

சிறப்புப் பாயிரமாயினன்றோ இத்துணையும் வேண்டுமெனின், அற்றன்று, இது சிறப்புப் பாயிரத்தோடொத்த தற்சிறப்புப் பாயிர மாகலின் அவ்வனைத்தும் வேண்டுமென்பது. வேண்டா வென் பாரை ஆக்கியோன் முதலியன இல்லாமே நூல் எங்ஙனம் படைத்தல் கூடுமெனக் கூறி மறுக்க.

தற்சிறப்புப் பாயிரமாவ தென்னையெனின் ?

*"தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும்*
*எய்தவு ரைப்பது தற்சிறப் பாகும்"*

என்பதனாலுணர்க. இப்பாயிர மின்றியும் நூலியற்றப்படுமாலோ எனின், தொல்காப்பிய முதலியன போல நூற்குப் புறம்பாகவும் இயற்றப்படுமென்க. இது பெருவழக்கிற்றன்று. இத் தற்சிறப்புப் பாயிரம் வழிபடு கடவுள் வணக்கம் கூறுதல் நுதலிற்று.

யாம். எ - எய்—தொழுவோம். ப - லை—தேவனை. செ - ள்— ஏத்தி ஏத்தி இவ்வடுக்கு இடை விடாமைப் பொருட்டு. தந்தைக்கு மூத்த மகனிடத்தும் தாய்க்கு இளைய மகனிடத்தும் விருப்ப முண்டாதல் இயற்கையதாகலின் அதுதோன்ற அமர்ந்த என்றார். "எம் ஏம் ஓமிவை படர்க்கையாரையும்" என்பதனால் தொழு வோம் என்னும் தன்மைப் பன்மை வினைமுற்று படர்க்கை

யாரையும் தழுவாது வந்தமையின் இழுக்கன்றோ எனின் அற்றன்று. தனித்தன்மை வினைமுற்றெனவும், தன்னொடு படுக்கும் தன்மை வினைமுற்றெனவும் தன்மை வினைமுற்று இருவகைப்படும். அவற்றுள் இஃது தனித்தன்மை வினைமுற்றென்க. தன்னொடு படுக்குங்கால் இவ்விறுதிநிலை யின்ன இடத்து வருமென்று கூறினாரேயன்றி அதனால் தன்னொடு படுக்காது வாராதென்று கொள்ளற்க. தொழுவோமியாம் என்பதில் "தன்னொழி மெய்ம் முன் யவ்வரினிகரம் துன்னுமென்று துணிநருமுளரே" என்ப தால் இகரச் சாரியை தோன்றியது.

கடலாத்தி, காட்டாத்தி, கொடியாத்தி, படராத்தி, திரு வாத்தி, கோழையாத்தி முதலிய பல்வகை யாத்திகளுள் ஈண்டு நுதலியது எவ்வாத்தியோ எனின் தமிழின் கண்ணே ஆத்தியை யுணர்த்தும் ஆர் முதலிய சொற்களான் இன்ன ஆத்தியென விளங்காவிடினும் ஆரியத்தின்கண்ணே தாதகி, தாதுபுட்பிக என்னும் சொற்களான் செம்மரமும் செம்மலரும் உடைய ஆத்தி யென இனிது விளங்கலானும் அத்தன்மை காட்டாத்தியினிடத்தே யிருக்கின்றமையானும் முக்கட் பெருமான் துறவறவேடம் பூண்டு சிறுத்தொண்ட நாயனாருக்காகத் திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளியது இவ்வாத்தியின் கீழாகலானும், ஏனை ஆத்தி யினிடத்தே இச்சிறப்பின்மையானும் அம்முக்கட் பெருமான் பூண்ட ஆத்தி காட்டாததியென்றே தெளிக. திருவீழிமிழலை முதலிய வற்றில் தலவிருட்சம் காட்டாத்தியேயாம். காட்டாத்தியை உரித் தககண் அதனபட்டை சிவப்பாகவே யிருக்கும். அதனால் தாதகி யென்றனர்.

வழிச் செல்வோன் தன் வலப்பக்கத்தில் காட்டாத்தி நேர்ந்து, அதனது மெல்லிய இளிய பூந்தளிர் கொய்து வலச் செவியிற் செருகிக்கொள்ளின், அன்னோன் அற்றைநாள் கற்றா வுடையான் விருந்துண்டு இனிதுவக்குமெனப் பௌராணிகர் கூறுப. அதனால் வடநூலார் முருட்டான்ன பத்திரியென்ப. இங்ஙனமன்றிக் கொடியாத்தி முதலியனவாகக் கூறல் பொருந்தா தென மறுக்க.

ஆத்திசூடி யென்பதை வினையெஞ்சு கிளவியாக வைத்துச் சிவபெருமானை வணங்குதும் எனின் பொருந்தாது. என்னை? யானைமுகக் கடவுளையே காப்புக் கூறல் வைதிக சமயமரபு.

ஔவையாரும் வழிபடு கடவுள். அது ஈமத்தாடி, பேயோடாடி, பயங்கொளி, தோற்புக்கொளி என்பனபோல உயர்திணையில் வந்தது. சூடு+இ, உயர்திணைப் பெயர் விகுதி.

" அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப் பைம்பூணிறை " ஆகலின் இந்நீதிநூற்கு நீதியிற் சிறந்து தேவர் பட்டம் பெற்ற ஆரக்கண்ணியனாகிய சோழனைக் காப்பாகக் கூறுவோரும் உள ரெனின், நூல் முடிவு பெறுங்காறும் ஆக்கியோர் தமக்குப் புறத்தே நோய் முதலியன எய்தினும் அகத்தே செய்யுள் உணர்வு முதலியன குன்றினும், முறையே அவற்றைச் சுருக்கற்கும் பெருக்கற்கும் அன்னோன் வலியன் அல்லன் ஆகலின் அதுவும் பொருந்தாதென்க.

தேவனடியைத் தொழுவோம் என்னாது, தேவனைத் தொழு வோம் என்ற தென்னையெனின், யானைமுகக் கடவுளுககுத் தேவாங்கம், பூதாங்கம், மிருகாங்கம் என்னு மூன்றனுள் தேவாங்க மாகிய பாதபூசையே சிறந்ததாகலின் அங்ஙனம் கூறினும அப் பொருளே பயக்கும். மிருகாங்கம் ஒருமொழி வடிவென்பர்.

பாயிரம் முற்றுப்பெற்றது.

## நூல்

*"அறஞ்செய விரும்பு"*

என்பது நூற்பா. வடநூலார் சூத்திரமென்பர், என்னை, "சில் வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனாடியிற் செறித் தினிது விளக்கித் திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்" ஆசிரியம் மூன்றடியிற் சிறுத்து வாராமையின் சூத்திரமேயாம்.

*அறம் — தருமத்தை*
*செய — செய்வதற்கு*
*விரும்பு — அதிக ஆசை கொள்க*

என்பது கண்ணழிப்பு, கண்ணழிப்பெனினும் பதவுரையெனினும் ஒக்கும். என்னை "தொகுத்த கவியைச் சொற் சொல்லாகப் பகுத்துப் பொருள் சொலல் பதவுரையாமே" என்றாராகலின்.

தருமத்தைச் செய்வதற்கு அதிக ஆசைகொள்க என்பது பொழிப்புரை. என்னை "பொழிப்பெனப்படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே"

மறஞ்செய விரும்பேல் என்பது எதிரிடை.

தருமஞ் செய்யவேண்டும் என்பது கருத்துரை. என்னை, "கவிப்பொருள் சுருக்கிக் காட்டல் தாற்பரியம்" என்றாராகலின்.

*"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்காற் பொன்றாத் துணை"*

என்பது தமிழ்வேதம்,

அறஞ் செய்யும் விருப்பம் எப்பொழுதுண்டாகுமோ எனின், உயிர்கள் பசி, அச்சம், பிணி, நீர்வேட்கை, கொலை, மானக் கேடு, சாக்காடு முதலியவற்றால் துன்பம் நுகரக் கண்ணுற்ற போதேனும், செவியுற்ற போதேனும், இங்ஙனம் நேரிடுமென அறிந்த போதேனும் அருள் சுரந்து அறம் செய்யும் விருப்பம் உண்டாகு மென்க. என்னை பயனோ எனின் எல்லா வுயிர்களிடத்தும் முழு முதற் பரம் பொருளுண்மையின், அத்தொடர்பு பற்றி அப்பரம் பொருளினது அருட்சுரப்பு அறம் செய்வாரிடத்தே உண்டாகும். அதுவே பயனென்க. தற்காப்பு நிமித்தம் விலங்கிற்குக் கொம்பும், குளம்பும், திண்ணியதோலும், செறிந்த மயிரும் வாலும் படைத்

திருப்பதை நோக்கின் அப்பரம் பொருளினது பேரருளுடைமை யினிது விளங்குகின்றது. அக்கருத்தறியாமே அதனைக் கொல் கின்றனரே. பிறவுயிர்கண்மாட்டும் இங்ஙனமே யாராய்க. ஆராய்ந்து அவ்வழியே நிற்க.

இனி விரித்துரை செய்வாம். என்னை, "சூத்திரத்துட் பொருளன்றியு மாண்டைக் கின்றியமையா தியாவையும் விளங்கத் தன்னுரையானும் பிறநூலானும் ஐயமகல வைங்காண்டிகையுறுப் பொடு மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி," "மாத்திரை முதலா வடிநிலைகாறும் நோக்குறுப்புடையது நோக்கெனப்படுமே"

*"பொழிப்ப கலநுட்ப மெச்சமிந் நான்கில்*
*கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பில்*
*நிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட*
*வுரையாமோ நூலிற்கு நான்கு"*

என்றாராகலின்.

ஓரடியாற் சூத்திரித்தது என் கருத்தெனின் தெய்வம் ஒன்றுண்டு, வீடு ஒன்றுண்டு, அவை அறஞ்செய்வதா லுண்டாகற் பாலன என்பனவற்றைக் குறித்தாகலின் அக்கருத்தென்க.

திரிகரணத்துள் இறுதிக்கண் நின்ற காயத்தின் தொழிலை யீண்டுக் கூறினமையின் முதற்கண் நின்ற மனத்தின் தொழிலையும் வாக்கின் தொழிலையும் கூட்டி, அறத்தை மனத்தாற் கருதி வாக்கினாலுரைத்துக் காயத்தாற் செய்ய விரும்புக என்றுரைக்க. அற்றேல் "மனத்தின்கண் மாசிலனாத லனைத்தறன்—ஆகுல நீரபிற" என்பது எற்றுக்கெனின் அற்றன்று. அஃது அழுக்காறு முதலிபன பெரிதும் உடையராய்த் தற்புகழ்ச்சியிலேயே அழுந்தி நின்றாரை நோக்கிக் கூறியதென்க. திரிகரணமெனினும் முப் பொறியெனினும் ஒக்கும். இம்மூன்றும் ஒத்ததே அறமென்பதாம். செய்யவே விரும்பு எனத் தேற்றேகாரம் அமைத்துக் கூறாமையின் கருத விரும்பேல், சொல்ல விரும்பேல் என்னற்க. செய்ய இயை யாவழிச் சொல்லலும், அஃதும் இயையாவழிக் கருதலும் வேண்டு மாகலின் அறம் கருத விரும்பு, அறம் கருதவும் சொல்லவும் விரும்பு, அறம் கருதவும் சொல்லவும் செய்யவும் விரும்பு, எனத் தனித்தனிப் பிரித்துரைக்க. மனத்தினிடத்தே அறத்தின் வாசனை வீசினா லொழிய ஏனைய வாக்கிலும் காயத்திலும் அமையா தாகலின் அறஞ்செய்க என்றொழிபாது அறஞ்செய விரும்பு என்றார். என்னை, விருப்பம் என்பது மனத்தினிடத்தே தோன்று மோர் பண்பாகலின்,

தானமும் செய்கை யன்றோ "தானமது விரும்பு" என வேறு கூறிய தென்னெனின், அற்றன்று. தானம் கைக்கொடையொன் றற்கே யுரிமையாதலுடைத்து. அறம் திரிகரணத்திற்கும் பொது வாதலுடைத்து, அதனை,

*"இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக*
*வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி*
*அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர்*
*பைங்கூழ் சிறுகாலைச் செய்"*

என்பதனானுமுணர்க. நூற்பயன் நான்கனுள், இம்மைப் பயனாகிய பொருளின்பங்களையும், மறுமைப்பயனாகிய வீட்டினையும், அற மொன்றுமே தரலின் அன்றோ "அறஞ்செய விரும்பு" என முதற்கட் கூறினார். பொருளும் இன்பமும் போலாது இம்மை மறுமை வீடு என்னு மூன்றனையும் பயத்தலால் அறமொன்றுமே சிறந்தது எனப் புலனாதலின் ஓரடியாற் சூத்திரித்தது இக் கருத்துமாம் என்க.

இருசீரான் ஓதியது என்குறித்ததோ எனின் அவ்வறம் இல்லறம் துறவறம் என இரண்டு பாகுபாடுடைமையின் அவற்றைக் குறித்ததென்க. நான்கசையால் ஓதியது எந்நோக்குடைத்தோ எனின் பார்ப்பார், அரசர், வணிகர், * வெள்ளாளர் என்னு நான்கு

---

* தமிழ் நூலார் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்பதைப் பார்ப் பான், அரசன், வணிகன், வெள்ளாளன் என மொழி பெயர்த்தலின் வெள் ளாளன் என்பதற்குச் சூத்திரன் எனப்பொருள் கூறலொக்கும். தமிழ் நாட்டில் மருதநிலத் தலைவராகிய வேளாளரென்னும் சொற்குச் சூத்திர னெனப் பொருள் கூறல் ஒருசிறிதும் ஒவ்வாதென்க.

எங்ஙனமெனின் :—

வெள்ளாளன், வெண்மை + ஆள் + அன் எனப்பிரித்து வெண்மையை ஆளுதலுடையான் எனப்பொருள் கூறல் வேண்டும். வெண்மை யென் பதற்குப் பொருள் அறிவின்மை.

வேளாளன், வேளாண்மை + அன். எனப்பிரித்து வேளாண்மையை உடையவன் எனப் பொருள்கூறல் வேண்டும். வேளாண்மை என்பதற்குப் பொருள், ஈகை. அவ்விருபதங்கட்கும் அப்பொருளுண்மை,

"வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை
யுடையம் யாமென்னும் செருக்கு"

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் திருக்குறள்களானும் உணர்க.

வருணத்து நான்கு நிலையுள்ளார்க்கும் அறம் இன்றியமையாதா கலின் அந்நோக்குடைத்தென்க, அற்றேல் இப்பகுப்பில்லாத ஐரோப் பியர் முதலியவர்க்கும் இவ்வறம் வேண்டாவோ எனின், அற்றன்று. அத்தன்மையுடையார் எந்நாட்டும் உளராகலின் அவர்க்கும் பொருந்துமென்க. ஒன்பானெழுத்தான் அமையவைத்தது என் குறித்ததெனின், அவ்வறம் ஒன்பான் வானோர் கணங்கட்கும், ஒன்பான் சித்தர்கட்கும், ஒன்பான் கண்டத்தார்க்கும், வேண்டு தலின் அங்ஙனம் அமையவைத்ததென்க. அல்லதூஉம் ஒன்பது புண்ணியம் குறித்ததெனினும் பொருந்தும். அவை எதிர் கொளல், பணிதல், ஆசனத்திருத்தல், தாள்கழுவல், அர்ச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல் என்பன வாம். துறந்தோர்க்குச் செய்யத்தக்கன. நிரையொன் றாசிரியத் தளையான் யாப்புறுத்தது என்குறித்ததோ எனின் அரசும் குடியும் ஒருப்பட்டு நின்றுழி எங்கணும் அறம் புரிவதில் விருப்பந்தோன்று மகாலின் அதனைக் குறித்ததென்க.

வெண்பா முதலிய பா பாவினங்களாற் செய்யாது நூற்பா வினாற் செய்தது என்குறித்ததெனின், "சில்வகையெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனாடியிற் செறித்தினிது விளக்கித் திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்" என்பவாகலின் கண்ணாடியிற் ககனம் போல "ஆறுவது சினம்" என்பது முதலாகக் கூறப் பட்டனவும் படாதனவுமாகிய யாவும் இவ்வொன்றிலே அடங்கு தலின் அதனைக் குறித்ததென்க.

---

அவ்விரு சொற்கும் பகுதி வேறுபாடும் பொருள் வேறுபாடும் பெரிதும் இருப்ப, நச்சினார்க்கினியர், வைத்தியநாத நாவலர், சுப்பிரமணிய தீட்சிதர் முதலோர் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், சொற்பிரயோக விவேக முதலியவற்றில் அவை ஒரு பொருளன என உரைத்துப் போயினர். அவர்கள் எல்லாரும் சிறப்புடைப் பொருளைத்தான் இனிது கிளத்தலென்னும் உத்தி பற்றிப் பராமுகமாகப் போயினர் என்க. இலக்கணக்கொத்துடையார் சாமிநாத தேசிகர் மாத்திரம் பொருளுணர்ந்து மொழி பெயர்த்திருக் கின்றனர்.

ஆகவே இதுகாறுங் கூறியவாற்றால், வெள்ளாளர் அல்லது வெள்ளாழர் என்னுஞ் சொற்கள் சூத்திரர் என்ற பொருள் தருதலானும், வேளாளர் மருதநிலத் தலைவராதலாலும், ஆரியரது நால்வகைப்பாகு பாட்டினுட் சேராது தமிழரது பாகுபாட்டினுள் தலைமை பெற்றவரா தலாலும், வேளாளச் செல்வர்களே மறந்தேனும் இனி நீங்கள் வெள்ளாள ரென்றாவது, வெள்ளாழரென்றாவது கூறாதீர்கள்; வேளாளரென்று கூறுங்கள். எச்சரிக்கை எச்சரிக்கை.

எட்டுமாத்திரையாற் சூத்திரித்தது என்குறித்ததெனின், ஐயப் படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழி நீக்கல், அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், பேரன்புடைமை என அறத்துறுப்பு எட்டனையும் குறித்ததென்க. அல்லதூஉம் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட் கொண்டு மனத்தாற் பூசிப்பதாகிய அறத்தைக் குறித்ததெனினும் ஒக்கும்.

*" அல்லாக்கைக் கில்லை அருவருப்பு மில்லை*
*கொலையுமிலை யுட்பூசை கூடு"*

விரும்பு, இவ்வுகரம் ஒரு மாத்திரையுடைத்து. அறஞ்செய விரும்பு என அங்காந்து வாய்மூட நிற்கவைத்ததென்னெனின்,

அறஞ்செய விரும்பு என்று கூறிய துணையானே மனத்தின் கணின்ற மாசெல்லாம் புறப்பட்டு மீட்டும் உட்புகா என்பதை யுணர்த்திற்றென்க. வல்லினம் குறைந்து நிற்ப யாப்புறுத்த தென்னெனின் அறஞ்செய்ய விரும்புங்கால் முன்னர் இன்சொல் இன்றியமையாததாகலின் அதனைக் குறித்தது.

*"இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்திவ் வுலகு".*

அரசர்க்குரிய எழுத்து மிகுதிபடக் கூறியதென்னெனின் அறஞ் செய்தல் பெரும்பாலும் அரையன்மாட்டு நிற்ப அவன் வாயிலாக எல்லார்க்கும் பயன்படுதலின் அதுநோக்கி அங்ஙனங் கூறினாராக.

*" அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்*
*நின்றது மன்னவன் கோல்"*

*" ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்*
*காவலன் காவா னெனின்"*

சூத்திரர்க்குரிய எழுத்து ஒன்றும் இல்லையே. அவர்க்கு அறம் வேண்டாவோ எனின் முதன் மூவர்க்கும் பணிசெய்தலே அவர்க்கு அறமாகலின் அவ்வெழுத்தொன்றும் அமைக்ககாரா யினார். எல்லாத் தொழிலும் குறைவற நடைபெறலே நால்வகைச் சாதியின் பயனும் ஆகலின் ஒருவரை ஒருவர் இகழ்தல் கூடாது. முதலும் கடையும் அ—பு என்னும் தேவகதிக்குரிய எழுத்தமைத் தமையின் அறஞ்செய விரும்புவார்க்கு அக்கதி கிடைக்குமென்க.

ஆண்பாற்குரிய குற்றெழுத்தால் யாப்புறுத்தது என்குறித்தோ எனின், பெண்மக்கட்கு ஒருவாற்றானும் சுதந்தர மின்மையானும் கொழுநனே தெய்வமாகலானும் அறஞ்செய விரும்பல் ஆண் மக்கட்கே யுரித்தாம் என்பதைக் குறித்ததென்க.

*"குலமகட்குத் தெய்வங் கொழுநனே"*
*"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யு மழை"*

என்பனவற்றானுணர்க.

*"கோதறு கற்பினாய் கொழுநன் கைத்தலங்*
*காதலன் கைத்தல மன்றிக் கன்றின்வா*
*லாதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே*
*யோதநீ ராடுதன் மரபென் றோதினார்"*

*(திருவிளையாடல்)*

இதனானுமுணர்க.

இற்புறமாதல் மகப்பேறடைதல் முதலிய அசந்தர்ப்பங்க ளுண்மையால் பெண்மக்கட்குச் சுதந்தரம் கூடாதென்பர். பெண் மக்கள் வியர்க்க நெற்குத்தல் முதலிய தொழில் கொள்வதால் உடம்பு இறுகிப் பெலம்பெறும். சந்தானங்களும் பெலம் பெறும்.

உயிரினும் மெய்யினும் உயிர்மெய் மிகைபட வைத்துக் கூறியது என்குறித்ததோ எனின் உயிர், மெய்யோடு கூடியே அறஞ்செய விரும்பல் வேண்டுமாகலானும் பிரிந்து நின்றுழி அதனைச்செய விரும்பல் கூடாதாகலானும் அதனைக் குறித்த தென்க.

முன்னிலை யிடத்து வைத்துக் கூறியதென்னெனின் அறஞ்செய விரும்பல் உயர்திணைக்குரியதோர் பண்பாகலின் அதனை அறிவுறுத்த அத்திணை யொன்றற்கே யுரிய ஏவன் முற்றாற் கூறினார். தன்மையாற் கூறல் சிறப்பன்றாகலின்.

*"தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை*
*உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை"*

எனப் பொதுப்படக் கூறுமாலோ எனின் அது பொருந்தாதென்பது இலக்கண விளக்கச் சூறாவளி முதலியவாற்றானுணர்க.

*"செய்யாய் என்னு முன்னிலை வினைச்சொல்*
*செய்யென் கிளவி யாகிட னுடைத்தே"*

*(தொல்காப்பியம்)*

விரும்புவாய் எனற்பாலது விரும்பு என நின்றது. முதனிலைகளே இயற்கையில் முன்னிலை யுணர்த்தல் தமிழ்வழக்கென்க. அற்றேல் ஏனை யிடங்களிற் செல்லல் வழுவாம் பிறவெனின்,

*" தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை*
*யெழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்"*

என்பதில் படர்க்கை யொன்றற்கே யுரிய தரல்வரல் ஏனைய விடங் கட்கும் உரியவாயினாற் போல வழுவாகா என மறுக்க. நன்னூ லாரும் செய்யென் னேவலென்றது அக்கருத்தாம்.

இன்னும் தன்னின் உயர்ந்தோனையும் தன்னின் இழிந் தோனையும் முன்னிலையாக்கி அறஞ்செய விரும்பு என்புழி முறையே குற்றியலுகர வீறாகவும் முற்றியலுகர வீறாகவும் உச்சரிக்க, எனவே ஒப்போன் மாட்டு அவ்விரண்டற்கும் பொதுப்பட உச்சரிக்க என்பது. அறம்விரும்பு என்னாது செயவிரும்பு என்றதென் னெனின் புத்திச்சக்கரத்துள் தருமம், ஞானம், ஐசுவரியம், வைராக் கியம், அதர்மம், அஞ்ஞானம், அநைசுவரியம், அவைராக்கியம் என்னும் எட்டாரையுள் ஒன்றாகிய தருமம் இயற்கையில் ஒருமுறை நினைவு மாத்திரையினிற்பதைக் குறிக்குமாகலானும் அது பயனின் றாக முடியுமாகலானும் அறம்விரும்பெனனாது அறஞ்செய விரும் பென்றார், நன்று.

அப்பொருள் குறித்த வீறு முதலிய சொற்களாற் கூறாது அறமென்னுஞ் சொல்லாற்றானே கூறியதென்னெனின் தமிழ்ச் சொற்களுள் மங்கலச் சொல்லாய் மங்கலப் பொருத்த முதலியன வுடையதாய் முதலெழுத்து முப்பதுள் முதலும் கடையும் இன்ன வெனவுணர்த்துவதாய் எதிரடையுடைத்தாய் வருக்கைக் கோவைக் குரியதாய் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்துநின்ற அகர முதலாய் முற்றும் அமுதவெழுத்துடையதாய் காரணக்குறி மரபுப் பெயராய் அறஞ்செய விரும்பு என அஙகாந்து வாய்மூடப்பட்டு நிற்றல் போலத் தன்கண்ணும் அவ்விலக்கணமுடைத்தாய் கால முணர்த்தும் எழுத்து முதலதாய் ஆன்றோராலடிப்பட்ட வழக் குடைத்தாய் திரிபதார்த்த முதலியன உணர்த்த மூன்றெழுத்தாய் வரலின் அச்சிறப்பு மரபுநோக்கி அறமென்னுஞ் சொல்லையே முதற்கட் கூறினாராக.

முப்பதெழுத்துள் முதலும் கடையும் இன்னவெழுத்தென அறி வுறுத்தற்குக் கூறினாரெனின் அறன் எனக் கூறலே ஒக்கும் பிற

வெனின் அற்றன்று. அங்ஙனங் கூறுவதால் அப்பொருட்பேறுடைய் தேனும் முதற்செய்யுள் முதன்மொழியின்கண் எழுத்தானந்த மென்னும் குற்றமாதனோக்கி அங்ஙனங் கூறாராயினார். இது பற்றியன்றே அறனை மறவேலென மேலெழுந்ததூஉம் என்க.

காலமுணர்த்தும் எழுத்தென்றலின் அறஞ்செய்தற்கு விடியல் ஐந்து நாழிகைக்குட் சிறந்ததாகலின் அங்ஙனங் கூறியதென்க. பிறகு பொழுது செல்லச் செல்லத் தத்துவங்கள் தளர்தலின் "வைகுறு விடியன் மருதம்" என்பதனால் அந்நிலத்து விளைந்தனவும் அறஞ்செய்தற்குரியனவாம். அவை குற்றந்தவிர்ந்தனவாகலின்.

*"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்*
*பகடு நடந்தகூழ் பலரோடுண்க"*

என்பதும் அக்கருத்து.

சூத்திரமுழுதும் அமுதவெழுத்துகள் நிரம்பியுள்ளனவாகலின், அறஞ்செய்யப்பட்டோரும் அதனையொத்த தக்கோரே யென்பதாம்.

"அமுதெழுத் தென்ற வாதியுயிர் நான்கொடும் புணர்ந்த மெய்யை யுணர்ந்தமுதென்ப" என்ற சூத்திரப்படி நச்செழுத்தொன் றேனும் அமைக்காமையின் அதனையொத்த கொடியவர்கட்கு அறஞ்செய்யலாகாதென்க.

*"மண்மலை யத்தனை மாதன மீயினும்*
*அண்ண லிவனென் றஞ்சலி யத்தனாய்*
*எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரும்*
*நண்ணுவ ரேழா நரகக் குழியிலே"*

(திருமந்திரம்)

*"இனைத்துணைத் தென்ப தொன்றில்லை விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன்"*

*"உறக்குந் துணையதோ ராலம் வித்தீண்டி*
*யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்*
*தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்*
*வான்சிறிதாப் போர்த்து விடும்"*

*"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணா ரில்"*

தானஞ் செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கட்டே வராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னதீதுமென்று அறியா தீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழி பிறப்பினராதல்,

*"அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லறுமுந்நீர்த்*
*தடங்கட னடுவுட் டீவு பலவுளவவற் றுட்டோன்றி*
*யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்திவாழ்வர்*
*மடங்கலஞ் சீற்றத்துப்பின் மானவேன் மன்ன ரேறே"*

என்பதனானறிக, "தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின் வன்கணாரில்லென்றார்" என்பர் பரிமேலழகர்.

அறஞ்செயவிரும்பு அறஞ் செயவும் விரும்பு என இறந்தது தழீஇய எச்சவும்மை தொக்கதெனக்கொண்டு அறங்கருதவும் விரும்பு, அறஞ்சொல்லவும் விரும்பு எனக் கூறலும் ஒக்கும். அறஞ் செய்ய இரும்பு, இரும்பு என்பதனைப் பொருளாகு பெயராகக் கொண்டு அறமானது செவ்வையாகிய இரும்பிற்செய்த அரமாகும் எனப் பிறிதுமொழிதலென்னும் அணியின்பாற்படக் கூறலும் அமையும். என்னை, அரமென்னுங் கருவி ஏனைய இரும்புகளை முரண்கெடுத்துச் செப்பஞ் செய்வதுபோல அறமும் உயிர்களைத் திருத்திச் செப்பஞ் செய்தலினாலென்க.

செய்ய குறிப்புப் பெயரெச்சம் விரும்பு என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு செய்ய விரும்புதல் அறமெனவும், செய்ய என்பதனைக் குறிப்பு வினையாலணையும் பெயராக வைத்து மருதநிலத்து விளைந்தவை அறத்திற்குரியவாகும் அவற்றை விரும்பு எனவும் வியங்கோள் வினைமுற்றாக வைத்து அறம்செய இரும்பு, அறம் செய்க, அஃது இரும்பு போல் உறுதி பயக்கும் எனவும் வேறு வினை முதல் வினையைக் கொண்டு முடியும் எச்சமாக வைத்து, பிறனொருவன் அறம் செய்ய அதனைக் கண்டு விரும்புதல் செய்க, அழுக்காறு கொள்ளற்க எனவும் பொது வினையாக வைத்து நீயும் அதனைச் செய்ய விரும்பு, செய்விக்க விரும்பு எனவும், அறம் (உலையிற் காய்ந்து) சிவந்த இரும்பு போல்வதெனவும், செய அறம் விரும்பு என மொழிமாற்றி வைத்து நல்ல அறங்களை விரும்புக எனவும், செங்கோலென்பது போல் அறம் செய்ய இரும்பெனவும், அறம் பெருமை தரற்பாலது. அதனை விரும்புக எனவும் நடுநிலைமையான நீதிகளை விரும்புதல் அறமெனவும் கொள்க.

வடநூலார் ஒருவினை முதலைச் சமான கர்த்தா எனவும் வேறுவினை முதலைப் பின்னகர்த்தா எனவும் கூறுப.

அறஞ்செய என்றொழியாது விரும்பென்ற தென்னையெனின் விரும்பென்னாது செய என்றொழியின் அச்செயல் பொருளுடையார்க்கு மாத்திரம் அமையுமன்றி அஃதில்லார்க்கு அமைதலரிதாகலின் விரும்பென்றார். என்னை, அவ்விருப்பம் பொருளுடையார்க்குண்டாயின் தம்மாட்டுப் பொருளுண்மையின் செய்யாதொழியார். இல்லாதார்க்குண்டாயின் அறத்தின் பொருட்டு முயன்றும் பொருள் கைகூடாதாயினும் அவ்விருப்பமடைந்த காரணத்தானே அவ்வுயிர் நல்வினை யெய்தி மறுமையிலேனும் பயனுறாஉ மாகலின் அதுபற்றி யிருவர்க்கும் பொருந்தச் செய விரும்பென்ற தென்க.

*"உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது*
*தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"*

அற்றேல் மேவு வெஃகு என்னாது விரும்பென்றதென்னை யெனின், மேவு வெஃகு முதலியவற்றின்கண் ஓசையுடைமையென்னும் அழகில்லாமையால் அவ்வழகு நிறையும் பொருட்டு விரும் பென்றார். தமிழின்கண்ணே ரகரறகர வேறுபாடுண்மையின் அதனையுணர்த்தும் பொருட்டு எனலுமாம். தமிழ்கற்போர் ரகரறகர வேறுபாடுகளைக் கவனிப்பது ஆவசியமாகலின் அதனை முதற் சூத்திரத்திலேயே நினைப்பூட்டுவாராயினார்.

*"அண்ண நுணிநா வருட ரழவரும்"*
*"அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்"*

என்னுஞ் சூத்திரத்தால் அவ்வேறுபாடுணர்க. இயற்ற விரும்பு, புரிய விரும்பு என்னாது செய்ய விரும்பென்ற தென்னெனின்,

"நடவாமடிசீ" யென்னுஞ் சூத்திரத்துள் எல்லா முதனிலைகளையும் செய்யென்னு முதனிலைக்கண் அடக்கிக் கூறினமையின் அவ்வாய்பாட்டில் ஏற்ற பெற்றியெல்லாம் கொள்ளற்குச் செய்ய விரும்பென்றனர். எங்ஙனமெனின் அறம் நடத்த விரும்பு, அறம் பெற விரும்பு, அறங்கொள விரும்பு என்றிங்ஙனமே யுணர்க.

அறஞ்செய விரும்பு என்றலே சாலும். மேலும் அறனை மறவேலென்றதென்னெனின் அறத்தினூஉங் காக்கமுமில்லையாகலின் அறஞ்செய விரும்பெனவும் அதனை மறத்தலினூஉங் கில்லை கேடாகலின் அறனை மறவேலெனவும் கூறினார்.

திரிசொல்லின்றி இயற்சொல்லால் யாப்புறுத்ததென்னெனின் அறம் கற்றார் கல்லார் எல்லார்க்கும் இன்றியமையாமையின் விளங்கற் பொருட்டு அங்ஙனங் கூறினார். ஐயுரு வெளிப்படாது தொக்கு நிற்பச் சூத்திரித்ததென்னையெனின், பலரறிய வெளிப் படச் செய்வனவெல்லாம் ஆகுல நீரவாகலின் அதனைக் குறித் தற்குத்தொக வைத்தாரென்க.

மூன்று மொழியாற் கூறியதென்னெனின் செய்தல் செய் வித்தல் உடன்படல் என்னு மூவகைகளானும் அறம் வேண்டப்படு மாகலின் அங்ஙனங் கூறினாரென்க. நாற்கணம் புணரவைத்தது என் னெனின் சரியை கிரியை யோகம் ஞானம் என்னு நான்கு பாதத் தாரும் அறஞ்செய வேண்டுமாகலின் அங்ஙனம் புணரவைத்தார். ஏவன் முற்றாற் கூறியதென்னெனின் எல்லாம் அறத்துப்பாலுள டங்கி நிற்றலானும் இம்மை முதலியன தரலானும் அப்பெரும் பயன் விளைவு நோக்கிக் கட்டளையிடல் தக்கதாகலின் அம் முற்றாற் கூறினார். அறச்சிந்தை சிறிதும் இல்லாமல் பொருளீட்டு தலிலேயே தம் வாணாளைப் போக்குவாரை நோக்கி அறஞ்செய விரும்பென முதன் மொழியிலெடுத்தும் அதனை நினைத்தன் மாத்திரமுடையாரையும் சொல்லுதன் மாத்திரமுடையாரையும் நோக்கி இரண்டாமொழியி லெடுத்தும், அதனை யொருமுறை செய்து இது போதும் எனக் கருதுகின்றாரை நோக்கி அதனை விடற்க மீட்டும் விரும்பு என மூன்றாமொழியிலெடுத்தும் சொல்லுக.

*"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை"*

எனக் காண்டலளவை கூறலின், குறிப்பு வினைமுற்று ஒன்றேனும் அமையாது தெரிநிலைவினை அமைத்தாரென்க. அறத்தாறு தெரிய நிற்றலின்.

அறஞ்செய என இருமொழியில் மூவினமும், விரும்பு என ஒருமொழியில் மூவினமும் அமைத்தமையின் அறஞ்செய்தற்கும், அதனை விரும்புதற்கும் வலியோர் மெலியோர் இடையோர் என்ற மூவரும் உரியாரென்க.

அறஞ்செய என மகரந்திரிய வைத்தது என்குறித்ததெனின் வரம்புயர என அரசனை வாழ்த்தெடுக்குமாறு போல அறஞ் செய்வோர்க்கு மலந்திரியுமென்பது குறித்ததென்க. ம = மலம்.

செயவிரும்பு. இயல்புப் புணர்ச்சிபடக் கூறியதென்னெனின், அறஞ்செய விரும்புங்கால் உள்ளந்திரிபின்றி யிருத்தல் வேண்டு மாகலின் அப்புணர்ச்சிபடக் கூறினார்.

அறமெனப் பொதுப்படக் கூறியவாற்றான் முப்பத்திரண்டற முங்கொள்ளப்படும். அறஞ்செய விரும்பு என்பதில் முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் அ—உ என்னும் எழுத்துகளை வைத்தது என் குறிப்பெனின், அவை முறையே எட்டும் இரண்டும் என்னும் எண்ணாகலின் அவற்றதிலக்கணங்களை அறிதல் வேண்டு மென்பது குறித்ததென்க. எட்டாவது என்ன? இரண்டாவது என்ன? என்பது.

*"கூடிய வெட்டு மிரண்டுங் குவிந்தறி*
*நாடிய நந்தியை ஞானத்துளே வைத்து*
*வாடிய வைவரு மங்குற வாவர்கள்*
*தேடி யதனைத் தெளிந்தறி யீரே."*

என்ற திருமந்திரத்தானு முணர்க

எட்டு மிரண்டும் பத்தாகலானும் அப் பத்தென்னும் எண் யகரம் போல்வதாகலானும் அது திருவைந்தெழுத்தில் ஒன்றாய் ஆன்மாவை யுணர்த்தி நிற்குமாகலானும் ஆன்ம விலக்கணம் அறிதல் வேண்டுமென்பது குறித்ததுமாம்.

எழுத்துக்களெல்லாம் அங்காப்பினாலும் இதழ்குவிப்பினாலும் உண்டாகற்பாலன என்பதும் குறிக்கும். இனிஓர்சார் இலக்கண முறைமை வருமாறு:—

## அறம்

பால்பகா அஃறிணைப் படர்க்கைப் பண்புக்காரணக்குறி மர புடைய ஒருமொழியாய், இயல்பு வழக்குள் இயனெறியுடையதாய், மூவெழுத்தானாய வெளிப்படைச் செந்தமிழ்ச் சிறப்பியற் சொல் லாய், உறுதிப்பயன்தரும் உயர்பொருட் பெயராய், வேற்றுமையுள் ஆக்கப்படு பொருட்கண் வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தழுவு தொடராய் வந்து தன் வினைமுதல் வினையைத் தழீஇநின்றது.

*நன்மகனாகிய நீ — செய்பவன்*
*அகக்கருவியாகிய நற்சிந்தை — முதற்கருவி*
*புறக்கருவியாகிய கையும் பொருளும்—துணைக்கருவி*
*கண்ணறை முதலோர் குழீஇய இடம்—நிலம்*
*கொடை முதலியன — செயல்*
*செய — நிகழ்காலம்*
*அறம் — செய்பொருள்*

ஆக்கப்படு பொருட்கண்வந்த உ-ம். வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். வினைமுதற் றொழிற்பயனுறுவது செய் பொருளாகலின் பழியஞ்சிப் பொருளீட்டல் முதலியன வினைமுதலின் தொழில். தானும் நுகர்ந்து நன்னெறிக்கட் செலவு செய்யக் கருதல் அத்தொழிலின் பயன். அப்பயனுறுவது அறமாகலின் அறம் செய்பொருளாயிற்று பிறவு முணர்ந்து கொள்க.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் பகைமை செருக்கு கரவு களவு இகழ்வு முதலிய தீக்குணங்களைத் தன்னிடத்தும் பிறரிடத்தும் அறுத்தற் கருவியாக நிற்றலின் அறமெனப்பட்டது.

*"அவாவற வளித்தலா லறமெனப் படுமே."*

(அகத்தியம்)

அறு—பகுதி, அம்—கருவிப்பொருள் விகுதி. அறம், அறவன், அறவு, அறவுளி, அறவை, அறவைச்சோறு, அறளை அறுதி, அறுப்பு, அறுவடை, அறுவை, அறல், அறுத்தல், அறை, அறைதல், அற்றம், அற்றை, ஆறு, ஆறல், ஆற்றல் முதலியன வெல்லாம் அறு என்னும் முதனிலையடியாகப் பிறந்த சொற்களாம்.

அறவை = திக்கற்றவன். அறுவை = துணி. அறைதல் = துணித்தல், அற்றை = சிறுமை. ஆறு = நதி.

இவ்வுரை செங்கற்பட்டில் ஆசிரியர் பேறை தசாவதானம் செகநாதப்பிள்ளையவர்களிடம் நன்னூல் விருத்தியுரை முதலியன கேட்ட காலத்து எழுதப்பட்டது.

இதன் முதற்பகுதி ஸ்ரீ கல்குளம் குப்புசாமி முதலியாரிடத்தோ கறுப்பையா பாவலரிடத்தோ தவறிப்போயிருக்கின்றது. இது ஓர் குறிப்புரைகொண்டு எழுதப்பட்டமையால் சிறிது வேறுபட்டிருக்கும்.

இங்ஙனம்,

திருமாகறல் **கார்த்திகேய முதலியார்,**

# இருபுராண விருத்தம்

பதிப்பாசிரியர்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
இணைப் பேராசிரியர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

உயராய்வு

அச்சில்வாரா அருந்தமிழ்

# இருபுராண விருத்தம்

இரத்தினம் அச்சகம்
சென்னை-600 001.

# இருபுராண விருத்தம்

சென்னைப் பல்கலைக்கழகத்
தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் தந்தையாரும்
தவத்திரு ஞானியார் அடிகளின் மாணவருமாகிய
திருச்சிராப்பள்ளி - தமிழாசிரியர்
திரு. ***மு. நடேச முதலியார்*** அவர்களின்
சுவடித் தொகுப்பிலிருந்து
பதிப்பிக்கப் பெற்ற நூல்.

## பதிப்புரை

தமிழின் அருஞ்செல்வமாக விளங்கும் பழஞ்சுவடிகள் பலவும் காலப்போக்கில் அழிந்தொழிந்தமையால் அரிய நூல்கள் நமக்குக் கிட்டா தொழிந்தன. பழந்தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளான சைவத்திரு ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஆகிய அறிஞர் பெருமக்கள் பழமையான அரிய சுவடிகளை அச்சுருவில் நூலாக்கித் தமிழுலகுக்கு வழங்கினர். தமிழ்ச்சான்றோர்களாகிய இவர்களின் அருமுயற்சியும் கடுமையான உழைப்பும் நமக்கு அரிய நூல்களை வழங்கின. இலக்கண இலக்கிய நூல்களை ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இவர்கள் பதிப்பித்து வழங்கியிரா விட்டால் அந்நூல்கள் அனைத்தும் இன்று அழிந்தொழிந்து அவைபற்றிய விவரங்களே உலகிற்குத் தெரியாது போயிருக்கும். எனவே தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றிற்கும் வாழ்வளித்த பெருந்தகைகளாக இவர்கள் விளங்குகின்றனர்.

இன்றும் தமிழ் நாட்டிலும், உலகிலுள்ள பிற நூலகங்களிலும் ஆயிரக்கணக்கான தமிழ்ச்சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவைகளுள் பலவும் அச்சுருவம் பெற்று நூல் வடிவில் வராத நிலையில் உள்ளன. தக்க அறிஞர்களின் உறுதுணையோடு செல்வர்கள் இவற்றைப் பதிப்பித்து வெளியிட்டால் தமிழ்ச் செல்வங்களாய அவற்றை அழியாது காப்பாற்றலாம்.

நிறுவனங்களும், வாய்ப்பு வசதி படைத்தவர்களும் இச்சுவடி களைப் பாதுகாத்து வெளியிட வேண்டும் எனும் வேட்கை கொண்டால் ஆயிரக்கணக்கான மருத்துவச்சுவடிகள், சோதிடச் சுவடிகள், இலக்கிய இலக்கண நிகண்டுச்சுவடிகள் ஆகியவற்றைப் பதிப்பித்துக் காக்கலாம்.

தமிழகத்தின் பல்வேறு சிற்றூர்களிலும் பல்லாயிரக்கணக்கான சுவடிகள் உள. இவற்றைத் தொகுத்துவைக்கும் இன்றியமை யாமையை உணர்ந்து இன்று பல பல்கலைக் கழகங்களும் பல்வேறு நிறுவனங்களும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றமை பாராட்டற் குரியதாகும். இம்முயற்சிகளில் தமிழன்பர்கள் மேலும் ஆர்வம் காட்டி அவர்தம் பழஞ்செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை பல்லாண்டுகளாக அச்சில் வாரா அருந்தமிழ் நூல்களை வெளியிட்டு வருகின்றது. நாககுமார காவியம், அப்பாண்டைநாதர் உலா, பாரதிதீபம் முதலான நூல்களை அறிஞர் மு. சண்முகம் பிள்ளை பதிப்பித்து வெளியிட்டார். அந்த வகையில் அச்சில்வாரா அருந்தமிழ் நூல் வரிசையில் இருபுராண விருத்தம் என்னும் இந்நூலும் முதன் முறையாக அச்சுநூலாக வெளிவருகின்றது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவராய் விளங்கிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இச்சுவடியினை வழங்கிப் பதிப்பிக்குமாறு ஆர்வமுடன் வேண்டினார்கள். அவருடைய தந்தையாரும், தவத்திரு ஞானியார் அடிகளின் மாணவருமாகிய திருச்சிராப்பள்ளித் தமிழாசிரியர் மு. நடேச முதலியார் அவர்கள் தொகுத்து வைத்திருந்த சுவடி களுள் ஒன்று இந்நூலாகும். பழைய நூல்களைப்பதிப்பிக்க வேண்டும் என்னும் பேரார்வம் கொண்டு அச்சில்வாரா அருந்தமிழ் நூல்கள் பலவற்றையும் வெளியிடுவதற்குப் பெரிதும் துணையாயிருந்தவர் பேராசிரியர் ஆவர். அவருடைய ஆர்வமும் முயற்சியுமே இந்நூல் உருப்பெறுதற்குப் பெரிதும் துணையாய் அமைந்தன. இந் நூலினைப்பதிப்பித்து வெளியிட வேண்டும் என்னும் பணியினை வழங்கியுதவிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றி உரியதாகும்.

இச்சுவடி நூலினைப்படியெடுப்பதில் பெரிதும்துணை நின்றவர் அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகக் காப்பாளராய் விளங்கியவரும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றுபவருமான சுவடி யியல் அறிஞர் டாக்டர் பூ. சுப்பிரமணியன் ஆவர். படியெடுப்பதிலும், பதிப்பிப்பதிலும் துணை புரிந்த அவருக்கு உளம் நிறைந்த நன்றி.

இந்நூலினைப் படியெடுத்து உதவிய செல்வி. ந. விசாலாட்சி, நூலிற்குரிய சொல், பொருள் அகரநிரல் முதலாயவற்றை உருவாக்குதலில் துணை புரிந்த செல்வி. பெ. சிவசக்தி ஆகிய இருவருக்கும் என் நன்றியும் வாழ்த்தும் உரியன.

அச்சில்வாரா அருந்தமிழ் வரிசையில் மலரும் இப்புதிய நூலினை அறிஞர் வரவேற்றுப் போற்றுவர் என நம்புகின்றேன்.

—இ. சுந்தரமூர்த்தி

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | v |
| ஆய்வுரை | ix |
| இருபுராண விருத்தம் மூலமும் குறிப்புரையும் | 1-63 |
| சொல்லடைவு | 65-72 |
| செய்யுள் அகரநிரல் | 73 |

# இருபுராண விருத்தம்

## ஆய்வுரை

### இருபுராணங்கள்

பழந்தமிழ்ப் புராணங்களுள் திருவிளையாடற் புராணமும், பெரிய புராணமும் தமிழ் மக்களால் காலங்காலமாகப் போற்றப்பட்டுவருகின்றன. முந்திய நூல் ஆண்டவனின் பெருமையையும், பிந்திய நூல் அடியார்களின் பெருமையையும் எடுத்துக் கூறுவன காலத்தால் பெரியபுராணம் முற்பட்டதாகும். சேக்கிழார் அனபாயச் சோழனின் அமைச்சராக இருந்தமையால் நாடு முழுவதும் சென்று தமிழ் நாட்டின் பண்பாட்டுப் பின்னணியோடு அடியார்களின் அரிய வரலாற்றைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடித் தமிழுக்கு வளம் சேர்த்தார். சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய இரு நூல்களும் சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு அடிப்படையாய் அமைந்தன.

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்திற்கு முன்னரேயே பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பார் திருவிளையாடற்புராணம் இயற்றியுள்ளார். வடமொழி உத்தரமா புராணமும், திருவிளையாடற் புராணச் செய்திகளை எடுத்துரைக்கும். நம்பி உத்தரமாபுராணத்தைத் தழுவி திருவிளையாடற்புராணத்தை இயற்றினர் என்பர். மூவர் தேவாரம், திருவாசகம் முதலாயவற்றில் குறிக்கப்பெறும் சிவபெருமானுடைய திருவிளையாடல்களை உணர்த்தும் தொடர்கள் சிலப்பதிகாரம், கல்லாடம், ஆகியவற்றில் கூறப்படும் திருவிளையாடற் கதைகள், பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடல் முதலான நூல்களில் உள்ள கதைகள் ஆகியவைகளை நன்கு கற்று முதல் நூலாகிய ஆலாசிய மகாத்மியத்தில் எந்த உயிர்த்தன்மையோடு கருத்துக்கள் விளங்குகின்றனவோ அத்தன்மை சிறிதும் குன்றாது ஆலவாய் அண்ணல் சோமசுந்தரக் கடவுள் நிகழ்த்திய திருவிளையாடல்களைத் தம் பரந்த புலமையாற்றலால் காப்பியப் பண்புகள் அமையும் வண்ணம் சிறந்த இலக்கியமாகத் தமிழில் ஆக்கியுள்ளார் எனலாம். மேலும் பரஞ்சோதியார் வடநூல் மேற்கோளாகக் கதைகளை எடுத்துக் கொண்டிருப்பினும் பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களையும் சொற்களையும் தொடர்களையும் எடுத்தமைத்தே இந்நூலை அழகு பெறச்செய்திருக்கின்றார். கதைகளில் சில மாறுதல்கள் இருப்பினும் இந்நூல்களின் நோக்கம், வரலாற்று

ஆராய்ச்சி நிகழ்த்துவதன்றி, முழு முதல்வனாகிய முக்கட்பெருமான் தன் அடியார்களுக்கு எளிமையாய்த் தோன்றி அருள்புரியும் பெருங் கருணைத் திறத்தை உணர்த்தி, உயிர்களை உய்வித்தலே ஆகும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தலாம்" என்பர்.[1]

## தமிழில் புராணங்கள்

தமிழில் புராணங்கள் ஏறத்தாழ கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து மிகுதியாகத் தோன்றின. சேக்கிழாரின் பெரிய புராணம், கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம், கச்சியப்பரின் தணிகைப்புராணம், சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம், நிரம்ப அழகிய தேசிகரின் சேதுபுராணம் முதலாயவை குறிப் பிடத்தகுந்தவையாகும். இவற்றுள் பெரிய புராணமும், திருவிளையாடற் புராணமும் பெரும் வழக்கில் உள்ளவை எனலாம். தமிழ்மக்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டு இவ்விரண்டு புராணங்களையும் போற்றினர். பொது வாகப் புராணங்களுள் நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, கோயிற்சிறப்பு முதலாயனவற்றை விவரித்துக் கூறும் தலபுராணங்களே தமிழில் மிகுதி யாக உள்ளன. ஆனால் இலக்கியச்சிறப்பு வாய்ந்த புராணங்களுள் குறிப் பிடத்தக்கவை பெரிய புராணமும், திருவிளையாடற்புராணமும் ஆகும்.

## காலம்

தமிழ் இலக்கிய வரலாறு கண்ட கமில் சுவலபில் கந்தபுராணமும், ஆலாசிய மகாத்மியமும் தென்னகத்தில் முதன் முதலாகத் தோன்றிய புராணங்கள் என்பார். பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தின் அமைப்பினைஒத்த ஆலாசிய மகாத்மியத்தின் காலம் ஏறத் தாழ 14-ஆம் நூற்றாண்டினைச்சாரும் என்பார். வடமொழி சாரசமுச்ச யத்தின் காலம் 10லிருந்து 11 வரை என்றும், நம்பியின் திருவிளையாடல் 1135—1304 இடைப்பட்டது என்றும் ஆலாசிய மகாத்மியத்தின் காலம் ஏறத்தாழ 1400 என்றும் பரஞ்சோதியின் காலம் கி. பி. 1603 எனவும் கூறுகின்றார் அறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள். திருவிளை யாடல் புராணத்தின் காலத்தை 1700—1725 எனக்குறிப்பிடுகின்றார். சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தின் காலம் கி. பி. 1110—1150 என்பார்.

இவ்விருபுராணங்களும் தமிழ் மக்களின் உள்ளங்களை ஈர்த்த இருபெரும் புராணங்களாகும்.

1. ப. கோபாலன், பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் இலக்கிய மதிப்பீடு பக். 79.

செல்விநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் புராணம் இறைவனைச் சொக்கன் சொக்கன் என வாயாரப் போற்றிப் புகழ்கிறது. வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவனப் புராணத்தின் இலீலா சங்கிரக அத்தியாயம் திருவிளையாடலையே சுருக்கிப் பாடுகிறது. அனதாரியப்பர் பாடிய சுந்தரபாண்டியம் என்ற செந்தமிழ் நூலும் திருவிளையாடலையே பாடுகின்றது. திருவிளையாடற் பயகரமாலை என்பது வீரபத்திரக்கம்பர் எழுதிய நூல். திருவிளையாடலில் தமிழ் மக்கள் பெரிதும் ஈடுபட்டமைக்கு இத்தனை நூலும் தோன்றியமையே சான்றாகும். பரஞ்சோதியார் பாடிய புராணமே திருவிளையாடற் புராணங்களுள் பெரும் வழக்குப் பெற்றுப் புகழுடன் விளங்குகின்றது. பாட்டின் தமிழோசையும் பாவலரின் அழகன்பும் தமிழர் மனத்தைக் கொள்ளை கொண்டன என்பர் அறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

புராணங்கள் பழங்கதைகளாயினும் அவற்றின் பொருளாழம் நமக்கு எட்டுவதில்லை என்பர். ஒவ்வொரு புராணக்கதை உள்ளீட்டிற்கும் தத்துவப் பொருள் கூறும் மரபு பிறநாடுகளிலும் உண்டு. யுங் (Jung) என்ற உளவியலறிஞர் இப்புராண வரலாறுகளை அடிப்படைக் கதைக் கோலங்கள் (arche types) என்பர். தெ. பொ. மீ. அவர்கள் திருவிளையாடற் புராணப் பதிப்பின் முன்னுரையில் கூறும் கருத்துக்கள் பெரிதும் எண்ணுதற்குரியனவாகும்:

"புராணங்கள் வரலாற்றினையும் கூறுகின்றன. பாண்டிநாட்டு வரலாறு ஒருவாறு திருவிளையாடலில் வெளியாகிறது. இதில் வரும் அரசர்குடி வழியைக் காலஞ்சென்ற திரு. சேஷகிரி சாத்திரியாரும், தமிழ் வரலாறு எழுதிய திரு. சீனிவாசம்பிள்ளையும் ஆராய்ந்துள்ளார்கள். இன்று நாம் கற்றுவரும் வரலாறு வேறு. புராணம் கூறும் வரலாறு வேறு வரலாற்றினையும் அடிமனம் அறிந்து இன்பமுறும் வகையில் கூறுவனவே புராணங்களாம். அடிமனம் என்றால் ஒரு சிலர் காமக்குப்பை என்று கூறுவர். அஃது உண்மையன்று. நாம் பேசும் மொழி மனிதன் படைத்துக் கொண்ட செயற்கை மொழி. அனைவரும் அறிந்து கொள்ளும் இயற்கை மொழியொன்றுள்ளது. அஃது உணர்ச்சி வடிவானது; செயலுருவானது; ஓவியம் போன்றது. காவியம் போன்றது; இசையே போன்றது; அஃது அறத்தின் அடிப்படையில் உயர்ந்தோங்கும் கடவுளை வெள்ளை விடைமேல் செவ்வொளியாகக் காட்டும். சுருங்கி விரியும் உலகினைப் படம் விரித்தாடும் பாம்பாகக் காணும். தோகை விரித்தாடும் மயிலாகக் காணும். இதனை இருளென்றும் காணும். கருப்பையின் அடையாளமாகக் கொண்டு மூலப்பகுதியினைப் பெண் என்றும் பேசும். இதனை அடக்கி ஆளும் அறிவொளியைக் கடலில் எழும் கதிரவனாகக் காணும்;

பாம்பின் மேலாடும் கண்ணனாகக் காணும். மயிலேறும் முருகனாகக் காணும். இவையெல்லாம் மனமொழிகளுக்கு எட்டாதவற்றையும் எட்டிப் பிடிக்கும் அடிமனத்தின் இயற்கை மொழிப் பேச்சேயாம் என்பர். இதனால் புராணங்கள் வெறும் கதைக் கூறுகளென மட்டும் கொண்டிராமல் தத்துவப் பொருள்களையும் கொண்டு விளங்குகின்றமையைக் குறிப்பாகக் காட்டுவன. அங்கயற்கண்ணி அனைவரையும் வென்று அழகன் எதிரே நாணிக் குழைந்து நிற்கின்ற கடவுட்காமக் காட்சி இங்குத்தான் தோன்றுகின்றது. ஆண்டவனே மணமகனாக வந்து அரசாண்டால் என்னவாகும்? இது நினைக்கவும் முடியாத நிகழ்ச்சி. இதனையும் நினைத்துப்பார்த்தனர் முன்னோர். அரசவீறு, அரசச் செருக்கு இயற்கையாக எழுவது ஒன்று. ஆண்டவன் எதிர் நெக்கு விடுகின்றது. ஒரு குறட்பூதம் குண்டோதரன் கற்பிக்கும் பாடங்கள் என்னே! என்னே! இங்கே தமிழ் நாட்டின் சிறப்பு வானுலகமெல்லாம் பரவுகிறது எனத் திருவிளையாடலின் மாண்பினை எண்ணிவியக்கின்றார்.

இங்ஙனம் புராணங்கள் வெறும் கதைகள் மட்டும் கூறாது அரிய தத்துவங்களையும் நமக்குப் புகட்டுகின்றன என்பது எண்ணுதற்குரியதாகும். பெரியபுராண வரலாறுகளும் பல்வேறுபட்ட மாந்தர்களின் பண்பு வரலாற்றைச் சுட்டுவனவாம். இயற்பகை எனப் பெயரிட்டுக் கூறுவதும் வாழ்வுக்கு முரணனாக நிகழ்ச்சிகள் பலவற்றின் மூலம் மனித ஆளுமையை வெளிப்படுத்துவதும் காணத்தக்கன. அன்பின் வழி நிற்கும் அடியார்களைச் சிவபெருமான் தடுத்தாண்டு அவர்தம் அன்புப் பிடியில் அகப்பட்டு அவர்கட்கு ஆனந்தப்பேறு அளிப்பதையும் பெரியபுராணம் காட்டும். அடியார் தம் உள்ளங்களையே கோயிலாகக் கொண்டு உறையும் இறைவனின் எளிமையை நமக்குக் காட்டுவார் சேக்கிழார். அடியார்களுக்கு ஏவல் செய்தும், தூது நடந்தும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும் பொதிசோறு சுமந்தும், பேரருட்பெரும் பிழம்பின் வடிவமாகக் காட்சி அளிக்கின்ற இறைவனின் உயர்ந்த பெருமையினை அடியார் வரலாற்றின் மூலம் காட்டும் பத்திநூல் பெரியபுராணம். இதனை ‘அன்பின் புராணம்’ என்றே கூறலாம் என்பர்.

அருளின் புராணமாய திருவிளையாடற்புராணமும், அன்பின் புராணமாய திருத்தொண்டர் புராணமும் தமிழ் மக்கள் உள்ளத்தே நீண்ட நெடுங்காலமாக உறைந்து வருபவை. இருநூல்களும் பல்வேறு நிலைகளில் வடிவம் கொண்டு பின்னாளில் வளர்ந்த போதிலும் இருபுராணங்களையும் ஒன்றாக இணைத்துக் கண்டுள்ளார் ஒரு புலவர். இருபுராணக் கருத்துகளையும் விருத்தப்பாவில் தொகுத்துக் கூறும் நூலே இருபுராண விருத்தம் என்னும் இந்நூலாகும். நூலின் முன்னர் காப்பு இடம்

பெற்றுள்ளது. இறுதியில் இருபுராண விருத்த மாலை அமைந்துள்ளது. இடையே உள்ள அறுபத்து நான்கு பாடல்களிலும் இருபுராணங்களின் கருத்துச் சுருக்கங்கள் அழகிய முறையில் அமைத்துத் தரப்பட்டுள்ளன. 'செந்தில் வடிவேலனின் பேரினில் இயம்பு மொழி தோத்திரமாக எழுதரிய மறையான இருபுராண விருத்தமென்று தமிழ் மாலை கூற' என்று பாயிரத்தில் இந்நூலாசிரியர் நூலின் பெயரைச் சுட்டுவதையும் காணலாம். காப்புச் செய்யுளிலேயே இருபுராணத்தில் சொல்லப் பட்டுள்ள செய்திகளையும் இணைத்துக் காண்பது நயமாகவுள்ளது.

'காதலுறும் மகனையிட்டு ஊர்ந்திடும் மனுச்சக்
கரவர்த்தி சோழனுக்கும்
தார்கொண்ட வதுவையிற் சுந்தரர்க்கும் வந்து
தண்ணருள் புரிந்த ஈசன்
தருமுதற் பிள்ளையாய் வரும் இபப்பிள்ளை
இருசர ணங்கள் காப்பதாமே'

என்னும் பகுதியில் இருநூலின் கருத்துகளையும் இணைத்துக் கூறும் நயம் காண்க.

## இருபுராணவிருத்த அமைப்பு

இருபுராண விருத்தம் எனும் இந்நூலின் ஆசிரியர் தாம் இயற்றிய ஒவ்வொரு பாடலினையும் மூவகை நிலையில் அமைத்துக் கொள்கின்றார்.

பாடலின் முதற்கண் திருத்தொண்டர் புராணத்தில் விதந்தோதப் பெறும் அடியார்களின் வரலாற்றினைச் சுட்டி இறைவனிடத்து அவர்கள் கொண்ட பக்திநெறியை நன்கு புலப்படுத்தி அத்தகையை பத்தியுணர்வை, அருள்நெறியைத் தான் கொள்ளவில்லையே என ஏங்குவார், இத்தகை யோனாகிய எனக்கு இறைவன் எங்ஙனம் அருள் புரிவான்? என்னை இறைவன் எங்ஙனம் ஆண்டு கொள்வார் என்று உள்ளமுருகக் கூறுவார்.

இரண்டாம் நிலையில் இறைவனின் அருள் விளையாடலைக் கூறி அடியார்கள் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அவன் பெருமையைப்பேசுகின்றார்.

மூன்றாவதாகத் திருச்செந்திலின் பெருமையைக் கூறி அங்குறையும் செந்தில் வடிவேலனை அழைப்பார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்,

வளைசிந்து தரளங்கள் உயர்சந்த வரையின்கண்
வளர் செந்தில் வடிவே லனே.

என்று முடிப்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக முதற்பாடலின் கருத்துப் போக்கையும் பாடல் முறையையும் காண்போம்.

## முதற்பாடல்

முதலில் தில்லையில் வாழும் அந்தணர்களையும் அவர்களின் இயல்புகளையும் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. விபூதியையும், அஞ்செழுத்தையும், மனத்துள்கொண்டு நாளும் முக்கனல் வளர்த்து அறுதொழிலைப்புரிந்து மறையோதியோதி இறையருள் பாலிக்கும் தில்லை வாழந்தணர் செய்யும் பணியில் அணுவளவும் கூட அடிமையாகிய நான் செய்யும் நெறியறிகிலேன். எனவே இறைவனே என்னை நீ எந்த விதம் ஆட்கொள்வாய்' என்று உருக்கமுடன் வேண்டுவார். மணமிக்க கற்பக நிழல் பொலியும் இந்திரலோகத்தின் முதல்வனான இந்திரனின் பழிதீர்த்த படலக்கதையினைச் சுட்டுவார். இறுதியில் செந்தில் வடிவேலனின் சிறப்பை எடுத்துரைப்பார்.

## கதையமைப்பு

இருபுராண விருத்தம் நூலில் அமைந்துள்ள பாடல்களில் முதற்கண் திருத்தொண்டர் புராணக் குறிப்பும் பின்னர் திருவிளையாடற் புராணக் குறிப்பும் முறையே அமைந்துள்ளன. பெரும்பான்மை ஒவ்வொரு பாடலிலும் இருபுராணங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு கதைக் குறிப்பே சொல்லப்பட்டுள்ளது. சில பாடல்களில் மட்டுமே (49, 56, 64) தொண்டர் புராணக்குறிப்பு இரண்டு, இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடல் எண்களும் அவற்றில் அமைந்த இருபுராணக் கதைக்குறிப்பு விவரங்களும் வருமாறு :

# இருபுராண விருத்தம்
## பாடல்களில் அமைந்துள்ள கதை விவரங்கள்

| பாடல் எண் | பெரிய புராணம் | திருவிளையாடற்புராணம் |
|---|---|---|
| 1. | தில்லைவாழந்தணர் வரலாறு | இந்திரன் பழிதீர்த்த படலம் |
| 2. | திருநீலகண்ட நாயனார் | வெள்ளையானைச்சாபம் தீர்த்தபடலம் |
| 3. | இயற்பகை நாயனார் | திருநகரங்கண்ட படலம் |
| 4. | இளையான்குடி மாற நாயனார் | தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம் |
| 5. | மெய்ப்பொருள் நாயனார் | திருமணப்படலம் |
| 6. | விறன்மிண்ட நாயனார் | வெள்ளியம்பலத்திருக் கூத்தாடியபடலம் |
| 7. | அமர்நீதிநாயனார் | குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம் |
| 8. | எறிபத்த நாயனார் | அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம் |
| 9. | ஏனாதி நாயனார் | எழுகடல் அழைத்த படலம் |
| 10. | கண்ணப்ப நாயனார் | மலையத்துவசனை அழைத்த படலம் |
| 11. | குங்குலியக்கலய நாயனார் | உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம் |
| 12. | மானக்கஞ்சாற நாயனார் | உக்கிரபாண்டியனுக்கு வேல் வளைசெண்டு கொடுத்தபடலம் |
| 13. | அரிவாட்டாய நாயனார் | கடல்சுவற வேல்விட்ட படலம் |
| 14. | ஆனாய நாயனார் | இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் |
| 15. | மூர்த்தி நாயனார் | மேருவைச்செண்டாலடித்த படலம் |
| 16. | முருக நாயனார் | வேதத்துக்குப்பொருள் அருளிச்செய்த படலம் |
| 17. | உருத்திர பசுபதி நாயனார் | மாணிக்கம் விற்றபடலம் |
| 18. | திருநாளைப்போவார் நாயனார் | வருணன்விட்ட கடலை வற்றச் செய்த படலம் |
| 19. | திருக்குறிப்புத்தொண்டர் | நான்மாடக்கூடலான படலம் |
| 20. | சண்டேசுர நாயனார் | எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற்படலம் |
| 21. | திருநாவுக்கரசு நாயனார் | கல்லானைக்கரும்பருத்திய படலம் |
| 22. | குலச்சிறை நாயனார் | மானை எய்த படலம் |
| 23. | பெருமிழலைக் குறும்ப நாயனார் | விருத்த குமார பாலரான படலம் |
| 24. | பேயார் என்கிற காரைக்காலம்மையார் | மாறி ஆடின படலம் |
| 25. | அப்பூதியடிகள் நாயனார் | பழியஞ்சின படலம் |
| 26. | திருநீலநக்க நாயனார் | மாபாதகந் தீர்த்தபடலம் |
| 27. | நமிநந்தியடிகள் நாயனார் | அங்கம் வெட்டின படலம் |
| 28. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | நாகமெய்த படலம் |

| பாடல் எண் | பெரிய புராணம் | திருவிளையாடற் புராணம் |
|---|---|---|
| 29. | ஏயர்கோன்கலிக்காம நாயனார் | மாயப்பசுவை வதைத்த படலம் |
| 30. | திருமூலநாயனார் | மெய்க்காட்டிட்ட படலம் |
| 31. | தண்டியடிகள் நாயனார் | உலவாக்கிழியருளிய படலம் |
| 32. | மூர்க்க நாயனார் | வளையல் விற்றபடலம் |
| 33. | சோமாசிமாற நாயனார் | அட்டமாசித்தி உபதேசித்த படலம் |
| 34. | சாக்கிய நாயனார் | விடையிலச்சினையிட்ட படலம் |
| 35. | சிறப்புலி நாயனார் | தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம் |
| 36. | சிறுத்தொண்ட நாயனார் | இரசவாதஞ் செய்த படலம் |
| 37. | கழறிற்றறிவார் புராணம் | சோழனை மடுவில் வீட்டிய படலம் |
| 38. | கணநாத நாயனார் | உலவாக்கோட்டை அருளிய படலம் |
| 39. | கூற்றுவ நாயனார் | மாமனாகவந்து வழக்குரைத்தபடலம் |
| | பாடல்கள் 40 முதல் 45 முடிய கிடைக்கவில்லை | |
| 46. | சக்தி நாயனார் | பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் |
| 47. | ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம் |
| 48. | கணம்புல்ல நாயனார் காரி நாயனார் | நாரைக்கு முத்திகொடுத்தபடலம் |
| 49. | நின்றசீர் நெடுமாற நாயனார் வாயிலார் | திருவாலவாயான படலம் |
| 50. | கழற்சிங்க நாயனார் | சுந்தரப்பேரம் செய்த படலம் |
| 51. | செருத்துணை நாயனார் | சங்கப்பலகை தந்த படலம் |
| 52. | புகழ்த்துணை நாயனார் | தருமிக்குப்பொற்கிழி அளித்தபடலம் |
| 53. | கோட்புல நாயனார் | கீரனைக்கரையேற்றிய படலம் |
| 54. | பத்தராய்ப் பணிவார் | கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் |
| 55. | சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார் | சங்கத்தார் கலகந்தீர்த்த படலம் |
| 56. | திருவாரூர்ப்பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார் | இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் |
| 57. | முழுநீறு பூசிய முனிவர் | வலைவீசின படலம் |
| 58. | அப்பாலும் அடிச்சார்ந்தார் | திருவாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் |
| 59. | பூசலார் நாயனார் | நரிபரியாக்கிய படலம் |
| 60. | மங்கையர்க்கரசியார் | பரிநரியாக்கிய படலம் |
| 61. | நேசநாயனார் | மண் சுமந்த படலம் |
| 62. | கோச்செங்கோட் சோழ நாயனார் | பாண்டியன் சுரம் தீர்த்தபடலம் |
| 63. | திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் | சமணரைக் கழுவேற்றிய படலம் |
| 64. | சடைய நாயனார் இசைஞானியார் | வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் |

# இரு புராண விருத்தம்

# இருபுராண விருத்தம்

## காப்பு

சீர்கொண்ட பல்லா யிரங்கோடி யண்டமுஞ்
சேர்த்தநித் திலவ டம்போற்
செந்தா மரைப்பாத ரோமத்தி லாடிடத்
திருவருள சைத்து நிற்கும்

ஏர்கொண்ட செந்தில்வடி வேலவன் பேரினில்
இயம்புமொழி தோத்திர மாக
வெழுதரிய மறையான விருபுரா ணவிருத்த
மென்றுதமிழ் மாலை கூறக்

கார்கொண்ட பசுவின்கண் வண்டினி லிறந்திட
கண்டதுநி வர்த்தி யாக
காதலுறும் மகனையிட் டூர்ந்திடும் மனுச்சக்
கரவர்த்தி சோழ னுக்கும்

தார்கொண்ட வதுவையிற் சுந்தரர்க் கும்வந்து
தண்ணருள்பு ரிந்த வீசன்
தருமுதற் பிள்ளையாய் வருமிபப் பிள்ளையிரு
சரணங்கள் காப்ப தாமே.

---

**விளக்கவுரை**

*சிறப்புப்பெற்ற பல ஆயிரங்கோள்களும் முத்துமாலைபோல் செந்தில் வடிவேலனின் திருவருளால் அவன் திருவடியின்கீழ் இயங்க, அப் பெருமானுக்கு இவ்வரிய மறையான* **இருபுராண விருத்தம்** *என்னும் இந்நூலினைத் தமிழ்மாலையாக அணிவித்திட மனுச்சக்கரவர்த்திச் சோழனுக்கும், மணம்புரிதற்குச் சுந்தரர்க்கும் தண்ணருள் புரிந்த சிவபெருமானின் முழுமுதற் பிள்ளையான கணபதி அருள் செய்வானாகுக.*

**அரும்பொருள்—குறிப்புரை**

*அண்டம்—கோள்*
*நித்திலம்—முத்து*
*இபம்—யானை*

## மனமலரில் விளையாடும் வாழ்வு

1. பூமருவு தில்லையில் முதற்குலத் துயர்வி
பூதிமணி யஞ்செ ழுத்தும்
பொருளென்று தினமுமுக் கனல்வளர்த் தறுதொழில்
புரிந்துமறை யோதி யோதி

யாமருவு பயன்விரவு மன்னமிட் டன்பின்மூ
வாயிரவர்[1] செய்த பணியில்
அணுவளவு மடிமையாற் செய்யும்நெறி காண்கிலேன்
ஆட்கொள்வ தெந்த விதமோ

காமருவு கற்பகநி ழற்பொலிபு ரந்தரன்
கார்நிறவு ருத்தி ரனைமுன்
கருநிவதை செய்தபழி தீர்த்தமது[2] ரைக்கடவுள்
கண்ணில்வந் தெண்ணில் பொருளாய்

மாமருவு ஞானமுற் றுருகுமடி யார்கண்மன
மலரில்விளை யாடும் வாழ்வே
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெரிய புராணம்: (பெ. பு.)*
*தில்லை வாழந்தணர் சருக்கம் : தில்லை வாழந்தணர் வரலாறு*

2 *திருவிளையாடல் புராணம் (தி. பு.)*
*இந்திரன் பழிதீர்த்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை.**

*அறுதொழில்—மறையோதும்பணி*

*புரந்தரன்—இந்திரன்*

*வளை—சங்கு*

*தரளங்கள்—முத்துக்கள்*

*சந்தம்—அழகு, சந்தனம்*

## அடியவர்கள் நெறி

2. பதஞ்சலிவி யாக்கிர பதன்றிரு நடங்தொழும்
பதியின்மட் கலம்வ குக்கும்
பான்மைக்கு லாலர்குடி யிற்பிறந் தடியவர்கள்
பலிகொள்பாத் திரம ளித்து

நிதஞ்சிவ னிடத்தன்பு பிரியாது தன்மனை
நிகழ்த்தின படிக்கிள மையை
நீக்கித் துறந்ததிரு நீலகண் டக்குயவர்
நெறி[1]யெவர்க ளாலு முடியா(து)

இதஞ்செய்குண மில்லாத துருவாச மகபதிக்
கீய்ந்திடு மலங்க றன்னை
யீர்த்தடியி லிட்டுச்சி தைத்தவ ளக்களி
றிடுஞ்சாப மொழிய[2] மண்மேல்

மதஞ்சொரி குணங்கள்விட் டர்ச்சிக்க வருள்செய்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *திருநீலகண்ட நாயனார்*

2 தி. பு: *வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*பலிகொள் பாத்திரம்—திருவோடு*

*அலங்கல்—மாலை*

*ஈய்ந்திடும்—ஈந்திடும்*

*மதம்—செருக்கு*

## எந்தவிதம் ஆட்கொள்வையோ

3. பொன்னிநதி வெண்குடைச் சென்னிவள நாட்டிற்
புகார்நகர வணிக னுக்கோர்
புத்திரனென் றுற்பவித் தற்கறை மிடத்திறைப்
போதடித் தொண்டி யத்தி

யின்னிசைத் துணைவியையு மடியரென் றீய்ந்திடு
மியற்பகை[1] செயற்கைபோல
யெள்ளளவு முடியாது னுள்ளமகிழ் வாயென்னை
யெந்தவித மாட்கொள் வையோ

வன்னியறி வாணிபஞ் செய்யும்வணி கன்சொன்ன
படிசித்த ராய்க்க னவிலே
பார்புகழு மணவூரில் வாழ்ந்தகுல சேகரப்
பாண்டியன்முன் வந்த டவியை

வன்னைவிழி யார்க்குவந் திருநகர்[2]சே யெனமுண்ட
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு: இயற்பகை நாயனார்*

2 *தி. பு: திருநகரங் கண்ட படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*சென்னிவளநாடு—சோழநாடு*

*மிடத்தி—மிடற்று*

*தொண்டியத்தி—தொண்டியற்றி*

## எப்படிப் பதந் தந்தருளுவையோ?

4. சேத்திரா குலஞ்செய்த பூசாப லத்தினாற்
றொண்டவரென் றண்டர் புகழத்
தோத்திமழை யிருளிலே சேற்றின்முளை வாரிநற்
சோறாக்கி வெகுப சியுடன்

பாத்திரமி லாமலே வந்தவர்க் கிட்டசிவ
பத்தரா மிளையான் குடிப்[1]
பதிமாற னார்ப்பதிவு மெளிதா வெனக்கெப்
படிப்பதந் தந்தருள் வையோ

காத்திரமலை யத்துவச னுக்குமுலை மூன்றுடன்
கன்னியை யளித்துல[2] கில்வாழ்
கலைமுழுது மறிவித்து மவுலிபுனை வித்துநற்
கவுரியன கூட(ல்) நகர

மாத்திரம லப்புவனி காத்தருள்செ யெனவைத்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: *இளையான்குடி மாற நாயனார்*

2 தி. பு.: *தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப்படலம்*

அரும்பொருள்–குறிப்புரை

*புகழத்தோர்த்தி—புகழத்தோற்றி*

*முளைவாரி—விதைநெல்*

*மவுலி—கிரீடம்*

*கூட நகரம்—கூடல் நகரம்*

## புன்மை தீர்த்தாள்வதுளதோ?

5. சேதிநன் னாட்டிற் றிருக்கோவ லூரிற்
செழிந்திடும லாட பதியாய்த்
தெவ்வொருவன் வெண்ணீறு பூசிவிர காலுயிர்
செகுத்திடும் போது மழியாப்

பூதிமண் வேடமே பொருளென்று நம்புமெய்ப்
பொருணாய னார்நி[1] னைப்போர்
பொழுதாகி லுஞ்சற்று நினையாத பாவியேன்
புன்மைதீர்த் தாள்வ துளதோ

நீதிநெறி யாலர சளித்திடுத டாதகைமின்
நேர்ந்தட்ட திசையும் வென்று
நின்றசிவ கணமீது சென்றெதிர்க் கும்போது
நெஞ்சினடு முலைம றைத்த

மாதினை மணஞ்செய்து முடிமங்க லஞ்செய்து[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: *மெய்ப்பொருள் நாயனார்*

2 தி. பு. : *திருமணப்படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*விரகாலுயிர் செகுத்திடும்போது-தந்திரத்தால் கொல்லமுற்படும்போது*

*புன்மை—இழிவு*

## வினை கண்டு அருள் செய்வையோ?

6. அய்யன்மொழி தவறாம லன்னைதலை கொய்தவ
னரசுசெய் திருந்த நாட்டில்
அரியசெங் குன்றூரில் வேளாண் குடித்தலைவ
ராகியா ரூரில் வைத்த

வெய்யதன் காலையுங் கண்டகோ டாலியால்
வேறிரண் டாய்த்த றித்த
விறன்மிண்டர்[1] புரிதொண்டு மரிதெந்த விதமெந்தன்
வினைகண்டு னருள்செய் வையோ

தையல்மண வதுவையி லிரண்டுமுனி வரருமச்
சபைநடங் கண்ட லாது
சலமுமுண்ப திலையென ரசதமன் றிடைநின்று
தாளமுறை பாத முறையே

வையகமெ லாம்பணிய வவர்காண நடமிட்ட[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *விறன்மிண்ட நாயனார்*

2 தி. பு.: *வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*செங்குன்றூர்:* *இது திருவிதாங்கூருக்கருகில் கொல்லம் துறைமுக நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது என்பர் (திருத் தொண்டர் புராணம், திருப்பனந்தாள் மடம் வெளியீடு பக். 68)*

*வதுவை — மணம்*

*முனிவர் இருவர்: பதஞ்சலி, வியாக்கிரபாதர்*

*மன்று—வெள்ளியம்பலம்*

இ—2

## அடிமையால் முடிவுறாதே!

7. புற்றுவச னரசுபுரி பழையாறை யூர்வணிகர்
பொன்மரபி லேபி றந்து
புண்ணிய சரீருக் குடைகந்தை கோவணம்
புதிதாக நெய்த ளித்து(ம்)

மற்றவரு ளத்தரிடு கோவணத் தட்டுநிறை
யாயிருந் தருள்பெற் றிடும்
அமர்நீதி யார்[1]செய்த தவமாகி லுஞ்செய்ய
வடிமையால் முடிவுறாதே

குற்றமற நின்பாத தெரிசினைக் காட்படுங்
கொள்கைநெறி யுள்ள மறியேன்
குண்டோ தரர்க்[2]குரிய பண்டோ தனக்கிரி
கொடுத்தத ழுடுத்த சிறிய

வற்றெனப் பிறைநுதலி கயனயனி பாகமுறை
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: *அமர்நீதி நாயனார்*

2 தி. பு.: *குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்*

அரும்பொருள்–குறிப்புரை

*தெரிசனை—தரிசனம்*

*பண்டோதனக்கிரி—பழமையான சோற்றுமலை; ஓதனம்-சோறு*

*பிறைநுதலி—பிறையை யொத்த நெற்றியினை உடையவள்*

*அதழ்—இதழ்*

## எவ்வகையில் உய்வன் எளியேன்?

8. ஆரலங் கற்குரிசி நாடுநகர் கருவூரா
னபரசிவ காமி யாண்டா
ரலர்கொண்டு போகையிற் கரிசிந்த மழுவினா
லட்டதை யறிந்த ரசனும்

ஏரலங் கொண்டழிய வெனையும் வெட் டெனமகிழ்ந்
தின்பமுறு மன்ப ரான
வெறிபத்தர்[1] பயபத்தி நெறிசற்று மிலைசித்த
மெவ்வகையி லுய்வ னெளியேன்

பாரிலங் கக்குறள னுக்கனக் குழியும்
பரந்துவரு வையை நதியும்[2]
பதிநிற்க வுந்தாக முடனிற்க வுந்தனது
பாவைமகி ழக்கொ டுத்த

வாரலங் கற்சடையி னார்புயங் கத்தையணி
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *எறிபத்த நாயனார்*
2 தி. பு: *அன்னக்குழியும் வைகையு மழைத்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*அலர்—மலர்*
*கரி—யானை*
*மழு—கோடரி*
*குறளன்—குள்ளன், குண்டோதரன்*
*அனக்குழி—அன்னக்குழி*

## ஏழையெனை ஆள்வதறியேன்?

9. தண்டரள வெண்குடைச் சோழநாட் டெயினனுந்
தன்னிலீ ழக்கு லத்திற்
சடலமடுத் தெதிரியரி சூரனெத் தியிலிட்ட
தண்பூதி கண்டு ருகிநெஞ்

செண்டகவி வன்பெரிய தொண்டனென் றிகல்செயா
தெ.........சிவ .........க ரீன்ற
வேனாதி நாதர்[1]நினை வானாலு நினையாத
வேழையெனை யாள்வ தறியேன்

கண்டனைய மொழிமாது தனையீன்ற பொன்மாலை
கவுதம ருரைத்த............ ய
கடலாட வேண்டினா ளென்றிரந் தடிதொழுது
காதல ரிடத்துரைப்ப

மண்டலம் புகழவெழு கடலும்வர வருள்செய்து[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *ஏனாதி நாயனார்*

2 தி. பு.: *எழுகடல் அழைத்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*எயினன்—எயினனூரினன்*

*எதிரியரிசூரன்—எதிரியதிசூரன்*

*பொன்மாலை—காஞ்சனமாலை*

*கவுதமர்—கௌதம முனிவர்*

## பதப்பேறு வருமோ?

10. ஓங்கல்வள நாடப்பி நாடுடுப் பூரெயின
ருளமகிழ நாக னுக்கே
யுதவிபுரி பிள்ளையா யீசனுக் கேனத்தி
னூனமு தருத்தி யகலா

தாங்கறு தினத்திலொரு கண்பிடுங் கிக்குருதி
யடைபட வனைந்து ருகியே
யருள்பெற்ற கண்ணப்பர்[1] நினைவொற்ற வர்க்கலால்
அப்பதப் பேறு வருமோ

தீங்ககல நீராட மூன்றுவிதி கேள்வர்செய
சிறுகன லோதி லையெனச்
செப்புமா மிக்குமலை யத்துவச னைக்கூஉய்த்
திருத்தேவி கைபி டித்து

வாங்குதிரை கடலா டெனக்கிருபை செய்ததமிழ்
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *கண்ணப்ப நாயனார்*

2 தி. பு.: *மலையத்துவசனை அழைத்த படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*நத்தி—விரும்பி*

*ஊனமுது—இறைச்சியுணவு*

*நினைவொற்றவர்—நினைவொத்தவர்*

## அயன் விதித்த விதியோ?

11. காகங் கவிழ்த்தநதி நாட்டிலழ காந்திருக்
கடவூரி லந்த ணருமாய்க்
காதலி கழுத்துமங் கலவரையி லவித்தரன்
கழலினைத் தொண்டு செய்து(ம்)

மாகஞ் சலிப்பறப் பாசங் கழுத்திலிட்
டரனைநேர் கண்ட பெரியா
ரருள்கலையர்[1] பணிவிடையு மடிமைசெய்து பணியாத
தன்றயன் விதித்த விதியோ

பாகம் பிடித்திடு தடாதகை வயிற்றிலிப்
பாரிற் சராச ரங்கள்
பண்டுசெய் தவத்தினரா லண்டர்முனி வோர்தொழப்
பகலவன் றேக வெழில்போல்

வாகம் பெறக்குழவி யுக்கிரகு மாரனென[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: குங்குலியக் கலய நாயனார்
2 தி. பு: உக்கிரபாண்டியன் திருவவதாரப்படலம்

**அரும்பொருள்-குறிப்புரை**

*காகங்கவிழ்த்த நதி—காவிரி*
*பாகம் பிடித்திடு—உடம்பில் ஒருபாதியாய் உறையும்*
*சராசரங்கள்—உயிரினங்கள்*
*அண்டர்—தேவர்*
*வாகம்—வாகு, அழகு*

## துணையடிப் போதுறுவனோ?

12. பண்டுகஞ் சனூரில் வேளாண் குடியவர்கள்
பண்ணிய தவத்து தித்துப்
பத்தசன ராகவே பெற்றமகள் வதுவையிற்
பாவை கூந் தலைய றுத்துத்

தொண்டனை நமது பஞ்சவடிக் கீதியெனத்
தோன்றின வருக்க ளித்த
தொண்டர்செயல் கேட்டும்வன் னெஞ்சமுரு காதயான்
துணையடிப் போது றுவனோ

செண்டுமுலை மடமாது சோமசே கரனுதவு
செல்விகனி காந்தி மதியைச்
சேயுக்கிர குமரனுக் கேமுக்கிய வதுவைசெய்து
செண்டுவளை வேல்கொ டுத்து

வண்டுபடி தார்புனையும் ரத்தினமுடி சூடியாகன்
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *மானக்கஞ்சாற நாயனார்*

2 தி. பு.: *உக்கிரபாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*வேளாண்—வேளான் எனச் சுவடியில் உள்ளது*

*ரத்தின—ரெத்தின என்பது சுவடிப்பாடம்*

*பஞ்சவடி—மயிரினாலே அகலமாகப் பின்னல் செய்த மயிர்க்கயிற்றுப் பூணூல் வடம்*

*பஞ்சம்—விரிவு*

*வடி—வடம்*

*வதுவை—மணம்*

*வளை—சக்கரம்*

*செண்டு—வளைதடி*

## தாயனார் நேயமுஞ் சேயனாலாகுமோ?

13. கயலுகழ் வயற்பொன்னி நாட்டிலுயர் கணமங்
கலப்பதியில் வேளாண் குலக்
கற்பில்வந் தமுது செங்கீரை மாவடு
கறைகண்டர் பூசைக் களித்துச்

சயமுறு தினத்தில்வை தமருகுத் தூட்டியைத்
தன்கைவா ளால ரிந்த
தாயனார் நேயமுஞ் சேயனா லாகுமோ
தள்ளிவிட் வுள்ள நினையே

லயமகஞ் செய்யுமுக் கிரகுமர பாண்டியன்
அரசுபுரி மதுரை நகர்மே
லடல்கொண்டு வருகின்ற கடல்கண்டு கனவிலே
யறியவந் தோதி நனவில்

வயமிகு மிரைத்தல்கண் டெதிர்நிற்கில் வேல்விடென
வந்தவ னளித்த புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *அரிவாட்டாய நாயனார்*
2 தி. பு. : *கடல் சுவற வேல்விட்டபடலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*கயல்—மீன்*
*கறைகண்டர் பூசை—சிவபெருமானின் பூசை*
*ஊட்டி—கழுத்து*
*அரிவாட்டாய நாயனார்—அரிவாள்-தாயன்-நாயனார்*
*அரிவாள்—நெல்லறுக்கப்பயன்படும் கருவி*
*தாயன்—நாயனாரின் இயற்பெயர்*
*கடல் சுவற—கடல் வற்றுமாறு*
*அடல் கொண்டு வரும் கடல்—அழிப்பதற்கென வரும் கடல்*

## கன்னெஞ்சம் உருகாத கருமி

14\. செல்வ....................ட்டில்மங் கலநகரி லாயர்குல
தீபராய கக்கலி கோபராய்ச்
சென்மமறு சிவபுண்ணி யத்தரா யக்குழலிற்
சிவன்றிரு வெழுத்தைந் தையுங்

கல்விநெறி யாய்ச்சிவன் காதுபுக வாசித்த
கனிவாய ரா......னாற்போற்[1]
கற்றிலேன் கற்கினுங் கன்னெஞ்ச முருகாத
கர்மியெனை யாண்ட ருளுவாய்

பல்வளனு...............யின் றிச்சுருங் கப்புயல்
பணிந்திட விலங்கி லிட்டுப்
படைகொண்டு போர்வந்த செயல்கண்டு திகழ்வச்சிர
பாணியுட னேயெ திர்த்து

மல்வகை பொருந்திகிரி யாலிந்திரன் முடிசாய்த்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 *பெ. பு.: ஆனாய நாயனார்*

2 *தி. பு.: இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்*

அரும்பொருள்—குறிப்புரை

*மங்கல நகர்—திருமங்கலம் என்னும் ஊர்*

*ஆயர்குல தீபராய்—ஆயர்குல விளக்காய்; குழலில், சிவன் திருவைந் தெழுத்தை இசைப்பதில் ஆனாயர் வல்லவர்*

*கர்மி—கருமி*

## மூர்த்தியார் பத்தி அடிமைக்கு வருமோ?

15. வேம்பநாட் டணியென விளங்குமது ரைக்கொரு
விளக்கென விளங்கு வணிகர்
மேன்மைக் குலக்கொழுந் தாய்ச்சரிதை கிரியையின்
விளம்பிடு தவம்பு ரிந்து

பாம்பணி புராந்தகர்க் கணிசந்த னஞ்சாத்து
பணிபுரிந் தொருதி னத்திற்
பாறையின் முழங்கையை யரைத்ததவ மூர்த்தியார்[1]
பத்தியடி மைக்கு வருமோ

காம்பனைய புயவீர பாண்டியனை யீன்றவர்
கழிக்குநாட் கால வியல்பாற்
கனகவரை முடியிலொரு செண்டா லடித்திட்ட[2]
காந்தநிதி தனையெ டுத்து

வாம்பரியி லேறிவளர் பாண்டியன்வர வருள்செய்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *மூர்த்தி நாயனார்*
2 தி. பு.: *மேருவைச் செண்டாலடித்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*வேம்பநாடு—பாண்டியநாடு*
*பாம்பணி புராந்தகர்—சிவபெருமான்*
*பாறையில் முழங்கையை அரைத்தல்—சந்தனக்கட்டை கிடைக்காததால் தன்கையினையே அரைத்துத்தன்னை வருத்திக்கொண்டபான்மை*
*காம்பு—மூங்கில்*
*கனகவரை—மேருமலை*
*வாம்பரி—அழகு மிக்க குதிரை*

## வீணன் எனை ஆள்வையோ?

16. பூநறை பெருக்கும் புனற்பொன்னி நாட்டிலுயர்
பூம்புகலூர் மறைய வர்குலப்
புத்திர நவ ரத்தினமா யைந்தெழுத் தனுதினம்
பத்திபெற வுட்ச ரித்து

தெனு தருமுன்போ தெடுத்தரு சித்துமிச்
செக முழுப் பேறு பெற்ற
திருமுருக னார்[1]செய்த கிரியையெனி னுஞ்செயாச்
செடவீண னெனையாள் வையோ

காணிறையு நயிமிசா ரணியமுனி வரமிருமிக்
கண்ணுவர் கருத்த ராதிக்
கற்றமறை யின்பொருட்[2] சற்றுமறி யாதுபூங்
கழலிணையில் வீழ்ந்தி ரப்ப

மானுறை கரங்கரந் தாரண ரெனச் சொன்ன
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *முருக நாயனார்*

2 தி. பு.: *வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*நறை—மணம்*

*உட்சரித்து—உச்சரித்து*

*நவரத்தினமா—'நவரற்றினமா' எனச் சுவடியில் உள்ளது.*

*மானுறை கரங் கரந்தான்—மானைத் தன் கையிலே வைத்துள்ள இறைவன் சிவபெருமான்*

*ஆரணர்—சிவபெருமான்*

## பேதையான் எண்ணில் வருமோ?

17. தண்கொண்ட பொன்னிதிகழ் சோழநாட் டிற்றிருத்
தலைவூரில் வேதர் மரபிற்
றருமசிந் தையராய்க் கழுத்தளவு நீரிலே
சந்ததமு நின்று கொண்டு

பெண்கொண்ட பாகனை யுருத்திரமந் திரத்திற்
பிறப்பற நினைத்து யிர்பெறா
பேறான ருத்திரபசு பதிநாய னார்[1]நியதி
பேதையா னெண்ணில் வருமோ

திண்கொண்ட புயன்வீர பாண்டிய னளித்திடுஞ்
சிறுவனுக் கணிமு டிக்காய்
செங்கையினி லங்கதம் விளங்கிட மணிச்சுமை
செறிந்தடைக் கூறை கொண்டு

வண்கொண்ட புகழ்வணிக னாகநவ மணிவித்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: உருத்திர பசுபதி நாயனார்*
2 *தி. பு.: மாணிக்கம் விற்றபடலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*உருத்திர மந்திரம்: திருவுருத்திரம்: இது, ஸ்ரீருத்ரப்ரச்னம், ஸ்ரீருத்ர சூக்தம், ஸ்ரீருத்ரா நிவாகம் எனப் பல பெயர்களால் வழங்கப்பெறும். ஸ்ரீ அல்லது திரு என்பது பார்வதிதேவி, சம்பத்து, காந்தி என்ற மூன்று பொருளையுடையது. இம் மூன்றுடன் கூடியிருக்கும் சிவபெருமான் ஸ்ரீருத்திரன் எனப்பெயர் பெற்றார். (ருத்-துன்பம்; திரன்-நீக்குபவன்) அவருக்குரிய மந்திரம் உருத்திரமந்திரம் ஆகும். (திருத்தொண்டர் புராணம் பக். 140-141.)*

*மணிச்சுமை—நவமணிகள் நிரம்பியதன் சுமை*

*அங்கதம்—தோளணி*

*வித்த—விற்ற*

## காப்பது உனது கடனே

18. பூதலம் புகழ்சோழ நாட்டாத னூரினி
லப்பாடி யிற்பி றந்தாய
போர்வைகோ ரோசனை நரம்பிவை யெடுத்துப்
புராரிகோ விற்க ளித்துச்

சாதல்சேர் தழலினுட் புகுந்தரு மறையவர்
தலைவராய்ச் சபைபு குந்த
தவநந்த னார்முத்தி[1] யரிதிந்த நாளெனைத்
தற்காப்ப துனது கடனே

தீதலஞ் செயுமுதர வலிதீர வருணன்
திருக்கடலை முன்ப ழைத்துத்[2]
தென்னவன் பதியழித் திங்குவா செல்லெனச்
சிந்துமோ டளவு முந்தி

மாதலந் தனில்வருமுன் வற்றநான் முகில்விட்ட
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: திருநாளைப் போவார் நாயனார்

2 தி. பு.: வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

அரும்பொருள்–குறிப்புரை

பூதலம்—உலகம்

கோரோசனை—பசுவின் வயிற்றினின்றும் எடுக்கப்பெறும் மஞ்சள் நிறம் கொண்ட மணப்பொருள்

தழல்—நெருப்பு

உதரவலி—வயிற்றுவலி

மாதலம்—உலகம்

## உள்ளன்பு விள்ள எளிதோ?

19. கருமுகி றினம்பெயுந் தொண்டைநாட் டழகுபெறு
காஞ்சியிலே காலி குடியிற்
காளகண்ட ரடிபணி யாளாய் விரித்ததுணி
காணாம லுளம யங்கி

யொருமைமன தாய்க்கலை யடித்திடும் பாறையி
லுயிர்வெறுத் துச்சி ரத்தை
யுடைத்திடு திருக்குறிப் புத்தொண்ட நாயனா[1]
யுள்ளன்பு விள்ள வெளிதோ

.........பெற நான்முகிலு முண்டதை யறிந்தெழு
பயோதரந் தனைய ழைத்துப்
பஞ்சவன் பதியழித் திங்கேகு மென்றிடப்
பண்டுபோ னான்முகி லையும்

வருணன்வலி கெடநகரி னான்மாட மாக்கியநன்[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *திருக்குறிப்புத் தொண்ட நாயனார்*
2 தி. பு: *நான்மாடக் கூடலான படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*காலி குடி—ஏகாலியர் குலம்*
*கலையடித்திடும் பாறை—துணிதுவைத்திடும் பாறை*
*சிரம்—தலை*
*விள்ள எளிதோ?—உரைக்க எளிமையானதோ?*
*பயோதரம்—கடல்*
*பஞ்சவன்பதி—பாண்டியன் நகர்*

## வாராது துன்பம்

20. செம்பிவள நாட்டில்வரு மண்ணியின் றென்கரைச்
சேருதூர் வேத ராகிச்
சென்றுநிறை பின்காத்து மண்லிங்க மாய்ச்செய்து
தீம்பாலை விடுதல் கண்டு

சம்பிமுகம் வாடியொரு காலா லழித்ததன்
தாதைதா ளறவெ றிந்த
சண்டேசுரர்[1] பத்திவிழி கண்டாலும் வாராது
தம்பமினி நின்ப தமையா

தும்பிபரி யாகவுந் தெங்குபனை யாகவுந்
தோகைசிறு கூகையெனவுஞ்
சோமன்ரவி யாகவு மூமன்மொழி பேசவுஞ்
சுத்தநீர் கைத்த லுறவும்

வம்புகள் புரிந்தெலாம் வலசித்த ராயாடு[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *சண்டேசுர நாயனார்*
2 தி. பு: *எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற்படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*மண்ணி — மண்ணியாறு*
*சம்பி—வருத்தமுற்று*
*தாதை தாள் அற—தந்தையினுடைய பாதங்கள் வீழுமாறு*
*தம்பம்—துன்பம்*
*பரி — குதிரை*
*தோகை — மயில்*
*கூகை— ஆந்தை*
*சோமன்—சந்திரன்*
*ரவி—சூரியன்*
*ஊமன்—ஊமை*
*வம்பு—புதுமை*

## பாதம் அவர் ஆண்டு கொளுமே

21. பெண்ணைநதி சேர்திரு முனைப்பாடி நாட்டிற்
பொருத்ததிரு வாமூ ரினிற்
பெருகுவே ளான்குடித் தலைவராய் மருள்நீக்கு
பிஞ்ஞக னிடங்க டோறும்

பண்ணையிசை யுந்தமிழ் பாமாலை பாடியடி
பரவுதிரு நாவி னரசர்[1]
பணிசெயுள் வாரமா னாலுமடி யேன்செயிற்
பாதமவ ராண்டு கொளுமே

நிண்ணையந் தெரியாத வவிடேக பாண்டியன்முன்
னீட்டிய கரும்பை வாங்கி
நின்றகல் லானையது தின்றிட[2] வருத்திம
னிகழ்த்தின படிக்கு மகவு

மண்ணையர சாளவொரு கண்மணி யெனத்தந்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *திருநாவுக்கரசு நாயனார்*
2 தி. பு.: *கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*வேளான்குடி—வேளாண்குடி*
*பிஞ்ஞகன்—சிவன்*
*திருநாவினரசர்—திருநாவுக்கரசர்*
*வாரம்—அன்பு*
*அவிடேக பாண்டியன்—அபிடேக பாண்டியன்*
*நிண்ணயம்—உறுதி; நிண்ணயந்தெரியாத - ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாத*

## பதம் பெற என்று அருளுவாய்?

22. நன்னலம் பெறுபாண்டி நாட்டுமண் மேற்குடி
நகர்க்குளுறை நம்பி மரபின்
ஞானோத யத்தராய்ச் சைவநெறி நேயராய்
நம்பர்சிவ வேடரி யார்க்கு

மன்னமிடு பத்தியும் பூதியணி நியதியு
மகலாத சிந்தை யுடையர்
அரசர்மந் திரிசூலச் சிறையார்[1] பெறும்பத
மடிமைபெற வென்ற ருள்வாய்

தன்னிகரில் விக்கிரம பாண்டியனை விரகாற்
சதித்திடச் சமணர் கூடித்
தழன்மகம் வளர்த்துவரு கரியையொரு[2] மண்டபந்
தனிலேறி வரவு பார்த்து

மன்னன்மகி ழச்சிங்க வாளியாற் றனியெய்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *குலச்சிறை நாயனார்*

2 தி. பு.: *யானை எய்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*மண்மேற்குடி—மணமேற்குடி என்னும் ஊர்; அறந்தாங்கிக்கருகில் உள்ளது*

*நம்பி மரபு—சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் ‘பெருநம்பி’ எனப் பாராட்டினர். பெருநம்பி-குலத்தலைமைப்பெயர்*

*விரகாற் சதித்திட—தந்திரத்தால் கொன்றிட*

*தழல் மகம் வளர்த்து—பாண்டியனைக் கொல்வதற்கு வேள்விசெய்து*

*சிங்கவாளி—சிவபெருமான் யானையின் மீது விடுத்த அஸ்திரம்; நரசிங்க அஸ்திரம்.*

## மனவயிராக்கியம் அடிமைநெஞ்சம் உறாதோ?

23. மிழலைநாட் டெழில்பெறு பெருமிழலை யூரராய்
வெகுளியணு வளவு மிலராய்
வேடம்வெம் பூதிகண் டாலவர்க் கன்னமிட
வேண்டிய விருப்ப முளராய்

அழலைவிழி யரிபுடையர் தொழநாமந் துதித்தரிய
சிவநாடு பெற்ற வன்பர்
பெருமிழலைக் குறும்பர்[1]மன வயிராக்கிய
மடிமைநெஞ் சகமு றாதோ

குழலைநிகர் மொழிகவுரி யைக்கொண்ட வயிணவன்
கொடுமொழிக் கஞ்சி வெருவி
குடிகொடனி வீட்டினிற் படிவவெழில் வேறதாய்க்
கொஞ்சிவிளை யாடல் புரியும்

மழலைமொழி குழவியாய்க் காளையாய்க் கிழவனான[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *பெருமிழலைக் குறும்ப நாயனார்*

2 தி. பு. : *விருத்த குமார பாலரான படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*மிழலை நாடு—புதுக்கோட்டைக்கருகில் வெள்ளாற்றின் தென் கரையில் உள்ளது*

*குறும்பர்—சிற்றரச மரபினர்*

*அழலை—ஒளி*

*வயிராக்கியம்—வைராக்கியம், மன உறுதி*

*குழலை நிகர்மொழி—குழலோசை போன்ற இனிய மொழி*

*வயிணவன்—வைணவன்*

## கன்னியரில் யாவர்பெறுவார்?

24. செட்டுமலி வணிகர்குல மங்கைமக ளாய்ப்பரம
சிவனடியா ரமுது செய்யத்
தேமாம் பழம்படைத் தொன்றுகொடு கயிலைவரை
சிரசால் நடந்து சென்று

கட்டுதமி ழந்தாதி ரட்டைமணி மாலைமிசை
கழறியருள் பெற்ற காரைக்
காலம்மை[1] கற்பினிலை போல விச்செகக்
கன்னியரி லியாவர் பெறுவார்

தட்டுபர தத்தெழில் நடித்திடு வருத்தமறி
தமிழ்ராச சேக ரன்முனஞ்
சந்ததமும் மூன்றுபதம் வீசிவீ சியபதஞ்
சபையிலூன் றென்றிரப்ப

மட்டுவிரி பாதமலர் மாறிநட மாடினநன்[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: பேயார் என்கிற காரைக்காலம்மையார்*
2 *தி. பு.: மாறி ஆடினபடலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*செட்டு—வியாபாரம்*
*காரைக்காலம்மையார் பாடிய அந்தாதி: அற்புதத்திருவந்தாதி*
*இரட்டைமணிமாலை: திருவிரட்டைமணிமாலை*
*தேமாம்பழம் படைத்தொன்று கொடு—கணவனின் விருப்பம் நிறை வேறுமாறு சிவபெருமானிடம் வேண்டி அதிமதுரக்கனி பெற்றமை*

## ஆனந்தவீடுபெறல் அரிது

25. திங்களூ ரிலப்போத முனிவராய் நாவரசர்
திருநாம மியார்க்கு மிட்டுச்
சீறிய விடத்தா லிறந்தமக னைக்கண்டு
சிறிதுமா குலமு றாமல்

அங்கதை மறைத்தடிய வர்க்கமுது செய்வித்த
வப்பூதி யடிகள்[1] போல
வவ்வேளை பாசநீத் தானந்த வீடுபெற
லரிதரிதிவ் வுலகி லய்யா

பொங்கர்மிசை பேறுண்ட வாளிதைத் தேதிருப்
புத்தூரின் வேதன் மனைவி
பொன்றவொரு வேடனைப் பழிவிடேன் வாவென்று[2]
புரவ..................வழக்கு ரைப்ப

மங்கலகு லோத்துங்க வழுதியை யந்தீர்த்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *அப்பூதியடிகள் நாயனார்*
2 தி. பு.: *பழியஞ்சின படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*அப்போத முனிவர்—அந்தண முனிவர்*
*நாவரசர்—நாவுக்கரசர்*
*விடம்—நஞ்சு*
*ஆகுலம்—துன்பம், வருத்தம்*
*பொங்கர்—மரக்கொம்பு*
*வாளி—அம்பு*
*வேதன் மனைவி—அந்தணனின் மனைவி*
*பொன்ற—அழிந்த, கொன்ற*
*ஐயந்தீர்த்த மதுரையான்—சோமசுந்தரக்கடவுள், பழியஞ்சு நாதர்*

## தெரிசனை என்புன்விழிக் கண்ணுறாதோ?

26. கற்புவளர் காவிரிநன் னாட்டிலுயர் சாத்தமங்
கைப்பதியின் விப்பிரர் மணியாய்க்
கண்ணுதல ருச்சனைசெ யிற்சிறு சிலம்பிவிழல்
கண்டிவா யூதி யுமிழப்

பொற்புடைய மாதைத் துறத்தல்கண்ட ரனுமெய்ப்
பொக்களங் காட்டி நிற்பப்
போற்றுதிரு நீலநக் கடிகடெரி[1] சனையெனது
புன்விழிக் கண்ணு றாதோ

சொற்புவன மீதிலவ் வந்திநக ரந்தணன்
றோன்ற றாயைப்பு ணர்ந்து
சுக்குல வழித்தந்தை யக்கண மடிந்திடத்
துணிசெய்த மாபா தக[2]

மற்புயனை விட்டகல வுட்கருணை வைத்ததமிழ்
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: திருநீல நக்க நாயனார்

2 தி. பு.: மாபாதகந்தீர்த்த படலம்

அரும்பொருள்–குறிப்புரை

*விப்பிரர்—அந்தணர்*

*சிலம்பி—நச்சுத்தன்மை கொண்ட பூச்சி*

*வாயூதியுமிழ—இறைவன்மேல் விழுந்த சிலந்தியை வாயால் ஊதி அப்புறப்படுத்தும்போது உமிழ்நீரும் இறைவன் மீது படல்*

*பொக்களம்—உடம்பில் ஏற்பட்ட கொப்புளங்கள்*

*தெரிசனை—காட்சி*

*துணி செய்த—வெட்டி வீழ்த்திய*

## நந்தியார் பெருமை சாற்றலரிது

27. புகழ்பெருகு பொன்னிநாட் டேறூரி லந்தணர்செய்
புண்ணியத் துரையா ணியாய்ப்
புத்திடங் கொண்டவர்க் காரூரில மணர்கள்
புகன்றபடி புனல்மு கந்து

தகழிதொறும் விட்டொளி விளக்கெரித் தெழுசென
...............கரக் கரைக டந்த
தருமநமி நந்தியார்[1] பெருமைசிறு தொண்டனாற்
சாற்றலரி தென்னை யாள்வாய்

திகழொளி தருங்கூர்மை வாள............... கற்றிடுஞ்
சித்தனா சான்ம னைவிமேற்
சித்தம்வைத் தவள்கைதொட மெத்தநொந் திடும்வேளை
செருவலக் குருவி வருவாய்

மகண்மகி ழவ்வணங்க மிருவகிர் படக்கொன்ற[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *நமிநந்தியடிகள் நாயனார்*
2 தி. பு.: *அங்கம் வெட்டின படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*புத்திடம்—புற்றிடம்*
*அமணர்—சமணர்*
*தகழி—அகல் விளக்கு*
*சாற்றல்—கூறுதல்*
*மெத்த—மிகுதியாக*
*செரு—போர்*
*வெல—வெல்ல*
*இருவகிர்பட—இருகூறாய்ப்பட*

## அகநினைக்கினும் உய்குவேன்

28. செஞ்சாலி முத்துதிர்க் கும்பொன்னி நாட்டுளே
சீர்காழி வேதர் குடியிற்
சென்மித் தருந்தமிட் பதிகமு முரைத்தென்பு
திருமினென வரவ ழைத்தே

யஞ்சாத சமணிரு ளறுத்துவெண் பூதியங்
கவனிமுழு தினும்வி ளங்க
வருள்செய்த திருஞான சம்பந்தர்[1] பாதமல
ரகநினைக் கினுமுய் குவே

னஞ்சார புயங்கத்தை யவுணரோ மத்தீ
நலஞ்செய்து வரவ ழைத்து
நகரும்வழு தியுமழிவு செயெனவிட வருமரவை
நாடியம் பாற்று ணித்து[2]

மஞ்சார களித்தரச னந்தகுண னைக்காத்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: *திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்*

2 தி. பு.: *நாகமெய்த படலம்*

அரும்பொருள்–குறிப்புரை

*சாலி—நெல்*
*வேதர்குடி—அந்தணர்குடி, வேதத்தில் வல்லுநர்*
*என்புவரவழைத்தல்—திருமயிலையில் பூம்பாவையை உயிர்பெற்றெழச் செய்தல்*
*இருள்—மயக்கம்*
*புயங்கம்—பாம்பு*
*வழுதி—அனந்த குண பாண்டியன்*
*அரவு—பாம்புருவினான அசுரன்*

## நின்பதந் தந்தருளுவாய்

29. இனவளைக ளுரும்புனற் பொன்னி நாட்டுக்
கியைந்த பெருமங் கலத்திலே
யாகுல ராமுடக் குஞ்சூலை நோயினா
லிடருற்றி ரங்கி யீச

னினவுபிரி யாதவன் றொண்டர்வரு முன்னாவி
நீத்துட னெழுந்து முன்னா
ணெறிநின்ற தவர்கலிக் காமர்[1]துணி வென்சொல்வே
னின்பதந் தந்த ருளுவாய்

களநிகர் சடச்சமண ரோமகுண் டத்தில்வரு
கபிலையை யறிந்து மாறன்
கடிவிடத் தானவனை யெய்தமுத லேயெனைக்
காவென் றிரந்து பணிய

மனமிளகி நந்தியிட பத்தைவிட் டதுவென்ற[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *ஏயர்கான் கலிக்கோம நாயனார்*
2 தி. பு: *மாயப்பசுவை வதைத்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*வளை—சங்கு*
*பெருமங்கலம்—திருப்பெருமங்கலம்-திருப்புன்கூருக்கு அருகில் உள்ளது*
*ஆகுலர்—துன்பமுற்றவர்*
*சூலைநோய்—வயிற்றுவலி*
*இடர்—துன்பம்*
*வன்றொண்டர்—சுந்தரர்*
*கபிலை—பசு*
*மாறன்—அனந்த குண பாண்டியன்*
*நந்தியிடபம்—சிவபெருமானின் நந்தி வாகனம்*

## திருமூலதேவர் பேறு என்றுவருமோ?

30. அறநெறி வளர்க்குந்திருச் சாத்தனூ ராய
ராநிறைக் கதிப ராகி
யரவா லிறந்திடக்கண் டானினங்கதற
வவ்வேளை யோகி யுயிராற்

றிறமுட னெழுந்துபினும் வருடமெண் ணாயிரஞ்
சிவயோக மீதி ருந்து
திருமந்தி ரம்பாடி யருள்பெற்ற திருமூல
தேவர்[1]பே றென்று வருமோ

புறமிடா வேடர்பதி சேதுரா யன்படைகள்
போந்திடக் கண்டு வெருவும்
போர்வழுதி குலபூட ணன்றனக் காளாய்ப்
புகுஞ்சிவ கணங்க ளுடனே

மறமுடைய வீரராய் வந்துமெய்க் காட்டிட்ட[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *திருமூல நாயனார்*

2 தி. பு: *மெய்க்காட்டிட்ட படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*சாத்தனூர்—திருவாவடுதுறைக்கு அண்மையில் உள்ள ஊர் என்பர்*

*மூலன்—இடையினுடைய பெயர்; பின்னர் அவன் உடலிற்புகுந்து எழுந்த சிவயோகியருக்கும் திருமூலர் எனப்பெயர் அமைந்தது.*

*ஆயர்—இடையர் குடி*

*அரவால் இறந்திட—பாம்பு கடித்து மூலன் இறந்துபட*

*சேதுராயன்—வேடர் தலைவனாகிய சேதிராயன்*

*வழுதிகுல பூடணன்—குலபூடண பாண்டியன்*

## தண்டியடிகளின் அன்பு

31\. கொடியாடு மாடமறு கெழில்செய்திரு வாரூர்க்
குளங்கயிறு தடவி வெட்டிக்
குண்டர்பா ழிகளிடத் தண்டர்நா யகருக்
குவந்திடுங் கோவில் கட்டி

யடியார்க ளிக்கவே பிறவியி லிழந்தக
ணலரியொளி போல்வி ளங்க
வருள்பெற்ற சிவதொண்டர் தண்டியடி கட்குள்ள[1]
வன்பிலாத் தனுவெ டுத்தென்

முடியாரும் வழுதிவே தரையிகழ்ந் ததனான்மை
முகில்பெய்யு மழைக ளின்றி
முன்புள வளஞ்சுருங் கக்கண்டி ரங்கியமர்
மோதுபடை நாலு வகையும்

மடியாதி ரட்சிக்க வுலவாத கிழியீந்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: தண்டியடிகள் நாயனார்*

2 *தி. பு.: உலவாக்கிழியருளிய படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*குளங்கயிறு தடவி வெட்டி*—*கண்பார்வையற்ற தண்டியடிகள் குளத்தினை வெட்டுவதற்காகக் குளத்தில் ஒரு கயிற்றினைக்கட்டி அக் கயிற்றினைத் தடவிக்கொண்டே குளத்தை ஆழப் படுத்தினார்.*

*அலரியொளிபோல் விளங்க*—*சூரிய ஒளிபோல் விளங்க*

*வேதரை இகழ்ந்து*—*அந்தணர்களை அவமதித்து*

*உலவாக்கிழி*—*வற்றாத பொற்கிழி*

## அந்தகனை வெல்வது எளிதோ?

32. கஞ்சமலர் வாவிதிகழ் தொண்டைநாட் டிலகும்வேற்
காட்டில்வே ளாண்கு லத்திற்
கனமெடுத் தனுதினஞ் சூதாடி வெனறதாற்
கைவரும் பொருள்க டேடி

அஞ்சலர் புராந்தகர்க் கடியவா மனந்திறதி
யாகவறு சுவையி னுடனே
யனமிட்ட மூர்க்கர்போற்[1] றினமிட்டு ணாதநா
னந்தகனை வெல்வ தெளிதோ

பஞ்சலரை மானுமடி யார்தாரு காவனப்
பாவையர்கள் சாப மொழியாற்
பாண்டியன் கூடல்நகர் வணிகர்குல மாதராய்ப்
பாரிலருந் தவர்க

விஞ்சமலர் பொற்பதங் கன்றமணி வளைவித்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: மூர்க்க நாயனார்*

2 *தி. பு.: வளையல் விற்ற படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*கஞ்சமலர்—தாமரை*

*வாவி—குளம்*

*வேற்காடு—சென்னைக்கு அண்மையில் உள்ள ஊர்*

*அனமிட்ட—அன்னமிட்ட*

*உணாத—உண்ணாத*

*அந்தகன்—இயமன்*

*கன்ற—வாட*

## நான் உய்ய அருள்வாய்!

33. அந்தரந் தடவுபொழி லம்பர்வாழ் பூசுரர்க்
கதிபரா யஞ்செ ழுத்து
மனுதின தியானராய்த் தம்பிரான் தோழருக்
கன்பரா யடிய வர்க்குச்

சிந்தையி னினைத்தபடி யைவகையி லறுசுவை
சேர்த்தோ தனங்கொ டுத்துச்
சிவபத மடைந்தநற் சோமாசி மாறர்போற்[1]
செய்துநா னுய்ய வருள்வாய்

சுந்தர மடந்தைய ரியக்கிமா ரறுவருஞ்
சொல்லினவன் பாறை யாகித்
தொகைவருட மாயிரஞ் சென்றபின் மாதராய்
தொல்லைவெஞ் சாப நீங்கி

வந்தவர்க் கட்டமா சித்தியுப தேசித்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: சோமாசி மாற நாயனார்

2 தி. பு. : அட்டமா சித்தி உபதேசித்த படலம்

**அரும்பொருள்–குறிப்புரை**

*அந்தரம்—ஆகாயம்*

*அம்பர்—திருவம்பர் என்னும் நகர்*

*பூசுரர்—மறையோதும் அந்தணர்*

*அஞ்செழுத்து—திருவைந்தெழுத்து*

*தம்பிரான் தோழர்—சுந்தரமூர்த்தி சுவாமிகள்*

*ஓதனம்—சோறு*

*அட்டமா சித்தி—எட்டுச்சித்திகள்: அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்*

## நல்ல நிலை என்று தருவாய்?

34. தக்கவ ரினஞ்செறி திருச்சங்க மங்கையிற்
றருமவே ளாண்கு லத்திற்
ற...வரா யூழினான் மறுசமய நெறிநின்று
சைவத்தை யுள்ள டக்கி
நக்கனை மனந்தனில் நினைத்தால யங்காணி
நாடொறுங் கல்லெ றிந்து
ஞானவீ டுற்றசாக் கியநாய னார்போல[1]
நலலநிலை யென்று தருவாய்
பக்கமறி யாவகை வடக்குமதிள் வாயிலை
பாதியிர விற்றி றந்து
பாததெரி சனைகாஞ்சி வளவனுக் கருள்செய்து
பஞ்சவர்க் கஞ்சி யோவா
மக்கரங் கொண்டுரிய விடையிலருச் சினையிட்ட[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

இரு புராண விளக்கம்

1 பெ. பு.: சாக்கிய நாயனார்

2 தி. பு.: விடையிலச்சினையிட்ட படலம்

அரும்பொருள்—குறிப்புரை

*திருச்சங்க மக்கை—தொண்டைநாட்டில் உள்ள ஊர்*
*மறு சமய நெறி—சாக்கிய (பௌத்த) நெறி*
*நக்கன் — சிவபெருமான்*
*ஞானவீடு — வீடுபேறு*
*பக்கமறியா வகை—யாரும் அறியாவண்ணம்*
*காஞ்சிவளவன் —சோழ அரசன்*
*பஞ்சவன்—பாண்டியன்*
*விடையிலருச்சினை—விடையில் இலச்சினை, இடபக்குறி*

## செயலிலோ முத்தி கிட்டும்

35. கிரிநிதி தரும்பொன்னி நாட்டி லாக்கூரிற்
கிளர்த்துபூ சுரர்த லத்திற்
கேளிற்செறி செல்வரா யஞ்செழுத் தோதி...மயக்
கிரிதுவே ணதுபு ரிந்து

திரிபுர மெரித்தவர்க் கன்பர்வந் திடிற்றினமு
மசனங் கொடுத்துச் சித்தி
பெற்றவா சிறப்புலியார்[1]செ யுந்தொண்டு
செயலிலோ முத்தி கிட்டும்

பரிவளவ னுடனின்று பொருதரா சேந்திர
பாண்டியன் சேனை யுயரும்
படிகையிற் கரகமுந் தாங்கிப் பறந்தலைப்
பாங்கர்நீர்ப் பந்தர் வைத்த[2]

வரிமலர்க் குழலியொரு கவுரிமீ னாட்சிபுணர்
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: சிறப்புலி நாயனார்*
2 *தி. பு.: தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*கிரிநதி—காவிரியாறு*
*ஆக்கூர்—சோழநாட்டில் உள்ள ஊர்*
*அஞ்செழுத்து—பஞ்சாட்சரம்*
*அசனம்—உணவு*
*பொருத—போரிட்ட*
*பறந்தலை—போர்க்களம்*
*நீர்ப்பந்தல் வைத்தமை—இறைவன் பாண்டியனுக்காகப் போரில் தண்ணீர்ப்பந்தல்வைத்து உதவியமை*

## சிறுத்தொண்டர் அன்பு

36. செங்கரும் புயர்திருச் செங்காட்டி னமாத்திரர்
சிகாமணி யெனப்பி றந்து
சிவநாமம் வெண்பூதி மணிவேட மகலாது
சேர்ந்தில்ல றத்தி ருந்து

பங்கமில் லாவொரு மகன்றசை யரிந்துணாப்
பயிரவர்க் கன்ன மிட்ட
பண்புள சிறுத்தொண்ட[1] ரன்புபோன் முன்புநின்
பத்தரிற் செய்த துண்டோ

புங்கவர் தொழுந்திருப் பூவணத் தீசனைப்
பொனனினாற் காண மனதாய்
புத்தியி லமைத்தபொன் னனையா ளகத்தின்மெய்
பொருந்துசிவ சித்த ராகி

வங்கமெதிர் நிற்கரச வாதங் கொடுத்தருள்செய்[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: சிறுத்தொண்ட நாயனார்
2 தி. பு.: இரசவாதஞ்செய்த படலம்

**அரும்பொருள்–குறிப்புரை**

திருச்செங்காடு—திருச்செங்காட்டங்குடி, சோழநாட்டு ஊர்
மாத்திரர்—மாமாத்திரர் குலம், மருத்துவத்தொழில்புரியும் மரபினர் என்பர்; மந்திர ஆலோசனைத் தலைவர் என்றும் கூறுவர்
பயிரவர்—சிவபெருமான் பயிரவர் வேடம் புனைந்து வந்தமை: பைராகிவேடம்
பத்தர்—அடியார்
புங்கவர்—வானோர்
பூவணம்—பாண்டிநாட்டில் உள்ள திருப்பூவணம் என்னும் தலம்
பொன்னனையாள்—உருத்திர கணிகை
பொன்னினாற்காண—சிவபெருமான் உருவத்தைப் பொன்னினாற் செய்து காண
சிவசித்தர்—இறைவன் சித்தராய் உருக்கொண்டு வந்தமை

## பதப்பேறு எனக்கு அருள்வது என்று?

37. குன்றருவி பாயுபெரு மலைநாட்டிற் பெருங்கொடுங்
கோளூரி லுற்ப வித்துக்
கொன்றையார் பணிசெய்து வரூறியவ ணான்சடக்
கோலநோக் கியப ணிந்து

மென்றுமற் சனையின்ட னச்சிலம் பொலிகேட்
டிருங்கயிலை பெற்றி ருந்த
வினையிலன் பர்கழறிற் றறிவர்[1]பதப்பே
றெனக்கருள்வ தென்று சொல்லாய்

பன்றியடும் வேடர்போற் றோன்றிநம்மு ளாயிரம்
பரியென்று சுந்த ரேச
பாதசே கரபாண்டி யன்காண வமர்செய்து
பற்றலன் சோழ னோட

மன்றிடை தணிந்திடு கிடங்கில்வீழ்த் தாழ்த்திட்ட[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *கழறிற்றறிவார் புராணம்*
2 தி. பு.: *சோழனை மடுவில் வீட்டிய படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*கொடுங்கோளூர்—சேரநாட்டில் உள்ள ஊர்*
*கழறிற்றறிவர்—யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் உடையவர்; பெருமாக்கோதையார், சேரமான் பெருமான் என்னும் வேறு பெயர்களும் உண்டு.*
*கொன்றையார் பணி—சிவபெருமானுக்குரிய வழிபாட்டுப் பணி*
*வணான் சடக்கோலம்—உவர்மண் மழையால் கரைந்து வண்ணானின் உடல் சிவனடியார் திருநீறு பூசியது போலக் காட்சியளித்தல்*
*அற்சனை—அர்ச்சனை*
*சிலம்பொலி—சிவபூசை முடிவில் சிலம்பொலி கேட்டல்*
*பன்றியடும்வேடர்—சிவபெருமான் வேடர் உருவில் வரல்*
*அமர்—போர்*

## என்மனக்கல்லை உருகச் செயாயோ?

38. துதிபெற்றி டுந்திருத் தோணிபுர வேதராய்த்
தோன்றிவரை யாது நாலு
சுருதியின் மொழிந்தபடி தீமகமி யற்றிவெகு
சுத்தரா யத்தர் பாதக்

கதிபெற்றி டுந்திருப் பணிசெய்தி னிப்பெறாக்
காட்சிபெற் றுய்ந்தி ருந்த
**கணநாத நாயனா**[1] ருளமான வென்மனக்
கல்லையுரு கச்செ யாயோ?

நதிபெற்ற செய்யுளவ னொருவனடி யார்பூசை
நாடோறு நடாத்தி வருநாள்
நதியின்றி மழையின்றி விளைவின்றி யனமின்றி
நலிவுட னிரந்து பணிய

மதிபெற்ற துயரகல வுலவாத **கோட்டையருண்**[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *கண நாத நாயனார்*

2 தி. பு.: *உலவாக் கோட்டை அருளிய படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*தோணிபுரம்—சீகாழிப்பதி*

*நாலுசுருதி—நான்மறை*

*அத்தர் பாதம்—இறையவர் பாதம்*

*கணநாதர்—சிவகணங்களுக்குத் தலைவர், இறைவனின் திருப்பெயரைக் கொண்டவர்*

*செய்யுள்—விளைநிலம்*

*அனமின்றி—அன்னமின்றி*

*உலவாத கோட்டை—உலவாக்கோட்டை; வெண்மையான குறையாத அரிசிக்கோட்டை, அன்னதானம் செய்யச் செய்யக் குறையாத நிலை.*

## குறைவிலாது அருள் செய்குவாய்

39. களந்தைநகர் முதல்வரா யொருகுடையின் வையகங்
காத்தர சளித்து வருநாட்
காலகா லர்க்குரிய திருநாம நாவினாற்
கழறிவெண் பொடிவி டாராய்க்

குழந்தையியல் பாய்த்திரியு மடியார் திருத்தொண்டு
தொண்டா னருள டைந்த
கூத்துவர் செயுந்தொண்டு[1] மாற்றலரி தடிமையாற்
குறைவிலா தருள்செய் குவாய்

அளந்தறியொ ணாததன பதிவணிகன் மருமக[2]
னாளுதற் குள்ள...............ய
...............தத தாயத்தர் வெளவுத லறிந்தறத்
தாறிழுக் காது மன்றில்

வளந்ததன பதியாய் வழக்குரைத் திடவந்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *கூற்றுவ நாயனார்*

2 தி. பு: *மாமனாக வந்து வழக்குரைத்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*களந்தை நகர்—திருக்களந்தை; தொண்டை நாட்டிலுள்ள பொன் விளைந்த களத்தூர்.*

*முதல்வர்—மன்னர்*

*கூத்துவர்—கூற்றுவர்*

*தாயத்தர்—தாயாதிகள்*

*வெளவுதல்—கவர்தல்*

*அறத்தாறிழுக்காது—அறத்திற்கு மாறுபடாது*

*மன்று—வழக்குநடைபெறுமிடம்*

40. மெய்ப்பொருள் விளங்குசிவ ஞானநூல் பலகற்று
மெய்வாய்கண் மூக்கு முதலாம்
விடையத்த வாவிலா தடியவர்க் காளாய
விளம்பும்வாய் மொழியி லொன்றும்
பொய்ப்பொரு ளிலாதான் றாளையே பாடிடப்
புகழ்திருக் கயிலை...............
(8-ஆம் ஏடு முடிவு)

ஏடு ஒன்பது காணவில்லை

குறிப்பு : *8-ஆம் ஏட்டின் இறுதியில் 40-ஆம் பாடலில் முன் பகுதி தான் அமைந்துள்ளது. ஏடு எண் 9 கிடைக்கவில்லை. எனவே 41 முதல் 45 முடிய பாடல்கள் விடுபட்டுள்ளன. 46-ஆம் பாடல் பக்கம் 44 இல் தொடர்கிறது.*

## ஞாலத்துளோர்க்கு வருமோ?

46\. ஒலிதிரைக் காவேரி நாட்டினில் விரிஞ்சியூர்க்
குரியவே ளாளர் மரபுக்
கோங்குபுக ழாளராய்ப் பரமசிவ னடியவரை
யுலகிலுள் ளோரி கழ்ந்தால்

நலிவுற் றுயிர்கருவி யாலவ ரிகழ்ந்திட்ட
நாவையிரண் டாய றுத்து
நம்பர்கழல் சேர்ந்தசத் தியநாய னார்[1]சத்தி
ஞாலத்து ளோர்க்கு வருமோ

பொலிவுபெறு பன்றியின் குருளைபன் னிரண்டையும்[2]
பூவுலகில் மைந்த ராக்கிப்
புந்தியறி கல்வியுஞ் சிந்தைநிய மங்களும்
பொற்பும்விற் பனமும் வாய்ப்ப

மலிபுகழின் வழுதிக்கு மந்திரிக ளாய்வைத்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *சத்தி நாயனார்*
2 தி. பு: *பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*நலிவுற்று—துன்பமுற்று*
*நம்பர்—கடவுள், சிவன்*
*கழல்—திருவடி*
*குருளை—குட்டி*
*புந்தி—புத்தி*
*பொற்பு—அழகு, தன்மை*
*நியமம்—வழிபாட்டுமுறை*
*விற்பனம்—வித்தை, கல்வி, அறிவு, விவேகம்*

## சேக்கை எனது ஆக்கை பெறுமோ?

47. பல்லவர் குலத்திலே தோன்றிமிகு சைவநெறி
பாலிப்ப வரச ளித்துப்
பரனால யங்கடொறு மடிபணிந் தோரோர்வெண்
பாக்கவிதை பாடி யன்பாய்த்
தில்லையில் வணங்கித் திருப்பணிசெய் தடியவர்கள்
சேகரத் துடனி ருந்த
செய்யகோ லையடிகள் காடவர்கோ னாயனார்[1]
சேக்கையென தாக்கை பெறுமோ?
நல்லவர் குழுஉக்கொண்ட சகுனபாண் டியராச
நாளையிற் சீட ருக்கோர்
நற்குரு வுரைத்தமொழி யுட்கொரு கருக்குருவி[2]
நாள்மூன்று பூசை செய்ய
வல்லவர் பெறுஞ்சத்திய ஞானமுப தேசித்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *ஐயடிகள் காடவர்கோன் நாயனார்*

2 தி. பு.: *கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*பரன்—சிவபெருமான்*

*சேக்கை—உடல், கூடு*

*சேகரம்—கூட்டம்*

*சகுனபாண்டியன்—சுகுணபாண்டியன்*

*கருக்குருவி—கரிக்குருவி*

*ஞான உபதேசம்—முன்னாளில் மார்க்கண்டேய முனிவருக்கு மரணத்தையொழித்து நித்தியத்துவத்தைக் கொடுத்த மிருத்தியுஞ்சய மந்திரம்*

## என் சென்மம் சாபல்லியமாமோ?

48. கனல்விளக் காய்ப்புல் லெரித்ததுவு மில்லாது
கருமுடி யெரித்த வேழூர்க்
கணம்புல்ல ரென்னவும்[1] பூசுர ரெனத்திருக்
கடவூரி லேபி றந்து

தினமுநற் கோவைபா டிப்பொருளை வாங்கிச்
சிவாலயஞ் செய்து கயிலை
சேர்ந்தகா ரியர்போல வும்[2]பணி செயாதவென்
சென்மசா பல்லிய மாமோ?

இனமகல வேதனித் தரியபொற் றாமரையி
லிரைகருதி வந்தி ருந்த
விறைவர்திரு விளையாடல் மொழிபேசு வார்கள்பால்
இன்பமாய்க் கேட்டி ருந்த

வனமுலவு நாரைக்கு முத்திவீ டருள்செய்த[3]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: கணம்புல்ல நாயனார்,* 2 *காரி நாயனார்*
3 *தி. பு.: நாரைக்கு முத்திகொடுத்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*வேழூர்—வேளூர், இருக்குவேளூர்*
*சாபல்யம்—பேறு, பயனுள்ளதாதல்*
*இனமகலவே—நாரைக்கூட்டங்களினின்றும் பிரிந்துவந்தமை*
*வனம்—அழகு*

குறிப்பு: *இப்பாடலில் இரு பெரியபுராணத்தினின்றும் இருகதைகள் எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## குறை கழல் அடுப்பது எந்நாள்?

49. செடித்தலை சமணெறிக் குள்ளாய வருணந்திநற்
றேவியாற் புகலி வேந்தர்
சேவடி யடைந்தநெடு மாறனெனவும்[1] பெருஞ்
செல்வமிகு தொண்டை நாட்டிற்

குடித்தலைவர் வாழுமயி லாபுரியில் வேளாண்
குலத்தினி லுதித்த கத்திற்
கோயிலா யற்சித்த வாயிலா ரென்னவுங்[2]
குறைகழ லடுப்ப தெந்நாள்?

முடித்தலை யுடன்பரவு சீர்த்திபூ டணபாண்டியன்
முன்கூட லெல்லை யறிய
மொழிசித்தர் வடிவாய ணிந்தபாம் பாற்றிசையை
முழுதினு மளந்து காட்டி

வடித்தலை யெயிற்றால வாயென்று பெயர்வைத்த[3]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம்*
2 பெ. பு.: *வாயிலார் புராணம்*
3 தி. பு. *திருவாலவாயான படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*செடித்தலை—இழிவுமிக்க, தீமைமிக்க*
*சமண் நெறி—சமண சமயம்*
*சேவடி—திருவடி*
*மயிலாபுரி—மயிலாப்பூர்*
*அகத்தில் கோயிலாய்—மனத்தகத்தே கோயில் அமைத்த*
*அற்சித்த—அருச்சித்த, வழிபாடாற்றிய*
*குறைகழலடுப்பது—இன்றியமையாத திருவடியில் பொருந்துவது*
*சித்தர்—சிவபெருமான் அரைஞாண், கௌபீனம், பூணூல், சன்னவீரம் குண்டலம், பாதகிங்கிணி, கங்கணம் என்பவற்றையெல்லாம் பாம்பினாலே தரித்து ஒரு சித்தராய் எழுந்தருளல்*

## தீர்க்க நிலை மார்க்கமறியேன்

50. நேர்ந்தவர் புரந்தரச் சமர்செய்தவர் நிதிவௌவி
நித்தியமன தான மிட்ட
நீதர்திரு நீடூர்வே ளாளர்முலை யடுவார்நன்
நியதியென வுந்தன் மனைவி

தேர்ந்தறி விலாதல ரெடுத்துமோந் திடுகையைச்
சீறிவா ளாற்ற றித்துச்
சிவன்கா லடைந்தவர் கழற்சிங்க ரென்னவும்[1]
தீர்க்கநிலை மார்க்க மறியேன்

சார்ந்தபடி பணிந்தவங் கியசேக ரர்க்கொடு
சகாயராய் வேடராகித்
தானசுந்த ரேசனென் றம்பிலெழு திச்சோழர்[2]
தானையில் விழும்ப டிக்கு

வார்ந்தொழுகு மழைமாரி யாய்வில்லி னாலெய்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *கழற்சிங்க நாயனார்*
2 தி. பு.: *சுந்தரப் பேரம் செய்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*நீதர்—நன்னெறியுடையவர்*
*அலர்—மலர்*
*மோந்திடுகை—மணம் நுகர்ந்தமை*
*தறித்து—வெட்டி*
*தீர்க்கநிலை—தெளிவு*
*மார்க்கம்—வழி*
*சகாயர்—துணைசெய்பவர்*
*தானை—படை*
*வேடராகி—சிவபெருமான் வேடம் புனைந்து சேனாதிபதியாய் வரல்*
*அம்பில் எழுதி—அம்பில் 'சுந்தரேசர்' என எழுதி எய்துதல்*
*மழை மாரி—வில் மழைபெய்து அழித்தல்*

## என் அன்பு பதியாதது என்னோ?

51. பத்தருக் காகநெற் கூடுவெளவி யதுகண்டு
பண்டார மீய்ந்த வர்கொடும்
பாழூரி ரவிகுலத் தரசிடங் கழியார்
பகுத்தறிவு போலு முமையாள்

அத்தருக் கணிமலர் மணாங்கொண்ட மூக்கினை
யறுத்தவே ளாளர் திலகர்
அரியதஞ் சாவூர்ச்செ ருத்துணையர்[1] போலுமென்
னன்புபதி யாத தென்னோ

நத்தணி கரன்சுதன் சாபமொழி யால்வந்த
நாற்பத்தெண் ணாவ லர்க்கு
மாரச்செண் பகமாற னாளில்சங் கப்பலகை[2]
நாடறிய வேகொ டுத்துன்

மத்தரா யவர்களுட னொருபுலவ ராயுற்ற
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**திரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *செருத்துணை நாயனார்*

2 தி. பு.: *சங்கப் பலகை தந்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*பத்தர்—பக்தர்*

*வெளவி—கொள்ளையிட்டு*

*அத்தன்—கடவுள்*

*சுதன்—பிரம்மா*

*சாபமொழி—பிரும்மதேவனுடைய சாபத்தினால் கலைமகளின் நாற்பத்தெட்டு எழுத்துக்கள் பூவுலகத்தில் புலவர்களாய் அவதரித்தல்*

*உன்மத்தம்—மனமயக்கம்*

## வேண்டினேன்! இரங்காய்

52. செக்கர்வா னீசுரர்க் கபிடேக மாகையிற்
றேகபில மற்ற யர்ந்து
திருமஞ்ச னக்குடந் தவறிமுடி மேல்விழத்
திருவுள மிரங்கி நிதமு

மிக்கர்பொன் னருள்வாங்கி யரனடி சேர்ந்த
வேதர்செரு வில்லி புத்தூர்
மேவிய புகழ்த்துணைவ[1] ருக்குள மிரங்கல்போல்
வேண்டினே னுக்கி ரங்காய்

இக்கலி யுகத்தாதி சைவனொரு தருமிவந்
திணையடி பணிந்தி ரப்ப
வியலிசைத் தமிழினாற் சங்கனா வலறிந்
தின்பமள வின்றி யேமே

வக்கவி கொடுத்துரிய பொற்கிழி கொடுத்தருள்செய்[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**திருபுராண விளக்கம்**

1 பெ. பு.: *புகழ்த்துணை நாயனார்*

2 தி. பு. : *தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*பிலமற்ற—பலமற்ற*

*திருமஞ்சனக்குடம்—அபிடேகக்குடம்*

*அரனடி—சிவபெருமானடி*

*வேதர்—முதல் நூல்களில் வல்லுநர், மறைவல்லுநர்*

*பொற்கிழி—பொன்முடிப்பு*

## நெஞ்சுரம் கொஞ்சமலவே!

53. குறைமதிச் சடிலேசர் பூசைக்கு வைத்தநெற்
கூடுமுழு துங்க ரந்து
கூடியன முண்டசுற் றத்தையெல் லாநெடிய
கூர்வாளி னால றுத்து

நிறைதனப் பாலுண்ட குழவியையும் வாளின்மேல்
நேரிட் டிரண்டு செய்த
நிதிபெருகு சோணாட்டு வேளாளர் கோட்புலர்[1]
நெஞ்சுரங் கொஞ்ச மலவே

இறைகவிதை குற்றமென் றாணவத் தாலன்
றியம்புமொரு கீரன் வீழ
வேமமுண்ட கமலரும் வாவினியில் வீழ்த்திட்
டிரந்ததமிழ் நாவ லர்க்காய்

மறைபரவ வியல்பினொடு கரையேற்றி விட்டதொரு[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**திரு புராண விளக்கம்**

1 பெ. பு: கோட்புல நாயனார்
2 தி. பு: கீரனைக் கரையேற்றிய படலம்

**அரும்பொருள்-குறிப்புரை**

*குறைமதி—பிறைச்சந்திரன்*
*அனமுண்ட—அன்னமுண்ட*
*இறைகவிதை—இறைவனருளிய பாடல்*
*நெஞ்சுரம்—மனஉறுதி*
*வாவி—குளம்*
*நாவலர்—புலவர்*
*மறை—வேதம்*

## என்னையும் பத்தனென்று செய்குவாய்

54. ஈசன்மே லன்பர்மே லுள்ளன்பு மியாவர்க்கு
மின்சொலுஞ் சிவபூ சையு
மேற்றசிவ கதைகேட்கி லங்கங் குலுக்கலு
மிருகணாற் றாரை விடலும்

பாசமுறு தேகத்து ரோமஞ் சிலிர்த்தலும்
பசுபதி விருப்ப முறவே
பத்தராய்ப் பணிசெய்கு வார்[1]குழாத் தென்னையும்
பத்தனென் றொன்று செய்குவாய்

பூசனை செய்வோர்க் குளமிரங்கு பொருளினாற்
புன்சொலறி கீர னுக்குப்
பொதிகைவளர் கும்பமுனி யாலெழுத் துச்சொலின்[2]
பொருளலங் கார மைந்தா

மாசற விலக்கணத் தொகுதியுப தேசித்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: பத்தராய்ப்பணிகுவார்*

2 *தி. பு.: கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*அங்கங்குலுக்கல்—மேனி சிலிர்த்தல்*

*இருகணாற்றாரைவிடல்—இருகண்களால் கண்ணீர் சொரிதல்*

*பத்தன்—பக்தன்*

*கும்பமுனி—அகத்தியமுனி*

*இலக்கணத்தொகுதி—ஐந்திலக்கணங்கள்*

## நான் பெறுவது என்று சொல்லாய்?

55. தேசிகம் வடகலை யிரண்டுதென் றமிழொன்று
சேர்ந்தவிம் மூன்று மொன்றாய்ச்
செப்புபொரு ளாய்நின்ற பரமனையே பாடுவோர்
செய்கையென வுந்து லங்கு

நாசிநுனி நோக்கிநா தாந்தமொரு தாரணையை
நத்திச் சிவத்த டைந்து
நண்ணுசித் தத்தைச்சிவன் கண்வைத் தவரெனவு[1]
நான்பெறுவ தென்று சொல்லாய்

பேசியறி யாதவா யூமனொரு வணிகனாய்
பெருமைபெறு சங்க வாணர்
பேதமை மனத்துறு கலக்கந் தவிர்த்த[2]நற்
பிஞ்சகன் செங்கண் விடையே

வாசியென நடவிவரு காசினியெல் லாநிறையு
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்*
2 தி. பு.: *சங்கத்தார் கலகந்தீர்த்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*தேசிகம்—அழகு*
*வடகலை—வடமொழி, வைணவப் பிரிவினர்*
*நாதாந்தம்—ஞானநெறிகளில் ஒன்று; தாரணை அட்டாங்கயோகத்தினுள் ஒன்று*
*நத்தி—விரும்பி*
*ஊமன்—ஊமை*
*சங்கவாணர்—சங்கப்புலவர்கள்*
*பேதமை—பேதைமை, அறிவின்மை*
*பிஞ்சகன்—சிவன்*
*விடை—இடபம்*
*காசினி—உலகம்*

## வருவதெந்நாள்?

56. வெள்ளியங் கயிலையிற் செல்வரைக் காத்திடு
மென்சிவ கணங்க ளாக
மேவுதிரு வாரூர்பி றந்தவர்கள்[1] போலவும்
விதிமுறையின் வழுவி லாமல்

உள்ளிய மனத்தன்பி னான்மூன்று காலமு
முச்சிதத் தர்ச்ச னைசெயு
முயர்சைவர் முப்பொழுது திருமேனி தீண்டுவார்[2]
உருவெனவும் வருவ தென்னாள்

தெள்ளிய தமிட்கவிதை சொல்லிடைக் காடனைத்[3]
தென்னவ னெனுங்கு லேசன்
சிந்தையி லிகழ்ந்ததால் வந்தவ னிரந்திடச்
செவிமடுத் தன்பி னுடனே

வள்ளியையு மீனாட்சி யோடுமவன் பின்போன
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு: *திருவாரூர்ப்பிறந்தார்*
2 பெ. பு: *முப்போதும் திருமேனி தீண்டுவார்*
3 தி. பு: *இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*வருவதென்னாள்—வருவது எந்நாள்*
*உச்சிதம்—மேன்மை*
*தெள்ளிய—சிறந்த*
*குலேசன் — குலேசபாண்டியன்*
*சிந்தையிலிகழ்தல்—இடைக்காடரின் பாடலை மன்னன் செருக்குடன் போற்றாதிருத்தல்*
*இரந்திட—வேண்டுதலைச்செய்ய*

## இயைந்து இடுவது எந்நாள்?

57. சுருதிமொழி கற்பமனு கற்பமுப கற்பமாய்ச்
சொல்லுமிம் மூன்று வகையிற்
சுத்தரிதை யம்போல வெளுத்ததிரு நீற்றினைத்
தொடுமுச்சி நெத்தி நெஞ்சு
கருதியிடு மகடுமுட் டிருகையின் களமிதிற்
காட்சிபெற வேய ணிந்து
கதிபெறும் பெரியமுழு நீறுபூ சியமுனிவர்[1]
கணத்(தியைந்)திடுவ தென்னாள்
ஒருதிமண வேட்கையாற் பரதவ குருக்கொண்
டொலிக்குமலை கடலை யெல்லா
முழக்கிக் கலக்கி..............மீன் வடிவாக
வுற்றகண நந்தி தன்னை
வருதியென வெதிர்வந்து வலைவீசி நின்றதொரு[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**திரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *முழுநீறு பூசிய முனிவர்*
2 தி. பு.: *வலை வீசின படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*சுருதி மொழி கற்பம்—பசுவின் சாணத்தைக் கையிலேற்று ஆகம முறைப்படி உண்டாக்கப்பெற்ற திருநீறு*
*அனுகற்பம்—அநுகற்பம்*
*உபகற்பம்—காட்டுத்தீ முதலியவற்றால் வெந்த சாம்பலைக் கொண்டு முறைப்படி அமைத்த திருநீறு*
*சுத்தரிதையம்—இதயம்*
*நெத்தி—நெற்றி*
*கதிபெறும்—பேரின்பம் பெறும்*
*மணவேட்கை—உமாதேவியை (பரத்துவராசனின் மகளை) மணக்கும் விருப்பம்*
*பரதவர்—பரதவர் வேடம் புனைந்த சிவபெருமான்*
*மீன் வடிவுற்ற கணநந்தி—நந்திதேவர் சுறாமீன் வடிவம் பெற்றுக் கடலில் இருத்தல்*

## அடிமை யான் உய்வது உளதோ?

58. இன்பமுறு மூவேந்தர் தமிழ்வழங் கியநாட்டி
னெல்லையி னடங்கா தநாட்
டிறைவனடி சேர்ந்தமுதி யோருமவ ரன்றியவ்
வீரடிக் குரிய ரான

அன்புடைய தொண்டர்கா லத்துமுன் னும்பின்னு
மரிதான தவசு செய்து
மப்பாலு மடிசார்ந்த நாயன்மா ரும்[1]போல
வடிமையா னுய்வ துளதோ

துன்பகல வேவரு ஞானோப தேசராய்த்
தோன்றிவடி வாகிய பெருந்
துறையிற் குருந்தடி ஞானோப தத்தமிழ்த்
துறையரி மருத்த னான

மன்புகழும் வாதவூ ரடிகளுக் குரைசொன்ன[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *அப்பாலும் அடிச்சார்ந்தார்*
2 தி. பு.: *திருவாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*மூவேந்தர் தமிழ் வழங்கிய:* *திருத்தொண்டர் புராணத்திலும் 'மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கப்பால் முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோர்' என்று வருவதையும் ஒப்பிட்டுப்பார்க்க. 'நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்' என்னும் தொண்டர் புராணத் தொடர் 'அன்புடைய தொண்டர் காலத்து முன்னும் பின்னும்' என வருவது காண்க.*

*ஞானோபதேசர்—சிவபெருமான்*

*அரிமருத்தன்—அரிமருத்தன பாண்டியன்*

## அணுவளவும் மனம் எண்ணாதோ?

59. ஒழுக்கமர் புயர்தொண்டை நாட்டினிற் புகழ்நின்ற
ஷூர்ப்பிரம வங்கி ஷத்தி
லுற்பத்தி யாய்க்கமழ் விபூதிகண் டிகையணிந்
துள்ளத்தில் வைக லுநினைந்

தழுக்கல வங்கணர்க் காலயஞ் செய்துகுட
வவிடேக முஞ்செய் தன்பா
யடிநிழலி லேசேர்ந்த பூசலார்[1]போற்கணமு
மணுவளவு மனமெண் ணாதோ

குழுக்கொடு திரிந்திடுங் காட்டுநரி யானையுங்
கூட்டித் திரட்டி யேறுங்
குதிரையாய்க் கொண்டது[2] னிலக்கணஞ் சுழிசாதி
குற்றம் பிறந்த தேசம்

மழுக்கையிற் கோல்கொண்டு சுட்டிவகை வகைசொன்ன
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *பூசலார் நாயனார்*
2 தி. பு.: *நரிபரியாக்கிய படலம்*

**அரும்பொருள்—குறிப்புரை**

*கண்டிகை—உருத்திராக்கமாலை*
*வைகலும்—நாள்தோறும்*
*அங்கணர்—சிவபெருமான்*
*குடவவிடேகம்—திருமுழுக்கு*
*மழு—சிவன் ஆயுதத்துளொன்று*
*வகை வகை சொன்ன—குதிரை வீரராயிருந்த இறைவன் பாண்டியனுக்குக் குதிரைகளைத் தருமுன்னர் அவைகளின் சாதிபேதங்கள் இன்ன இன்ன என்றும் அவைகள் எட்டு வயசின என்றும் நல்லிலக்கணம் பொருந்தியன என்றும் விளக்கிச் சொன்னார்.*

## சென்மகதி யாவர் பெறுவார்?

60. கொல்லிவள வன்பெற்ற புதல்வியாய் நெடுமாறர்
கொண்டநற் றேவி யாய்க்
குலச்சிறை தொழுந்தெய்வ மாய்ப்புகலி வேந்தரிரு
குறைகழற் கன்புரு வமாய்ச்

செல்லிற்றேவ மனிதருக் கோர்விளக் காய்ச்சைவ
தேசிக சிகாரத் தினமாய்த்
தென்கயிலை வாழ்வுபெறு மங்கையர்க் கரசிபோற்[1]
சென்மகதி யாவர் பெறுவார்

சொல்லியலின் மாணிக்க வாசகர் மகிழ்ந்திடத்
தோன்றும்வாம் பரியை யெல்லாஞ்
சுத்தநரி யாய்க்கான[2] கத்தில்விட் டக்கணந்
தூயவையை நதிய ழைத்த

வல்லிமலை மகளான செல்லியொரு பால்வைத்த
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 *பெ. பு.: மங்கையர்க்கரசியார் புராணம்*

2 *தி. பு.: பரிநரியாக்கிய படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*வளவன்—சோழன்*

*நெடுமாறர்—நின்றசீர் நெடுமாறன்*

*சென்மகதி—வீடுபேறு; பேரின்பம்*

*வல்லி—இளம்பெண்*

*மலைமகள்—பார்வதி*

*சிகாரத்தினம்—சிகாமணி; முதன்மையானவன்*

## பேறு அடிமை பெறுவது எந்நாள்?

61. வேணிச் சிவன்கழலில் வைத்தசிவ சிந்தையும்
வெண்பொடி யணிந்த மெய்யு
மிக்கபஞ் சாக்கர தியானமு மடியார்க்கு
வேண்டுமுடை கீழ்க்கோ வணம்

பேணிக் கொடுத்திடும் பணிவிடையு மேசெய்து
பிறவிநெறி....................வாகாம
பீலிநகர் வாழ்குலச் சாலியரி னேசர்போற்[1]
பேறடிமை பெறுவ தெந்நாள்

பாணிக் கிவந்ததொரு கோட்டு.....................
.....................சைசும் மாடும்
பார்த்தவ ரிரங்கிடக் கொண....குதி யாய்நின்று
பரதவித் திட்ட பிட்டு

வாணிச்சி[2]யா ......................................
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *நேச நாயனார்*
2 தி. பு.: *மண்சுமந்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*வேணி—சடை*
*பஞ்சாக்கர தியானம்—நமச்சிவாய*
*பீலி நகர்—காம்பீலி நகர், ' ஹம்பி என்னும் விஜயநகரத்திற்கருகில் உள்ளது என்பர். பல்லாரி மாவட்டத்தில் காம்பிலி நகர் உள்ளது என்றும் கூறுவர்.*
*பிட்டுவாணிச்சி—பிட்டு வியாபாரம் செய்பவள்*
*சும்மாடு—சுமை வைப்பதற்குப் பயன்படுவது.*

## நன்மை வருமோ?

62. ........................ரு சிலம்பிவெண் ணாவலடி
மீசற்கு மேற்கட் டியிட்
டிருபதம் வணங்கிமறு செனனத்தி லுலகாளு
மிறைவனென வந்து...............த்

தழைத்திடு மலர்கொன்றை யார்க்காலலை யஞ்செய்து
சாயுச்சிய பதவி பெற்ற
சாற்றுசெங் கட்சோழ னென்று[1]பெயர் பெற்றிருந்
தன்மைபோல் நன்மை வருமோ

வழைத்துமறை ஞானசம் பந்தராற் பாயரடை
யமணருடன் வாது கூறி
அக்கினியி லப்பிலிட் டெழுதுதிரு முறையெடுத்
தாலவாய் நீறு கொண்டு

மழைத்தடங் கைவழுதி கூனொடு சுரந்தீர்த்த[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *கோச்செங்கோட் சோழ நாயனார்*
2 தி. பு.: *பாண்டியன் சுரந்தீர்த்த படலம்*

**அரும்பொருள்-குறிப்புரை**

*மறுசெனனம்—மறுபிறப்பு; சிலந்தி தான் புரிந்த சிவத்தொண்டினால் மறுபிறப்பில் சோழமன்னரின் குலத்தில் கோச்செங் கண்ணனாகப் பிறத்தல்*
*சாயுச்சிய பதவி—இறைவனோடு ஒன்றியிருக்கும் பேறு*
*வழைத்து—வழை, இளமை, புதுமை*
*அமணர்—சமணர்*
*வாது—தருக்கம்*
*அக்கினி—நெருப்பு*
*கூனொடுசுரந்தீர்த்தல்—கூன்பாண்டியமன்னனின் வெப்பு நோயையும், கூனையும் நீக்கியமை*

## சிறியனான் முடிவுறாதே!

63. கைவிரலி னேழிசை பிறக்கமக ரத்தலைக்
கருவியாழ் தாங்கி நின்று
காலகாலன் செய்புகழ் கீர்த்தியைப் பாடியொளிர்
காஞ்சனப் பலகை பெற்றுச்

செய்விரவு மாரூர் முதற்றலமெ லாங்கண்டு
தெரிசித்து முத்தி பெற்ற
திருநீலகண்டயாழ்ப் பாணர்போல்[1] வல்லமை
சிறியனான் முடிவு றாதே

பொய்விரவு பொருளத்தி நாத்தியெனு மந்திரமும்
புன்மையாய் மயிற்பீ லியும்
புனல்வைத்த கரகமு முடுத்தபா யுந்தரைப்
புழுதியினில் வீழ்ந்து ருளவே

மைவிரவு தேகச் சமணரைக் கழுவிலிட்ட[2]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்*

2 தி. பு.: *சமணரைக் கழுவேற்றிய படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*மகரத்தலைக் கருவியாழ்—மகரயாழ், சுறாவடிவில் அமைந்தது; நால்வகையாழினுள் ஒன்று*

*காலகாலன்—சிவபெருமான்*

*காஞ்சனப்பலகை—பொற்பலகை*

*செய்விரவும்—வயல்கள் மிகுந்த*

*தெரிசித்து—தரிசித்து, வழிபாடாற்றி*

*அத்திநாத்தி—உண்டு இல்லை எனும் வாதம்*

## தம்பம் இனி நின்பதமையா!

64. கொன்னியுங் குழறியுந் துதிசெய்த போர்க்கடிக்
கோகனக மலர ளிக்குங்
கூத்தனைப் பாடியிர வேவலா ளாய்வேலை
கொண்டசுந் தரரை யீன்ற

தன்னிகரில் தந்தைதாய் சடையரி[1]சை ஞானியார்[2]
தங்கள்போற் பேறு வேண்டிற்
றனையனப் படிபெற்ற பேரலாற் கிட்டுமோ
தம்பமினி நின்பத மையா

பொன்னின்வணி கன்குலக் கன்னிதமிழ்ச் சொல்வந்த
புருடனை மணத்தல் கண்டு
பொறாமைவழி சொன்னமா றாண்மன மிசைந்திடப்
புதுமணச் சாட்சி யாக

வன்னியுங் கிணறும்லிங் கமும்வர வழைத்திட்ட[3]
மதுரையா னுதவு புதல்வா
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே.

முற்றும்.

---

**இரு புராண விளக்கம்**

1 பெ. பு.: *சடையநாயனார்*
2 தி. பு.: *இசை ஞானியார்*
3 தி. பு.: *வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்*

**அரும்பொருள்–குறிப்புரை**

*கொன்னியும் குழறியும்—திருத்தமுறப் பேசாமை, கொன்னிப் பேசுதல், திக்கிப்பேசுதல், குழறிப் பேசுதல், தடுமாறிப்பேசுதல்*
*கோகனக மலர்—செந்தாமரை மலர்*
*ஏவலாளாய் வேலை கொண்ட—சுந்தரரைத் தூதுசெல்லும் பணியாளராய் வேலை கொண்டமை*
*தம்பம்—பற்றுக்கோடு*
*மாற்றாள்—மூத்தவள்*
*வன்னி—வன்னிமரம்*

# இருபுராண விருத்தமாலை

65. ஆரூரர் சொன்னதொண் டத்தொகையு முன்னம்பி
யாண்டார்சொ லந்தா தியு
மாதியாய்ச் சொன்னபடி பத்தர்கள் விலாசமென்
றாக்கியசொக் களரும் வாழி

பாரூரர் புகழ்கின்ற விறைவர்திரு விளையாடல்
பார்த்துவட நூல்ப யின்ற
படிபைந் தமிழ்த்தொடை விருத்தமுண் டாக்கிய
பரஞ்சோதி யாரும் வாழி

யேரூர் வனப்பரிவர் சொன்னநூ லிரண்டையுமிச்
செகமெலாம் விளங்க...............
....................வேல வன்றுதி யெனத்துதித்
தேழையான் குழறி வைத்த

சீரூரு மிருபுரா ணவிருத்த மாலையைச்
சேர்த்தேட்டி லெழு தினவரும்
சொன்ன வருஞ்செவி மடுத்தவரும் நீடூழி
சென்மகதி வாழி தானே.

இருபுராண விருத்தம் முற்றிற்று.

---

**அரும்பொருள்-குறிப்புரை**

*தொண்டைத்தொகை—சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டர் தொகை.*

*அந்தாதி—நம்பியாண்டார்நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி*

*பைந்தமிழ்த்தொடை விருத்தம்—பரஞ்சோதிமுனிவர் அருளிய திருவிளையாடல் புராணம்*

*சென்மகதி—பேரின்பம்*

# இருபுராண விருத்தம்

## சொல்லடைவு

(எண் : பக்கங்கள்)


அக்கினி 60
அங்கங்குலுக்கல் 52
அங்கணர் 57
அங்கதம் 20
அசணம் 38
அஞ்செழுத்து 4, 36, 38
அட்டமாசித்தி 36
அடல் 16
அடிமை 4, 10, 18
அடிமை நெஞ்சம் 26
அடியவர்க்கமுது 28
அடியார் பூசை 41
அடைவி 6
அண்டம் 3
அண்டர் 7, 14
அணுவளவு 4
அத்தன் 49
அத்திநாத்தி 61
அதிசூரன் 12
அதிபர் 33
அந்தகன் 35
அந்தணர் 14, 30
அந்தரம் 36
அந்தாதி 27
அப்பாலும் அடிசார்ந்த நாயன்மார் 56
அப்பூதியடிகள் 28
அப்போத முனிவர் 28
அபிடேகப்பாண்டியன் 24
அபிடேகம் 50
அம்பர் 36
அம்பு 31, 48
அமணர் 30, 60
அமர் 40
அமர் நீதியார் 10
அயன் 14
அர்ச்சனை 40, 54
அரவு 31, 33
அரன் அடி 50
அரிமருத்தன் 56
அரிவாட்டாய நாயனார் 16
அருச்சனை 29
அருள் நந்தி 47
அலங்கல் 5, 11,
அலர் 11
அலரி ஒளி 34
அவுணர் 31
அழலை விழி 26
அறத்தாறு 42
அறநெறி 33
அறுசுவை 36
அறுதொழில் 4
அன்னதானம் 47
அனுகற்பம் 55
ஆக்கூர் 38
ஆக்கை 45
ஆகுலம் 28
ஆகூலம் 7
ஆதனூர் 21
ஆயர் 33
ஆயர் குலம் 17
ஆரணர் 19
ஆலயம் 45, 59
ஆலவாய் 47
ஆவினம் 33
ஆனந்த வீடு 28
ஆனாய நாயனார் 17
இசை ஞானியார் 62
இடபக்குறி 37
இடைக்காடன் 54
இந்திரன் 17
இபப்பிள்ளை 3

இயக்கி 36
இயல் இசைத்தமிழ் 50
இயற் பகை 6
இரட்டை மணிமாலை 27
இருபுராண விருத்தம் 3
இரை 46
இல்லறம் 39
இலக்கணத் தொகுதி 52
இலச்சினை 37
இளமை 5
இளையான் குடி 7
இறை கவிதை 51
இறைவர் 46
இன்சொல் 52
இன்பம் 46
இன்னிசைத் துணைவி 6
இனம் 46
ஈழக்குலம் 12
உக்கிர குமார பாண்டியன் 16
உக்கிரகுமாரன் 14
உச்சிதம் 54
உடுப்பூர் 13
உதிரவலி 21
உபகற்பம் 55
உமையாள் 49
உயர்சைவர் 54
உருத்திர பசுபதி 20
உருத்திர மந்திரம் 20
உருத்திரன் 4
உலவாத கோட்டை 41
உள்ளன்பு 22
உன்மத்தர் 49
ஊட்டி 16
ஊமன் 23, 53
ஊன் அமுது 13
எயினன் 12
எழில் 14
எழுகடல் 12
எழுத்து 52
என்னளவு 6
எறிபத்தர் 11
ஏகாலிகுடி 22
ஏட்டில் எழுதினவர் 63
ஏழை 12
ஏனாதி நாதர் 12
ஐந்தெழுத்து 19
ஓதனம் 36
ஓமகுண்டம் 32
ஓமத்தீ 31
கஞ்ச மலர் 35
கஞ்சனூர் 15
கண்டிகை 57
கண்ணப்பர் 13
கண்மணி 24
கணநாத நாயனார் 41
கந்தை 10
கபிலை 32
கயிலை 40, 46
கயிறு 34
கரிக்குருவி 45
கரும்பு 24
கருமி 17
கருமுகில் 22
கறைகண்ட 16
கல்நெஞ்சம் 17
கல்யானை 24
கல்வி 44
கல்வி நெறி 17
கலிக்காமர் 32
கலியுகம் 50
கவிதை 45
கழல் 44
கழற்சிங்கர் 47
கழறிற்றறிவார் 40
களந்தை நகர் 42
களிறு 5
கற்பகநிழல் 4
கறைமிடறு 6
கன்னியர் 27
கனகவரை 18
கனநந்தி 55
கனம் புல்லர் 46
கனல் விளக்கு 46
காகங் கவிழ்த்த நதி 14
காகம் 38
காஞ்சனப் புலகை 61

காஞ்சி 22
காஞ்சி வளவன் 37
காடவர்கோன் 45
காதலர் 12
காந்தநிதி 18
காந்திமதி 15
காம்பு 18
காரி நாயனார் 46
காரைக்காலம்மையார் 27
காலகாலர் 42
காலகாலன் 61
காளகண்டர் 22
காளை 26
கிணறு 62
கிரிநதி 38
கிரியை 18, 19
கிருபை 13
கிழவன் 26
கீரன் 51
குங்குலியக்கலய நாயனார் 14
குடவவிடேகம் 57
குண்டோதரர் 10
குதிரை 57
குந்தி 44
கும்பமுனி 52
குருளை 44
குலக்கொழுந்து 18
குலச்சிறையார் 25
குலசேகரன் 6
குலாலர்குடி 5
குலேசன் 54
குலோத்துங்க வழுதி 28
குழந்தை 42
குழலைநிகர் மொழி 26
குழவி 14, 26, 51
குறளன் 11
குறும்பர் 26
கூகை 23
கூடல் நகர் 35
கூத்தன் 62
கூர்மை 30
கூர்வாள் 51
கூற்றுவன் 42
கேள்வர் 13
கொக்களம் 29
கொங்கர் 28
கொடியாடும் மாடம் 34
கொடுங்கோளூர் 40
கொல்லி வளவன் 58
கொள்கை நெறி 10
கொன்றையார் பணி 40
கோட்புலர் 51
கோடாலி 9
கோரோசனை 21
கோவணம் 10
கோவை 46
கௌதமர் 12
சகாயர் 48
சங்கப்பலகை 49
சங்கவாணர் 53
சடக்கோலம் 40
சடிலேசர் பூசை 51
சடையர் 62
சண்டேசுரர் 23
சத்தியஞானம் 45
சத்திய நாயனார் 44
சமண் நெறி 47
சமணர் 25, 31, 32, 61
சமய நெறி 37
சரணங்கள் 3
சராசரங்கள் 14
சரியை 18
சாக்கிய நாயனார் 37
சாந்தமங்கைப்பதி 29
சாத்தனூர் 33
சாபம் 5
சாப மொழி 35, 49
சாபல்லியம் 46
சிகாமணி 39
சிகாரத்தினம் 58
சித்தத்தை சிவன்கண் வைத்தவர் 53
சித்தம் 11, 30
சித்தர் 23, 47
சித்தி 38
சிந்தை 25, 36, 54

சிரம் 22
சிலம்பி 29
சிலம்பொலி 40
சிவகணங்கள் 33, 54
சிவகணம் 8
சிவகதை 52
சிவகாமி ஆண்டாள் 1
சிவசித்தர் 39
சிவசிந்தை 59
சிவஞான நூல் 43
சிவதொண்டர் 34
சிவநாடு 26
சிவநாமம் 39
சிவபதம் 36
சிவபுண்ணியத்தர் 17
சிவபூசை 52
சிவயோகம் 33
சிவவேடர் 25
சிவன் கழல் 59
சிவன் திரு எழுத்து 17
சிறப்புலியார் 38
சிறுகனல் 13
சிறுத்தொண்டர் 39
சீடர் 45
சீர்காழி 31
சுட்டிவகை 57
சுதன் 49
சுந்தர மடந்தையர் 36
சுந்தரர் 3, 62
சுந்தரேச பாதசேகர பாண்டியன் 40
சுந்தரேசன் 48
சும்மாடு 59
சுருதிமொழி கற்பம் 55
சுற்றம் 51
சூலைநோய் 32
செங்கட்சோழன் 60
செங்கீரை 16
செங்குன்றூர் 9
செஞ்சாலி 31
செட்டு 27
செண்டு 15, 18,
செண்பகமாறன் 49
செந்தாமரைப்பாதம் 3
செந்தில் வடிவேலன் 3
செய்யும் நெறி 4
செய்யுள் 41
செயற்கை 6
செருத்துணையர் 49
செல்வி 15
செவிமடுத்தவர் 63
சென்மகதி 58
சென்மம் 46
சென்னி வளநாடு 6
சேக்கை 45
சேதுராயன் 33
சேவடி 47
சைவ நெறி 45
சைவநெறி நேயர் 25
சைவன் 50
சொல் 52
சொற்புவனம் 29
சோணாட்டு வேளாளர் 51
சோமசேகரன் 15
சோமன் 23
சோமாசிமாறர் 36
சோழன் 40
ஞாலத்துளோர் 44
ஞானம் 4
ஞான வீடு 37
ஞானோதயத்தர் 25
ஞானோபதேசர் 56
தகழி 30
தஞ்சாவூர் 49
தடாதகை 8, 14
தண்டர் நாயகர் 34
தண்டியடிகள் 34
தண்ணருள் 3
தம்பம் 28
தம்பிரான் தோழர் 36
தமிழ்ப்பாமாலை 24
தமிழ்மாலை 3
தமிழ் நாவலர் 51
தரும சிந்தையர் 20
தருமி 50
தவத்தினர் 14
தவம் 18

தழல் 21
தழல்மகம் 25
தாயத்தர் 42
தாயன் 16
தாருகாவனம் 35
தாரைவிடல் 52
தாளமுறை 9
தானை 48
திகழ்வொளி 30
திகிரி 17
திங்களூர் 28
திருக்கடவூர் 46
திருக்கயிலை 43
திருக்குறிப்புத் தொண்டர் 22
திருக்கோவலூர் 8
திருச்சங்கமங்கை 37
திருச்செங்காடு 39
திருஞானசம்பந்தர் 31
திருத்தொண்டத்தொகை 63
திருத்தொண்டு 42
திருநாமம் 42
திருநாவின் அரசர் 24
திருநீலகண்டக்குயவர் 5
திருநீலகண்ட யாழ்ப்பாணர் 61
திருநீலநக்கர் 29
திருப்பணி 41, 45
திருப்பத்தூர் 28
திருப்பூவணம் 39
திருமஞ்சனக்குடம் 50
திருமந்திரம் 33
திருமுருகன் 19
திருமுறை 60
திருமூலதேவர் 33
திருமேனி தீண்டுவார் 54
திருவந்தாதி 63
திருவருள் 3
திருவாரூர் 34
திருவாரூர் பிறந்தவர்கள் 54
திருவிளையாடல் 46, 63
திருவுளம் 50
திருவேற்காடு 35
தில்லை 4, 45
தீபர் 17
தீர்க்க நிலை 48
துயர் 41
துருவாசமகபதி 5
தெரிசனை 29, 37
தென்கயிலை 58
தென்தமிழ் 53
தென்னவன் 21
தேசிகன் 53
தேமாம்பழம் 27
தொண்டர் 7, 56
தொண்டன் 12, 15
தொண்டு 9, 38
தொண்டை நாடு 22, 47, 57
தொழில் 36
தோகை 23
தோணிபுரம் 11
தோத்திரம் 3
நக்கன் 37
நந்தனார் 21
நந்தி இடபம் 32
நந்தியார் 30
நம்பி மரபு 25
நம்பியாண்டார் 63
நயமி சாரணியமுனி 19
நரம்பு 21
நரி 57, 58
நல்லவர் 45
நலிவு 41
நவமணி 20
நவரத்தினம் 19
நற்குரு 45
நாகன் 13
நாகாந்தம் 53
நாமம் 26
நாரை 46
நாலுசுருதி 41
நாவரசர் 28
நாற்பத்தெண்ணாவலர் 49
நான்முகில் 21
நிண்ணயம் 24
நித்திலவடம் 3
நியமங்கள் 44
நீதிநெறி 8

நீர்ப்பந்தர் 38
நெஞ்சுரம் 51
நெடுமாறர் 41, 58
நெற்கூடு 49, 51
நேசநாயனார் 59
நேயம் 16
பகலவன் 14
பகுத்தறிவு 49
பசுபதி 52
பஞ்சவடி 15
பஞ்சவன் 37
பஞ்சவன் பதி 22
பஞ்சாக்கிரத தியானம் 59
பண்டாரம் 49
பண்டோதனக்கிரி 10
பணிவிடை 59
பத்தர் 39
பத்தராய்ப் பணிசெய்குவார் 52
பதஞ்சலி 5
பதப்பேறு 13, 40
பதம் 23
பதிகம் 31
பயபக்தி 11
பயிரவர் 39
பயோதரம் 22
பரஞ்சோதியார் 63
பரதவர் 55
பரந்தலை 38
பல்லவர் குலம் 45
பலிகொள் பாத்திரம் 5
பழையாறை 10
பன்றி 40, 44
பாகமுறை 10
பாசம் 14, 28
பாண்டியன் 35
பாண்டியன் சுரம் தீர்த்த படலம் 60
பாத தரிசனம் 10
பாதம் 24
பாதமலர் 31
பாதமலர் மாறி நடமாடினவன் 27
பாதமுறை 9
பாம்பு திசையை அளத்தல் 47
பாவை 11
பாவை கூந்தல் 15
பாவையர்கள் 35
பாறை 22
பிஞ்சகன் 24, 53
பிட்டு வாணிச்சி 59
பிரமன் 53
பிறவி நெறி 59
புகழ்த்துணைவர் 50
புகார்நகர் 6
புங்கவர் 39
புண்ணிய சரீரர் 10
புத்திடம் 30
புத்திரன் 6
புதுமணச்சாட்சி 62
புயங்கம் 31
புரந்தரன் 4
புராந்தகர் 35
புள்ளொரித்தல் 46
புன்மை 8
புன்விழி 29
புனல் 30
பூங்கழலிணை 19
பூசலார் 57
பூசாபலம் 7
பூசுரர் 36, 46
பூடண பாண்டியன் 47
பூதியணிநியதி 25
பூம்புகலூர் 19
பெருமங்கலம் 32
பெருமலை நாடு 40
பெருமிழலைக் குறும்பர் 26
பெருமை 30
பெண் கொண்ட பாகன் 20
பெண்ணை நதி 24
பேதமை 53
பொய்ப்பொருள் 43
பொருளலங்காரம் 52
பொற்கிழி 50
பொற்பதம் 35
பொற்பு 44
பொற்றாமரை 46
பொன் மரபு 10
பொன் மாலை 12

பொன்னனையான் 39
பொன்னிநதி 6
பொன்னி நாடு 16, 19, 31
மகவு 24
மங்கலம் 8
மங்கல வரை 14
மங்கை மகள் 27
மங்கையர்க்கரசி 58
மட்கலம் 5
மண்டபம் 25
மண்டலம் 12
மண்லிங்கம் 23
மணமேற்குடி 25
மணவதுவை 9
மணவூர் 6
மணிச்சுமை 20
மணிவேடன் 39
மதஞ்சொரி குணங்கள் 5
மதம் 5
மதில் 37
மதுரைக்கடவுள் 4
மதுரைநகர் 16
மந்திரம் 61
மந்திரிகள் 44
மயிர்ப்பீலி 1
மயிலாபுரி 47
மருமகன் 42
மலர்க்குழலி 38
மலர்க்கொன்றை 60
மலைமகள் 58
மலையத்துவசன் 7, 13
மவுலி 7
மழு 11
மழுக்கை 57
மழை 34
மழைமாரி 48
மறை 4, 51
மறைஞான சம்பந்தர் 60
மறையவர் 19
மன்று 9, 40, 42
மனக்கல் 41
மனத்துருகலக்கம் 53
மணமலர் 4
மனவயிராக்கியம் 26
மனவேட்கை 55
மனிதருக்கோர் விளக்கு 58
மனுச்சக்கரவர்த்தி 3
மாணிக்கவாசகர் 58
மாத்திரர் 39
மாபலம் 21
மாபாதகன் 29
மார்க்கம் 48
மாறன் 32
மானக்கஞ்சாற நாயனார் 15
மானுறை கரம்கரந்தான் 19
மிழலை நாடு 26
மீன்வடிவம் 55
மீனாட்சி 54
முக்கனல் 4
முகில் 34
முத்தி 38, 46
முத்து 31
முதல்வர் 42
முதற்பிள்ளை 3
முதியோர் 56
முளைவாரி 7
முழுநீறு பூசிய முனிவர் 55
முனிவர் 9
முனைப்பாடி 24
மூர்க்கர் 35
மூர்த்தியார் 18
மூவாயிரவர் 4
மூவேந்தர் 56
மெய்ப்பொருள் 43
மெய்ப்பொருள் நாயனார் 8
மைந்தர் 44
மோந்திடுகை 48
யோகி 33
ரசவாதம் 39
ரவி 23
ரவிகுலம் 49
ராசசேகரன் 27
ரோமம் சிலிர்த்தல் 52
லிங்கம் 62
வசிர் 30
வங்கிஷம் 57

வச்சிரபாணி 17
வடகலை 54
வணிகர் குலம் 5
வணிகன் 6, 42
வணிகன் குலக்கன்னி 62
வதுவை 3, 15
வம்பு 23
வயிணவன் 26
வருணன் 21
வல்லி 58
வழக்கு 42
வழுதி 44
வழுதிகுல பூடணன் 33
வள்ளி 54
வளநாடு 13
வளவன் 38
வளை 15, 32
வன்நெஞ்சம் 15
வன்னி 62
வன்னை விழியார் 6
வாகம் 14
வாதவூரடிகள் 56
வாம்பரி 18
வாய்மொழி 43
வாயிலார் 47
வாரம் 24
வாவி 51
வாளால் தறித்தல் 48
வாளி 28
விக்கிரம பாண்டியன் 25
விடை 53
விதி 14
விப்பிரர் 29
விபூதி 4
வியாக்கிரபதன் 5
விரகு 25
விரிஞ்சியூர் 44
வில்லிபுத்தூர் 50
விழைவு 41
விற்பனம் 44
விறன்மிண்டர் 9
வீணன் 19
வெஞ்சாபம் 36
வெண் குடை 6
வெண் கொடி 42
வெண்ணீறு 8
வெப்பு நோய் 60
வெள்ளியங்கயிலை 54
வேடர் 28, 40, 48
வேதர் 34, 50
வேதர் குடி 31
வேதர் மரபு 20
வேதன் மனைவி 28
வேம்ப நாடு 18
வேளாண் குடி 9, 15
வேளாண் குலம் 16, 35, 47
வேளாளர் 48
வேளாளர் திலகர் 49
வேளாளர் மரபு 44
வைகை 36
வையகம் 9, 42
வையை நதி 11

# இருபுராண விருத்தம்

## செய்யுள் முதற்குறிப்பு அகர நிரல்

(எண் : பக்கங்கள்)


அந்தரந்தடவு 36
அய்யன் மொழி 9
அறநெறி வளர்க்கும் 33
ஆரலங்கல் 11
ஆரூரர் சொன்ன 63
இன்பமுறு மூவேந்தர் 56
இனவளைகள் 32
ஈசன்மேலன்பர் 52
ஒலிதிரைக் காவேரி 44
ஒழுக்கமர்புயர் தொண்டை 57
ஓங்கல்வள 13
கஞ்சமலர்வாவி 35
கயலுகழ் 16
கருமுகில் தினம் 22
களந்தை நகர் 47
கற்புவளர் 29
கனல் விளக்காய் 46
காகங்கவிழ்த்த 14
கிரிநிதி தரும் 38
குறைமதிச் சடிலேசர் 51
குன்றருவி பாயு 40
கொடியாடு மாடம் 34
கொல்லி வளவன் 58
கொன்னியும் 62
கைவிரலினேழிசை 61
சிலம்பிவெண் 60
சீர்கொண்ட 3
சுருதி மொழி 55
செக்கர்வானீசுரர் 50
செங்கரும்புயர் 39
செஞ்சாலிமுத்து 31
செட்டுமலி வணிகர்குல 27
செடித்தலை சமணெறி 47
செம்பி வளநாட்டில் 23
செல்வ 17
சேத்திராகுலம் 7
சேதி நன்னாட்டில் 8
தக்கவரினஞ் செறி 37
தண்கொண்ட 20
தண்டரள 12
திங்களூரில் 28
துதிபெற்றிடும் 41
தேசிகம் வடகலை 53
நன்னலம் பெறு 25
நேந்தவர் 48
பண்டுகஞ்சனூரில் 15
பத்தருக்காக 49
பதஞ்சலி 5
பல்லவர் குலத்திலே 45
புகழ் பெருகு 30
புற்றுவசனரசுபுரி 10
பூதலம் புகழ் 21
பூநறை பெருக்கும் 19
பூமருவு 4
பெண்ணநதி 24
பொன்னிநதி 6
மிழலை நாட்டெழில் 26
மெய்ப்பொருள் 43
வெள்ளியங்கயிலையிற் 54
வேணிச்சிவன் கழலில் 59
வேம்ப நாட்டணி 18

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

—திருத்தொண்டர் புராணம்

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்த வெண்ணவும் படுமோ

—திருவிளையாடற் புராணம்

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 131 | 22—10—83 | டாக்டர். ந. சஞ்சீவி | உலக இலக்கியம் (திறனாய்வு) |
| 132 | 12—11—83 | வழக்கறிஞர். டி. பி. இராதாகிருட்டினன் | இலங்கைத் தமிழர் |
| 133 | 26—11—83 | வி. சுந்தரம் | உங்களை அறிந்து கொள்ளுங்கள் |
| 134 | 3—12—83 | நா. இளங்கோ | திருக்குறளில் ஆய்த எழுத்து |
| 135 | 10—12—83 | க. பெருமாள் | இலங்கைப் படுகொலை |
| 136 | 18—12—83 | டாக்டர். ஜி. கீதா | சித்த மருத்துவம் - ஓர் அறிமுகம் |
| 137 | 24—12—83 | மாணிக்க சண்முகம் | தந்தை பெரியார் |
| 138 | 7—1—84 | ஆய்வு மாணவர்கள் கருத்துப் பரிமாற்றம் | சமூக மேம்பாட்டிற்கு மிகுதியாக உதவுவது படைப்பிலக்கியங்களா? ஆய்வுரைகளா? |
| 139 | 21—1—84 | ஆய்வு மாணவர்கள் கருத்துப் பரிமாற்றம் | சொல்நெறி—பேசுவது எப்படி? |
| 140 | 28—1—84 | அ. மறைமலையான் | இலங்கைத் தமிழர் நிலை |
| 141 | 4—2—84 | ந. தேவராசன், பி. இ. | கனடா - 'ஒரு தமிழன் பார்வை' |
| 142 | 18—2—84 | ஆய்வு மாணவர்கள் கருத்துப் பரிமாற்றம் | பேசுவது எப்படி? |
| 143 | 25—2—84 | ,, ,, ,, | தமிழ்க் கல்வியின் வருங்காலம் |
| 144 | 3—3—84 | ஜி. கலியபெருமாள் (சிங்கப்பூர்) | சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி |
| 145 | 17—3—84 | வ. பாண்டியன் | ஏறு தழுவுதல் |
| 146 | 24—3—84 | Dr. K. C. Mishra<br>Dr. K. P. Mishra | The Cult of Jagannath<br>The Cultural Synthesis of Orissa |
| 147 | 31—3—84 | க. பூர்ண சந்திரன் | தமிழ்ப்பொழிலில் ந. மு. வே. அவர்களின் கட்டுரைகள் |
| 148 | 7—4—84 | அ.ச. ஞானசம்பந்தம் | காவலர் ந. மு. வே. அவர்களின் நூற்றாண்டு விழா |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
| --- | --- | --- | --- |
| 149 | 21—4—84 | டாக்டர். சு. இன்னாசி | கிறித்துவ சிந்துப் பாடல்கள் |
| 150 | 27—4—84 | பி. இ. பாலகிருட்டிணன் | பட்டுக்கோட்டை - ஒரு சமுதாயப் பெருங்கவிஞன் |
| 151 | 23—7—84 | புலமைப்பித்தன் | ‘உயராய்வு’ முதல் இதழ் வெளியீட்டு விழா |
| | | டாக்டர் அவ்வை. நடராசன் | |
| | | டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் | |
| | | திருமதி சுசீலா மாரியப்பன் | |
| 152 | 9—8—84 | டாக்டர் ந. நஞ்சீவி | பிரெக்ட், பாரதி, பாரதிதாசன் |
| ,, | ,, | அ. கனகராசு | கோமல் சாமிநாதனின், ‘நள்ளிரவில் பெற்றோம்’ - நாடகம் பற்றிய ஆய்வுரை |
| 153 | 18—9—84 | வ. பாண்டியன் | வீர விளையாட்டு இயல் |
| 154 | 1—9—84 | டாக்டர் கு. மோகனராசு | கன்பூசியசும் வள்ளுவரும் |
| 155 | 15—9—84 | ,, சாரதாரமணி | பாரதி, குப்தா பாடல்களில் பெண்மை |
| 156 | 22—9—84 | ,, சு. இன்னாசி | தேம்பாவணி கீர்த்தனை |
| 157 | 29—9—84 | ,, ஈ. வி. விசுவநாதன் | அயல்நாட்டு பயண அநுபவங்கள் |
| 158 | 20—10—84 | ,, ஆ. கந்தசாமி | தமிழ் நூல்களில் தொழிலும் தொழிலாளர்களும் |
| 159 | 27—10—84 | ,, எம். வி. எம். அழகப்பன் | இலங்கைத் தமிழர் நிலை |
| 160 | 17—11—84 | ,, ந. சஞ்சீவி | திருமதி. இராசம் கிருட்டிணனின் ‘புயல்மையம்’ ஒரு புவியியல், சமூகவியல், இலக்கியவியல், ஆய்வு |
| 161 | | அ. கனகராசு | ஊர்ப் பெயராய்வு — ஓர் அறிமுகம் |
| 162 | 22—12—84 | ச. கந்தசாமி | இக்கால இலக்கியம் |
| | | பெரியார்தாசன் | அயல்நாட்டு அநுபவங்கள் |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 163 | 5—1—85 | டாக்டர் ந. சஞ்சீவி | அயல் உறவு இலக்கியம் - அகிலனின் 'பால்மரக்காட்டிலே' |
| 164 | 19—1—85 | டாக்டர் வீ. ஞானசிகாமணி | உயிர் - ஒரு தனிப்பொருள் |
| 165 | 9—2—85 | அ. பாலகிருட்டிணன் | இலட்சுமியின் 'என் வீடு' திறனாய்வு |
| 166 | 23—2—85 | வ. பாண்டியன், கு. மங்கையர்க்கரசி | மொழி பெயர்ப்பியல் கலை |
| 167 | 2—3—85 | மு. முத்துக்காளத்தி | ஒரு கதை / ஓரங்க நாடகம் உருவாகிறது. |
| 168 | 14—3—85 | Mrs. Joyce Edmord | Universal Language |
| 169 | 16—3—85 | கவிஞர் நா. காமராசன் | ஒரு கவிதை உருவாகிறது |
| 170 | 23—3—85 | ஆர். வேணுகோபால் | இந்து அறநிலையச்சட்டம் |
| 171 | 30—3—85 | த. கனகசபை | கோயில் இசையும் இசைக் கருவிகளும் |
| 172 | 8—4—85 | டாக்டர் து. சதாசிவம் | அச்சகச்சட்டமும் பதிப்புரிமைச்சட்டமும் |
| 173 | 20—4—85 | கே. இரகுபதி | நாடோடி மக்கள் நாகரிகமும் பண்பாடும் |
| 174 | 27—4—85 | டாக்டர் ந. சஞ்சீவி | இருபெரும் தமிழ்ப் பேராசிரியர்கள் டாக்டர் இரா. பி. சே, டாக்டர் மு. வ. |
| 175 | 1—7—85 | ,, ,, | கலைச்சொற்களில் கவிதை |
| 176 | 8—7—85 | டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம் | என் திரைப்பாடல்கள் |
| 177 | 12—7—85 | ,, பீ. நசீம்தீன் | கேரள இடிக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வாழ்வியல் |
| 178 | 20—7—85 | டி. பி. இராதகிருட்டிணன் & வா. மு. சேதுராமன் | ஈழத் தமிழர்கட்காக அண்மை உலகப்பயணம் |
| 179 | 27—7—85 | டாக்டர் வீ. அரசு | தமிழிலக்கியத்தில் முற்போக்குவாதம் தோற்றமும் வளர்ச்சியும் - 1 |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 180 | 3—8—85 | டாக்டர் ந. சஞ்சீவி | தமிழ்க் கலைச்சொற்கள் |
| 181 | 12—8—85 | அ, கனகராசு | நிலவியல் அமைப்பில் புதுச்சேரி ஊர்ப் பெயர்கள் |
| 182 | 24—8—85 | டாக்டர் கு. மோகனராசு | திருக்குறளில் திருப்புரைகள் |
| 183 | 31—8—85 | ஜனாப். எம். கே. ஈ. மௌலானா | இஸ்லாம் |
| 184 | 7—9—85 | டாக்டர் ந. சஞ்சீவி | தமிழ்க் கலைச் சொற்கள் |
| 185 | 21—9—85 | கவிஞர் இளவேனில் | படைப்பாளியும் எழுத்தாளனும் |
| 186 | 29—9—85 | டாக்டர் கு. மோகனராசு | திருக்குறளில் அந்தாதி அளபெடை |
| 187 | 5—10—85 | டாக்டர் வீ. அரசு | தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதம் தோற்றமும் வளர்ச்சியும் - 2 |
| 188 | 12—10—85 | கருப்புசாமி | இலக்கிய உத்திகள் |
| 189 | 19—10—85 | டாக்டர். கு. மோகனராசு | திருக்குறளில் அளபெடைகள் |
| 190 | 9—11—85 | சு. அமிர்தலிங்கம் | வள்ளலாருடன் தொடர்புடைய சமகாலப் பெரியோர்கள் |
| 191 | 16—11—85 | டாக்டர் ந. சிவஞானம் | பெயர் ஆய்வுக்குப் புவியியலின் துணை. |
| 192 | 24—11—85 | ,, கு. மோகனராசு | திருக்குறளில் அளபெடைகள் பொருள் பெறுமானம் |
| 193 | 30—11—85 | ,, டாக்டர் வீ. அரசு | தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதம் தோற்றமும் வளர்ச்சியும் - 3 |
| 194 | 7—12—85 | கவிஞர் ஏர்வாடி. இராதாகிருட்டிணன் | நேருக்குநேர் - வினாவிடை |
| 195 | | டாக்டர் வீ. அரசு | தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதம் தோற்றமும் வளர்ச்சியும் - 4 |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 196 | 8—2—86 | டாக்டர் வீ. அரசு | தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதம் தோற்றமும் வளர்ச்சியும் - 5 |
| 197 | 22—2—86 | டாக்டர் கு. மோகனராசு | திருவள்ளுவர் கண்ட ஒருமைப்பாடு |
| 198 | 1—3—86 | மு. சற்குணவதி | ஊரக விழாக்கள் |
| 199 | | டாக்டர் கு. மோகனராசு | திருவள்ளுவர் நடைநலம் |
| 200 | | எஸ். உமாதேவி | கம்பராமாயணத்தில் ஆனிரைகள் |
| 201 | 5—4—86 | டாக்டர் மு. பொன்னுசாமி | சங்க இலக்கியத்தில் மெய்ப்பாடுகள்—நகை |
| 202 | | மா. சி. இரமணன் | கூந்தல் படைத்த திருப்பங்கள் |
| 203 | 26—4—86 | டாக்டர் கு. மோகனராசு | பேராசிரியர் மு. வ. அவர்களின் நூல்களில் திருக்குறள் தாக்கம் |
| 204 | | பேராசிரியர் சி. நயினார் முகமது | செய்குதம்பிப் பாவலர் |
| 205 | 19—7—86 | சி. சு. செல்லப்பா | எழுத்துப் பத்திரிக்கையை ஏன் தொடங்கினேன்? |
| 206 | 26—7—86 | ஏ. ஆர். வேங்கடாசலபதி | இந்திய விடுதலைப் போர் குறித்த ஆய்வுகள் (தமிழகம்) |
| 207 | 2—8—86 | தோழர் தியாகு | காரல்மார்க்சும் இலக்கியமும் |
| 208 | 16—8—86 | டாக்டர் அவ்வை ஞானசம்பந்தம் | இலக்கியத் திறனாய்வு |
| 209 | | ,, ந. சஞ்சீவி | வாய்மை நாதனின் நேதாஜி காவியம் |
| 210 | 31—8—86 | அ. கனகராசு | நெய்தல் நில ஊர்கள் |
| 211 | 5—9—86 | டாக்டர் ப. சுப்பிரமணியம் | 19-ஆம் நூற்றாண்டு தமிழ்ச் சமூக வரலாறு |
| 212 | 20—9—86 | இரா. நூருல்லா | ஒரு நாளிதழ் உருவாகிறது |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 213 | 27—9—86 | டாக்டர் வீ. அரசு | கலை இலக்கியத்தின் வழி அறிவியல் (ஒரு மாத பயிற்சிப் பட்டறை அனுபவம்) |
| 214 | 30—9—86 | இரா. வேலுச்சாமி | ஒரு வார இதழ் உருவாகிறது |
| 215 | 4—10—86 | வீ: பாலசுந்தரம் | வள்ளலாரின் சமுதாயச் சிந்தனைகள் - 12 |
| 216 | 18—10—86 | கபிலை. தே. கண்ணன் | ஓர் இலக்கியத் திங்களிதழ் உருவாகிறது |
| 217 | 22—11—86 | டாக்டர் அவ்வை நடராசன் | ஆட்சிமொழி அயல் நாட்டுப் பயணங்கள் |
| 218 | 29—11—86 | ,, வீ. அரசு | பழங்கலைகளும் இன்றைய தேவைகளும் |
| 219 | 6—12—86 | ,, வை. ரத்தினசபாபதி | கோலாலம்பூர் சைவசித்தாந்த மாநாடு |
| 220 | 20—12—86 | ,, ந. சஞ்சீவி | இந்தியாவின் ஆட்சிமொழி - இல்லை - இணைப்புமொழி |
| 221 | 3—1—87 | ,, ,, | மாணவர் கல்வி மேம்பாடு |
| 222 | 24—1—87 | ,, வீ. அரசு | நாட்டார் நிகழ்த்து கலைகளின் மக்கள் தொடர்புத் தன்மைகள் |
| 223 | 31—1—87 | ,, மொ. அ. துரை அரங்கசாமி | திருமுருகாற்றுப்படை |
| 224 | 7—2—87 | மு. பார்த்திபன் | அழகின் இந்திய மெய்ப்பொருளியல் |
| 225 | 14—2—87 | டாக்டர் சாமி. சண்முகம் எம்.பி.பி.எஸ்., எம்.ஐ.எஸ்.சி.டி. | மருத்துவத்தில் கலையியல் சொற்கள் |
| 226 | 21—2—87 | த. கனகசபை | உரைப்பாட்டுகள் - ஓர் ஆய்வு |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 45 | 23—1—84 | Mr. Pablo Armando Fernandez of cuba | |
| 46 | 24—1—84 | Mr. Y. Jakebe | The development of the Japanese Writing System. |
| 47 | 30—1—84 | ORI Special reception meeting Tamil learning, non-Tamil Indian Students of C I I L of Mysore | |
| 48 | 2—2—84 | Dr. Chirapat Prapandovidya Dept. of Oriental Languae, Faculty of University-Bang'kok | Archeology, Silpakoran |
| 49 | 10—2—84 | தோழர் எம். கல்யாணசுந்தரம் | இலங்கைத்தமிழர் |
| 50 | 27—3—84 | Prof. Yang Xiangi, & Mrs. Gladys yang | Chinese life, language, literature and culture through English eyes |
| 51 | 21—5—84 | ராசா சர். முத்தையா செட்டியார் மறைவு | இரங்கல் கூட்டம் |
| 52 | 5—7—84 | டாக்டர். ந. சஞ்சீவி | ஜெர்மன் மக்கள் குடியரசில் கலையும் கல்வியும் |
| 53 | 14—8—84 | டாக்டர். இந்திரா பார்த்தசாரதி | போலந்து அனுபவங்கள் |
| 54 | 23—11—84 | D. P. Vijendran, L.L.B. (Hons) Senator, Malasiya | Cultural Milien of Malasian Tamils |
| 55 | 24—11—84 | Dr. N. Sanjeevi<br>Dr. A. Srikrishna Bhat<br>Dr. S. Akki Reddy<br>Dr. N. Gangadharan<br>Thiru. N. Ramakrishnan | Institute of Traditional culture-Symposium proverbs and their being on the social life and culture of South India. |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
| --- | --- | --- | --- |
| 56 | 29—11—84 | Mr. Radoslay Bratic<br>Mr. Jusco Novakovic (Yugoslavia) | — |
| 57 | 3—12—84 | டாக்டர் மெ. சுந்தரம் | தாலாட்டுப் பாடல்கள் புலப்படுத்தும் தமிழர் பண்பாடு |
| 58 | 10—12—84 | ,, இ. முத்துக்கண்ணப்பர் | மீனவர் பாடல்கள் காட்டும் பண்பாடு |
| 59 | 12—12—84 | ,, ந. சஞ்சீவி | தமிழின் வருங்காலம் |
| 60 | 13—12—84 | ,, தமிழண்ணல் | ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் |
| 61 | 14—12—84 | ,, திருமதி அரங்கநாயகி மகாபத்திரா | கிழக்கிந்தியப் பண்பாடு |
| 62 | 7—1—85 | நா. இளங்கோ | புதிர்கள் காட்டும் தமிழர் பண்பாடு |
| 63 | 14—2—85 | வி. குமாரசாமி | ரியூனியனில் வாழும் தமிழர் |
| 64 | 16—3—85 | கவிஞர் ந. காமராசன் | ஒரு கவிதை உருவாகிறது |
| 65 | 29—4—85 | Dr. G. Rose (G. D. R)<br>Mr. H. H. Bethge | German culture |
| 66 | 19—8—85 | டாக்டர் வி. என். சுக்லா | கம்பியூட்டரில் தமிழ் |
| 67 | 2—1—86 | ,, வீ. அரசு | தமிழாய்வில் கணினி (கம்பியூட்டர்) |
| 68 | | Tmt. Ruth Wallden<br>Dr. Selvi Anitha Diehl (Sweden) | — |
| 69 | | டாக்டர் குல. சபாரத்தினம் | சிவாகமங்களும் திராவிடப் பண்பாடும் |
| 70 | 10—1—86 | ,, ச. அகத்தியலிங்கம் | தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-முதற் சூத்திரம் |
| 71 | 15—2—86 | ஆசிரியர்களும் மாணவர்களும் | இளங்கலை, முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்ட மாற்றம் |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| 72 | 20—2—86 | எஸ். வையாபுரி | டாக்டர் சி. ஆர். தாமோதரன் 77-வது பிறந்த நாள் |
| 73 | 15—3—86 | ஆசிரியர்களும் மாணவர்களும் | இளங்கலை, முதுகலை பாடதிட்ட மாற்றம். |
| 74 | 11—4—86 | பேராசிரியர் ந. தர்மராசன் | முன்னேற்றப் பதிப்பகம் (மாஸ்கோ) |
| 75 | 25—4—86 | மாணவர்கள் | பேராசிரியர்கள் இரா. பி. சே. (90), மு. வ. (75) நினைவுக் கருத்தரங்கு |
| 76 | 29—4—86 | டாக்டர் வீ. அரசு | 'கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல்' (பாவேந்தர் வாழ்க்கை வரலாற்று நூல்) மதிப்பீடு |
| 77 | 8—7—86 | பல கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் | தமிழ் பாடதிட்ட மேம்பாடு |
| 78 | 25—10—86 | திரு. அரவிந்த குப்தா | அறிவியல் பயிற்றுவிப்பதற்கு எளிய கருவிகளைப் பயன்படுத்தல் (Low Cost teaching aids for Science—talk-cum demonstration) |
| 79 | 12—11—86 | டாக்டர் ந. சஞ்சீவி | புதிய கல்வித்திட்டமும் பல்கலைக்கழக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டமும் |
| 80 | 10—12—86 | டாக்டர் விதாலிஃபூர்னிகா | உருசியாவில் தமிழ் |
| 81 | 21—1—87 | Francis Britto Sophia University Tokyo | Social life in Japan |

# அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் & விருந்தியல் சொற்பொழிவுகள்



| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| | | (கல்கி அறக்கட்டளை) | |
| 1 | 11—12—85 | டாக்டர். கா. மீனாட்சிசுந்தரம் | நாமக்கல் கவிஞரின் கவிதைகள் |
| | 12—12—85 | ,, ,, | ,, ,, கதைகள் |
| | 13—12—85 | ,, ,, | ,, ,, ஆய்வுகள் |
| | | (பம்மல் சம்பந்த முதலியார் அறக்கட்டளை) | |
| 2 | 17—1—86 | கலைமாமணி. டி. வி. நாராயணசாமி | தமிழ் நாடக வரலாறு |
| | 18—1—86 | ,, ,, | ,, |
| | | (பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறக்கட்டளை) | |
| 3 | 7—4—86 | தோழர். ஆ. சீனிவாசன் | ஜீவாவின் தமிழ்ப்பணி |
| | 8—4—86 | ,, ,, | ,, ,, |
| | 9—4—86 | ,, ,, | ,, ,, |
| | | விருந்தியல் சொற்பொழிவு | |
| | 18—1—86 | டாக்டர். எஸ். பி. சபாரத்தினம் | சிவ ஆகமங்களும் திராவிடப்பண்பாடும் |
| | 30—1—86 | ,, ,, | ,, |
| | 1—2—86 | ,, ,, | ,, |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| | | (திருமதி கிருட்டிணா சஞ்சீவி & கண்ணம்மாள் நடேசன் அறக்கட்டளை) | |
| 4 | 28—7—86 | டாக்டர் வி. பி. தேவதத்தா | தமிழ்ப் புதினங்களில் மகளிர் சிக்கல்களும் தீர்வுகளும் |
| | 29—7—86 | ,, ,, | ,, ,, ,, |
| | 30—7—86 | ,, ,, | ,, ,, ,, |
| | | (கல்கி அறக்கட்டளை) | |
| 5 | 20—8—86 | டாக்டர். க. த. திருநாவுக்கரசு | டாக்டர் தெ. பொ. மீ. அவர்களின் கல்விப் பணிகள் |
| | 21—8—86 | ,, ,, | ,, ,, ,, |
| | 22—8—86 | ,, ,, | ,, ,, ,, |
| | | (பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறக்கட்டளை) | |
| 6 | 8—10—86 | தோழர் ஆர். நல்லக்கண்ணு | பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள் தமிழொளி |
| | 9—10—86 | ,, ,, | கவிஞர் திருமூர்த்தி |
| | 10—10—86 | ,, ,, | பாவலர் வரதராசன் |
| | | (திருமதி கிருட்டிணா சஞ்சீவி & கண்ணம்மாள் அறக்கட்டளை) | |
| 7 | 12—11—86 | டாக்டர் எம். எஸ். திருமலை | மெய்ப்பாட்டு மொழி |
| | 13—11—86 | ,, ,, | ,, |
| | 14—11—86 | ,, ,, | ,, |

| வரிசை எண் | நாள் | உரையாளர் | பொருள் |
|---|---|---|---|
| | | (கல்கி அறக்கட்டளை) | |
| 8 | 1—12—86 | மீ. ப. சோமசுந்தரம் (சோமு) | கல்கி |
| | 2—12—86 | ,, | டி. கே. சி. |
| | 3—12—86 | ,, | இராசாசி |
| | | (பம்மல் சம்பந்த முதலியார் அறக்கட்டளை) | |
| 9 | 28—1—87 | திருமதி புனிதவதி இளங்கோவன் | வானொலி நாடகங்கள் |
| | 29—1—87 | ,, ,, | ,, |

## துறை உறுப்பினர்கள் பெற்ற சிறப்புப் பயிற்சிகள்

| எண் | கலந்து கொண்டோர் | பொருள் | இடம் | நாட்கள் | நடத்தியோர் |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர் வீ. அரசு விரிவுரையாளர் | இன்றைய அரங்க வடிவத்தில் பழங்கலைகளில் உள்ள பல்வேறு அசைவுகளைப் பயன்படுத்தல் | நாடகப் பயிற்சிப்பள்ளி திருச்சூர் கள்ளி-கோட்டைப் பல்கலைக்கழகம் | 8—11—86 முதல் 21—11—86 முடிய | பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் உதவியுடன் திருச்சூர் நாடகப் பயிற்சிப் பள்ளி நடத்தியது |
| 2 | ,, | நடிகர்களுக்கான நடிப்பு, மற்றும் குரல் பயிற்சி | மாக்ஸ்முல்லர் பவன் சென்னை | 5—12—86 முதல் 27—12—86 முடிய (மாலை $6\frac{1}{2}$-9) | மாக்ஸ்முல்லர் பவன் பயிற்சியளித்தவர்-திருமதி இங்கர்பர்க் மேயர் கிழக்கு ஜெர்மனி |
| 3 | பரிமளம், ச. ஆய்வு மாணவர் | அகராதிக் கலைப்பயிற்சிப் பணியணை | தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் | 10—11—86 முதல் 30—11—86 முடிய | பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு உதவியுடன் தமிழ்ப் பல்கலைக்கழக தொகுப்பியல் துறையினர் நடத்தினர் |
| 4 | தி. கமலி ஆய்வு மாணவர் | இந்தியவியல் தமிழியல் புதுமைப் பயிற்சி அரங்கு | மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் | 15—12—86 முதல் 20—12—86 முடிய | பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு உதவியுடன் திருக்குறள் ஆராய்சித் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்தியது |

துறை உறுப்பினர்கள் பெற்ற சிறப்புகள், 1. பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, பேராசிரியர், துறைத் தலைவர், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் தேசீய விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## பணிமனை

பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு உதவிபெறு பணிமனை 23-2-1987 27—2—1987 வரை நடைபெற்றது.

பொருள் : வாழ்க்கை நோக்கில் இலக்கியக் கல்வி - அறிவியல் வழி அறம்.

பணிமனையில் டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் பொன். கோதண்டராமன், டாக்டர் கு. மோகனராசு, டாக்டர் வீ. அரசு, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, டாக்டர் வை. இரத்தினசபாபதி, டாக்டர் இராம. பெரியகருப்பன், டாக்டர் மா. இராமலிங்கம், டாக்டர் வி. பி. தேவதத்தா, டாக்டர் தா. வே. வீராசாமி, டாக்டர் ஏ. என். பெருமாள் ஆகியோர் ஆய்வறிஞர்களாகப் பங்கேற்றனர்.

டாக்டர் பா. இராமமூர்த்தி, டாக்டர் க. காந்தராஜ், டாக்டர் ஜி. நாராயணரெட்டி, டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஆகியோர் அறிவியல் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

தமிழகம், கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் பணிமனையில் 40 பேராளர்கள் பங்கேற்றனர்.

பணிமனை தொடக்க விழா டாக்டர் பேராசிரியர் எஸ். காமேசுவரன் (இயக்குநர், அடிப்படை மருத்துவ இயல்கள் நிறுவனம், தரமணி) அவர்களாலும் நிறைவு விழா மாண்பமை ஓய்வுபெற்ற நீதிபதி ஆர். சதாசிவம் அவர்களாலும் செய்யப் பெற்றது.

டாக்டர் அவ்வை நடராசன் (செயலர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை) அவர்கள் டாக்டர் கு. மோகனராசு அவர்களின் ‘திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும் (தொகுப்பு) 2. தொல்காப்பியமும் திருக்குறளும் - ஓர் ஒப்பாய்வு ஆகிய இரு நூல்களை வெளியிட்டார்.



சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை ஆசிரியர்களும்
முதுகலை, எம். பில், பிஎச். டி. மாணவர்களும். 30—4—'86.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை, மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனத்துடன் இணைந்து சூலை 7–11ஆம் நாட்களில் நடைபெற்ற தமிழ்ப்பாடத்திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கில் ஆசிரியர்களும், கலந்து கொண்ட மாணவர்களும்.



இடமிருந்து வலம்: டாக்டர் ந. செயராமன் (பாரதியார் பல்கலைக்கழகம்)
டாக்டர் எம். எஸ். திருமலை (மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனம்)
மேஜர் ப. குட்டியப்பன் (பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்)



இடமிருந்து வலம்: டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் சு. இன்னாசி,
டாக்டர் கு. சண்முகம், (அஞ்சல் வழிக்கல்வி இயக்குநர்)

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை, மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனத்துடன் இணைந்து ஜூலை 7–11ஆம் நாட்களில் நடைபெற்ற தமிழ்ப்பாடத்திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கில் ஆசிரியர்களும், கலந்து கொண்ட மாணவர்களும்.



செல்லம்மாள் கல்லூரித்தமிழ்ப் பேராசிரியையும், சென்னைப் பல்கலைக் கழகப் பட்டப் பாடநூற்குழு உறுப்பினர் மேரி கர்ன்லியஸ் பேசுகிறார்கள்.

அமர்ந்திருப்போர்: மாநிலக்கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் கி. பாண்டுரங்கன், உசுமானியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் டி. எஸ். மாணிக்கம், டாக்டர் ந. சஞ்சீவி



தமிழ்ப்பாடத்திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கில் கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவர்களும்



1983—84-ஆம் ஆண்டுக்குரிய கல்கி அறக்கட்டளைச்சொற்பொழிவுகள் 11, 12, 13—12—85 தேதிகளில் நடைபெற்றது. படத்தில் தமிழ் இலக்கியத்துறைத்தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

படத்தில் இடமிருந்து வலம்: பேராசிரியர் டாக்டர். கா. மீனாட்சிசுந்தரம்,
டாக்டர். கு. இராஜவேலு, கல்கி கி. இராசேந்திரன்,
பேராசிரியர் டாக்டர். ந. சஞ்சீவி.



பேராசிரியை டாக்டர் திருமதி கிருட்டிணா சஞ்சீவி கண்ணம்மாள் நடேசன்
அறக்கட்டளைச் சொற்பொழிவு:

இடமிருந்து வலம்: எழுத்தாளர் அகிலன்,
பேராசிரியை டாக்டர் வீ. பொ. தேவதத்தா, (சொற்பொழிவாளர்)
பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி



கிரேக்க நாட்டுக் கோர்பு தீவில் ஹில்டன் விருந்து மனையில் (ஒட்டலில்) நடைபெற்ற எட்டாவது உலகக் கவிஞர் மாநாட்டில் (1985 அக்டோபர் முதல் வாரம்) மாநாட்டு தலைவர் டாக்டர் செங்கோல், தமிழக உயர் நீதிமன்ற நீதிபதி டாக்டர் எஸ். மோகன், பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, கன்னடப்பேராசிரியர் டாக்டர் பஞ்சாட்சா ஹிராய் கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டிணன் முதலியோர்



கிரேக்க நாட்டு ஏதென்சில் அகரோ பாரிசில் பழங்கால (கொடிய!) விளையாட்டரங்கைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவியும் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களும் பார்த்தல்.



இலண்டனில் கார்ல் மார்க்ஸ் கல்லறையில் மார்க்சின் சிலையை அண்ணாந்து காண்கின்றனர்
பேராசிரியர் டாக்டர் சஞ்சீவியும் ஆய்வு மாணவர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமனும்



அந்தமான் சிறைச்சாலையில் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, பேராசிரியர் வலப்புறம். அடிவரிசையில் இருக்கும் படம் தியாகி சச்சிதானந்த சிவத்தினிடையது. இவர் பற்றி இதுவரை எவரும் ஏதும் குறிப்பிட்டதில்லை. ஆனால் இவருடைய நேர்முக உரை அந்தமான் வானொலி நிலையத்தில் நாடாப்பதிவு செய்து பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.



இந்திய தேசிய காங்கிரசு நூற்றாண்டு விழாவில் பேராசிரியர் ந. சஞ்சீவி 8—12—85



இந்திய தேசிய காங்கிரசு நூற்றாண்டு விழாவில் பேராசிரியர் ந. சஞ்சீவி 8—12—85